நந்தீசர்

சர்வ கலைக்ஞானம்-1000

தாமரை நூலகம்
சென்னை-26.

நந்தீசர்
சர்வ கலைக்ஞானம்–1000

பதிப்பாசிரியர்
ஆர்.சி. மோகன்

தொலைபேசி எண்: 23620249

தாமரை நூலகம்
எண். 7. N.G.O. காலனி, 3வது தெரு,
வடபழனி, சென்னை-600 026.

தாமரை வெளியீடு 92
முதல் பதிப்பு : ஏப்ரல் 1993
இரண்டாம் பதிப்பு : மார்ச் 2006
மூன்றாம் பதிப்பு : செப்டம்பர் 2018

நூலைப்பற்றி

நூலின் பெயர்	:	நந்தீசர் சர்வ கலைக் ஞானம்
பதிப்பாசிரியர்	:	**ஆர்.சி. மோகன்**
வெளியிட்டோர்	:	தாமரை நூலகம் 7.N.G.O. காலனி, 3வது தெரு, வடபழனி, சென்னை–600 026.
பதிப்பு ஆண்டு	:	செப்டம்பர் 2018
உரிமை	:	பதிப்பகத்திற்கு
நூல் வடிவம்	:	18x12 ½ செ.மீ
அச்சுத்தாள்	:	14.4 வெள்ளைத்தாள்
அட்டை	:	13.2 சேஷசாயி
எழுத்துக்கள்	:	11 புள்ளி
மொத்த பக்கங்கள்	:	272
பைண்டிங்	:	செக்ஷன்
விலை	:	ரூ.100/-

அச்சிட்டோர்	:	கிரியேட்டிவ் ஆப்செட் சென்னை – 34.

முதல் பதிப்பின் பதிப்புரை

கிடைத்ததற்கரிதாக இருந்த நந்தீசர் சகல கலைக் ஞானம் என்ற இந்த நூலை மகிழ்ச்சியுடன், அதேசமயம் பயபக்தியுடன் தமிழ் மக்களுக்குச் சமர்ப்பிக்கிறோம்.

இந்த நூலில் மிக அரிய பெரிய விஷயங்கள் கூறப்பட்டிருக் கின்றன. அபூர்வமான சக்திகளை அடைவதற்கான வழிமுறைகள் சொல்லப்பட்டுள்ளன. இவற்றைத் தீயவர்கள், சமுதாய விரோதிகள்தெரிந்து கொண்டு மனித குலத்திற்குத் தீங்கு விளைவித்துவிடக்கூடாதே என்பதற்காக மறைத்து வைக்கப்பட்டது.

சித்தர்கள் தங்களுடைய நூல்களைக் குகைகளில் மறைத்து வைத்ததுடன் அந்த நூல்களை அறிந்தவர்கள் தகாதவர்களுக்கு சொல்லிக் கொடுத்தால், அறியப் பண்ணினால் கொடுமையான தண்டனைகளை அடைவார்கள். நரகத்தில் வீழ்வார்கள். கொடுப்பவன் குலம் அழிந்து போகும் என்றெல்லாம் கொடிய சாபங்களையும் கூறியுள்ளனர். அதனால் இந்த நூலை அச்சிட்டு வெளியிடலாமா வேண்டாமா என்ற பலமான சந்தேகமும் பயமும் பிடித்துக் கொள்ளப் பலநாள் யோசித்தோம்.

பெரும்பாலும் பரிபாஷையில் கூறப்பட்டுள்ள கருத்துக்களைப் புரிந்து கொள்வது மிகக் கடினம். நூலைப் படித்துவிட்டு வெளிப்படையாகத் தெரியும் பொருளைத் தெரிந்து கொண்டு ஏதாவது செய்யத் தொடங்கினால் கெடுதலே ஏற்படும். உண்மையான பொருளைப் புரிந்து கொள்ளவேண்டுமென்றால் தக்க குருவை அடைந்து, பல சோதனைகளில் தேறி, பல தீட்சைகள் பெற்ற பிறகே உணர முடியும்.

ஒவ்வொரு தீட்சைக்குப் பிறகும் சில ரகசியங்கள் சொல்லிக் கொடுக்கப்படும். இப்படி நீண்ட காலம் ஒழுக்க நெறிகளைக்

கடைப்பிடிப்பதன் மூலமும் பயிற்சிகளின் மூலமும் பக்குவம் அடைந்த பிறகே அறிந்து கொள்ளக் கூடிய விஷயங்களைப் புஸ்தகத்தில் படித்து மட்டும் தெரிந்து கொள்ள முடியுமா ?

ஆன்ம சாதனையும் சாகா வாழ்வும் அளிக்கக் கூடிய உன்னதமான நூல்களை சித்தர்கள் உண்டாக்கிய காரணம் அவை அழிந்து போகாமல் இருக்க வேண்டும் என்ற உயர்ந்த நோக்கமே அல்லவா ? அதனால் இந்த நூல்களை வெளியிடுவதில் தவறில்லை என்ற முடிவுக்கு வந்தோம்.

தவிர இது எமக்கு இறைவன் இட்ட பணி. இதனால் நன்மை வந்தாலும் தீமையே வந்தாலும், அது அவன் கருணையாக எண்ணி ஏற்றுக்கொள்வதே கடன் என்று துணிந்தோம்.

இறையருளால் ஏற்படும் கடமைகளைச் செய்பவர்களுக்குப் பழி பாவம் ஏற்படாது என்று துணிந்தோம்.

இந்த அரிய நூல் தமிழ் மக்களிடம் வருகிறது. இது எத்தகைய கலைக் கருவூலம் என்பதைப் படித்துப் பார்க்கும் போதே அறிய முடியும்.

இந்த நூலின் மூலப்பிரதி சென்ற நூற்றாண்டில் வெளியிடப்பட்ட ஒரு பழைய புத்தகத்தைக் கொடுத்து உதவிய திரு.ஏ.என். அனுமந்தன் அவர்களுக்கு நன்றி தெரிவிக்கக் கடமைப்பட்டுள்ளோம். பழம்பெரும் நூல்கள் அழிந்து போகக் கூடாது என்பதில் அவர் காட்டும் ஆர்வமும் அதற்காக அயராது உழைக்கும் பண்பும் கண்டு பெரிதும் வியப்படைகிறோம். இறைவன் அவருக்கு நீண்ட ஆயுளும் ஆரோக்கியமும் ஐஸ்வர்யமும் அளித்துக் காப்பாற்ற வேண்டும் என்ற இறைஞ்சுகிறோம். மற்றும் இதைக் குறுகிய காலத்தில் அச்சிட்டுக் கொடுத்த கோகிலா ஸ்ரீ அச்சகத்தாருக்கும் நன்றி தெரிவிக்கக் கடமைப்பட்டுள்ளோம்.

வணக்கம்

எஸ்.பி. ராமச்சந்திரன்

பதிப்பாசிரியர்

சிவமயம்

நந்தீசர்

திருவாய் மால்ந்தருளிய

சகல கலைக்ஞானம்–1000

பொருளடக்கம்

6 சகல கலைக் ஞானம் ✯

7 நந்தீசர் ✯

8 சகல கலைக் ஞானம் ☆

10 சகல கலைக் ஞானம் ☆

12 சகல கலைக் ஞானம் ✯

14 சகல கலைக் ஞானம் ✯

15 நந்தீசர் ✯

16 சகல கலைக் ஞானம் ✯

உ

சிவமயம்

நந்தீசர்

திருவாய் மலர்ந்தருளிய

சகல கலைக்ஞானம்–1000

காப்பு

பராபரமா நின்றபரை யுமையே போற்றி
பதிவான சதாசிவத்தி னண்டம் போற்றி
அராதரமா மென்தாயே யருளே போற்றி
அன்பான மனோன்மணியே ரூபம் பேற்றி
நராபரமா நந்திக்குத் தாயே போற்றி
நலமாக வெனை வளர்த்த தேவி போற்றி
மராபரமா யாதியந்தத் தன்மை போற்றி
மகத்தானவுமையுடனே சதாசிவத்தைப் போற்றினேனே 1

போற்றினே னண்டபிண்டத் தருளே போற்றி
புகழான கோசமுடன் பீசம் போற்றி
ஆற்றினே னாதார மேலாதாரம் போற்றி
அருள்பெருகு மாயிரத்தெட் டண்டம் போற்றி
வாற்றினேன் வகாரத்தின் வாசி போற்றி
வளமான ஆதியுப்பு பூரகம் போற்றி
மாற்றினேன் தேவியுமை முப்பு பூரகம் போற்றி
மகத்தான தேவி சிவகாமி போற்றி 2

போற்றவே குண்டலியி னருளே போற்றி
புகழான வல்லபையின் மூலங் காப்பு
ஆற்றவே யண்டபிண்டத் தாதி காப்பு
அன்பான சிவகாமி மூலங் காப்பு
வாழ்த்தவே மெஞ்ஞான சூட்சங் காப்பு
வளமான சிவசத்தி பாதங் காப்பு
மாத்தவே மகாரத்தின் சூட்சங் காப்பு
மகத்தான சிவபதத் தினருள் காப்பாமே 3

18 சகல கலைக் ஞானம் ✯

காப்பாகும் பஞ்சகர்த்தாள் பாதங்காப்பு
கனமான ஆதாரத்தருளே காப்பு
தாப்பாகுந் தொண்ணூற்றாறு கருவி காப்பு
தனதான விந்நூலின் பொருளே காப்பு
வாப்பாகு முப்பூசற் குருவே காப்பு
வளமான பொதியை மலை யகமே காப்பு
ஆப்பாகும் பொதியைதனில் சஞ்சீவி காப்பு
அன்பான நாதவிந்தி னருளே காப்பே 4

காப்பான மும்மூர்த்தி பிரமவிஷ்ணு
கனமான வுருத்திரனுங் காட்சி காப்பு
வாப்பான வுள்மூலம் நடுமூலந் தான்
வளமான மேல் மூல முடிவே காப்பு
ஆப்பான சருகரண்ட மமுர்த மூறும்
அன்பான வாலையவள் திங்கள் பதங்காப்பு
நாப்பான நகாரமுடன் வகார சிகாரம்
நலமான அகாரமுடன் மகாரங் காப்பே 5

ஆமப்பா வாலையென்ன பிண்டம் பிண்டம்
அப்பனே பிண்டமென்ன நாதவிந்து
வாமப்பா நாதவிந்தா லெடுத்த தேகக் கூர்கேள்
வளமான பரமாச்சு சத்தமாச்சு!
நாமப்பா ஆதியுடன் அந்த மாச்சு
நலமான நடுவாச்சு முடிவுமாச்சு
காமப்பா கடலாச்சு மலைகளாச்சு
கனமான ஆலவிழுது சுரைக்கொடி போலாச்சு 6

ஆச்சப்பா பரம்நீயே பராபரனும் நீயே
அப்பனே சத்தமுடன் சாகரமும் நீயே
வாச்சப்பா சத்திசிவம் நீதானச்சு
வளமான கோவில்குளஞ் சிவாலயமும் நீதானச்சு
நாச்சாப்பா திசைவாய்வு உன்னிடத்தில் நிற்கும்
நலமாக வாகையாற் பேச்சு மூச்சு
ஈச்சப்பா வுன்னறிவாற் தேறியேறு
மடையர்களே யுன்னைவிட்டா லீசன்வேறோ 7

வேறான வகையை நன்றாய்ச் சொல் வேன்மைந்தா
வேண்டியதன் வரங்களால் மனுஷ சென்மம்
ஆறான மனுஷ சென்மம் பிறந்தாலென்ன
அசடர்கள் தான் கூன்குருடு முடவனாக
மாறான பின்னமது தப்பினோர்க்கு
மகத்தான புண்ணியத்தாற் பிறப்பாரையா
காறான நாதவிந்தா லாண் பெண்ணிரண்டுங்
கனமான கருமத்தாற் பெண்ணதாமே. 8

சூரியனில் வசியம்
சந்திரனில் தாமிஷம்

ஆமப்பா புண்ணியோ ராண் பிறப்பு
அப்பனே கற்பியவள் கன்னியானால்
நாமப்பா நல்லகுண முள்ளோருக்கு
நலமான சகலகலைக் கியானஞ் சொல்வேன்
வாமப்பா பனிரண்டு கலையு மைந்தா
வளமான விடகலை பின்கலை யிலொடுங்கும் பரு
காமப்பா சூரியனில் வசியமாகும்
கண்மணியே சந்திரனிற் றாமிஷமே யாமே 9

ஆமென்ற ராசருக்குச் சந்திரன் தானன்று
அப்பனே புருஷருக்கு சூரியன் தானன்று
காமென்ற கன்னமிட சூரியனில் நன்று
கனமான வழக்கு மெல்லச் சந்திரனன்று
வாமென்ற விருகலையு மொருவிதமா யோடில்
வளமான சுத்த சூனியமா மைந்தா
நாமென்ற சூரியனில் இம்மென்று கும்பி
நலமான சந்திரனில் அம்மென்று வாங்கே 10

வாங்கவே வாசியைத் தான் பழக்கம் பண்ணு
வளமான வாயுமடா மூலமூலம்
ஆக்கவே வாசிசித்தி யானோருக்கு
அரனயன் மாலிவரீடோ இல்லையில்லை
நாங்கவே நந்திதான் சொல்வேன் மைந்தா
நலமான தன்வந்திரி கேளு கேளு
மாங்கவே யொருமனதாய் ரேசகமாய் நில்லுநில்லு
மகத்தான பூரகத்தை ரேசகத்தில் வையே 11

வாசியோக மறிய

வையடா பூரணத்தைக் கும்பகத்தில் வைத்து
வளமான வாசியைத் தானொரு மனதாய்க் கட்டி
கையடா பிங்கலையால் கும்பகத்தில் வைத்துக்
கண்மணியே யிடைகலையால் வாங்கு வாங்கு
மையடா விவ்விதமாய் வருஷங்கும்பி
மகத்தான சூரியன்தான் வசியமாவான்
அய்யடா விடைகலையிற் பூரகத்தில் நாட்டி
அப்பனே பிங்கலையால் மெதுவாய் வாங்கே 12

வாங்கடா வொருவாண்டு பழக்கம் பண்ணு
வளமான வாசியடா வானையப்பா
ஆங்கடா மெதுவாக வாசிகும்பி
அப்பனே பழகிவர வரவம்புக்கும்
மாங்கடா மெதுவாக வசப்படுத்திக் கொள்ளு
மகத்தான வாசியது வடங்காவானை
வேங்கடா வேங்கையது போலேமைந்தா
வெளியேறி கொல்லுகிற வாசியாச்சே. 13

ஆச்சடா புத்திவான் தன்வந்திரியே கேளு
அப்பனே மெதுவாகக் கும்பிகும்பி
வாச்சடா பூமையென்ற மகாரமப்பா
வளமான வாசியதை மடக்கிக்கட்டும்
மாச்சடா விம்மென்றுங் கும்பித்தாக்கால்
மகத்தான வாசியது பலமேயாகும்
நாச்சடா பழக்கமது செய்துவா நீ
நலமான நவதுவாரங் கட்டும் பாரே 14

பாரென்ற வொன்பதிலே வாய்வு போகும்
பண்பான வூமையது கட்டிப்போடும்
ஆரென்று மெவரென்று நானென்றுந் தான்
அப்பனே சொல்வதற்கு நாவுமுண்டோ
காரென்ற வூமையனைக் கருத்தி லென்னால்
கசடர்களுங் கண்டுணர் வார் கருத்திலெண்ணு
வாரென்ற வாயமுர்தம் பெற்றோர்க்கு
வளமான வாக்கமுர்தஞ் சித்தியாச்சே. 15

ஆச்சென்ற நந்திகுரு நகாரவாழ்க்கை
அப்பனே யகத்தியந்தான் மகாரமாகும்
வாச்சென்ற நகாரத்தால் நந்திகாணும்
வளமான மகாரத்தால் அகத்தியனைக்காணு
நாச்சென்ற நமசிவாயம் நந்தியாச்சு
நலமான மநயவசி கும்பமாகுங்
காச்சென்ற கனகசபை கும்பமையங்
கன்மணியே நந்தியடா வமுர் தமாமே. 16

சகலகலைக்யானம்—பூர்வமுப்புத்தன்மை

ஆமப்பா யிந்நூல்தான் முப்புமார்க்கம்
அப்பனே நந்தியான் சொல்வேன்கேளு
வாமப்பா தேவிக்கு சதாசிவன்தான் சொன்னார்
வளமாக வெந்தனுக்குத் தேவிசொன்னார்
நாமப்பா தன்வந்திரி யுந்தனுக்கு
நலமாகச் சொல்லுகிறேன் மைந்தாகேளு
காமப்பா முப்பூவடா பூத்திருக்குங்
கசடர்களே யுழமண்ணைக் கருவொன்றாரே 17

என்றதொரு வுவர்மண்ணு கருவுமாமோ
வென்மக்காள் கோழி முட்டை கருவுமாமோ
வன்றதொரு தழைகளைத்தான் வாதஞ்செய்வார்
வளமான தழைகளிலே வகாரமேது
நன்றதொரு வுழமண்ணுங் காரமேது
நலமான கோழியண்டங் காரமேது
அன்றதொரு வமுரியென்று மூத்திரத்தைச் செய்வார்
அசடர்களே மூத்திரத்தில் காரமேதோ 18

ஏதடா பூர்வமுப்புச் சொல்லக் கேளு
யென்மகனே தலைப்பிண்ட மேலேமைந்தா
வாதடா நவரச முப்பு பூர்க்கும்
வளமான முப்பூவையென்ன சொல்வேன்
ஆதடா அரன்முப்பு அயன்மால் முப்பூ
அய்யனே யிவர்மூவர் அமர்ந்த முப்பூ
நாதடா பூர்வமுப்பு மிதுதான் மைந்தா
நலமான மூப்பூவைக் காணுகாணே. 19

22 சகல கலைக் ஞானம் ☆

காணப்பா ஆதியிலே பூத்தபூவுங்
கண்மணியே யாதிமண்ணு வுவர்ப்புவாரும்
வாணப்பா வகாரத்தில் நகார முப்பூ
வளமான பிரமனோடு விஷ்ணு ருத்திரன்
மாணப்பா யிவர்மூவர மார்ந்தவுப்பு
மகத்தான பரமாக நின்றவுப்பு
ஆணப்பா வெட்டிரண்டும் பத்தாய் நின்ற
வன்பான மனோன்மணியாள் வாலையாச்சே 20

ஆச்சப்பா வாலையென்ன நவரசந்தான் மைந்தா
அன்பான நவரசந்தான் வாலைமுப்பு
வாச்சப்பா வாலையவள் முப்பூவாகும்
வளமான மனோன்மணி முப்பூவாகும்
நீச்சப்பா கொடியண்டச் சுன்னமாகும்
நேரான வேதையிலே கோடாகோடி
மாச்சப்பா வன்னைவிட வேறுண்டோ தெய்வம்
மகத்தான சகஸ்திரந்தான் மணிதான்தானே 21

பூர்வமுப்பு எண்ணெய்கழட்ட

தானான பூர்வமுப்பு தன்னைமைந்தா
தனதான யெண்ணெய்தனைக் கழற்றக் கேளு
வேனான முப்பூவைக் கிளியாய்க் கட்டி
வேதாந்தப் பாண்டத்தில் சுத்தசலம் விட்டு
ஆனான வுவர்ப்பூவை யதனிலிட்டு
அப்பனே கலக்கி நன்றா யடுப்பிலேற்றி
மானான முச்சாம மெரித்திட்டாக்கால்
மதியான யெண்ணெயது கக்கிப்போமே 22

பூர்வமுப்புச் சுண்ணம்

போமப்பா முப்புவது வெண்மையாகும்
பொருளான முப்பூவைப் பதனம் பண்ணு
வாமப்பா பூசித்து ரேசகமும் பண்ணி
வளமான முப்பூவைப் பணிந்திட்டாய் நீ
ஆமப்பா முப்பு சுண்ணம் பண்ணக்கேளு
அப்பனே முப்பூவைக் கல்வத்திட்டு
நாமப்பா விந்துவால்நால் சாமமாட்டி
நலமான சுத்தசலந் தன்னாலாட்டே 23

ஆட்டவே வில்லைசெய்து ரவியுலர்த்தி
அப்பனே புடம் போட நீறாய்ப் போகும்
வாட்டமே திருநீறு போலாம் மைந்தா
வளமான திருநீறை யென்னசொல்வேன்
நாட்டவே பூர்வமுப்புச் சுண்ணம் போல
நலமான சுண்ணமெல்லா மிதற்கொவ்வாது
காட்டவே பூர்வமுப்புச் சுண்ணஞ்சொன்னேன்.
கண்மணியே விஷக்கல்லு யெடுக்கக் கேளே. 24

விஷக்கல்லெடுக்கும் வகை

கேளப்பா விஷக்கல்லு யென்பேராச்சு
கெடியான விஷக்கல்லு அமுர்தக்கல்லு
நாளப்பா கோரையென்ற முடிமேல் நிற்கும்
நலமான விந்தினிட லிங்கம்போல
வாளப்பா லிங்கக்கல் நடுவில் நிற்கும்
வளமான மூன்றுபத்து ஆண்டுக்குள்ளே
ஆளப்பா யெடுத்ததனை வைத்துக்கொண்டு
அப்பனே விஷக்கல்லு அமுர்த மாச்சே 25

விஷக்கற்சுண்ணம்

ஆச்சப்பா விஷக்கல்லு யெடுக்கச் சொன்னேன்
அப்பனே விஷச் சுண்ணம் பண்ணக் கேளு
வாச்சப்பா அண்டோட்டை யிடித்துத் தூளாய்
வளமாக அரைத்ததனைக் குகையாப் பண்ணி
நாச்சப்பா விஷக்கல்லுச் சுத்திசெய்து
நலமாக குகையில் வைத்துச் சீலைசெய்து
காச்சப்பா பூவரசன் கரிதான் கொண்டு
கண்மணியே யுலையில் வைத்து வூதுவூதே 26

ஊதவே முச்சாம மூதினாக்கால்
உத்தமனே வெண்ணிறம் போல் சுண்ணமாகும்
வாதமே சுண்ணமது மிதுபோலுண்டோ
வளமான சுண்ணாம்பை யென்னசொல்வேன்
காதவே சுண்ணாம்பைப் பூசைபண்ணு
கண்மணியே ரேசகமாய் பூசைபண்ணு
நாதவே நல்லகுண முள்ளோருக்கு
நாட்டிவிட்டேன் சுண்ணாம்பை நவிலொண்ணாதே 27

சிவமுப்புவிவரம்

ஒண்ணாத சிவமுப்பை சொல்லக்கேளு
உத்தமனே அண்டத்தின் கோரை போக்கி
மண்ணாத அண்டத்தின் கோரை போக்கி
வளமான கல்லுரலிற் போட்டுக் கொண்டு
அண்ணாத யெகுவுலக்கை தன்னாலாட்டி
அப்பனே மூச்சாமம் சாடுவாய் நீ
கண்ணாத புளிபோல நிற்குமையா
கண்மணியே வழித்தெடுத்துப் பாண்டத்திட்டே 28

இட்டந்தப் பனிநீரைப் படிதான் வார்த்து
இயல்பாக வடுப்பேற்றிக் கொதிக்கக் காச்சி
வட்டந்தக் காச்சையிலே பூநீறிட்டு
வளமாக யெரித்திடவே யெண்ணெய் கக்கும்
மட்டந்தப் பாண்டத்தை யிறக்கிக் கொண்டு
மகத்தான அகலமுள்ள பீங்கான் வாங்கி
கட்டந்தப் பீங்கானி லூத்திப் பார்க்க
கண்மணியே சவர்க்காரம் போல ாமென்னே. 29

என்னவேசெம்மேடை பூமியேகி
யென்மகனே சமாதிசெய்து பூவனங்கள் வைத்து
வன்னவே மேடைதனில் பீங்கான் வைத்து
வளமான பூர்வமுப்பு தெளித்துப்போடு
கன்னவே தூப நைவேத்தியஞ் செய்து
கண்மணியைப் பூசித்து நாற்பதுநாள் நில்லு
மன்னவேயரும்பிட்டுப் பூ பூர்க்கும்பார்
மகத்தான பூவெடுத்தும் பதனம் பண்ணே 30

சத்திமுப்பு

பண்ணவே குப்பிதனி லடக்கம் பண்ணு
பண்பான முப்பூவை ரேசகமாய்ப் புசி
அண்ணவே வெள்ளையது கொடியவெண்மை
அரகரா யதன்பெருமை யார் சொல்வார்கள்
வண்ணமே சிவமுப்பு நன்றாய்ச் சொன்னேன்
வளமான சத்தியுட முப்பு கேளு
மண்ணவே முதற்பிண்டஞ் சமூலம் வாங்கி
மகத்தான கல்லுரலி விட்டுக்கேளே. 31

கேளப்பா யெகுவுலக்கை தன்னாற்சாடு
கெடியான சுத்தசலங் கூடவாரு
வாளப்பா பூமியுட வுவர்ப்பூ போட்டு
வளமாக நாற்சாம மிடித்து வாங்கி
ஆளப்பா மையான புளிபோலாகும்
அப்பான புளியெடுத்துப் பாண்டத்திட்டு
நாளப்பா செல்லாமல் சுத்தசலம் வார்த்து
நலமான வடுப்பேற்றிக் கொதிக்கக் காச்சே 32

காச்சப்பா நாற்சாமங் காச்சினாக்கால்
கனலெழும்பி யெண்ணெயது கழன்று போகும்
வாச்சப்பா இறக்கியதைப் பீங்கானி லூற்றி
வளமான பூர்வமுப்பைக் கழஞ்சுதூவ
நாச்சப்பா மூன்றுமடை யிறக்கிக்கொண்டு
நலமாகப் பூசித்து வைத்திடாய் நீ
ஆச்சப்பா தேவிக்கு நாற்பது நாள் பூசி
அப்பனே மண்டலஞ் சென்றெடுத்துப் பாரே 32

பாரப்பா நாற்பது நாட்குள்ளே மைந்தா
பண்பான வெண்சாரை யிரைச்சல் காணும்
ஆரப்பா மண்டலத்தி லெடுத்தாயானால்
அப்பனே வெகுகோடி காந்தி வீசும்
நாரப்பா சத்திமுப்பு நாதத்தின் முப்பு
நலமான முப்பூவை யென்னசொல்லேன்
வாரப்பா சத்திமுப்பு பதனம்பண்ணு
வளமான முப்பூவைப் பூசை பண்ணே. 34

விந்தெடுக்கும் வகை

பண்ணப்பா சத்திமுப்பு நன்றாய்ச் சொன்னேன்
பண்பான விந்ததுதா னெடுக்கக் கேளு
அண்ணப்பா அண்டோடுஞ் சவ்வும் போக்கி
அப்பனே உள்மூளை பீங்கானிலிட்டு
வண்ணப்பா சத்தி முப்பைப் பலந்தான் போட்டு
வளமாக ரவிதனிலே வைத்திட்டாக்கால்
கண்ணப்பா தெளிந்ததுவும் விந்தாய்ப் போகும்
கண்மணியே விந்தெடுத்துச் சீஷாவில் வையே 35

நாத மெடுக்க

வையப்பா பூசித்துப் பதனம் பண்ணு
வளமான வெதிராகப் பூசைபண்ணு
ஐயப்பா விந்துதா னெடுக்கச் சொன்னேன்
அப்பனே நாதமது யெடுக்கக்கேளு
மையப்பா முதற் பிண்டங் கன்னிபிண்டம்
மாண்பர்களே கன்னிப்பெண் ணிறந்தால் கேளு
நையப்பா அண்டத்தை முழுதும் வாங்கி
நலமான வுந்தியெனுங் கபாலமாமே. 36

ஆமப்பா வுந்திநடுத் தமரும் போட்டு
அப்பனே யத்தமரில் சிவமுப்பிட்டு
வாமப்பா மதிதனிலே வைத்திட்டாக்கால்
வளமான நாதமது சிவந்துகாணும்
நாமப்பா நாதமது தண்ணீர்போல
நலமாகக் கரைந்து நிற்குஞ் சீஷாவில் வைநீ
காமப்பா நாதமதை பதனம் பண்ணு
கண்மணியே தேவிக்கும் பூசைசெய்யே. 37

நூலின் விவரம்

செய்யப்பா யிதுவெல்லாங் குருவுமாகுஞ்
செயமாக யிந்நூலி லாடுஞ் சித்து
கையப்பா வறுபத்து நாலுக்குத் தான்
கண்மணியே யிக்குருவுஞ் சேர்த்து ஆடு
மெய்யப்பா நந்திதான் சொன்னவாக்கு
மென்மேலு மமுர்தத்திற் பொழிந்தவாக்கு
ஐயப்பா தரும்வான மந்திரியே கேளு.
அப்பனே முதலாமொரு காவியமுமாமே. 38

ஆமப்பா வதன்பிறகு கலைக்ஞானஞ் சொன்னேன்
அப்பனே கலைக்ஞான மிதுபோலுண்டோ
வாமப்பா தன்வந்திரி யுந்தனுக்கு
வளமாகச் சொல்லுகிறே னினிமேற்கேளு
நாமப்பா சுண்ணமொடு செயநீர்போக்கும்
நலமான மந்திரங்கள் சக்கரங்கள்
காமப்பா சரக்குவைப்பு திராவகங்கள்
கண்மணியே கட்டுவகை சமாதிப் போக்கே 39

செந்தூரம்–களங்குபூசை–நிட்டை–ஜாலமறிய

போக்கான செந்தூரம் பற்பத்தோடு
புகழான களங்கோடு பூசை நிட்டை
வாச்கான கற்பமொடு மெழுகுகோடி
வளமான திகைப்பூடு சொல்வேன் கேளு
மாக்கான மதியமுர்தஞ் சவுக்காரங் கோடி
மகத்தான தயிலமொடு கட்டுகோடி
ஆக்கான சூரணங்கள் லேகியங்கோடி
அப்பனே யிந்திரஜால மயேந்திர ஜாலமாமே 40

ஆமப்பா செகசால வசியங்கோடி
அப்பனே காரணங்கள் மாரணங்கள்கோடி
வாமப்பா அஞ்சனமு மாற்றங்கோடி
வளமான வாத வித்தை சிமிட்டிகோடி
காமப்பா ஞானோர்க்கு ஞானஞ் சொல்வேன்
கண்மணியே வாதமொடு வயித்தியப் போக்கும்.
நாமப்பா நந்திகுரு நான்தான் சொல்வேன்
நலமான என் சொல்லைக் கேளுகேளே 41

திகைப்பூடறிய

கேளப்பா பூட்டென்ற திறவுகோல்தான்
கெடியான தலைப்பிண்டம் பிறந்துதானால்
ஆளப்பா ஐந்தாவது மாதந்தன்னில்
அப்பனே யிந்தாக்கால் மெத்தநன்று
வாளப்பா யிறந்த பிண்டந் தன்னைவாங்கி
வளமான கோரைசட்டை தன்னைப்போக்கி
நாளப்பா செல்லாம லுலர்த்திக் கொண்டு
நலமான கல்லுரலிற் போடுபோடே 42

ஐங்காயமறிய

போடப்பா யெகுவுலக்கை தன்னாற்சாடு
பொருமியது சூரணமாய் ரேசித்துப் போகும்
வாடப்பா சூரணத்தைச் சீசாவில் வைத்து
வளமாகப் பூசித்துப் பதனம் பண்ணு
சூடப்பா திகைப்பூட்டைத் திறந்து சொன்னேன்
அப்பனே ஐங்காயஞ் சொல்லக்கேளு
நாடப்பா ஐங்கோலப் பிண்டம் வாங்கி
நலமான செவிகொழுப்பு கண்ணுமாமே 43

ஆமப்பா நாவுடனே மண்டைமூளை
அப்பனே விஷப்பல்லை நாலும் வாங்கி
காமப்பா ரவியுலர்த்திக் கல்லுரலிலிட்டு
கண்மணியே யெகுவுலக்கை தன்னாற்சாடு
வாமப்பா தூளாகு மெடுத்துக் கொள்ளு
வளமான தூளதனைச் செப்பில்வைத்து
நாமப்பா தேவிக்குப் பூசை பண்ணி
நலமாகப் பூசை செய்து பதனம் பண்ணே 44

பண்ணப்பா வைங்காய மிதுதான்மைந்தா
பண்பாக விதற்குப்பேர் தாரம் லிங்கம்
அண்ணப்பா கெவுரியென்றும் வீரமென்றும்
அப்பனே வெள்ளையென்று மிதற்குப் பேரு
கண்ணப்பா கடுகென்றுங் காயமென்றுங்
கண்மணியே வசம்பென்று முள்ளியென்றும்
வண்ணப்பா மஞ்சளென்று மைந்துபேரு
வளமான யிவையெல்லா மாகாதென்றே 45

மலைப்புளியின் விவரம்

என்றதொரு ஐங்காயம் நன்றாய்ச் சொன்னேன்
யென்மகனே மலைப்புளிதான் சொல்லக்கேளு
வன்றதொரு ஆறாவது பிண்டம்வாங்கி
வள:மான கல்லுரலி விட்டுக்கொண்டு
அன்றதொரு சுத்தசலம் படிதான் வார்த்து
அழகான முப்புவது பலந்தான் போட்டு
நன்றதொரு யெகுவுலக்கை தன்னாற் குத்து
நலமாகக் குத்திவர மெழுகு போலாமே. 46

புளிச் செயநீரறிய

ஆமப்பா வருத்தெடுத்துப் பீங்கானில் வைத்து
அப்பனே ரவிதனிலே வைத்திட்டாக்கால்
காமப்பா நாதமது போலிறங்குங்
கண்மணியே புளிசெயநீர் பதனம்பண்ணு
வாமப்பா புளியைத்தான் பரணில்வைநீ
வளமான மலப்புளி தானிதுதான்மைந்தர
நாமப்பா புளியை நன்றாய்ச் சொல்லிவிட்டேன்
நலமான அண்டகுண்ணம் பண்ணக்கேளே. 47

அண்டச்சுண்ணம்

கேளப்பா அண்டத்தைக் கொண்டுவந்து
கெடியான கல்லுரலிற் போட்டுக்கொண்டு
நாளப்பா யெகுவுலக்கை தன்னாற்குத்து
நலமாகத் தூளாகு மெடுத்துக் கொள்ளு
வாளப்பா பாண்டத்திற் போட்டு கொண்டு
வளமான சுத்தசலம் படிதான் வார்த்து
ஆளப்பா வடுப்பேற்றிக் காச்சினாக்கால்
அப்பனே யெண்ணெய்யது கழன்றுபோமே 48

அண்டசெயநீர்

போமப்பா யெண்ணெயெல்லாம் வழித்துப் போட்டு
பொருளான செயநீரை யிறுத்துக்கொண்டு
லாமப்பா அண்டசெய நீரை மைந்தா
வளமான சீசாவில் பதனம்பண்ணு
நாமப்பா அண்டத்தூள் வண்டலைத்தான்
நலமான கல்வத்திற் போட்டுக்கொண்டு
காமப்பா சாமமது ஆட்டினாக்கால்
கண்மணியே மெழுகது போலாகும் பாரே 49

பாரப்பா வில்லை செய்து ரவியுலர்த்திப்
பண்பான சீலையது செய்துக்கொண்டு
ஆரப்பா கெஜபுடத்திற் போடுபோடு
அப்பனே வெண்ணிறம் போற் கண்ணாம்பாகும்
நாரப்பா சுண்ணாம்பை யென்னசொல்வேன்
நலமான கண்ணமடா அண்டச் சுண்ணம்
காரப்பா கனகசபை யொப்புமிந்தக்
கைலாச கிரியண்டச் சுண்ணமாமே 50

சுத்தசலம்

ஆமப்பா அண்ட சுண்ணம் நன்றாய்ச் சொன்னேன்
அப்பனே சுத்தசல மெடுக்கக் கேளு
வாமப்பா கன்னியவள் கெர்ப்பமானால்
வளமான அபானைவன் சலக்குடத்திற் சேர்வான்
நாமப்பா மூன்று பத்து மாதமானால்
நலமான அபானனவன் கீழே நோக்கி
காமப்பா நீர்க்குடந்தா னுடைந்து போகுங்
கண்மணியே யப்போது பிடித்துக் கொள்ளே 51

ஐங்கோலச் செயநீர்

கொள்ளப்பா சுத்தசல மினிவேறுண்டோ
கொடிதான சுத்தசலம் பூர்வமாச்சு
விள்ளப்பா யான்திறந்து விண்டுவிட்டேன்
வெளியாகச் சொல்லி நன்றாய் விரித்துப் போட்டேன்
மள்ளப்பா சுத்தசலம் நன்றாய்ச் சொன்னேன்
மகத்தான ஐங்கோல செயநீர் கேளு
அள்ளப்பா ஐங்கோலப் பிண்ட மைந்தா
அப்பனே ஐந்தாவது மாதம் வாங்கே 52

வாங்கடா பிறந்தைந்தா மாதந்தன்னில்
வளமாக யிறந்தாக்கால் வாங்கிக்கொண்டு
ஆங்கடா கோரையுடன் சட்டைபோக்கி
அப்பனே கல்லுரலிலிட்டுக்கொண்டு
நாங்கடா வெகுவுலகை யதனாற்சாடு
நலமான புளிபோல யாகும் பாரு
மாங்கடா யெடுத்தனைப் பீங்கானில் வைத்து
மகத்தான ரவிதனிலே நவநாள்வையே 53

வையப்பா செயநீர்தா னிறங்கு மைந்தா
வளமான ஐங்கோலச் செயநீரையா
ஐயப்பா செயநீர்தா னைங்கோலஞ் சொன்னேன்
அப்பனே யறுவகைநீர் சொல்லக்கேளு
மையப்பா தலைப்பிண்டம் அண்டம் வாங்கி
மகத்தான கோரையை நீ போக்கிப் போட்டு
நையப்பா வுந்திநடு தமரும் போட்டு
நலமாகச் சிவமுப்பு சத்திமுப்பே 54

முப்பான விஷச்சுண்ண மண்டச்சுண்ண
முடிவான ஐங்காயந் திகைப்பூடு சேர்த்து
அப்பான ஆறுமொன்றாய்த் தமரிற்போட்டு
அப்பனே மதிதனிலே வைத்திட்டாக்கால்
கப்பான கரிகரைந்து நீராய்ப் போகுங்
கனமான வறுவகை நீர்தான் மைந்தா
வைப்பான நீரதனைப் பதனம் பண்ணு
வளமான வறுவகைதான் செயநீராமே. 55

ஆமப்பா வறுவகை நீர் சொன்னேன் மைந்தா
அப்பனே கட்டுவகை நீரைக் கேளு
வாமப்பா பிண்டத்தைக் கொண்டுவந்து
வளமான அண்டத்தைக் கல்லுரலிலிட்டு
நாமப்பா வெடியுப்பு சீனங்காரம்
நலமான கறியுப்பு மூன்றும் போட்டு
காமப்பா யெகுவுலக்கை தன்னாற் சாடு
கனலெழும்பிப் புளிபோல கலந்துபோமே. 56

போமப்பா பீங்கானில் வழித்துப் போட்டு
புகழான ரவிதனிலே வைத்திட்டாக்கால்
ஆமப்பா வரை நொடியில் நீராய்ப்போகும்
அப்பனே யது கண்டு பதனம் பண்ணு
வாமப்பா தேவிக்கும் வயிரவற்கும்
வளமாகப் பூசித்து நைவேத்தியஞ் செய்து
நாமப்பா கடனென்ற கட்டுக்கெல்லாம்
நலமான செயநீராற் கட்டுகட்டே 57

ஐங்கோலத்தைலம்

காட்டவே ஐங்கோலத் தைலங்கேளு
கனமான ஐங்கோலப் பிண்டம் வாங்கி
வாட்டவே பிண்டத்தை கோரைபோக்கி
வளமான பாண்டத்தி விட்டுக்கொண்டு
ஆட்டவே குழித்தைலந் தன்னைவாங்கி
அப்பனே சீராவில் வைத்துப் பேணி
மாட்டவே தேவிக்குப் பூசை பண்ணி
மகத்தான தைலத்தைப் பதனம்பண்ணே 58

காயத்தைலம்

பண்ணவே ஐங்கோலத் தைலஞ் சொன்னேன்
பண்பாகக் காயத்தைலந் தன்னைக் கேளு
அண்ணவே முன்சொன்ன ஐங்காயங் கொண்டு
அப்பனே பாண்டத்தி விட்டுக்கொண்டு
வண்ணவே குழித்தைலந் தன்னைவாங்கி
வளமான தைலத்தைச் சீசாவில் வைத்து
மண்ணவே வைரவற்குப் பூசைபண்ணி
மகத்தான தைலத்தைப் பதனஞ் செய்யே 59

அண்ட பிண்டத்தைலம்

செய்யவே காயத்தைலந் தன்னைச் சொன்னேன்
செயமான அண்ட பிண்டத் தைலங்கேளு
வையவே யாதியந்தங் கோசபீசம்
வளமான அண்டபிண்டத் தன்னை வாங்கி
கையவே கோரையுடன் சட்டைபோக்கி
கண்மணியே பாண்டத்தி விட்டுக்கொண்டு
மையவே குழித்தைலந் தன்னை வாங்கி
மகத்தான சீசாவில் வைத்துப் போற்றே 60

அண்டத் தைலம்

போற்றப்பா அண்டபிண்டத் தைலஞ் சொன்னேன்
புகழான அண்டத்தின் தயிலங்கேளு
ஆற்றப்பா கல்லுரலி லண்டம் போட்டு,
அப்பனே யிடித்ததனைப் பாண்டத்தி லிட்டு
வாற்றப்பா குழித்தைலந் தன்னைவாங்கி
வளமாகப் பூசித்துச் சீசாவில் வைத்து
மாற்றப்பா தேவிக்கும் வைரவற்கும்
மகத்தான பூசையது செய்துவையே. 61

கல்லுப்புத் தைலம்

வையப்பா அண்டத்தின் தைலஞ் சொன்னேன்
வளமான கல்லுப்புத் தைலங்கேளு
கையப்பா கல்லுப்பு பலமோ பத்து
கண்மணியே பாண்டத்திற் போட்டுக்கொண்டு
மையப்பா ரோமநீர் தெளித்துக்கொண்டு
மகத்தான குழித்தைலந் தன்னைவாங்கி
ஐயப்பா தேவிக்குப் பூசைபண்ணி
அப்பனே சீசாவிற் பதனம் பண்ணே 62

எச்சரிக்கை

மேலே கூறப்பட்ட பாடல்களில் வரும் தலைப் பிண்டம், ஐந்தாவது மாதப் பிண்டம், ஆறாவது மாதப் பிண்டம், சட்டை, கோரை, அண்டக்கல், விஷக்கல், சுத்தசலம், ஐங்காயம், திகைப்பூடு போன்ற சொற்கள் யாவும் பரிபாஷைச் சொற்கள். தக்க குருவின் மூலம் தீட்சை பெற்றவர்களுக்கே படிப்படியாக உணர்த்தப்படும் என்று சொல்லப்படுகிறது. இவற்றின் வெளிப்படையான பொருளைக்கண்டு ஏமாந்தவர்கள் உண்டு. அதனால், இவற்றை அப்படியே எடுத்துக்கொள்ளக் கூடாதென்று எச்சரிக்கிறோம்.

வெடியுப்புத் தைலம்

பண்ணப்பா கல்லுப்புத் தைலஞ் சொன்னேன்
பண்பான வெடியுப்புத் தயிலங்கேளு
அண்ணப்பா பலம்பத்து வெடியுப்புத் தான்
அப்பனே ரோமநீர் தனிற்பிரட்டி
வண்ணப்பா பாண்டத்தி லிட்டுக்கொண்டு
வளமான குழித்தைலந் தன்னைவாங்கி
கண்ணப்பா வடுகனுக்குப் பூசை பண்ணி
கண்மணியே சீசாவில் வைத்துக்கேளே. 62

வளையலுப்புத் தைலம்

கேளப்பா வெடியுப்புத் தைலஞ் சொன்னேன்
கெடியான வளையலுப்புத் தைலங்கேளு
வாளப்பா வளையலுப்புப் பலந்தான் பத்து
வளமான ஆசிநீர் தனிற்பிறட்டி
ஆளப்பா பாண்டத்திற் போட்டுக்கொண்டு
அப்பனே குழித்தைலம் வளமாய் வாங்கி
நாளப்பா தேவிக்கும் வைரவற்கும்
நலமாகப் பூசித்து சீசாவில் வையே. 64

இந்நூலாயிரம்–ஆதிவஸ்து–பிண்டம்–நாதம்–விந்து–வஸ்துவெனல்

வையப்பா யிந்நல்தான் பத்து நூறு
வளமாகக் கலைக் ஞானஞ் சகல கலை சொல்வேன்'
ஐயப்பா தன் வந்திரி யுந்தனக்கு
அன்பாகச் சொல்லுகிறேன் ஆதிவஸ்து
மையப்பா ஆதியென்ற மண்டபிண்டம்
மகத்தான பிண்டமடா நாதவிந்து
நையப்பா நாதவிந்து மதுவுமாகும்
நலமான விந்ததுதான் வஸ்துமாமே 65

சீனவுப்புத் தைலம்

வாமப்பா வளையலுப்புத் தைலஞ் சொன்னேன்
வளமான சீனியுப்புத் தைலங்கேளு
ஆமப்பா சீனியது பலமோ பத்து
அப்பனே சுத்தசலந் தனிற்பிரட்டி
நாமப்பா பிண்டத்தி லிட்டுக்கொண்டு
நலமான குழித்தலைந் தன்னை வாங்கி
காமப்பா வாலைக்குப் பூசைபண்ணி
கண்மணியே சீசாவில் பதனம்பண்ணே 66

வெடியுப்புசெயநீர்

பண்ணப்பா சீனியுப்புத் தைலஞ் சொன்னேன்
பண்பான வெடியுப்புச் செயநீர்கேளு
அண்ணப்பா பலம்பத்து வெடியுப்புத்தான்
அப்பனே பீங்கானிற் போட்டுக்கொண்டு
விண்ணப்பா விந்தைத்தான் பலந்தான்விட்டு
விளங்கிய வோர் விஷச்சுண்ணங் கழுஞ்சுபோட்டு
கண்ணப்பா கனமதியில் வைத்திட்டாக்கால்
கனலெழும்பித் தண்ணீராய்ச் செயநீராமே 67

கல்லுப்புச்செயநீர்

ஆமப்பா வெடியுப்புச் செயநீர் சொன்னேன்
அப்பனே கல்லுப்புச் செயநீர்கேளு
வாமப்பா கல்லுப்பு பலமோபத்து
வளமான அண்டச்சுண்ணம் விஷச்சுண்ணம் போடு
நாமப்பா பிசறியதைப் பீங்கானிற் போட்டு
நலமான மதிதனிலே வைத்திட்டாக்கால்
காமப்பா கல்லுப்புச் செயநீராகுங்
கண்மணியே செயநீரைப் பூசை செய்யே 68

வளையலுப்புச் செயநீர்

செய் [illegible] கல்லுப்பு செயநீர்கேளு
[illegible]சயலான வளையலுப்புச் செயநீர் சொன்னேன்
வையப்பா வளையலுப்பு பலந்தானெட்டு
வளமான வீரமுடன் விஷச்சுண்ணங் கூட்டு
கையப்பா யிடித்ததனைப் பீங்கானி லிட்டுக்
கண்மணியே ரவிதனிலே வைத்திடாய் நீ
நையப்பா நைத்திடவே நீராய்ப் போகும்
மகத்தான வளையலுப்புச் செயநீராச்சே. 69

சீனியுப்புச் செயநீர்

ஆச்சப்பா வளையலுப்புச் செயநீர் சொன்னேன்
அப்பனே சீனியுப்புச் செயநீர்கேளு
வாச்சப்பா சீனியுப்பு பலமோபத்து
வளமான அண்டசுண்ண முப்புபோடு
காச்சப்பா பிடித்ததனைப் பீங்காளி லிட்டுக்
கண்மணியே மதிதனிலே வைத்திட்டாக்கால்
மாச்சப்பா சீனியுப்பு செயநீராகு
மகத்தான செயநீரை வைத்துப் போற்றே 70

கரியுப்புச்செயநீர்

போற்றப்பா சீனியுப்பு செயநீர் சொன்னேன்
புகழான கரியுப்புச் செயநீர்கேளு
ஆற்றாப்பாகரியுப்பு பலந்தான் பத்து
அப்பனே யிடித்ததனைப் பீங்கானிற் போட்டு
வாய்த்தப்பா பூரமுடன் அண்டசுண்ணம்
வளமான முப்பூவும் போட்டுக் கொண்டு
மாய்த்தப்பா ரவிதனிலே வைத்திட்டாக்கால்
மகத்தான தண்ணீர்போல் செயநீராமே 71

சாரத்தின் செயநீர்

ஆமப்பா கரியுப்புச் செயநீர் சொன்னேன்
அழகான சாரத்தின் செயநீர்கேளு
வாமப்பா சாரமது பலந்தானெட்டு
வளமான சாரத்தை பீங்கானிற் போட்டு
நாமப்பா முப்புவுடன் அண்டச் சுண்ணம்
நலமான சுத்தாலந் தனிற்கலந்து
காமப்பா சாரத்திற் றெளித்துக் கொண்டு
கண்மணியே ரவிதனிலே வைத்திடாயே 72

காரத்தின்செயநீர்

வைத்திடவே சலம்போலே தண்ணீராகும்
வளமான சாரத்தின் செயநீர் மைந்தா
ஐத்திடவே சாரத்தின் செயநீர் சொன்னேன்.
அழகான காரத்தின் செயநீர் கேளு
மைத்திடவே காரமது பலந்தானெட்டு
மைந்தனே பீங்கானிற் போட்டுக்கொண்டு
கைத்திடவே பூர்வமுப்பு சிவமுப்பு போட்டுக்
கண்மணியே மதிதனிலே வைத்திடாயே. 73

வல்லாரை கற்பம்

வையப்பா செயநீராங் கண்டுகொள்ளு
மைந்தனே யிச்செயநீர் காரமெத்த
வாயப்பா வல்லாரை கற்பஞ் சொல்வேன்
வளமான ஆரையடா வகாரபிண்டம்
காயப்பா வல்லாரைச் சமூலம் வாங்கி
கண்மணியே நிழலுலர்த்தித் தூளாய்ப் பண்ணி
மாயப்பா வடிகட்டிப் பாண்டத்தில் வைத்து
மைந்தனே மண்டலந்தான் கொள்ளு கொள்ளே. 74

கடுக்காயின் கற்பம்

கொள்ளவே சட்டையது தள்ளிப்போகும்
கூறுகெட்ட நரைதிரையு மறைந்து போகும்
விள்ளவே வல்லாரைக் கற்பஞ் சொன்னேன்
விளங்கியதோர் கடுக்காயின் கற்பங்கேளு
மள்ளவே தலைப்பிண்டங் கடுக்காய் வாங்கி
மைந்தனே கோரையுடன் சவ்வும் போக்கி
அள்ளவே நிழலுலர்த்தித் தூளாய்ப் பண்ணி
அப்பனே கற்பமதை கொண்டுகேளே. 75

காரசார கற்பம்

கேளென்றே சட்டைதள்ளித் தேகம்பொன்னாம்
கெடிசான தேகமடா வச்சிரதேகம்
வானென்ற கடுக்காயின் கற்பஞ் சொன்னேன்
வளமான கற்பமடா யார்தான் காண்பார்
நாளென்ற சாரமடா காரசாரம்
நலமான காரமதைக் கொண்டு விட்டால்
மாளென்ற சூரியன்போல் காந்திவீசு
மைந்தனே விந்ததனா லெடுத்தாமே. 76

ஆமென்ற காரமடா காரசாரம்
அல்லாட்டால் சாரமதை நாற்பதுநாள்கொள்ளு
வாமென்ற மதிநாதங் கொண்டுவிட்டால்
வளமான தேகமடா வச்சிரத்தூணாம்
நாமென்ற சாரமதை மண்டலந்தான் கொண்டால்
நலமான சந்திரன்போல் காந்திவீசும்
காமென்ற காரசாரங் கொண்டுவிட்டால்
கனத்ததொரு திரேகமதுக் கழிவேயில்லை 77

சிவமுப்பு

இல்லையென்ற கற்பமடா யினிமேற் கேளு
இதமான சிவமுப்பு சத்திமுப்பு
வல்லையென்ற கல்வத்திற் போட்டுக்கொண்டு
வளமான சுத்தசலந் தன்னாலாட்டி
மல்லையென்ற மணிதனில் வைத்துக்கொண்டு
மைந்தனே மண்டலந்தான் கொண்டுவிட்டால்
அல்லையென்ற தொல்லைகளு மகன்றுபோகும்
அன்பான ஞானக்கண் தெளிவதாமே. 78

சத்திமுப்பு—பனிநீர்கற்பம்

ஆமப்பா பநிநீரும் விஷச்சுண்ணங் கூட்டி
அப்பனே மண்டலங்கால் கொண்டுவிட்டால்
வாமப்பா திரேகமதிற் கசடெல்லாந்தான்
வளமாகக் கழட்டிவிடுங் கற்பப்போக்கு
காமப்பா திரேகமதில் வினைகள் நின்றால்
கனமாக வகற்றிவிடுங் கண்டுகொள்ளு
நாமப்பா தேறுதற்கு யிக்கற்பம் வேணும்
நலமான கற்பமடா காணுகாணே. 79

அடி மூலகற்பம்

காணப்பா அடிமூலந் தன்னைவாங்கிக்
கருணையதாய் மண்டலமே கொண்டாயானால்
வாணப்பா வுன்னுடைய திரேகமைந்தா
வளமான யெகுத்தூணு போலாம்பாரு
ஆணப்பா யிக்கற்பங் கொண்டுவிட்டால்
அகந்தனிலே யகத்தியனைக் காண்பாய்பாரு
மாணப்பா யடிமூல மார்தான்காண்பார்
மகத்தான நஞ்சுகொடி வேலியாமே 80

சல்லிமூலக்கற்பம்

மூலமென்றால் மூலமடா சல்லிமூலம்
முக்கியமுள்ள சல்லிவேர் மூலமாச்சு
ஆலமென்றா லகந்தனிலே யரூபமான
அட்சரத்தின் கூத்தெல்லா மாடுங்கூத்து
வாலமென்றால் வாலையதா மெட்டுமாண்டும்
வளர்ந்தாளே யென்தாயார் வாலைப்பெண்ணாய்
கோலமென்றால் வயதுதான் பத்துமாச்சு
கொடிதான் திங்களடா பத்தாம்பாரே. 81

மேல்—மூலகற்பம்

பாரப்பா மேல்மூலந் தன்னைவாங்கி
பரிதிமதி தனையகற்றிப் பாண்டத்திட்டு
ஆரப்பா வூசிநீர் படிதான்வாங்கி
அப்பனே பாண்டத்தில் வார்த்துக்கொண்டு
நேரப்பா நின்றநெறி தன்னாற்காச்சி
நிட்சயமாய் ரேசக பூரகமும் பண்ணி
வாரப்பா குழம்புபோல் ரேசிக்கும்பார்
வளமான குழம்பதனைக் கொண்டுகேளே. 82

அமுரி–கற்பம்

கேளப்பா கொண்டுவிடத் துலங்கும்புத்தி
கெடியான புத்தியது வெளிச்சம் போலாம்
வாளப்பா மகாரத்தில் வாசிசிக்கும்
வளமான திரேகமதுக் கழிவோயில்லை
ஆளப்பா யரைநொடியிற் சாரணையைப் பூட்டி
அப்பனே கேசரத்தி லேறம்பார்
நாளப்பா அஷ்ட செளபாக்கிய மெய்தும்
நலமான சித்தனாவா யட்சணத்திலாச்சே 83

அமுரிசிறுநீர்

ஆச்சப்பா வமுரியென்ற சிறுநீர்வாங்கி
அப்பனே யண்டகண்ணம் பலந்தரன் போட்டு
வாச்சப்பா பூர்வமுப்புங் கழஞ்சு போட்டு
வளமாகப் போட்டுநன்றாய்க் கலக்கிக்கொண்டு
நாச்சப்பா வந்திசந்தி யிருநோங் கொண்டால்
நலமான யாக்கையதுக் கழிவோயில்லை
காச்சப்பா தேகமது கனகம் போலாங்
கண்மணியே கனகசபை நடனங்காணே 84

பூரணாதி செந்தூரம்

காணப்பா பூரணாதி சொல்லக்கேளு
கனமான சிவமுப்பு சொல்லக்கேளு
வாணப்பா அண்டச்சுண்ணம் விஷச்சுண்ணங் கூட்டி
வளமான கல்வத்திற்போட்டுக் கொண்டு
ஆணப்பா சுத்தசலம் பார்த்தரைத்து
அப்பனே வில்லைசெய்து ரவியுலர்த்தி
மாணப்பா சிலைசெய்து புடத்தைப் போடு
மைந்தனே பூரணாதி செந்தூரமாமே. 85

ஆமப்பா தேவிக்குப் பூசைபண்ணி
அப்பனே ரேசக பூரகமாய் நின்று
வாமப்பா தேவிக்கு ஆவானம் பண்ணி
வளமான பூரணாதி பதனம் பண்ணு
நாமப்பா நெல்லிவிரை யளவு கொண்டால்
நலமான நரையகற்றிப் பாலனாவாய்
காமப்பா வாசிக்கு வுயிர்தானாகும்
கண்மணியே பூரணாதி கருத்திலெண்ணே 86

துருசுசுண்ணம்

எண்ணவே துரிசினுட சுண்ணங்கேளு
இயல்பான துருசியைத் தான் கல்வத்திட்டு
வண்ணவே விஷச்சுண்ணங் கழஞ்சுபோடு
வளமான ரவியில் நால்சாமமாட்டு
கண்ணவே பனிநீராற் சாமமாட்டு
கண்மணியே ஆட்டியதை வில்லைசெய்து
மண்ணவே சீலையது யேழுஞ்செய்து
மைந்தனே குக்குடத்திற் போட்டிடாயே 87

ஆமப்பா புடம்போட்டு யெடுத்துப்பாரு
அழகான சுண்ணமதாய் நீறிப்போகும்
வாமப்பா மதம்பிடித்த துருசுமைந்தா
வளமாக மாண்டதுவும் சுண்ணாம்பாச்சு
மாயப்பா துருசுசுண்ணங் கொடியகாரம்
மகத்தான சுண்ணமடா பதனம்பண்ணூ
நாமப்பா செம்பதிலே யீந்துவிட்டால்
நலமான பத்தரைமாற் றாகும்பாரே. 88

தாளகச்சுண்ணம்

பாரப்பா தாளகத்தின் சுண்ணங்கேளு
பண்பான தாளகத்தைக் கல்வத்திட்டு
ஆரப்பா அண்டசுண்ணங் கூடப்போட்டு
அப்பனே சுத்தசலந்த தன்னாலாட்டு
வாரப்பா நாதமதாற் சாமமாட்டு
வளமாக வில்லைரவித் தனியுலர்த்தி
காரப்பா சீலைசெய்து புடத்தைப்போடு
கண்மணியே சுண்ணாம்பாய் நீறிப்போமே 89

போமப்பா தாளகத்துக் கொப்புமுண்டோ
புகழான சுண்ணமதின் வேகமெத்த
வாமப்பா சுண்ணமது கொடியசுண்ணம்
வளமான சுண்ணாம்பை யென்னசொல்வேன்
ஆமப்பா வேதையிதிற் கோடியாகும்
அப்பனே செம்பதிலே யீந்துவிட்டால்
நாமப்பா பத்தரைமாற் றாகும்பாரு
நலமான சுண்ணமதைப் பதனம் பண்ணே 90

வெள்ளைப் பாஷாணச் சுண்ணம்

பண்ணப்பா தாளகத்தின் சுண்ணஞ் சொன்னேன்
பண்பான வெள்ளையுடச் சுண்ணங்கேளு
அண்ணப்பா வெள்ளையதைக் கல்வத்திட்டு
அன்பான விஷச்சுண்ணங் கழஞ்சு போட்டு
வண்ணப்பா குருசெயநீர் தன்னிலாட்டி
வளமாக வில்லைசெய்து ரவியுலர்த்தி
கண்ணப்பா வில்லையது குக்குடத்திற் போட
கனலெழும்பிச் சுண்ணாம்பாங் கண்டுபாரே 91

பாரப்பா சுண்ணமதை யென்னசொல்வேன்
பண்பான சிமிழதனிற் பதனம் பண்ணு
வாரப்பா யிச்சுண்ண மகத்துவங்கோடி
வளமான சுண்ணாம்பை யென்னசொல்வேன்
காரப்பா கசைசபை யிதற்கீடுண்டோ
கைலாய பாஷாணச் சுண்ணமைந்தா
ஆரப்பா யிதிற்கோடி வேதையாகும்
அப்பனே பாஷாண வேதையாமே. 92

வெடியுப்புச் சுண்ணம்

ஆமப்பா வெடியுப்புச் சுண்ணங்கேளு
அப்பனே வெடியுப்பை கல்வத்திட்டு
நாமப்பா குரு செயநீர் தன்னாலாட்டி
நலமான வில்லைசெய்து புடத்திற்போடு
காமப்பா நீறியது வெண்மையாகுங்
கண்மணியே வெடியுப்புக் கொப்புமுண்டோ
வாமப்பா சுண்ணத்தைப் பதனம் பண்ணு
வளமான கோடாகோடி வேதையாச்சே 93

கல்லுப்புச் சுண்ணம்

ஆச்சப்பா கல்லுப்புச் சுண்ணங்கேளு
அப்பனே பலமைந்து கல்லுப்புத்தான்
வாச்சப்பா கல்வத்தி விட்டுக் கொண்டு
வளமான அண்டச்சுண்ணங் கழஞ்சு போட்டு
நாச்சாப்பா செயநீரால் சாமமாட்டி
நலமாக ரவியுலர்த்தி புடத்திற் போட்டு
காச்சப்பா சுண்ணமது கொடிய சுண்ணங்
கண்மணியே சுண்ணாம்பைப் பதனம்பண்ணே 94

பண்ணப்பா வைரவற்குப் பூசை பண்ணி
பண்பான சிவபூசை மறக்காமற்றான்
கண்ணப்பா கண்ணோட்ட கனலைத்தாண்டி
கண்மணியே மேருவிற்றான் மனதை நாட்டி
வண்ணப்பா பூசைநேம மறக்காமற்றான்
வளமாக நின்றோர்க்கு யெல்லாஞ்சித்தி
அண்ணப்பா சுண்ணமதிற் காரமெத்த
அன்பான தர்மபுத்திரா கேளுகேளே 95

சீனியுப்புச் சுண்ணம்

கேளப்பா சீனியுப்புச் சுண்ணங்கேளு
கெடியான சீனியுப்போ பலமோபத்து
ஆளப்பா கல்வத்திற் போட்டுக்கொண்டு
அப்பனே செயநீரா லாட்டுஆட்டு
மாளப்பா நாற்சாம மாட்டிக்கொ;டு
மகத்தான வில்லைசெய்து ரவியுலர்த்தி
வாளப்பா புடம்போட்டு யெடுத்துப் பாரு
வளமான சுண்ணாம்பாய் நீறிப்போமே. 96

கரியுப்புச் சுண்ணம்

போமப்பா சுண்ணமதைப் பூசை பண்ணிப்
புகழான சிமிழதனிற் பதஙாம்பண்ணு
வாமப்பா கரியுப்புச் சுண்ணங்கேளு
வளமான கறியுப்பைக் கல்வத்திட்டு
ஆமப்பா யண்ட செய நீராலாட்டி
அப்பனே வில்லைசெய்து புடத்தைப்போடு
நாமப்பா புடம்போட்டு யெடுத்துப் பார்த்தால்
நலமாக நீறியது சுண்ணாம்பாச்சே 97

இந்துப்புச் சுண்ணம்

ஆச்சப்பா சுண்ணமதைப் பதனம்பண்ணு
அப்பனே யிச்சுண்ண மார்தான்காண்பார்
நாச்சப்பா யிந்துப்புச் சுண்ணங்கேளு
நலமான யிந்துப்பைக் கல்வத்திட்டு
வாச்சப்பா அண்டகண்ணங் கழஞ்சு போட்டு
வளமான செயநீரா லாட்டுஆட்டு
மாச்சாப்பா ஆட்டியதை வில்லைசெய்து
மகத்தான கெஜபுடத்திற் போடுபோடே 98

வளையலுப்புச் சுண்ணம்

போடப்பா சுண்ணமதை யென்னசொல்வேன்
புகழான யிந்துப்புச் சுண்ணமைந்தா
ஆடப்பா சுண்ணாம்பை பூசைபண்ணி
ஆடடா வாதவித்தை யனேகமைந்தா
நாடப்பா வளையலுப்புச் சுண்ணங்கேளு
நலமான வளையலுப்புப் பலந்தான்மூன்று
வாளப்பா கல்லுரலிற் போட்டுக்கொண்டு
வளமான விஷச்சுண்ணம் போட்டுக்கேளே 99

கேளப்பா குருசெயநீர் தன்னாலாட்டிக்
கெட்டியாய் வில்லைசெய்து ரவியுலர்த்தி
வாளப்பா புடம்போடச் சுண்ணாம்பாகும்
வளமான சுண்ணமதை யென்ன சொல்வேன்
ஆளப்பா சுண்ணமதை யெடுத்துக் கொண்டு
அப்பனே தேவிக்குப் பூசைபண்ணி
நாளப்பா சுண்ணமதைப் பதனம்பண்ணு
நலமான சுண்ணமடா பாருபாரே 100

நவாச்சார சுண்ணம்

பாரப்பா நவாச்சார சுண்ணங்கேளு
பண்பான நவாச்சாரம் பலந்தானைத்து
ஆரப்பா கல்வத்திற் போட்டுக்கொண்டு
அப்பனே முப்பு சுண்ணங் சுழஞ்சுபோட்டு
நாரப்பா அண்டசெய நீராலாட்டி
நலமாக வில்லைசெய்து புடத்திற்போடு
வாரப்பா சுண்ணமதாய் நீறிப்போகும்
வளமான சுண்ணாம்பைக் காணுகாணே. 101

படிகாரச் சுண்ணம்

காணப்பா படிகாரச் சுண்ணங்கேளு
கண்மணியே பல்காரம் பலந்தானெட்டு
ஆணப்பா கல்வத்திற் போட்டுக்கொண்டு
அப்பனே நாதவிந்தா லாட்டிக்கொண்டு
மாணப்பா வில்லைசெய்து ரவியுலர்த்தி
மைந்தனே சீலைமண் செய்துகொண்டு
வாணப்பா புடம்போட்டு யெடுத்துப்பாரு
வளமான படிகாரம் சுண்ணாம்பாச்சே 102

தன்வந்திரிக்கு – நந்தீசர் சொல்லும் ஞானம்

ஆச்சுடா சுண்ணத்தைப் பதனம்பண்ணு
அப்பனே யென்னைப்போ லாருஞ்சொல்லார்
மாச்சடா மீனமுடன் கும்பராசி
மைந்தனே யுந்தனுக் குரைச்சுதையா
வாச்சடா யோகவா னுனைப்போலுண்டோ
வளமான தன்வந்திரி பகவானீதான்
நாச்சடா யோகதர்ம புத்ரநீயே
நலமான வறிவுள்ளான் தன்வந்திரிகேளே. 103

அறிவும்–மனதும்–அறிவு–விசாரணை–ரேசகபூரகு கும்பகம்–பூரணம்–தெய்வம்

கேளப்பா மனம் வேறாய் புத்திவேறாய்
கேடுகெட்டு அலைந்ததினா லென்னவாச்சு
ஆளப்பா மனம்போற வழியே போனால்
அல்லல் வந்து பேயனைப்போ லலைவார்பாரு
வாளப்பா யறிவுடனே மனதையுந்தான்
வளமாகக் கட்டினவன் சித்தன்சித்தன்
நாளப்பா வறிவாலே மனத்தைக்கட்டி
நலமாகக் கட்டினதால் ரேசகமேயாச்சே. 104

ஆச்சப்பா பலபலவாய் நினைக்குமைந்தா
அட்சணத்தில் நினைத்ததுவு மறந்துபோகும்
வாச்சப்பா மனஞ்செய்யுங் கூறுசொன்னேன்
வளமாக வறிவுசெய்யும் வகையைக்கேளு
மாச்சப்பா மனஞ்செய்யுந் தன்மையெல்லா
மைந்தனே யறிவதுதான் விசாரணைசெய்யும்
நாச்சப்பா ரேசக பூரகந்தான்ரண்டு
நலமாக விதிலொடுக்கம் நன்மைபாரே. 105

பாரப்பா யிதுரண்டு மொன்றாய்ச் சேர்ந்தால்
பண்பான கும்பகமென் றறிந்துபாரு
ஆரப்பா வறிவார்கள் மனதின்போக்கு
அப்பனே மனம்நின்ற வருமைசொன்னேன்
வாரப்பா யிதுவெல்லாங் கட்டிவிட்டால்
வளமான பூரணமாம் பாருபாரு
நாரப்பா பூரணமே தெய்வம்தெய்வம்
நலமான சத்திசிவம் பூரணமேயாச்சே... 106

ஆச்சப்பா பூரணத்தை யார்தான்காண்பார்
அப்பனே கண்டவர்க்கு மோட்சமெய்தும்
நாச்சப்பா பூரணத்தால் கரணமெட்டு
நலமாகப் பறந்தோடு நவின்றுவிட்டேன்
வாச்சப்பா நல்வினை தீவினையிரண்டும்
வளமான பூரணத்தால் மடங்கிப்போச்சு
காச்சப்பா கருவாளி நீயேயானாய்க்
கண்மணியே தன்வந்திரி கருத்தாய்க்காணே. 107

இந்நூலாயிரம்

காணப்பா யிந்நூல்தான் பத்துநூறு
கணக்காகக் கலைக்ஞானங் காட்டுறேன் கேள்
வாணப்பா சரியைகிரியை யோககருமஞ் செய்வார்
வளமான சிவயோகி தர்மஞ்செய்வான்
மாணப்பா மடையர்கவே யறிவாய்க் கேளு
மகத்தான சிவயோகி புத்திவானாம்
ஆணப்பா ரேசகத்தைக் கட்டினோர்கள்
அல்லலற்ற சிவயோகி யவன்தான்பாரே 108

சங்குதிராவகம்

பாரப்பா திராவகந்தன் சொல்லக்கேளு
பண்பான சங்கு திராவகந்தான் சொல்வேன்
ஆரப்பா சங்கதுதான் பலமோபத்து
அப்பனே யுடைத்ததனைத் தூளாய்ப்பண்ணி
வாரப்பா வூசிநீர் தனைத்தெளித்து
வளமான வாலையிற்றான் போட்டுக்கொண்டு
காரப்பா வாலையின்கீழ் தீயைமூட்டிக்
கண்மணியே தீபம்போ லெரித்திடாயே 109

எரியவே தமர்வாயில் பீங்கான்வைத்து
யென்மகனே சிறுதீயா லெரித்திட்டாக்கால்
வரியவே திராவகந்தன் பீங்கானில்வீழும்
வளமான திராவகத்தைச் சீசாவில்வைநீ
அரியவே தேவிக்கும் ருத்திரர்க்கும்
அப்பனே பூசைபண்ணி நைவேத்தியஞ்செய்து
மரியவே சோடமாய்ப் பூரணத்தில்நின்று
மைந்தனே திராவகத்தைப் பதனம்பண்ணே 110

வெடியுப்புத் திராவகம்

பண்ணடா வெடியுப்புத் திராவகந்தான் கேளு
பண்பான வெடியுப்பு பலமோபத்து
அண்ணடா ரோமநீர் தெளித்துலர்த்தி
அப்பனே வாலைதனி லிட்டுக்கொண்டு
வண்ணடா சிறுதீயாய் மூட்டிக்ரொண்டு
வளமான தமர்வாயில் பீங்கான்வைக்க
கண்ணடா கரனென்று திராவகந்தான் வீழுங்
கண்மணியே திராவகத்தைச் சீசாவில்வையே 111

கல்லுப்புத் திராவகம்

வையடா பூசித்துப் பதனம் பண்ளு
வளமான திராவகத்தை யன்னசொல்வேன்
கையடா கல்லுப்புத் திராவகந்தான் கேளு
கண்மணியே கல்லுப்பு பலமோபத்து
ஐயடா சுத்தசலம் வார்த்தரைத்து
அழகான வாலையிற்றானிட்டுக்கொண்டு
மையடா தீமூட்டித் தீபம்போலே
மைந்தனே தமர்பீங்கான் வைத்துக் கேளே. 112

சீனியுப்புத் திராவகம்

கேளடா திராவகந்தான் கதிர்போல்வீழுங்
கெடியான கல்லுப்புத் திராவகந்தான்மைந்தா
வாளடா பூசித்துப் பதம்பண்ணு
வளமான திராவகத்தை யென்னசொல்வேன்
நாளடா சீனியுப்புத் திராவகந்தான் கேளு
நலமான சீனியுப்பு பலமோபத்து
ஆளடா ரோமநீர் வார்த்தரைத்து
அப்பனே வாலைதனிற் போடுபோடே 113

கறியுப்புத் திராவகம்

போடவே தீபம்போல் தீதான்மூட்டி
புகழான கதிர்வாயில் பீங்கான்வைத்து
ஆடவே கதிர்போலே திராவகந்தான்வீழும்
அப்பனே திராவகத்தைச் சீசாவிலூற்றி
வாடவே பூசித்து பதனம்பண்ளு
வளமாக திராவகம்போ லெதுதானுண்டு
நாடவே கறியுப்புத் திராவகந்தான் கேளு
நலமான கறியப்புப் பலந்தானெட்டே 114

எட்டவே முத்துநீர் வார்த்திடித்து
என்மகளே வாலைதனிற் போட்டுக்கொண்டு
கட்டவே தீமூட்டி யெரித்திட்டாக்கால்
கண்மணியே திராவகந்தான் கதிர்போல் வீழும்
மட்டவே பீங்கானை வைத்தாயானால்
மைந்தனே திராவகந்தா னிறங்கும்பாரு
வட்டவே சீசாவிற் பதனம்பண்ணு
வளமான கல்லுப்புத் திராவகமுமாச்சே 115

இந்துப்புத்திராவகம்

ஆச்சடா யிந்துப்புக் திராவகந்தான் கேளு
அப்பனே யிந்துப்பு பலமோபத்து
வாச்சடா புளிச்செயநீர் வார்த்திடித்து
வளமான வாலையிற்றான் போட்டுக்கொண்டு
காச்சடா தீமூட்டிப் பீங்கான்வைத்துக்
கனமாக நால்நாழி யெரித்தாற்கேளு
நாச்சடா திராவகந்தான் கதிர்போல்வீழும்
நலமான திராவகத்தைப் பதனம்பண்ணே 116

வளையலுப்புத் திராவகம்

பண்ணடா வளையலுப்புத் திராவகந்தான்கேளு
பண்பான வளையலுப்பு பலமோபத்து
அண்ணடா ஜங்கோலச் செயநீர்விட்டு
அப்பனே யிடித்ததுவும் வாலையிற்றான் போட்டு
கண்ணடா தீமூட்டிப் பீங்கான் வைத்து
கண்மணியே திராவகந்தான் விழுகும்பாரு
வண்ணா திராவகத்தைப் பதனம்பண்ணு
வளமான தேவிக்குப் பூசை செய்யே 117

குருஅண்டத்திராவகம்

செய்யவே குரு அண்டத்திரா வகந்தான்கேளு
செயலான அண்டமதைக் கொண்டுவந்து
மெய்யவே கோரையுடன் கசடெல்லாம் போக்கி
மேலான அண்டத்தை கல்லுரலிற்போட்டு
வெய்யவே யெகுவுலக்காற் சாடினாக்கால்
வேதாந்தம் பொடிப்பொடியாய்த் தூளாய்ப்போகும்
நெய்யவே யத்தூளில் விஷக்சுண்ணம்போட்டு
நேரான வாலைதனிற் போட்டுக்கேளே 118

கேளப்பா காலனைப்போல் தீதான்மூட்டிக்
 கெடியான கதிர்லாயில் பீங்கான்வைத்து
நாளப்பா திராவகந்தான் கழித்துவீழும்
 வளமான திராவகத்தைச் சீசாவில்வைத்து
ஆளப்பா தேவிக்கும் வைரவற்கும்
 அப்பனே வஸ்துவைத்து நைவேத்தியஞ்செய்து
நாளப்பா அண்ட திராவகத்தைவைநீ
 நலமாகப் பூசித்துப் பதனம்பண்ணே. 119

அண்டதிராவகம்

பண்ணப்பா அண்டபிண்டத் திராவகந்தான் கேளு
 பண்பான அண்டபிண்டஞ் சமூலம்வாங்கி
கண்ணப்பா கோரையுடன் சட்டை போக்கி
 கண்மணியே நிழுலுர்த்திக் கல்லுரலிலிட்டு
அண்ணப்பா யெகுக்கம்பாற் சாடுசாடு
 அப்பனே கசகசென்று புளிபோலாகும்
வண்ணப்பா வாலைதனில் போட்டுக்கொண்டு
 வளமாகத் தீயைத்தான் மூட்டுமூட்டே 120

மூட்டப்பா கதிர்வாயில் பீங்கான்வைத்து
 முக்கியமாய்ச் சாமம்ரண்டு யெரித்திட்டாக்கால்
ஆட்டடா திராவகந்தான் பீங்கானில் வீழும்
 அப்பனே திராவகத்தை சீசாவிலூற்றி
வாட்டடா தேவிக்கும் வைரவற்கும்
 வளமாகப் பூசித்துப் பதனம்பண்ணு
நாட்டடா அண்ட திராவக முஞ்சொன்னேன்
 நலமான அண்டபிண்டத் திராவகமுஞ் சொன்னேன் 121

வைத்தியத்திற்கு—ஓமத்திராவகம்

சொன்னேனடா யிதுவெல்லாம் வாதத்துக்கு
 சொற்பெரிய வைத்தியத்தின் செயலைக் கேளு
வன்னேனடா வோமத் திராவகந்தான் சொல்வேன்
 வளமான வோமமது பலமோபத்து
அன்னேனடா சிறுநீரி லூறப்போட்டு
 அப்பனே வாலையிற்றான் போட்டுக்கொண்டு
மன்னேனடா தீயெரித்துப் பீங்கான்வைத்து
 மைந்தனே சாமமது யெரித்திடாயே. 122

எரித்திடவே திராவகந்தா னிறங்கிப்போகும்
யென்மகனே திராகத்தைச் சீசாவில் வைத்து
மரித்திடவே பூசை பண்ணி வைத்தியஞ்செய்ய
மகத்தான நோய்களைத்தான் சொல்லக்கேளு
கரித்திடவே கன்னவிப்பு ருதிசூலை
கண்மணியே முகவாதம் அண்டவாதம்
வரித்திடவே குளுமையுடன் சன்னிபதின் மூன்றும்
வளமாகத் திடுக்கிட்டு வோடும்பாரே. 123

மிளகுதிராவகம்

பாரப்பா சூதகத்தின் வாய்வேபோகும்
பண்பான சூலைபதி னெட்டும்போகும்
ஆரப்பாக பேதியுடன் வாந்திபோகும்
அல்லாட்டா லதிற்குளிர்மை யகன்றுபோகும்
யாளப்பா மிளகு திராவகந்தான் கேளு
வளமான மிளப்பா பலமோபத்து
நாரப்பா சுத்தசல மதனிற்போட்டு
நலமாக வூறவிட்டு வாலையிலேபோடே. 124

போடப்பா விஷச்சுண்ணம் அண்டச்சுண்ணம்
பேரான யிதுரண்டு மதிலே போடு
ஆடப்பா கதிர்வாயில் பீங்கான்வைத்து
அப்பனே வைத்திடவே திராவக ந்தான்வீழும்
வாடப்பா திராவகத்தைக் சீசாவில்வைத்து
வளமாகத் தேவிக்குப் பூசைபண்ணி
நாளாப்பா காசிடைதா னுள்ளுக்கொண்டால்
நலமான சயகாச மீளை போமே 125

வசம்பு திராவகம்

போமப்பா சன்னியுடன் குளுமைதோஷம்
போரான வாதமெண் பத்துநாலும்
ஆமப்பா யரைநொடியி லகன்றுபோகும்
ஆனதோர் வியாதியெல்லாம் பறந்துபோகும்
வாமப்பா வசம்பு திராவகந்தான்கேளு
வளமான வசம்பதுதான் பலமோபத்து
நாமப்பா சுத்தசலந் தனிலேபோட்டு
நலமாக மூன்றுநா ளூறவையே. 126

வையப்பா யிடித்ததனை வாலையிலேபோட்டு
வளமாகக் கதிர்வாயில் பீங்கான்வைத்து
ஐயப்பா தீமூட்டி யெரித்திட்டாக்கால்
அப்பனே திராவகந்தான் விழுகும்பாரு
கையப்பா திராவகத்தைப் பதனம்பண்ணு
கண்மணியே தேவிக்குப் பூசைசெய்நீ
நையப்பா திராவகத்தைக் காசிடைதான்கொள்ள
நலமாக வாதபித்த சிலேற்பனமும்போமே 127

நவகாரத்திராவகம்

போமப்பா நவகாரத் திராவகந்தான்கேளு
பேரான வெண்காரஞ் சீனக்காரம்
நாமப்பா குருவண்டு சூதம் லிங்கம்
நலமான பெலிபாஷாம் வெள்ளைகூட்டு
வாமப்பா வீரமுடன் துருசுமைந்தா
வளமான நவசரக்கும் வகைக்குவொன்று
காமப்பா வீந்ததிலே யூறப்போட்டு
கண்மணியே தூளிடித்து வாலையிற் போடே 128

போடப்பா கதிர்வாயில் பீங்கான்வைத்துப்
பேரான தீயைத்தான் கதிர்போல்மூட்டு
வாடப்பா நாற்சாம மெரித்திட்டாக்கால்
வளமான பீங்கானிற் றிராவகந்தான்வீழும்
நாடப்பா திராவகத்தைப் பதனம்பண்ணு
நலமான தேவிக்கும் வைரவற்கும்
ஆடப்பா பூசை நைவேத்தியஞ் செய்து
அப்பனே திராவகத்தைப் பூசைபண்ணே 129

பண்ணப்பா திராவகத்தால் நீறும்போக்கு
பண்பான சரக்குவறு பத்துநாலும்
அண்ணப்பா நவரத்தினம் நவலோகங்கள்
அப்பனே மலைகுகைகள் நீறாய்ப்போகும்
கண்ணப்பா அதாணத்துக் கிதுதான்வேணுங்
கண்மணியே திராவகத்தின் பெருமைமெத்த
வண்ணப்பா மனங்களிந்து வுனக்குச்சொன்னேன்
வளமான தன்வந்திரி பாருபாரே. 130

ரேசகபூசை

பாரப்பா ரேசகத்தின் பூசைகேளு
பண்பான ரேசகத்தில் ஆமென்றேத்தி
ஆரப்பா நைவேத்தியங் கும்பகஞ்செய்து
அப்பனே ரேசகத்தில் மனதைநாட்டு
வாரப்பா மனமதுதான் ரேசகமேயாச்சு
வளமான ரேசகந்தான் வசியமாச்சு
நாரப்பா ரேசகத்தின் பூசைசொன்னேன்
நலமான பூரகத்தின் பூசைகேளே. 131

பூரக பூசை

கேளப்பா மணிபூரகத்தில் மைந்தா
கெடியாக யிம்மென்று கும்பித்தேத்து
நாளப்பா பூசை நைவேத்தியஞ்செய்து
நலமான பூரகத்திற் றோத்திரம் பண்ணி
வாளப்பா வேண்டியதான் வரங்கள் கேளு
வளமான விஷ்ணுவர மீவார்பாரு
ஆளப்பா பூரகத்தின் பூசைசொன்னேன்
அப்பனே கும்பகத்தின் பூசையாமே 132

கும்பகபூசை

ஆரப்பா கும்பகத்தில் உம்மென்றுநாடி
அப்பனே யுன்மனதை கும்பகத்தில் வைத்து
வாமப்பா பூசை நைவேத்தியஞ்செய்து
வளமான கும்பகத்தை மனதால்வேண்டு
காமப்பா கும்பகத்தை வரங்கள்கேளு
கண்மணியே வேண்டவர மீவாரையா
நாமப்பா சூரியன்றன் பூசைகேளு
நலமாக மங்கிக்கென்று சொல்லி. 133

சூரியன்பூசை

சொல்லப்பா சூரியனிற் கும்பகமேசெய்து
சொற்பெரிய பூசை நைவேத்தியஞ்செய்து
அல்லப்பா சாஷ்டாங்க சரணஞ்செய்து
அப்பனே தோத்திரஞ்செய் கும்பகத்தை
மல்லப்பா அஷ்ட சௌபாக்கியமீவார்
அகத்தியன்றான் கும்பகத்தில் வரங்களீவார்
வல்லப்பா சூரியன்றன் பூசைசொன்னேன்
வளமான சந்திரன்றன் பூசைக்கேளே. 134

சந்திரன்பூசை

கேளப்பா யங்நங்கென்று கும்பி
 கெடியாகப் பால்பழங்கள் பாயாசம் வைத்து
ஆளப்பா தூபதீபம் நைவைத்தியஞ்செய்து
 அப்பனே சந்திரனைத் தோத்தரித்து
வாளப்பா சோடசமாய்ச் சந்திரனில் நின்று
 வளமான சந்திரனை வரங்கள் கேளு
நாளப்பா வேணவர மீவாரையா
 நலமான சந்திரன்றன் மகிமைபாரே 135

சனிபூசை

பாரப்பா சனிபூசை சொல்லக்கேளு
 பண்பான வங்கென்றுஞ் சிங்கென்றுந்தான்
நாரப்பா மேருவிலே குந்திக்கொண்டு
 நலமாகத் தோத்தரித்துப் பூசைசெய்நீ
வாரப்பா தூப நைவேத்தியத்தோடு
 வளமாகத் தோத்தரித்து பானஞ்செய்து
ஆரப்பா வேணவரங் கேட்டுக்கொண்டு
 அப்பனே யட்சணத்தி லீவார்காணே 136

சிவபூசை

காணப்பா ஆதார பூசைசொன்னேன்
 கண்மணியே சிவபூசை சொல்லக்கேளு
வாணப்பா நமசிவய சிம் ஆம்மென்று
 வளமாகப் பூரணத்தி லிருத்திக்கொண்டு
ஆணப்பா தூபதீப நைவேத்தியத்தோடு
 அப்பனே சதாசிவத்தைத் தோத்திரஞ்செய்நீ
மாணப்பா நீகேட்ட தெல்லா மீவார்
 மைந்தனே சிவத்தினிட மகிமைதானே 137

சத்திபூசை

தானான சிவத்தினுட பூசைசொன்னேன்
 தண்மையுள்ள சத்தியுட பூசைகேளு
வானான யிம்மென்றுங் கும்பகத்தில்நாட்டி
 வளமாக வொருமனதாய் நின்றுகொண்டு
ஆறான கதம்பகஸ்தூரி புஷ்பம்வைத்து
 அப்பனே பால்பழங்கள் வஸ்துவைத்து
மானான தேவியைத்தான் தோத்தரித்து
 மைந்தனே சாஷ்டாங்க சரணம்பண்ணே. 138

விஷ்ணுபூசை

பண்ணப்பா யென்னவம்மா வென்றுகேளு
பலவிதமாம் நீதொடுத்த தெல்லாமெய்யாம்
அண்ணப்பா யென்றுவவள் சொன்னாற்போதும்
அப்பனே யட்சரத்திற் பலிக்கும்பாரு
வண்ணப்பா சத்தியுட பூசைசொன்னேன்
கண்ணப்பா விஷ்ணுபூசை சொல்லக்கேளு
கண்மணியே மங்நங்சிங் கென்றேத்தே 139

ஏத்தப்பா புஷ்ப பரிமளங்கள் சாத்தி
என்மகனே கதம்ப கஸ்தூரி சாத்து
வாத்தப்பா சங்கீதத் துடனேபூசி
வளமான விஷ்ணுவுக்கு வர்னம்பூசி
போற்றப்பா மன தடங்கிப் பத்தியாகப்
போற்றப்பா விஷ்ணுவலர் கேட்டதெல்லாம்
ஆற்றப்பா விஷ்ணுவின் பூசைசொன்னேன்
அரகரா கெஜமுகவன் பூசைகேளே 140

கணபதி பூசை

கேளப்பா–ஓம்–ஸ்ரீரிகங் கென்றுந்தான்
கெடியாக மூலத்தில் கும்பித்தாக்கால்
வாளப்பா பழந்தேங்கா யவல்வடைகள் தோசை
வளமாக விக்கினற்குப் புஷ்பபரிமளங்கள் சாத்தி
நாளப்பா மனதடங்கித் தோத்திரஞ்செய்து
நலமான விக்கினரைப் பூசித்தாக் கால்
ஆளப்பா யாசீர்வாத மீவாரையா
அப்பனே விக்கினரைப் பூசைசெய்யே. 141

சண்முகன்பூசை

செய்யப்பா விக்கினர்தன் பூசை சொன்னேன்
செயமான சண்முகவன் பூசைகேளு
வையப்பா–சங்–வங்–மங்–சரவணாயாவென்று
வளமாக அனாகதத்தில் பூசைபண்ணு
மையப்பா புஷ்பபரி மளங்கள்கொண்டு
மைந்தனே தூப நைவேத்தியங்காட்டி
கையப்பா கனகசபை யதிலேபூசி
கண்மணியே சண்முகத்தை வரங்கள்கேளே. 142

பஞ்சாட்சரத்தின் பூசை

கேளப்பா வேணவர மீந்திடுவார்பாரு
கெடியான சரவணனே தெய்வந்தெய்வம்
வாளப்பா பஞ்சாட்சரத்தின் மகிமைகேளு
வளமாக ஆறுவரை நெடுக்கேகீறி
ஆளப்பா ஆறுவரை குருக்கேகீறி
அப்பனே யிருபத்தஞ் சரையுமாச்சு
ஞானப்பா நமசிவய மென்றுபோட்டு
நலமாக நடுவணையைப் பிடித்துமாறே. 143

பஞ்சாட்சரத்தின் பீசம்

மாரப்பா தம்பனத்தின் சக்கரமேயாச்சு
மைந்தனே தம்பனத்தின் மகிமைமெத்த
ஆரப்பா வறிவார்கள் தம்பனத்தின்போக்கு
அப்பனே தம்பனம்போ லுண்டோவிதை
வாரப்பா அஞ்செழுத்தின் பீசஞ்சொல்வேன்
வளமான சிகாரத்தில் நகாரம்வைநீ
நாரப்பா யகாரத்தில் மகாரம்வைநீ
நலமான வகாரத்தில் சிகாரமாட்டே. 144

மாட்டடா மகாரத்தில் வகாரமாட்டு
மைந்தனே நகாரத்தில் யகாரம்வைநீ
ஆட்டடா அஞ்செழுத்துக் காணும்பெண்ணும்
அரைதோறும் பீசத்தை யணுகாய்மாட்டு
வாட்டடா பீசமில்லா விட்டால்மைந்தா
வளமாகப் பலியாது பீசம்விட்டால்
நாட்டடா மோகனத்தின் சக்கரந்தான்கேளு
நலமாக விருபத்தஞ் சரையுங்கீறே 145

மோகனம்

கீறப்பா– சி–வ–ய–ந–ம– வென்றுபோடு
கிருபையுள்ள பீசத்தை யெழுத்தில்மாட்டு
வாறப்பா மோகனந்தா னதிகசூட்சம்
வளமான மோகனம்போ லுண்டோமைந்தா
ஆரப்பா வறிவார்கள் மோகனத்தின் சூட்சம்
அப்பனே மோகனத்தைப் போலேயுண்டோ
நாரப்பா மோகனத்தின் சக்கரந்தான் சொன்னேன்
நலமான வசிய சக்கரந்தான்கேளே. 146

வசியம்

கேளப்பா யிருபத்தஞ் சரையுங்கீறி
கெடியாக–ந–ம꞉சி꞉வய வென்று போட்டு
ஆளப்பா நடுவணையைப் பிடித்துமாறு
அப்பனே யரைதோறும் அட்சரத்தை மாறு
வாளப்பா பீசத்தை யெழுத்தில் மாறு
வளமான சக்கரந்தான் வசியமாகும்
நாளப்பா வசியத்துக் கீடுண்டோ மைந்தா
நலமான வசியமடா சக்கரந்தா னாமே. 14

உச்சாடனம்

ஆமப்பா வசிய சக்கரந்தான் சொன்னேன்
அப்பனே யுச்சாடணத்தின் சக்கரந்தாள் கேளு
நாமப்பா யிருபத்தஞ் சரையும்கீறி
நலமாக வ–ய–ந–ம–சி– வென்றுபோடு
வாமப்பா நடுவணையைப் பிடித்துமாறு
வளமாக அரைதோறு மிவ்வெழுத்தை மாறு
காமப்பா பீசத்தைக் கணக்காய்மாறு
கண்மணியே யுச்சாடணந்தா னாடும்பாரே 1

வித்வேஷணம்

பாரப்பா வுச்சாடனத்தின் சக்கரந்தான் சொன்னேன்
பண்பான வித்வேஷணத்தின் சக்கரந்தான் கேளு
ஆரப்பா யிருபத்தஞ் சரையுங்கீறி
அப்பனே நம–ய–வசி யென்றுயோடு
வாரப்பா யரைதோறு மெழுத்தை மாறு
வளமாக மாறினபின் பீசமாறு
நாரப்பா வித்வேஷண சக்கரந்தான் மைந்தா
நலமாகச் சணத்திலே பிரிவுமாமே 149

பேதனம்

ஆமப்பா வேஷணத்தை நன்றாய்ச் சொன்னேன்
அப்பனே பேதனந்தான் சொல்லக்கேளு
வாமப்பா யிருபத்தஞ் சரையுங்கீறி
வளமாக வயநமசி யென்று போட்டு
நாமப்பா நடுவணையைப் பிடித்துமாறு
நலமான பீசத்தை யெழுத்தில் மாறு
காமப்பா பேதனமோ வதிகசூட்சங்
கண்மணியே பேதனத்துக் கொப்பு முண்டோ 1

ஆக்கிருஷ்ணம்

கொப்பான பேதனந்தான் மெத்தநன்று
கொடிதான பேதனந்தான் செய்யவேண்டாம்
அப்பான பேதனந்தான் சொன்னேனையா
அப்பனே ஆக்கிருஷ்ணஞ் சொல்லக்கேளு
வப்பான யிருபத்தஞ் சரையுங்கீறி
வளமான ய—வசி—ம—ந வென்றுபோடு
கப்பான நடுவணையைப் பிடித்துமாறு
கண்மணியே யரைதோறு மெழுத்தை மாட்டே 151

மாரணம்

மாட்டடா தர்மவா னென்மகனே கேளு
மகத்தான தேவதைக ளாகிருஷ்ணமையா
ஆட்டடா ஆக்கிருஷ்ணந்தான் சொன்னேன்
அப்பனே மாரணத்தின் சக்காந்தான் கேளு
வாட்டடா யிருபத்தஞ் சரையுங்கீறி
வளமான ந—ய—ம—சி—வ வென்று போட்டு
நாட்டடா நடுவணையைப் பிடித்துமாறு
நலமான யரைதோறு மாறுமாறே 152

மாறவே யெதிரியுட பேரைநாட்டி
மைந்தனே தலைகீழாய் மாறிக்கொண்டு
ஆறவே ஐங்காய மரைத்துப்பூசி
அப்பனே தீபமதில் வாட்டினாக்கால்
நாறவே யெதிரியவன் மாண்டுபோவான்
நலமாக மாரணமா மட்சணத்திலையா
வாறவே மாரணம்போ லுண்டோ வித்தை
வளமான மாரணத்தைச் செய்ய வேண்டாம் 153

அஷ்டகர்ம பலகை

செய்யவே யெட்டாத கர்மமப்பா
செயலான மாரணந்தான் செய்கை
வையவே யட்டகர்ம சக்கரந்தான் சொன்னேன்
வளமான யட்டகர்ம பலகைகேளு
ஐயவே பலாப்பலகை தம்பன மாமையா
அப்பனே மாம்பலகை மோகனமாம் பாரு
நையவே வில்வமது வசியமாகும்
நலமான சில்லனது பேதனமாம் பாரே. 154

அஷ்டகர்மபுஷ்பம்

பாரப்பா யெட்டியது வித்வேஷண மாகும்
பகரரிய அத்தி மாரணமாம் பாரு
ஆரப்பா ஆகிருஷ்ணந்தான் வெண்ணாவலாகும்
அப்பனே வெட்பாலும் அழப்பதாகும்
வாரப்பா அஷ்டகர்மப் பலகை சொன்னேன்
வளமான அஷ்டகர்ம புஷ்பங்கேளு
நாரப்பா மல்லிகைதான் வசியமாகும்
நலான முல்லையது மோகனமுமாமே. 155

ஆமப்பா தும்பையது அழுப்பதாகும்.
அப்பனே ஆக்கிருஷ்ணந்தா னலறியாகும்
வாமப்பா கர்க்கணத்திற் புரிவுமாகும்
வளமான பேதனமா மத்தம்பூவு
நாமப்பா கடலைப்பூ மாரணமுமாகும்
நலமான தம்பனமாந் தாமரைதான் மைந்தா
காமப்பா யஷ்டகர்ம புஷ்பஞ் சொன்னேன்
கண்மணியே யட்டகர்ம வஸ்திரந்தான் கேளே. 156

அஷ்டகர்ம வஸ்திரம்

கேளப்பா செம்பட்டு வசியமாகுங்
கெடியான மஞ்சளது மோகனமுமாகும்
வாளப்பா பச்சைபட்டு தம்பனமுமாகும்
வளமான வெள்ளையது பேதனந்தானாகும்
ஆளப்பா கழுதைவர்னம் புரவியாகும்
அப்பனே யழைப்பதுதான் பஞ்சவர்னம்
நாளப்பா ஆந்தைவர்ன மாக்கிருஷ்ணமாகும்
நலமான கறுப்பதுதான் மாரணமுமாமே. 157

அஷ்டகர்மத்தகடு

ஆமப்பா வட்டகர்ம வஸ்திரந்தான் சொன்னேன்
அப்பனே தகடதனைச் சாற்றுறேன்பார்
வாமப்பா பொன்தகடு வசியமாகும்
வளமான தங்கமது மோகனமுமாகும்
நாமப்பா வெள்ளியது பேதனமுமாகும்
நலமான வெங்கலந்தான் பிறியமாகுங்
காமப்பால் தம்பமது செம்புமாகும்
கண்மணியே பித்தளைதா னழைப்புமாச்சே 158

அஷ்டகர்ம ஆசனம்

ஆச்சப்பா ஆக்கிருஷ்ணந்தான் பஞ்சலோகம்
அப்பனே வங்கமது மாரணமுமாகும்
வாச்சப்பா யஷ்டகர்மத் தகடுசொன்னேன்
வளமான ஆசனந்தான் சொல்லக்கேளு
நாச்சப்பா மான்றோல்தான் வசியமாகும்
நலமான புலித்தோல்தான் மோகனமுமாகும்
மாச்சப்பா கடம்பைத்தோல் தம்பனமாகு
மைந்தனே தாப்த்தோலு வுச்சாடனமாமே. 159

ஆமப்பா கழுதையுட தோலில்மைந்தா
அப்பனே பேதனமும் பிரிவுமாகும்
வாமப்பா பூனைபுலித் தோலிலையா
வளவாக அழைப்பு ஆக்கிருஷ்ணந்தான்
நாமப்பா கரடியுட தோலில் மைந்தா
நலமான யெட்டாவது கர்மமாகும்
காமப்பா யட்டகர்மம் நன்றாய்ச் சொன்னேன்
கண்மணியே முத்தினிட பெருமைகேளே. 160

சமுத்துகளறிய

கேளப்பா மணல் கொண்டு நவகோணமாகக்
கண்மணியே மணலாலே கட்டிக்கொள்ளு
வாளப்பா கிழக்குமுகம் பார்வையாக
வளமான மணலாலே பரப்பிக்கொண்டு
ஆளப்பா நவகோணம் நடுவே மைந்தா
அப்பனே சாணிகளஞ் சவுக்கம்போல்த் தோண்டி
நாளப்பா சமுத்துவகை சொல்லக்கேளு
நலமாக அரசினொடு மாவின் சுப்பே. 161

சுப்பென்ற புங்கினொடு ஆத்திக்கொம்பு
சுகமான வெட்டிவேர் விலாமிச்சோடு
அப்பென்ற ஆலசுப்பில் வல்லியின் சுப்பில்
அப்பனே நெல்லி சுப்பில் நாவல் சுப்பில்
கப்பென்ற அத்திசுப்பில் யிலுப்பை சுப்பிற்
கண்மணியே பேயத்தி சுப்பில் கூட்டு
நப்பென்ற கடுகுரோகணியுங் கூட்டு
நலமான யெருக்கினோடு கள்ளிக் கொம்பே 162

நூல்கோர்வை பெருமை கலைக்ஞானம்–காவியம்–1000 தெண்டகம்–100–நூலைக் காண்பியாதே சாபம்

கொம்பான யிதுவெல்லா மாரணத்துக் காகும்
கொடிதான வேப்பெண்ணை மாரணத்துக்கு காகும்
அம்பான யென்னிகண்டில் சமித்து யெண்ணெய்
அப்பனே சவர்க்காரந் திறந்து சொன்னேன்
நம்பான வகையெல்லாம் நன்றாய்ச் சொன்னேன்
நலமான தெண்டகமும் நூற்றில் காணும்
வம்பான காவியந்தா னாயிரத்திற் காணும்
வளமாக கலைக்ஞான மிந்நூலாமே. 163

ஆமம்பபா யின்னூல்போ லாருஞ்சொல்லார்
அப்பனே கலைக்ஞான மகிமை காணும்
வாமப்பா சகலமுந்தா னிந்நூலற் றோன்றும்
வளமான விந்நூல்தான் கிட்டாதையா
நாமப்பா யிந்நூலைக் கொடுக்க வேண்டாம்
நலமாக கொடுத்திட்டால் சாபமெய்தும்
காமப்பா நந்திநான் சொல்வேன்கேளு
கண்மணியே தலைவெடித்துச் சாவாய்ப்பாரே. 154

பாரப்பா கொடுமுடியிற் றவங்கள் செய்தேன்
பண்பான சதாசிவமும் வரங்களீய்ந்தார்
ஆரப்பா தற்கடியிற் றவங்கள் செய்தேன்
அப்பனே யரனெனக்கு வமுதமீய்ந்தார்
வாரப்பா கண்டமல்ல தவங்கள் செய்தேன்
வளமான கருவெல்லாம் கருகிச் சொன்னார்
நாரப்பா யதற்கடியிற் றவங்கள் செய்தேன்
நலமாக வேண வரமீய்ந்தார் பாரே. 165

பாரென்ற பூரகத்திற் றவங்கள் செய்தேன்
பண்பான விஷ்ணுவும் வேணவர மீய்ந்தார்
ஆரென்ற வதற்கடியில் தவங்கள் செய்தேன்
அப்பனே பிரமதேவன் கற்பமீய்ந்தார்
நாரென்ற ஆராதாரம் க்ஷணத்திற் கண்டேன்
நலமான குருவெல்லா மறிவிற் கண்டேன்
வாரென்ற தன்வந்திரி யுந்தனக்கு
வகையாகச் சொல்லுகிறேன் வண்மைதானே. 165

அண்ட மெழுகு

தானென்ற மெழுகுவகைச் சொல்லக்கேளு
　　தாக்கான யண்ட மெழுகதனைச் சொல்வேன்
வாவென்ற முதல் பிறந்த அண்டம் வாங்கி
　　வளமாகக் கோரையைத்தான் போக்கிப் போட்டு
நானென்ற சத்திமுப்பு பூர்வமுப்பு
　　நலமாக யிதுரண்டுங் கல்வத்திட்டு
மானென்ற விஷச்சுண்ணம் ரண்டுபலம் போட்டு
　　மைந்தனே காரமென்ற செயநீரா லாட்டே. 167

ஆட்டவே மெழுகது போலாகும் பாரு
　　அப்பனே மெழுகதனை வழித்துக்கொண்டு
வாட்டவே யண்டத்தின் மேலே மைந்தா
　　வளமாகக் கவசமிட்டு சமாதிவைத்து
நாட்டவே நாற்பதுநாள் சென்றெடுத்துப்பாரு
　　நலமாக பொன்னிறம் போல் மெழுகுமாகும்
காட்டவே மெழுகெடுத்துப் பூசைபண்ணி
　　கண்மணியே யண்டமெழு பதனம்பண்ணே. 168

கல்லுப்பு மெழுகு

பண்ணடா கல்லுப்பு மெழுகு சொல்வேன்
　　பண்பான கல்லுப்பு பலமோ அஞ்சு
அண்ணடா கல்வமதி லிட்டுக்கொண்டு
　　அப்பனே புளிசெயநீர் தன்னாலாட்டு
விண்ணடா விண்ணோக்கி மெழுகுமாகும்
　　வேதாந்தக் கல்லுப்பு மெழுகுமைந்தா
கண்ணடா மெழுகதனைப் பரணில் வைத்து
　　கண்மணியே பூசித்துப் பதனஞ் செய்யே. 169

வெடியுப்பு மெழுகு

செய்யடா வெடியுப்பு மெழுகு சொல்வேன்
　　செயமான வெடியுப்பு பலமோ அஞ்சு
வையடா கல்வத்திற் போட்டுக்கொண்டு
　　வளமான விந்தாலே யரைத்துக் கொண்டு
மையடா வழித்தெடுத்து வோட்டி லிட்டு
　　மைந்தனே யதன்பிறகு வடுப்பிலேற்றி
கையடா தீமூட்டி மெழுகது போலாகும் பாரே.
　　கனலெழும்பி மெழுகது போலாகும் பாரே. 170

பாரப்பா மெழுகெடுத்துப் பரணில்வைத்து
பண்பான பூசை யெல்லாஞ் செய்துக்கொண்டு
ஆரடா மெழுகெடுத்துச் செம்பிலீய
அப்பனே நூற்றிரண்டு மாற்றுகாணும்
வாரடா யிம்மெழுகு மகுத்துவங்கோடி
வளமான மெழுகிதப்பா குபேரனீதான்
நாரடா யிம்மெழுகைச் செய்துகொண்டு
நலமான யோகமதுயு காந்திரந்தான் செய்யே. 171

செய்யவே யோகத்தி லேழ்மை வந்தால்
செயலான தங்கமதை யொருமாக் கொண்டு
ஐயவே யுலகத்தில் பசரந்தானேகி
அப்பனே மாதங்கமாறி னாக்கால்
வையவே ரண்டுபத்து சகஸ்திரந் தானீவார்
வளமான பொருள்கொண்டு யோகஞ் செய்நீ
கையவே மெழுகிருந்தா லேழ்மை பஞ்சம்
கைலாச மூர்த்தியிடா நீதான் பாரே. 172

நவமூர்த்தி மெழுகு

பாரப்பா நவமூர்த்தி மெழுகு சொல்வேன்
பண்பான நவாச்சாரம் வீரம்பூரம்
ஆரப்பா கெவுரியுடன் தாரம் லிங்கம்
அப்பனே வெள்ளையுடன் வெடியுப்புத்தான்
நாரப்பா கரியுப்பு வொன்பதையுங் கூட்டு
நலமான நவசரக்கும் வகைக்கு வொன்று
வாரப்பா கல்வத்தி லிட்டுக்கொண்டு
வளமான நாதமதால் நவநாள் சாடே. 173

சாடையிலே செம்மெழுகு போலாமைந்தா
சமர்த்தான மெழுகதனை வழித்துக்கொண்டு
வாடையிலே பரிச்சிமிழில் வைத்துக்கொண்டு
வளமாக தேவிக்குப் பூசைசெய்து
ஆடையிலே செம்பதனை யுருக்கிக் கொண்டு
அப்பனே கடுகளவு தூர்முகத்திலீய
மாடையிலே மாதங்கமாயித்தஞ்சு நூறாகு
மைந்தனே யித்தங்கம் பதனம் பண்ணே. 174

புத்தி நெறி

பண்ணையிலே சூரியன்றான் மேற்குதித்தாற் போற்காணும்
பண்பான திரிலோகம் விலைமதிக்க மாட்டார்
அண்ணையிலே யரைமாதங்க மாறிக்கொண்டு
அப்பனே நால்யுகமும் யோகஞ்சாதி
வண்ணையிலே புசை நைவேத்தியஞ் செய்ய
வளமான பொருளெடுத்துச் செலவுசெய் நீ
தண்ணையிலே தண்மை வெகுதான தாமந்
தனதாகச் செய்துகொண்டு யோகஞ் செய்யே. 175

செய்யவே சிவாலயங்கள் தெய்வமெல்லாஞ்
சிறப்பான கோயில்குளம் பாரதங்கள்
வையவே பூரணங்கள் நாடகங்கள்
வளமான கூத்தெல்லாம் பாவமெய்தும்
கையவே யிதுவெல்லாந் தர்மத்துக்கு
மைந்தனே யீடுண்டோ பாருபாரு
ஐயவே கர்மத்தில் விழுந்தாலென்ன
அப்பனே யச்சுகத்தி லென்னவாமே 176

வாமென்ற ஞானமதின் சுகத்தைக் கண்டால்
வளமாகச் சுருதி நிற்கும் பாருபாரு
ஆமென்ற பொருள் சேர்த்தா லென்னவுண்டோ
அப்பனே பொருளைத்தான் தருமஞ்செய்தாற்புண்ணியம்
காமென்ற ஸ்திரீகளுட மாய்கைமைந்தா
கண்மணியே மோகத்தில் பரவினாப்போல்
நாமென்ற வானமெல்லாம் பரவிநின்று
நலமாகக் கலைந்ததுதானே பறந்துபோமே.

மூன்றாசையற்றவர்க்கு ஞானம்

போமப்பா யிவ்விதமாய் நின்றமோகம்
பொருளாசை நிதியாசைப் பெண்ணினாசை
வாமப்பா மூன்றாசைப் பிடித்துமாண்யர்
வையகத்தில் மெத்தவுண்டு வினையர்கோடி
ஆமப்பா நெறிதவறான் கோடிக்கொன்று
அவருக்கு அஷ்ட சௌபாக்கிய மெய்தும்
நாமப்பா அவருக்கு வேதாந்தஞ் சொன்னேன்
நலமான மடையருக்குச் சொல்லவில்லை. 178

இல்லையென்ற காமுகர்க்குச் சொல்லவில்லை
இதமான கர்மத்தால் வினைகள்கோடி
வல்லையென்ற கர்மத்தால் குரோதமுண்டாம்
வளமான கள்ளமுண்டாங் கவடுமுண்டாம்
மல்லையென்ற சூதுடனே வினையுமுண்டாம்
மைந்தனே கொலைசெய்ய வஞ்சாதையா
அல்லையென்ற சகலவதைக் கஞ்சாதையா
ஆனதொரு மோகத்தாற் கருமமாச்சே. 179

ஆச்சப்பா யிவையெல்லா ஞானத்துக்கு
அப்பனே யாகாது வறிந்துபாரு
வாச்சப்பா ஞானமுள்ள பதியைக்காணும்
வளமான வமுர்தத்தைக் கொள்ளு கொள்ளு
நீச்சப்பா நிலையறிந்து வமுர்தங் கொண்டால்
நிலையான போதையடா போதை போதை
மாச்சப்பா மதியமுர்தம் நிலையைக் கண்டால்
மகத்தான போதையடா போதையாமே. 180

நந்தீசரைச் சேர்ந்த சித்தர்கள்

ஆமப்பா வடதேசங் கைலைதேசம்
அப்பனே யென்தேசம் உத்தரதேசம்
வாமப்பா யெனைச்சேர்ந்த சித்தர் சொல்வேன்
வளமான தசரதரும் வியாசர் தானும்
காமப்பா யென்தம்பி வியாசர் தாண்டா
கண்மணியே தசரதன் றான் அம்மானாகும்
நாமப்பா தன்வந்திரி பகவான் தானும்
நலமாக யெந்தனுக்கு பிள்ளையாமே 181

ஆமென்ற அசுவனி தேவதைகள் தானும்
அப்பனே யெந்தனுக்குப் பேரனாச்சு
வாமென்ற தந்தை சதாசிவன்றான் மைந்தா
வளமாக யெந்தனுக்குத் தகப்பனாச்சு
நாமென்ற தாயார்தான் தேவியாகும்
நலமாக யித்தனை பேரெனைச் சார்ந்தோர்கள்
காமென்ற தேவியுட கிருபையாலே
கைலாச சித்தனென்றும் பேருண்டாச்சே. 182

ஆச்சப்பா அஷ்டதிசை சித்தர்கட்கும்
அப்பனே நந்திகுரு சித்தினென்பேர்
வாச்சப்பா தன்வந்திரி கிரந்தந்தன்னில்
வளமாக வெகுகால முழைத்துத் தேர்ந்தான்
நாச்சப்பா தசரதன்றான் வார்த்தை தேர்ந்தான்
நலமாக தசரதன்றான் பேருண்டாச்சு
காச்சப்பா வியாசனவ னீசனைத் தானோக்கி
கணக்காகத் தவஞ்செய்யில் சித்தனாமே. 183

அரிதார மெழுகு

ஆமப்பா வரிதார மெழுகு சொல்வேன்
அப்பனே யரிதாரம் பலமோ பத்து
வாமப்பா அயக்கரண்டி தன்னிலிட்டு
வளமான ஐங்கோலத் தயிலம்வார்த்து
நாமப்பா வடுப்பேற்றித் தீயைமூட்டி
நலமான முப்புசுண்ணங் கழஞ்சுபோட்டு
காமப்பா சாமமது யெரித்திட்டாக்கால்
கண்மணியே செம்பதுவே போலே மெண்ணே 184

துருசுமெழுகு

எண்ணவே யரிதார மெழுகு மைந்தா
யென்மகனே யிம்மெழுகைப் போலேயுண்டா
வண்ணவே சத்திமெழு கிதுதான் மைந்தா
வளமான திருமாது லட்சுமிதானாகும்
கண்ணவே பொன்னரிதார மைந்தா
கண்மணியே யிதிற்கோடி வேதையாகும்
மண்ணவே துருசுமெழு கதனைக்கேளு
மைந்தனே துருசதுதான் பலந்தா னஞ்சே 185

அஞ்சான தாம்பரத்தின் கரண்டி கொண்டு
அப்பனே துரிசைத் தானதனிற் போட்டு
வஞ்சான காயத் தைலந்தன்னை வார்த்து
வளமான பூர்வமுப்பு கழஞ்சு போட்டு
நஞ்சான வடுப்பேற்றித் தீயைமூட்டி
நலமாகக் கிண்டிவர மெழுகுபோலாம்
கஞ்சான பச்சை நவரத்தினம் போலாங்
கண்மணியே துருசு மெழுகிதுதான் பாரே. 186

இல்லையென்ற காமுகர்க்குச் சொல்லவில்லை
இதமான கர்மத்தால் வினைகள்கோடி
வல்லையென்ற கர்மத்தால் குரோதமுண்டாம்
வளமான கள்ளமுண்டாங் கவடுமுண்டாம்
மல்லையென்ற சூதுடனே வினையுமுண்டாம்
மைந்தனே கொலைசெய்ய வஞ்சாதையா
அல்லையென்ற சகலவதைக் கஞ்சாதையா
ஆனதொரு மோகத்தாற் கருமமாச்சே. 179

ஆச்சப்பா யிவையெல்லா ஞானத்துக்கு
அப்பனே யாகாது வறிந்துபாரு
வாச்சப்பா ஞானமுள்ள பதியைக்காணும்
வளமான வமுர்தத்தைக் கொள்ளு கொள்ளு
நீச்சப்பா நிலையறிந்து வமுர்தங் கொண்டால்
நிலையான போதையடா போதை போதை
மாச்சப்பா மதியமுர்தம் நிலையைக் கண்டால்
மகத்தான போதையடா போதையாமே. 180

நந்தீசரைச் சேர்ந்த சித்தர்கள்

ஆமப்பா வடதேசங் கைலைதேசம்
அப்பனே யென்தேசம் உத்தரதேசம்
வாமப்பா யெனைச்சேர்ந்த சித்தர் சொல்வேன்
வளமான தசரதரும் வியாசர் தானும்
காமப்பா யென்தம்பி வியாசர் தாண்டா
கண்மணியே தசரதன் றான் அம்மானாகும்
நாமப்பா தன்வந்திரி பகவான் தானும்
நலமாக யெந்தனுக்கு பிள்ளையாமே 181

ஆமென்ற அசுவனி தேவதைகள் தானும்
அப்பனே யெந்தனுக்குப் பேரனாச்சு
வாமென்ற தந்தை சதாசிவன்றான் மைந்தா
வளமாக யெந்தனுக்குத் தகப்பனாச்சு
நாமென்ற தாயார்தான் தேவியாகும்
நலமாக யித்தனை பேரெனைச் சார்ந்தோர்கள்
காமென்ற தேவியுட கிருபையாலே
கைலாச சித்தனென்றும் பேருண்டாச்சே. 182

ஆச்சப்பா அஷ்டதிசை சித்தர்கட்கும்
அப்பனே நந்திகுரு சித்தினென்பேர்
வாச்சப்பா தன்வந்திரி கிரந்தந்தன்னில்
வளமாக வெகுகால முழைத்துத் தேர்ந்தான்
நாச்சப்பா தசரதன்றான் வார்த்தை தேர்ந்தான்
நலமாக தசரதன்றான் பேருண்டாச்சு
காச்சப்பா வியாசனவ னீசனைத் தானோக்கி
கணக்காகத் தவஞ்செய்யில் சித்தனாமே. 183

அரிதார மெழுகு

ஆமப்பா வரிதார மெழுகு சொல்வேன்
அப்பனே யரிதாரம் பலமோ பத்து
வாமப்பா அயக்கரண்டி தன்னிலிட்டு
வளமான ஐங்கோலத் தயிலம்வார்த்து
நாமப்பா வடுப்பேற்றித் தீயைமூட்டி
நலமான முப்புசுண்ணங் கழஞ்சுபோட்டு
காமப்பா சாமமது யெரித்திட்டாக்கால்
கண்மணியே செம்பதுவே போலே மெண்ணே 184

துருசுமெழுகு

எண்ணவே யரிதார மெழுகு மைந்தா
யென்மகனே யிம்மெழுகைப் போலேயுண்டா
வண்ணவே சத்திமெழு கிதுதான் மைந்தா
வளமான திருமாது லட்சுமிதானாகும்
கண்ணவே பொன்னரிதார மைந்தா
கண்மணியே யிதிற்கோடி வேதையாகும்
மண்ணவே துருசுமெழு கதனைக்கேளு
மைந்தனே துருசதுதான் பலந்தா னஞ்சே 185

அஞ்சான தாம்பரத்தின் கரண்டி கொண்டு
அப்பனே துரிசைத் தானதனிற் போட்டு
வஞ்சான காயத் தைலந்தன்னை வார்த்து
வளமான பூர்வமுப்பு கழஞ்சு போட்டு
நஞ்சான வடுப்பேற்றித் தீயைமூட்டி
நலமாகக் கிண்டிவர மெழுகுபோலாம்
கஞ்சான பச்சை நவரத்தினம் போலாங்
கண்மணியே துருசு மெழுகிதுதான் பாரே. 186

பாரப்பா யிதில்வேதை கோடாகோடி
பண்பான பரித்தங்கங் கோடாகோடி
ஆரப்பா துருசுக்கு யீடோயில்லை
அப்பனே வெகுகாரம் வேதமெத்த
நாரப்பா யீயத்தில் மெழுகை யீய்ந்துபாரு
நலமாகச் சந்திரன்போல் சொர்ணமாகும்
வாரப்பா மெழுகதனைப்பதனம் பண்ணு
வளமான துருசுனிட மெழுமாச்சே. 187

ஆச்சென்ற சவ்வீர மெழுகைச் சொல்வேன்
அப்வே சவ்வீரம் பலமோபத்து
வாச்சென்ற கல்வத்திற் போட்டுக் கொண்டு
வளமான அண்டரண்டத் தைலத்தாட்டு
நாச்சென்ற விஷச்சுண்ணம் பலந்தான் போடு
நலமாக ஆட்டிவர மெழுகுபோலாம்
காச்சென்ற மெழுகதனை வழித்துக்கொண்டு
கண்மணியே சிமிழில் வைத்துப் பூசைபண்ணே 188

பண்ணவே சவ்வீர மெழுகு போலாம்
பண்பான மெழுகுண்டோ மைந்தா மைந்தா
அண்ணவே வேதைக்குப் புலிப்போற் பாயும்
அப்பனே வீரமெழு கிது போலுண்டோ
பண்ணவே நீறுதற்கு வறுபத்துநான்கு
வளமாக நீறுமடா நவலோகங்களே
கண்ணவே வீரமதுக் கீடுமில்லை
கண்மணியே யிம்மெழுகைப் பதனஞ் செய்யே. 189

பாஷாண மெழுகு

செய்யவே பாஷான மெழுகு சொல்வேன்
செயமான பாஷாணம் பலமோ பத்து
வையவே புதுவோட்டில் போட்டுக்கொண்டு
வளமான வடுப்பேற்றித் தீயைமூட்டு
கையவே முப்பூவு பலந்தான் போட்டுக்
கண்மணியே விந்தாலே சுருக்குத்தாக்கு
வையவே மெழுகாகுங் கிண்டு கிண்டு
மைந்தனே பாஷாண மெழுகாம்பாரே. 190

கெவுரி மெழுகு

பாரப்பா பாஷாண மிதற்கீடுண்டோ
பாலகனே பாஷாணம் வேதைகோடி
ஆரப்பா பாஷாண மெழுகு சொன்னேன்
அன்பான கெவுரி மெழுகதனைக் கேளு
வாரப்பா கெவுரியது பலமோபத்து
வளமான கல்வத்திற் போட்டுக் கொண்டு
நாரப்பா சிவவிந்தால் சாமமாட்டு
நலமான காய்த்தைலஞ் சாமமாச்சே 191

ஆமப்பா யிருசாம மாட்டினாக்கால்
அப்பனே கெவுரிமெழு காகுங்கேளு
வாமப்பா யிம்மெழுகில் வேதைகோடி
வளமான சித்துகளுங் கோடாகோடி
நாமப்பா தாம்பரத்தை யுருக்கிக்கொண்டு
நலமாகக் கடுகளவு துருசிலிய
காமப்பா மாற்றதுதா னானூறாகுங்
கண்மணியே மெழுகினுட சூட்சங்காணே. 192

எலிபாஷாண மெழுகு

காணப்பா யெலிபாஷாண மெழுகுகேளு
கண்மணியே யெலிபாஷாணம் பலமோ அஞ்சு
வாணப்பா வெடியுப்பு பலந்தான் ரண்டு
வளமான ரண்டுமொன்றாய்க் கல்வத்திட்டு
ஆணப்பா வைங்கோல நீராலாட்டு
அப்பனே மெழுகாகுஞ் சிமிழில்வை நீ
மாணப்பா பூசித்துப் பதனம் பண்ணு
மைந்தனே சற்குருதான் மெழுகுமாச்சே. 193

வயித்தியமுப்புகுருமெழுகு

ஆச்சப்பா நீற்றுவகை சலத்திற்கும்
அப்பனே யணுவளவு போட்டாற் போதும்
வாச்சப்பா குருமெழுகு யிதுதான் மைந்தா
வளமான சற்குருதான் மெழுகின் பேரு
நாச்சப்பா யிம்மெழுகை வெளிவிடாதே
நலமான மெழுகிதுதா னறிந்து பாரு
காச்சப்பா கனகமது யிதிலேகோடி
கண்மணியே சொர்ணமிதில் கோடியாமே. 194

ஆமப்பா யிம்மெழுகைப் பதனம் பண்ணு
அப்பனே எப்போதும் அரையில் வைநீ
வாமப்பா சகஸ்திரந்தா னிந்நூல்பாரு
வளமான கலைக்ஞானம் வண்மைமெத்த
நாமப்பா யிந்நூலைக் கொடுக்க வேண்டாம்
நலமாகக் கர்மிகளோ பாபிமெத்த
காமப்பா யிந்நூலைக் கேட்டானானால்
கண்மணியே யில்லையென்று சத்தியஞ்செய்யே 195

வயித்தியமுப்பு

செய்யவே யாணையிட்டுச் சொல்லிப்போடு
செயலான நூலிதுதான் செய்கைசெய்கை
வையவே யிந்நூலைக் குகையில் வைத்து
வளமாகப் பூசித்துத் தொழுது போற்று
நையவே வயித்தியத்துக் காதிமுப்பு
நலமாகச் சொல்லுகிறேன் கேளுகேளு
மையவே தலைப்பிண்டங் கொண்டுவந்து
மைந்தனே கோரையுடன் சட்டைபோக்கே. 116

போக்கென்ற கல்லுரலிற் போட்டுக்கொண்டு
புகழான யெகுக்காம்பாற் சாடுசாடு
வாக்கென்ற சுத்தசெலம் வார்த்துக்கொண்டு
வளமாகச் சாடிவரக் குழம்பு போலாம்
ஆக்கென்ற பாண்டமதி லூற்றிக்கொள்ளு
அப்பனே யடுப்பேற்றித் தீயைமூட்டி
மாக்கென்ற மாப்போல சவர்க்காரமாகு
மைந்தனே யிக்குழம்பை பீங்கானிலூற்றே. 197

ஊற்றவே பூர்வமுப்பு பலந்தான் போடு
உத்தமனே மேற்காற்று வீசுங்காலம்
வாற்றவே யனலாகச் சொல்லக்கேளு
வளமாகச் செம்புதீவுக்கேகி
ராற்றவே சதுரமேடை போட்டுக்கொண்டு
நலமான தும்பைச்செடி சுற்றிலுந்தான் வைத்து
மாற்றவே பிராணாய மாகவையா
மைந்தனே பீங்கானை வைத்துக்கொளே. 198

கேளப்பா நாற்பதுநாள் சென்றுதானால்
கொடியாகப் பூர்க்குமடா கல்லுப்புத்தான்
வாளப்பா தேவிக்குப் பூசைபண்ணி
வளமாகக் குருபரனைத் தொழுது போற்றி
ஆளப்பா கல்லுப்பைப் பதனம் பண்ணு
அப்பனே வைத்தியத்துக் கெடுத்துஆடு
நாளப்பா குருமுப்பு யிதுபோலுண்டோ
நலமாக யிம்முப்பைப் பூசை செய்யே. 199

செய்யவே பற்பமொடு செந்தூரங்கள்
செயமான லேகியங்கள் கிருதத்ந்தானும்
மையவே யாக்கிராணக் கலிக்கத்தோடு
மைந்தனே புட்டவியில் கியாழத்தோடு
ஐயவே சூரணங்கள் ரசாயனங்கள்
அப்பனே யெண்ணயுடத் தைலத்தோடு
வையவே மாத்திரைகள் குழம்புகட்கும்
வளமாக யிதுகளுக்குக் கூடச்சேரே 200

சேரப்பா யிம்முப்பைப் போலேயுண்டோ
செயலாக அதுகளுக்குப் பூர்வமுப்பு
வாரப்பா முப்பூவுக் கெல்லாமைந்தா
வளமான பூர்வமுப்புக் குருவுமாகும்
ஆரப்பா வொன்பதா மாதத்திற்றான்
அப்பனே பஞ்சகர்த்தா ளைவருந்தான்
நாரப்பா வொருமனதாய் நேசித்துக்கொண்டு
நலமாகப் பாவபுண்ணியம் விசாரிப்பாரே. 201

பாரப்பா நல்வினையோன் தீவினையோ னென்று
பண்பாகக் குறித்துக்கொண்டு ஆக்கினைதானீவார்
ஆரென்ற வச்சுமையத் தனிலேமைந்தா
அரகரா நாதவிந்தால் பூர்வம் பூர்க்கும்
காரென்ற கைலாசந் தன்னில் மைந்தா
கண்மணியே நாதவிந்து வேடங் கொள்ளாமல்
வாரென்ற வுப்பிபிண்டம் பூர்க்கும் போல
வளமாகப் பூத்ததுவும் பூநீறாச்சே. 202

மாவெடுக்க

ஆச்சுடா வுப்புமாவுஞ் செய்யுங்கூத்து
அரகரா தாய்தனக்கு செவ்வாய்ப்புண்டாம்
வாச்சடா யதுவறிந்து காத்தாயானால்
வளமாக அந்திடத்தே நேசஞ்செய்து
மாச்சடா தாய்க்கிழவி மருத்துவச்சி
மைந்தனே யவளிடத்தே தொண்டுபண்ணு
நாச்சடா பிண்டமது விழுந்தபோது
நலமாக யெச்சரித்து சொறண்டிக் கொள்ளே 203

கொள்ளவே தீட்சணத்திற் சொல்லக்கேளு
கொடிதான் யெண்ணெயது கழண்டு போகும்
வள்ளவே யதன்பிறகு பரணில்வைக்க
வளமாக முன்நிறந்தான் மாறாதையா
அள்ளவே யெண்ணெய் தனைக் கழட்டாவிட்டால்
அப்பனே கறுகறுத்து மண்ணாய்ப்போகும்
மள்ளவே மர்மமெல்லாங் கிழித்துவிட்டேன்
மைந்தனே யிந்நூலைக் குகையில் வைத்து 204

வைப்பதுவு மிந்நூலுங் காவியமுந்தான்
வளமாகப் பூசைசெய்து அடக்கஞ்செய்நீ
ஐப்பதுதா னிந்நூலை யார்கொடுக்கப் போறார்
அசடாக யிந்நூல்தா னகப்படாது
மைப்பதுதான் புண்ணியதோர் தர்மத்துக்கு
மைந்தனே யிந்நூல்தான் கண்ணிற் காணும்
கைப்பதுதான் சத்தரிஷி நூலோ சொன்னார்
கண்மணியே கலைக்ஞானம் போலொவ்வாதே. 205

ஒவ்வாத சாஸ்திரங்கள் மறைப்பாய்ச் சொன்னார்
உத்தமனே யென்மொழிபோல் சொல்லவில்லை
மவ்வாத மாமுனிகள் சாஸ்திரத்துக்கு
மகத்தான யிந்நூல்தான் மார்பிலாணி
கைவாத கலைக்ஞானம் போலுண்டோ மைந்தா
கண்மணியே தன்வந்திரிக் கருதிக்கேளு
அவ்வாத அரனவர்க்கு பெற்றவன்னான்
அப்பனே நந்தியென்மொழி தான்பாரே. 206

தாம்பரச் செந்தூரம்

பாரான செந்தூர வகையைக் கேளு
பண்பான தாம்பரச் செந்தூரஞ் சொல்வேன்
ஆரான நவகார மெழுகு கொண்டு
அப்பனே தாம்பரத்தின் மேலேயப்பி
கூரான சீலைசெய்து ரவியுலர்த்தி
குணமான புடம்போடச் செந்தூரமாகும்
தாரான தாம்பரச் செந்தூரமைந்தா
தண்மையுள்ள வேதைக்கு குருவுமாச்சே. 207

அயச்செந்தூரம்

ஆச்சென்ற வயச்செந்தூரங் கேளு
அப்பனே யயத்தகடு கொண்டு வந்து
வாச்சென்ற அண்டமெழு கதனைக் கொண்டு
வளமாகக் கவசமிட்டு மண்சீலைசெய்து
நாச்சென்ற ரவியுலர்த்தி கெசபுடத்திற் போட
நலமாகச் செந்தூர மருணன் போலாம்
காச்சென்ற வேதையிதிற் கோடாகோடி
கண்மணியே வைத்தியமு மிதில்தானாமே. 208

வங்க செந்தூரம்

ஆமென்ற வங்கசெந்தூரங் கேளும்
அப்பனே வங்கமது பலமோ பத்து
நாமென்ற விந்தைத்தான் பீங்கானிற் கொண்டு/
நலமான வங்கத்தை யோட்டிலிட்டு
வாவென்ற வடுப்பேற்றி யுருக்கிக் கொண்டு
வளமாக விந்திலதை சாய்த்துக்கொண்டு
காமென்ற விந்திலிதைச் சாய்த்தால் மைந்தா
கண்மணியே வெள்ளிவட்டங் கண்டு கொள்ளே 209

கொள்ளவே நவாசார மெழுகால் மைந்தா
கொடிதான கவசமிட்டுச் சீலைசெய்து
அள்ளவே கெஜபுடத்தில் போட்டுவிட்டால்
அப்பனே கெசபுடத்தில் முருக்கம்பூவாம்
விள்ளவே கோடாகோடி வேதையாகும்
விளங்கியதோர் வைத்தியமு மிதிலேயாகும்
மள்ளவே பித்தளை செந்தூரங்கேளு
மைந்தனே பித்தளை தான் பலமோபத்து 210

பித்தளை செந்தூரம்

பத்தான பித்தளையைச் சுத்திபண்ணி
பண்பான பித்தளைமே லண்டமெழுகால் செய்து
வத்தான சீலைமண் ணேழுஞ்செய்து
வளமாக ரவியுலர்த்தி புடத்திற்போட்டால்
அத்தான நீரியது செந்தூரமாகும்
அப்பனே செந்தூர மருணன் போலாம்
மகத்தான செந்தூரம் வேதைகோடி
மாறியதை செய்தோர்க்கு மருத்துவமாமே. 211

வெங்கலச் செந்தூரம்

ஆமென்ற மகத்துவந்தான் கோடாகோடி
அப்பனே கற்பத்துக் காதிமூலம்
வாமென்ற வெங்கல செந்தூரங்கேளு
வளமான வெங்கலமோ பலந்தானஞ்சு
நாமென்ற வெங்கலத்தை சுத்தி பண்ணி
நலமான வரிதார மெழுகுகொண்டு
காமென்ற வெங்கலத்தின் மேலேயப்பி
கண்மணியே விந்தாலே சீலைசெய்யே 212

காந்தச் செந்தூரம்

செய்யவே கெஜபுடத்திற் போட்டுவிட்டால்
செயமாக நீறியது செந்தூரமாகும்
வையவே செந்தூர முருக்கம் பூப் போல்
வளமாக நீறியது காந்தி வீசும்
கையவே காந்தச் செந்தூரங்கேளு
கண்மணியே காந்தமது பலமோ பத்து
மையவே வயக்கரண்டி தன்னிற்போட்டு
மைந்தனே கல்லுப்பு மெழுகுபோடே. 213

போடவே யடுப்பேற்றி தீயைமூட்டி
புகழான விந்தாலே சுருக்குத்தாக்கு
ஆடவே யுருகியது கண்விட்டாடும்
அய்யனே மண்மெழுகால் கிண்ணிகட்டி
வாடவே வூற்றிவிட்டால் கிண்ணியாகும்
வளமான கிண்ணியது காந்தக்கிண்ணி
நாடவே கிண்ணமதில் பாலைவிட்டால்
நலமாகப் பொங்கியது வழிந்து போமே. 214

போமென்ற சூதமதை யதனில் விட்டால்
பொருமியது கட்டியைப் போல் வெள்ளியாகும்
வாமென்ற கற்பங்க ளிதனிற் கொண்டால்
வளமாக வரைட்சணத்திற் காயந்தேறும்
நாமென்ற கிண்ணத்தைச் செந்தூரமாக்கவென்றால்
நலமாகக் கல்வத்திற் போட்டுடைத்து
காமமென்ற நாமமதால் சாமமாட்டி
கண்மணியே வில்லைசெய்து புடத்தைப்போடே. 215

பரிதங்கச் செந்தூரம்

போடவென்றால் செந்தூர மருணன் போலாம்
புகழான கற்பமதற்காதி கற்பம்
ஆடவென்றால் காயமதைத் தேற்றிக்கொண்டு
அப்பனே யறுபத்து நாலுமாடு
காடவென்றால் பரிதங்கச் செந்தூரங்கேள்
கண்மணியே பரித்தங்கம் பலமோயஞ்சு
வாடவென்றால் பரிதங்க மேலேமைந்தா
வளமான நவகார மெழுகுபூசே 216

பூசவே சீலைமண் செய்துகொண்டு
புகழான புடம்போட நீறிப்போகும்
ஆகவே யருணைனைப்போல் செந்தூரமாகும்
அப்பனே செந்தூர மதைப்பதனம் பண்ணு
வாகவே மண்டலந்தான் கொண்டுவிட்டால்
வளமான சட்டைதள்ளித் தேகம் பொன்னாம்
நாகவே யிம்முறைதான் தேவி சொன்னாள்
நலமாக யிம்முறையை நந்துகேளே 217

சொர்ன வெள்ளிச் செந்தூரம்

கேளப்பா யிம்முறையில் வேதைகோடி
கெடியான சித்தெல்லா மிதிலெயாகும்
வாளப்பா சொர்ன வெள்ளிச் செந்தூரங்கேளு
வளமான வெள்ளியைத்தான் காராய்நீட்டி
ஆளப்பா கெவுரி மெழுகதனைக் கொண்டு
அப்பனே கவசமிட்டு மண்சீலைசெய்து
நானப்பா புடம்போட நீறிப்போகும்
நலமான முருக்கம்பூ போலாமென்னே. 218

நாக செந்தூரம்

எண்ணவே யெண்ணவொண்ணா வேதைகோடி
யென்மகனே காயமதற் காதிகற்பம்
வண்ணவே வாணமது கோடாகோடி
வளமான காந்தியதில் சூரியன் போலாம்
மண்ணவே நாகசெந்தூரங்கேளு
மைந்தனே நாகமது பலமோ பத்து
அண்ணவே யயச்சட்டி தன்னிற்போட்டு
அப்பனே யடுப்பேற்றி விந்தை வாரே 219

வானின்ற தீமூட்டி யெரித்திட்டாக்கால்
வளமாக வுருகியது கண்விட்டாடும்
ஆரென்ற வைங்கோலச் செயநீரில் மைந்தா
அப்பனே நாகமதைச் சாய்த்தாயானால்
மாரென்ற நாகவெள்ளி யாகும்பாரு
மைந்தனே மலப்புளியைக் கவசமிட்டு
நாரென்ற சீலைமண் ணேழுஞ்செய்து
நலமாகப் புடம்போடச் செந்தூரமாமே. 220

ஆமப்பா செந்தூரமதை பதனம் பண்ணு
அப்பனே செந்தூர மருணன் போற்காணும்
வாமப்பா செந்தூர முள்ளுக் கொண்டல்
வளமான தேகமது வச்சிரதேகம்
நாமப்பா நவலோக மொன்பதையு மைந்தா
நலமாகச் செந்தூரம் பண்ணச் சொன்னேன்
காமப்பா நவரத்ன மொன்பதுந்தான் மைந்தா
கண்மணியே செந்தூரம் பண்ணக்கேளே. 221

முத்து செந்தூரம்

கேளப்பா முத்து செந்தூரம் கேளு
கெடியான முத்துதான் பலமோ வைந்து
வாளப்பா கல்வத்திற் போட்டுக் கொண்டு
வளமான முத்துநீர் தன்னாற்சாமம்
ஆளப்பா வைங்கோலந் தன்னாற் சாமம்
அப்பனே அறைத்து அதை வில்லைசெய்து
நாளப்பா மண்சீலை யேழுஞ்செய்து
நலமாகப் புடம்போடச் செந்தூரமாமே. 222

ஆமப்பா செந்தூரங் கொண்டுவிட்டால்
அப்பனே காயமதிற் கழிவோயில்லை
வாமப்பா வழியாத காயமாச்சு
வளமான செந்தூர வண்மையாலே
காமப்பா காயமது கனத்துப் போச்சு
கண்மணியே கனகமதைக் கண்டுவுண்ணு
நாமப்பா தர்மமுள்ள சிவயோகிக்கு
நலமாக யித்தனையும் நவின்றிட்டோமே. 223

விட்டோமே விட்டகுறை தொட்டகுறைரண்டு
விளங்கியதோர் சிவயோகிக் கெய்தும் பாரு
அட்டோமே யரன் செயலால் நானே சொன்னேன்
அப்பனே யரன்வாக்கு வமுர்தம் பெற்றேன்
மட்டோமே மௌனவல்லிக் கிருபையாலே
மகத்தான பொருளெல்லாம் விரித்துச் சொல்வேன்
கட்டோமே கனகசபை கைலாசந் தோன்றுங்
கண்மணியே யிந்நூலிற் கருவைக்காணே. 224

இரவை செந்தூரம்

காணப்பா ரவையினிட செந்தூரங்கேளு
கண்மணியே ரவையைத்தான் கல்வத்திட்டு
வாணப்பா புளியைத்தான் கழஞ்சிபோட்டு
வளமான வைங்கோலந் தன்னாலாட்டி
மாணப்பா நாற்சாம மாட்டிக்கொண்டு
மைந்தனே வில்லைசெய்து ரவியுலர்த்தி
ஆணப்பா விந்தாலே சீலைசெய்து
அப்பனே கோழிப்புடந் தன்னிற்போடே. 225

போடவே செந்தூர மென்ன சொல்வேன்
புகழான வருணனைப்போல் காந்திவீசும்
ஆடவே யொருகழஞ்சு கொண்டுவிட்டால்
அப்பனே தேகமது வச்சிரமாகும்
நாடவே நான்சொன்னேன் நந்திவாக்கியம்
நலமாகச் சித்திக்கும் நல்லோருக்கு
நாடவே யொருநாளும் வேண்டாமையா
வளமான முப்பூவைக் காணுகாணே. 226

கெம்பு செந்தூரம்

காணடா யென்மகனே தர்மவானே
　　கண்மணியே விரித்து நன்றாய்ச் சொல்வேன் கேளு
வாணடா கெம்பு செந்தூரங்கேளு
　　வளமான கெம்பதுவைக் கல்வத்திட்டு
ஆண்டா சிவமுப்பு கழுஞ்சி போட்டு
　　அப்பனே யண்டநீர் தன்னாலாட்டி
மாணடா யிருசாம மாட்டிக்கொண்டு
　　மைந்தனே வில்லைசெய்து ரவியில்வையே. 227

வைக்கவே நாதமதால் சீலைசெய்து
　　வளமாகக் கெஜபுடத்திற் போட்டுவிட்டால்
வைக்கவே முருக்கம்பூப் போலாம்பாரு
　　மைந்தனே செந்தூர மென்ன சொல்வேன்
ஐக்கவே செந்தூர மாறுங்காணார்
　　அப்பனே வேதைக்கு ஆதிமூலம்
நைக்கவே கடுகளவு கொண்டுவிட்டால்
　　நலமான வாசியதை மடக்கும்பாரே. 228

பவள செந்தூரம்

பாரப்பா பவள செந்தூரங் கேளு
　　பண்பான பவழத்தைக் கல்வத்திட்டு
ஆரப்பா சத்திமுப்புக் கழஞ்சு போட்டு
　　அப்பனே புளிசெயநீர் தன்னாலாட்டி
வாரப்பா சாமம்ரண்டு ஆட்டிக்கொண்டு
　　வளமாக வில்லைசெய்து ரவியுலர்த்தி
காரப்பா மண்சீலை செய்துக் கொண்டு
　　கண்மணியே கெசபுடத்திற் போட்டிடாயே. 229

போடவே பவழமது செந்தூரிக்கும்
　　புகழான வருணனைப் போற் செந்தூரமாகும்
ஆடவே கழஞ்சு நிரை கொண்டுவிட்டால்
　　அப்பனே யாக்கையதற் கழிவோயில்லை
வாடவே வேண்டாங்காண் பசிதீபனத்தைத் தள்ள
　　வளமான கோபமுட னாங்காரந் தள்ளு
நாடவே வினையமுடன் சூதுபோகும்
　　நலமான கற்பமடா நயந்துகேளே 230

பச்சை செந்தூரம்

கேளப்பா பச்சை செந்தூரங்கேளு
கெடியான பச்சையதைக் கல்வத்திட்டு
வாளப்பா பூர்வமுப்பு கழஞ்சு போட்டு
வளமான சங்குதிராவகம் தான்விட்டு
நாளப்பா நாற்சாம மாட்டினாக்கால்
நலமாக மாண்டதுவு மெழுகுபோலாம்
காளப்பா வழித்தெடுத்து வில்லைசெய்து
கண்மணியே ரவிதனிலே யுலரவையே. 231

வையப்பா விந்தாலே சீலைசெய்து
வளமாக கெசபுடத்திற் போட்டுத்தீரு
நையப்பா புடமாறி யெடுத்துப் பாரு
நலமான செந்தூரம் நவிலொண்ணாது
கையப்பா செந்தூர மேனிமெத்த
கண்மணியே செந்தூர மார்தான்காண்பார்
ஐயப்பா கடுகளவு கொண்டுவிட்டால்
அப்பனே தேகமதற் கழிவேயில்லை 232

இல்லையென்ற வச்சிரத்தின் செந்தூரங்கேளு
இயல்பான வச்சிரத்தைக் கல்வத்திட்டு
வல்லையென்ற வாலையது கழஞ்சு போட்டு
வளமான வழலைநீர் தன்னை வார்த்து
அல்லையென்ற சாமமைந்து ஆட்டிக்கொண்டு
அப்பனே வழித்தெடுத்து வில்லைசெய்து
கல்லையென்ற கனகவிந்தாற் சீலை செய்து
கண்மணியே புடம்போட நீறிப்போமே. 232

போமப்பா செந்தூர முருக்கம்பூவரம்
பொன்மயமாஞ் செந்தூர மென்ன சொல்வேன்
ஆரப்பா செந்தூர மார்தான் காண்பார்.
அப்பனே சிவயோகி யொருத்தன் செய்வான்
வாமப்பா மற்றமற்ற குருடர் செய்யார்
வளமான நெறிதவறான் செயவான்பாரு
நாமப்பா நல்லோர்க்கு வாய்க்குமிந்நூல்
நலமான கலைக்ஞானம் நவின்றிட்டேனே. 234

கோமேதக செந்தூரம்

நவிலவே யின்னமொரு செய்திகேளு
நலமான கோமேதகக் செந்தூரஞ் சொல்வேன்
மவிலவே கோமேதகங் கல்வத்திட்டு
மைந்தனே சிவமுப்பு கழஞ்சு போட்டு
அவிலவே யைங்கோலத் தயிலம் வார்த்து
அப்பனே சாமம்ரண்டு ஆட்டினாக்கால்
நவிலவே மெழுகதுபோ லாகும் பாரு
கண்மணியே வில்லைசெய்து ரவியிற்போடே 235

போடப்பா மண்சீலை செய்துக்கொண்டு
புகழாகப் புடம்போட நீறிப்போகும்
ஆடப்பா யாறினபின் னெடுத்துப்பாரு
அப்பனே முருக்கம்பபூ வொவ்வாதையா
வாடப்பா வாதமதற் காதிமூலம்
வளமான மூலமடா யோகவாழ்வு
சாடப்பா யோகமது செய்யும்போது
கண்மணியே செந்தூரப் பொட்டுபோடடே. 236

போடையிலே சலதியிலே வாசிசிக்கும்
புகழான போகமதற் காதிபீடம்
வாடையிலே போட்டிருந்தால் போதுமைந்தா
வளமான வசியமது கோடாகோடி
ஆடையிலே சித்தருக்கு மிதுதான் வேளும்
அப்பனே யிதைக்கொண்டால் திரேகம்பொன்னாம்
நாடையிலே நந்தியோ கண்ணாற்காணும்
நலமான செந்தூரம் பாருபாரே. 237

புட்பராகச் செந்தூரம்

பாரப்பா புட்பராகச் செந்தூரங்கேளு
பண்பான புட்பாராகங் கல்வத்திட்டு
ஆரப்பா விஷச்சுண்ணம் போட்டுக்கொண்டு
அப்பனே காரநீர் தன்னாலாட்டு
வாரப்பா ஆட்டிவர மெழுகுபோலாம்
வளமாக வில்லைசெய்து ரவியுலர்த்தி
காரப்பா காடாக்கினி யாய்ப்புடத்தைப்போடு
கண்மணியே யாறியபின் னெடுத்துப்பாரே 238

பாரென்ற செந்தூர மென்னசொல்வேன்
பண்பான கண்ணதுதான் பார்க்கக்கூசும்
ஆரென்ற செந்தூர மள்ளுக்கொண்டால்
அப்பனே யரனயன்மால் நீதானாச்சு
வாரென்ற வாயிசுதான் வளர்ந்தே போச்சு
வளமான காயமது வலுத்துப்போச்சு
மாரென்ற மன்மதன்போல் நீதானாச்சு
மகத்தான வயசுமது பதினாறாச்சே 239

மரகதச் செந்தூரம்

ஆச்சென்ற மரகதத்தின் செந்தூரங்கேள
அப்பனே மரகதத்தைக் கல்வத்திட்டு
வாச்சென்ற முப்புவுடன் விஷச்சுண்ணம்போட்டு
வளமாக வாய்நீரால் சாமமாட்டி
நாச்சென்ற கல்லுப்புத் திராவகத்திற்சாமம்
நலமாக ஆட்டியதை வில்லைசெய்து
காச்சென்ற ரவியுலர்த்திச் சீலைசெய்து
கண்மணியே புடம்போடச் செந்தூரமாமே. 240

ஆமப்பா செந்தூரம் பணவிடைதான் கொண்டால்
அப்பனே யாக்கையதற் கழிவோயில்லை
வாமப்பா வச்சிரமுள்ள திரேகமாகும்
வளமான திரேகமடா வச்சிரதேகம்
நாமப்பா யிந்நூலில் நயமாய்ச் சொன்னேன்
நலமான மூலமெல்லாம் விரித்திட்டேன்பார்
காமப்பா யிந்நூலிற் கருவைக் காணு
காணாட்டா லொருநாளுங் கருச்சொல்லாதே

வல்லோர் பெருமை

சொல்லாதே யென்மொழியை ரிஷிகள்பார்த்து
சொற்பெரிய சத்தரஷி தேவரானார்
வல்லாத வியாசருட புத்திரன்றானும்
வளமாகச் சொன்ன மொழி தவறோயில்லை
கல்லாதவ வன்திறந்து சொன்னரென்று
கைலாச சட்டைமுனி தர்க்கஞ்செய்தான்
மல்லாத மடிபிடித்து விசுவாமித்திரன்
மைந்தனே தர்க்கமது வனேகங்கேட்டே 242

கேட்டவுடன் நந்தீச ராசீர்மத்தில்
கெறியுள்ள சட்டமுனி போவோமென்றான்
இட்டமுட னிருவருமாய் நம்மிடத்தில்வந்தார்
இயலான கேள்வியதுச் சொன்னாரையா
மட்டவுடன் தர்க்கமதில் விசுவாமித்திரன்
மைந்தனே நன்றாக் கேள்விசொன்னான்
அட்டவுட னிருவரையு மருகழைத்தேன்
ஆனதோ ரிம்மொழியை யழித்தாற்சாபமாமே. 243

விசுவாமித்திரன் சொன்ன நூல்—தவறில்லை

ஆமப்பா யிவ்வாறு வென்று சொன்னேன்
அழகான சட்டைமுனி சம்மதித்தான்பாரு
காமப்பா விசுவாமித்திரன் தன்மொழியை வாங்கு
கண்மணியை யவன்றானும் நன்றாய்ச் சொன்னான்
நாமப்பா மற்றமற்ற சித்தரெல்லாம்
நலமாக மறைத்துவைத்தார் பொருளையெல்லாம்
வாமப்பா பொருளதுதான் பூர்வமுப்பு
வளமான குருவதுதா னண்டைமுப்பே. 244

முப்பான கருவதுதா னாதவிந்து
முக்கியமுள்ள சத்திசிவ மிதிலடக்கம்
அப்பான நாட்டுக்கு வங்காயமாகும்
அப்பனே வீட்டுக்கு பூர்வமுப்பு
கப்பான காட்டுக்கு புளிதானாகும்
கண்மணியே முக்கறுதான் பிரமருத்திரன்
வப்பான விஷ்ணுவுடன் மூவராகும்
வளமான திரிலோக மமர்ந்தார்பாரே. 245

பூர்வமுப்பு செந்தூரம்

பாரப்பா கொடியுப்பு பரமுமாச்சு
பண்பான முக்குருவா லெட்டரூபம்
ஆரப்பா வறிவார்க ளின்னூற் போக்கு
ஆதவன் போல் திறந்துநன்றாய்ச் சொல்லிவிட்டேன்
வாரப்பா தன்வந்திரி யறிவுள்ளானே
வகையாகச் சொல்லுகிறேன் வண்மைகேளு
நாரப்பா பூர்வமுப்பு செந்தூரங்கேளு
நலமான பூர்வமுப்பைக் கல்வத்திட்டே. 246

இட்டுமே பழம்புளிதான் கூடப்போட்டு
என்மகனே சாமம்ரண்டு ஆட்டினாக்கால்
வட்டுமே மெழுகாகும் வில்லைசெய்நீ
வளமாக ரவியுலர்த்திச் சீலைசெய்து
கட்டுமே கோழியென்ற புடத்தைப்போடு
கண்மணியே யாறின்பின் னெடுத்துப்பாரு
அட்டுமே யருணைப்போல் காந்திவீசும்
அப்பனே செந்தூர மருணனாமே. 247

ஆமப்பா செந்தூரம் யோகவாழ்வு
அப்பனே சமாதிநிட்டை யிதிலேயாகும்
வாமப்பா கடுகளவு செந்தூரங் கொண்டால்
வளமான வேதாந்தி யாவாய்பாரு
நாமப்பா யிம்மூல மாதிமூலம்
நலமான பூர்வமடா யனாதியாச்சு
காமப்பா பூர்வத்தைக் கண்ணாற்காணு
கனகசபை நடனவொளி கண்ணிற்காணே. 248

நாதவிந்து செந்தூரம்

காணப்பா நாதவிந்து செந்தூரங் கேளு
கண்மணியே சத்திசிவங் கல்வத்திட்டு
ஆணப்பா யண்டசுண்ணங் கழஞ்சிபோட்டு
அப்பனே சாமமைந்து ஆட்டினாக்கால்
வாணப்பா மெழுகாகும் வில்லை செய்நீ
வளமாக சீலை செய்து ரவியுலர்த்தி
மாணப்பா காடைபுடம் போட்டுத்தீரு
மைந்தனே முருக்கம்பூ வொவ்வாதென்றே 249

என்றதொரு நாதவிந்து செந்தூரமாச்சு
என்மகனே யுனக்கீடு யெவருமில்லை
வன்றதொரு கடுகளவு கொண்டுவிட்டால்
வளவான நால்யுகமும் யோகபேதை
ஒன்றதொரு வுன்வயதோ வுயர்ந்துபோச்சு
ஒகோகோ வொருநிலையா யுன்னிப்பாரு
அன்றதொரு அரன்மாலு முனக்கீடில்லை
அப்பனே யகமுதலாய்க் கண்டிடாயே 250

மனதடக்கம் புத்திநெறி

கண்டதொரு யோகத்தை மனதாலெண்ணு
கண்மணியே யெண்ணாவிட்டால் கசடனாவாய்
வண்டதொரு வண்டனைப்போல் திரிய வேண்டாம்
வளமாக மனதடங்கி நில்லுநில்லு
அண்டதொரு அண்டபிரா னருள்தன்னாலே
ஆகலாங் கோடிகோடி வெள்ளம்போல
மண்டதொரு மடத்தனத்தைத் தள்ளிப்போடு
மகத்தான ஞானமதை யுள்ளேகொள்ளே. 251

கொள்ளவே ஸ்திரிதுரோகம் ராஜதுரோகம்
கொடிதான யேழைகள்தன் துரோகமாகா
வள்ளவே சன்னியாசி சித்தர்துரோகம்
வளமான பிராமணர்தன் துரோகமாகா
கள்ளவே யிருநெஞ்சு படைக்கலாகா
கசடர்களே துரோகமது தேரொட்டாது
அள்ளவே சாஸ்திரத்தில் சொன்னமார்க்கம்
அப்பனே சிவயோகிக் காகாதென்றே 252

என்றப்பா வுலகிலுள்ள காமுகர்க்கு
இதுவெல்லாஞ் சொன்னாலுங் கேட்பாருண்டோ
மன்றப்பா மடையர்களோ கேட்கப் போறார்
மகத்தான சிவயோகி யவன்றான்கேட்பான்
நன்றப்பா நாம்சொன்ன படியேநின்றால்
நலமான சிவயோக வாழ்க்கையெய்தும்
வன்றப்பா வாதமது செய்தாலென்ன
வளமான கன்னியுடன் புணர்ந்தாலென்னே. 253

என்னடா தீனியது தின்றாலென்ன
யேகவுப நிடமதனை யறியாமட்டி
கன்னடா கசடர்களே சொல்லுமார்க்கங்
கன்னியர்தன் மோகமது மோட்சமென்பார்
வன்னடா வாதப்பேய் பிடித்தமாண்பர்
வளமாக வலைந்துசுற்றி நரகில்வீழ்வார்
அன்னடா சாஸ்திரத்தை யெளிதாய்ச் சொல்வார்
அசடர்கள் தன்மனதடங்கி நிலைக்கப்பாவம் 254

கும்பகம்பார்க்க

பாவமென்றால் கும்பகத்தி லடங்கினோர்க்குப்
பாவமில்லை கன்மமில்லை மோட்சமெய்தும்
ஆவமென்றால் சிவயோகஞ் செய்தோருக்கு
அல்லலுடன் தீவினைக ளகன்றுபோகும்
நாவமென்றால் முப்பூவை யனுதினமுமையா
நலமாகத் தொழுதுநித்தம் போற்றுபோற்று
காவமென்றால் கனகசபை கனகமூர்த்தி
கைலாச மூர்த்தியடா மும்மூலமாமே. 255

வாலைரசச் செந்தூரம்

ஆமப்பா யிரசத்தின் செந்தூரஞ்சொல்வேன்
அப்பனே வாலைரசங் கல்வத்திட்டு
நாமப்பா முப்பூவை கழஞ்சிபோட்டு
நலமான நாதமதால் சாமமாட்டு
காமப்பா வைங்கோல நீராற்சாமங்
கண்மணியே யிருசாம மாட்டினாக்கால்
வாமப்பா மெழுகது போலாகும் பாரு
வளமாக வில்லைசெய்து ரவியிற்போடே 256

வயித்தியம்

போடப்பா சீலைமண் ணேழுஞ்செய்து
பொருளான காடைப்புடம் போட்டுவிட்டால்
ஆடப்பா செந்தூர மருணன் போலாம்
அப்பனே செந்தூரம் பதனம்பண்ணு
வாடப்பா கடுகளவு கொண்டுவிட்டால்
வளமாக மேகமது இருபத்தொன்றும்
நாடப்பா நாடாது சூலைபதினெட்டும்
நலமான நாலாயிரத்து நானூற்று சிலுவானம்பாரே 257

பாரப்பா செடத்திலுள்ள வியாதி யெல்லாம்
பறந்தோடுஞ் செந்தூரங் கண்டபோது
நாரப்பா செந்தூரம் வேணும் பாரு
நலமான வறிவுள்ளா னிதனைச் செய்வான்
ஆரப்பா வறிவார்க ளிந்தநூல் மார்க்கம்
ஆனதொரு மடையர்களோ காணப்போறார்
வாரப்பா யிந்நூலைப் போற்றுபோற்று
வளமான சற்குருதா னிந்நூலாமே. 258

கெந்தி செந்தூரம்

ஆமப்பா நாதகெந்தி செந்தூரஞ் சொல்வேன்
அப்பனே கெந்தியது பலமோபத்து
வாமப்பா கல்வமதிற் போட்டுக்கொண்டு
வளமான சத்திமுப்பு பலந்தான் போட்டு
காமப்பா கனகவிந்தால் சாமமாட்டு
கண்மணியே சுத்தஜலந் தன்னிற்சாமம்
நாமப்பா வழித்தெடுத்து வில்லைசெய்து
நலமான ரவியில்வைத்து வில்லைசெய்யே 259

செய்யவே கோழியென்ற புடத்தைப்போட்டு
செயமாக நீறியது செந்தூரிக்கும்
வையவே வர்ணமது சொல்லப்போமோ
வளமாக வுன்கண்தான் கூசும்பாரு
ஐயவே செந்தூரம் பதனம்பண்ணு
அப்பனே தேவியைத்தான் தொழுதுபோற்று
நையவே கடுகளவு கொள்ளுகொள்ளு
நலமான சட்டை தள்ளி காந்தியாமே. 260

வெங்கலக்களங்கு

ஆமென்ற களங்குவகை சொல்லக்கேளு
அப்பனே வெங்கலத்தின் களங்கு சொல்வேன்
நாமென்ற வெங்கலத்தை யோட்டிலிட்டு
நலமான வைங்கோலத் தைலம்வார்த்து
வாமென்ற வடுப்பேற்றித் தீயைமூட்டி
வளமாக வெரித்திடவே யுருகும்பாரு
காமென்ற நாதமது போலக்காணும்
கண்மணியே கையான்சார் தன்னில்வாரே. 261

வார்த்திடவே வெட்டையதாய்ப் போகும்பாரு
வாகாக வுருக்கிடவே யுருகுமப்பா
பார்த்திடவே வெங்கலத்தின் களங்குபோலப்
பார்தனிலே சொல்லார்கள் பதியைக்காணு
ஆர்த்திடவே யானெனக்கு பதியைச் சொன்னார்
அப்பனே யுந்தனுக்கு யானே சொன்னேன்
கார்த்திடவே முப்புசரக் குருவைக்காரு
கண்மணியே கண்ணோட்டத் தாதியாமே 262

தாம்பரக் களங்கு

ஆமப்பா தாம்பரத்தின் களங்கு சொல்வேன்
அப்பனே தாம்பரமோ பலந்தானைந்து
வாமப்பா வயக்கரண்டி தன்னிற் போட்டு
வளமான மலப்புளியை யதனிற்போடு
நாமப்பா கொல்லன் குகை யதனில் வைத்து
நலமாக வுருக்கிடவே களிம்பற்றுப் போகும்
காமப்பா மேனியென்ற சாற்றிலூற்று
கண்மணியே வெட்டயதாய்க் களங்கம்பாரே. 263

பாரப்பா விராகனிடை வெங்கலத்திலீய
பண்பான பத்தரையாஞ் சொர்ணமாகும்
ஆரப்பா வறிவார்கள் களங்கு மார்க்கம்
ஆதியென்ற பூரணத்தைக் கண்டோன் காண்பான்
வாரப்பா வையகத்து வாதிகாணார்
வளமான கடைச்சரக்கா லலைவார்பாரு
நாரப்பா நந்தியொளி கண்ணார்க் காணும்
நலமானச் சிவயோகத் தாதிகேளே. 264

அயக்களங்கு

கேளப்பா வயக்களங்கு சொல்லக்கேளு
கெடியான வயப்பொடியைக் கரண்டியிட்டு
ஆனப்பா பாஷாண மெழுகைப் போட்டு
அப்பனே யுருக்கிடவே யுருகும்பாரு
நாளப்பா பழச்சாற்றி லூற்றிவிட்டால்
நலமான களங்கதனை யுருக்கிப்பாரு
வாளப்பா வயக்களங்கில் வேதையாகும்
வளமான வேதையிதற் கோடாகோடி. 265

நாகக்களங்கு

கோடியென்ற நாகமதின் களங்குசொல்வேன்
கொடிதான நாகமதைக் கரண்டியிட்டு
வாடியென்ற வடுப்பேற்றித் தீயைமூட்டு
வளமான அண்டமதின் தைலம்வார்த்து
ஆடியென்ற தீயேற்றி யுருக்கிக்கொண்டு
அப்பனே எருக்கம்பால் தன்னிலூற்றி
நாடியென்ற நாகமது களங்கமையா
நலமான களங்கைத்தான் பூசைபண்ணே. 266

பண்ணவே செம்பதனிற் கொடுத்துப்பாரு
பண்பான பத்தரைதான் தப்பாதையா
அண்ணவே நாகமது கொடியநாகம்
அப்பனே யிக்களங்கைப் பதனம்பண்ணு
கண்ணவே யிக்களங்கை நல்லோர் செய்வார்
கண்மணியே கண்குருடர் செய்யமாட்டார்
மண்ணவே மனதடங்கித் தியங்குவார்கள்
மட்டிகள்தான் மனந்தயங்கி மயங்குவாரே. 267

தங்கக்களங்கு

வாரான தங்கமதின் களங்கு சொல்வேன்
வளமான தங்கத்தை யகலிலிட்டு
காரான அண்டமுப்புப் புளியும்போட்டு
கண்மணியே யுருக்கிடவே யுருகும்பாரு
ஆரான முலைப்பாலி லூற்றிவிட்டால்
அப்பனே தங்கமதின் களங்காகும் பாரு
நாரான யிக்களங்கில் மகுத்துவங்கோடி
நலமான களங்கதனைப் பதனஞ் செய்யே. 268

வெள்ளிக்களங்கு

செய்யவே வெள்ளியுட களங்கு சொல்வேன்
செயமான வெள்ளியதைக் குகையிலிட்டு
வையவே ஐங்காயத் தைலம்ரண்டும்
வளமான வதிலிட்டு யுருக்குவாய் நீ
கையவே சுத்தசலந் தன்னில்மைந்தா
கண்மணியே வூதிடவே களங்குமாகும்
ஐயவே யிக்களங்கைப் பூசைபண்ணி
அப்பனே யுன்னிடத்திற் பதனம் பண்ணே. 269

அரிதாரக்களங்கு

பண்ணவே யரிதாரக் களங்கு சொல்வேன்
பண்பான யரிதார மகலிலிட்டு
வண்ணவே காயத்தைல மதனிலிட்டு
வளமான விஷச்சுண்ணங் கழஞ்சுபோட்டு
உண்ணவே யுலையில்வைத்து வுருக்கினாக்கால்
உத்தமனே தண்ணீரா யுருகும்பாரு
அண்ணவே யண்டநீர் தன்னுலூற்ற
அப்பனே களங்காகு மறிந்துகொள்ளே. 270

பாஷாணக்களங்கு

கொள்ளவே பாஷாணக் களங்குசொல்வேன்
கொடிதான பாஷாணங் குகையிலிட்டு
விள்ளவே யண்டகண்ணம் விஷச்சுண்ணம் போட்டு
விதமான வைங்கோலத் தைலமூற்று
அள்ளவே வார்த்துருக்க வுருகும் பாரு
அப்பனே யமுரிதனி லூற்றிவிட்டால்
கள்ளவே களங்காகு மென்னசொல்வேன்
கண்மணியே யிக்களங்கைப் பதனம்பண்ணே. 271

கெந்தி களங்கு

பண்ணடா கெந்தியுட களங்கு சொல்வேன்
பண்பான கெந்தியைத்தான் ஓட்டிலிட்டு
அண்ணடா விந்துவுடன் முப்பூவும் போட்டு
அரகரா அண்டமெழு கழஞ்சுபோடு
விண்ணடா அடுப்பேற்றித் தீயைமூட்டு
விதமாகக் கட்டியது வுருகும்பாரு
கண்ணடா விந்ததிலே வூதினாக்கால
கண்மணியே களங்காகுங் கண்டுகொள்ளே. 272

கொள்ளவே களங்கதனாற் சொல்லக்கேளு
கொடிதான திரிலோகஞ் செயிக்கலாம்
விள்ளென்ற வாமி சிவகாமியத்தாய்
வேதாந்தி யுன்னிடத்தில் விவேகமாக
அள்ளென்ற வனுதினமு முன்பங்கில் நிற்பாள்
அன்பான வாலை மனோன்மணிதான் மைந்தா
கள்ளென்ற களங்கமறச் சொல்லிவிட்டேன்
கண்மணியே கலைக்ஞான மிந்நூல் தானே. 273

கலைக்ஞானம்

தானான யிந்நூல்தா னார்க்குக் கிட்டுந்
தண்மையுள்ள பொறுமையோர்க் கெய்தும்பாரு
வானான தண்மையது பொறுமையப்பா
வளமான பொறுமையது அடக்கமப்பா
வேளான ரேசக பூரகந்தான் ரண்டு
விளங்கியோர் கும்பகமுந் தண்மையாகும்
ஆனான வறிவுகுரு யிதுமூன்றாகும்
அப்பனே யறிவாலே யெல்லாமாச்சே. 274

பூரணநூல் – 200 – தெண்டகம் நிகண்டு – 12000– 8000 நூற்கோர்வையறிவும் – காவியம் – கலைக்ஞானம்

ஆச்சப்பா யிந்நூல்தா னமுர்தவாக்கியம்
அப்பனே யிந்நூலிற் றேர்வார்பாரு
காச்சப்பா யிந்நூலி லொத்தகோர்வை
கண்மணியே பூரணநூ லிருநூறாகும்
வாச்சப்பா தொண்டகமும் பாருபாரு
வளமான யென்னிகண்டை யார்தான் காண்பார்
நாச்சப்பா யென்னுடைய காவியத்தைப்பாரு
நலமான சகலகலை யறிவீர்காணே 275

காணப்பா நிகண்டினிட மகுத்துவங்கோடி
கண்மணியே யிந்நூலைக் கருத்திலெண்ணு
வாணப்பா யெனைப்போலார் சொல்லப்போறார்
வளமாக மனங்குவிந்து சொல்லிவிட்டேன்
ஆணப்பா பன்னீ ராயிரந்தான் பாரு
அப்பனே யெண்ணாயிரமும் பாரு
மாணப்பா அய்யாயிரமும் பாரு
மகத்தான வயித்தியத்துக் காதியாமே 276

ஆமப்பா வைத்தியத்துக் கின்னூல் வேண்டும்
அப்பனே வாதிகட்கு யெண்ணாயிரந்தான் வேண்டும்
வாமப்பா காயமதை நிறுத்திக் கொண்டு
வளமான பெருநூலு கோர்வை பாரு
நாமப்பா காவியமு மின்னூலும் போதும்
நலமாகத் தேறுவோ ரிதிலே தேர்வீர்
காமப்பா நந்தியொளி பிரகாசிக்கும்
கண்மணியே யென்மகனே கருதிக்கேளே. 277

பூரக்களங்கு

கேளப்பா பூரமதின் களங்கு சொல்வேன்
கேளென்ற பூரமதைக் குகையிலிட்டு
வாளப்பா முப்புடனே காயத்தைலம்விட்டு
வாவென்ற தீயில்வைத்து வுருக்கினாக்கால்
ஆளப்பா வுருகியது கண்விட்டாடும்
ஆமென்ற வழுரியிலே யெடுத்துவூற்று
நாளப்பா களங்கென்ற மணிக்கட்டாகும்
நாளென்ற களங்கதனைப் பதனம் பண்ணே. 278

பண்ணப்பா பூரமதின் களங்கு மார்க்கம்
பண்பான குருக்களவர் சொல்லமாட்டார்
அண்ணப்பா ரிஷிதேவர் சித்தர்தானும்
ஆதியென்ற வழலைமுறை மறைப்பாரையா
கண்ணடா வழலைகுரு ஆர்க்குக் கிட்டும்
கண்மணியே ராசியுள்ளோ ரவர்க்கே கிட்டும்
வண்ணடா நானறிந்து நன்றாய்ச் சொன்னேன்
வளமான யறிவதனா லறிந்து கொள்ளே. 279

கொள்ளடா யென்மகனே யமுதர்தப்பிள்ளாய்
குருவான வழலைமுப்பு முடித்துக்கொள்ளு
அள்ளடா அரன்தானும் மயேஸ்பரிக்கு சொன்னார்
அப்பனே மயேஸ்பரி யெந்தனுக் கருளினாள்பார்
கள்ளடா அரனுக்குக் கண்டு சொல்வேன்
கண்மணியே தன்வந்திரி கருதிக்கேளு
வள்ளடா வழலைமுப்பு அதுதான் தெய்வம்
வளமான சற்குருதா னிதற்குப்பேரே. 280

நூல்தொகுப்பின் பெயர்களறிய

பேரான யென்மொழிதா னாறுலட்சம்
பெலமான கிரந்தமாய்ச் சொல்லிவிட்டேன்
ஆரான அதைப் பிரித்துத் தமிழாய்ச் சொன்னேன்
அப்பனே வைம்பதி னாயிரந்தான் பாரு
வாரான ரண்டுபத் தாயிரமுஞ் சொன்னேன்
வளமான முப்பதினாயிரமும் பாரு
காரான காவியமோ முதல்மொழி தாணையா
கண்மணியே காவியத்தைத் தேடிவாங்கே. 281

தேடவே யென்னூலைப் பார்த்தீரானால்
தெளிவாக மனந்தெளிந்து சித்தனாவாய்
ஆடவே யஷ்டசௌ பாக்கியமெய்தும்
ஆனதோ ருத்திரி யுமமுர்தமீவாள்
வாடவே யொருநாளும் வேண்டாமையா
வளமாக யின்னூலைப் போற்று போற்று
நாடவே குருபரனைத் தொழுது போற்று
நலமான அண்டர்பிரா னருளைப்போற்றே. 282

போற்றவே யின்னூலைப் பூசைபண்ணு
புகழான குகையில் வைத்து வாமபூசை
ஆற்றவே யனுதினமு மாத்தாளைப்பூசி
அப்பனே கலைக்ஞான மகிமைபாரு
நாற்றவே யிந்நூல்தா னிருந்துதானால்
நலமான நாற்றிசையு முன்னைப் போற்றும்
வாற்றவே யுன்னிடத்தில் தேவிதானும்
வளமாகக் கொலுவிருப்பா ளனுதினமுமாமே. 283

தாம்பரச் சுண்ணம்

ஆமப்பா தாம்பிரத்தின் சுண்ணஞ்சொல்லேன்
அப்பனே தாம்பரத்தின் காருநீட்டி
வாமப்பா வழலைச் சுண்ணம் அண்டச்சுண்ணம்
வளமான விஷச்சுண்ணம் மூன்றுங்கூட்டி
நாமப்பா வைங்கோலத் தைலம்வார்த்து
நலமாகக் குழைத்து வதின்மேலேயப்பி
காமப்பா வில்லைசெய்து ரவியுலர்த்திக்
கண்மணியே புடம்போடச் சுண்ணமாச்சே. 284

ஆச்சப்பா சுண்ணமதின் காரமெத்த
அரகரா கடுங்காரந் தாம்பரச் சுண்ணம்
வாச்சப்பா தாம்பரச் சுண்ண மார்தான் செய்வார்
வளமான தர்மமுள்ளோ னவனே செய்வான்
காச்சப்பா தாம்பரச்சுண்ண முடித்திருந்தால்
கண்மணியே குபேரனவற் கீடுமில்லை
நாச்சப்பா நந்திசொன்ன வழலை முப்பு
நலமான விஷ்ணு வவர்பூர்வமாமே. 285

லோக சுண்ணம்

ஆமப்பா லோக சுண்ணஞ் சொல்லக்கேளு
அப்பனே லோகத்தைக் கொண்டுவந்து
நாமப்பா முப்பூவு மைங்காயங் கூட்டி
நலமான வாய்நீரால் குழைத்துப்பூசி
காமப்பா சீலைமண் செய்து கொண்டு
கண்மணியே சாஷ்டாங்கஞ் சரணஞ்செய்து 286
நாமென்ற சுண்ணாம்பை பதனம்பண்ணு
நலமான சுண்ணமடா லோக சுண்ணம்
வாமென்ற சுண்ணமதில் வேதை கோடி
வளமான சுண்ணாம்பை யறிவாற் செய்யே. 287

பித்தளைச் சுண்ணம்

செய்யவே பித்தளையின் சுண்ணஞ் சொல்வேன்
செயலான பித்தளையைக் கொண்டு வந்து
அய்யவே நவகார மெழுகாமைந்தா
அப்பனே வாய்நீரால் மத்தித்துக் கொண்டு
கையவே பித்தளை மேல் கவசமிட்டுக்
கண்மணியே சீலைமண் செய்து கொண்டு
நையவே ரவிதனிலே யுலரப் போட்டு
நலமாகப் புடம் போட நீறிப்போமே. 288

போமப்பா சுண்ணமது கொடியகாரம்
புகழான வெண்மையது கண்ணோசுகம்
ஆமப்பா சுண்ணமதை சீசாவில் வைத்து
அந்திசந்தி நித்தியமுந் தொழுது போற்று
காமப்பா கைலாச மூர்த்தியுண்டாங்
கண்மணியே சுண்ணமது சுருதிப்போற்று
வாமப்பா சுண்ணத்தில் வேதை கோடி
வளமான சௌக்கியமு மிதிலேயுண்டாம். 289

வெங்கலச் சுண்ணம்

உண்டாகும் வெங்கலத்தின் சுண்ணஞ் சொல்வேன்
உற்பனமாம் வெங்கலத்தை கொண்டு வந்து
அண்டாகும் அண்டமெழு கவசஞ்செய்து
அப்பனே சீலையது செய்துகொண்டு
வண்டாகும் ரவிதனிலே யுலர்த்திக்கொண்டு
வளமான முழப்புடத்தில் போட்டுவிட்டால்
நண்டாகுஞ் சுண்ணமதாய் நீறிப்போகும்
நலமான சுண்ணமதை யெடுத்துப்பாரே. 290

பாரப்பா சுண்ணமதை யெடுத்துக்கொண்டு
பண்பான சிமிழில் வைத்து சொல்லக் கேளு
ஆரப்பா வறிவார்கள் வாமியாத்தாள்
அவள்தனக்கு பூசைபண்ணி யனுக்கிரகங்கேளு
வாரப்பா வவள்தானும் வேணதீவாள்
வளமான சுண்ணமதின் வளப்பஞ் சொல்வாள்
நாரப்பா சுண்ணமதைப் பதனம் பண்ணு
நலமான சுண்ணமடா வெங்கலந்தானாமே. 291

நாமப்பா தங்கமதின் சுண்ணஞ் சொல்வேன்
நலமரன தங்கமதைக் கொண்டு வந்து
வாமப்பா வழலைமெழு கதனைப்பூசு
வளமான சீலைமண் ணேழுச்செய்து
ஆமப்பா ரவிதனிலே நவநாள்வைத்து
அப்பனே யுலர்ந்த பின்பு சொல்லக் கேளு
காமப்பா கனபுடத்தில் போட்டுவிட்டால்
கண்மணியே நீறியது சுண்ணாம்பாச்சே. 292

தங்கச் சுண்ணம்

ஆச்சப்பா தங்கசுண்ண மார்தான் செய்வார்
அப்பனே பரித்தங்கம் சுண்ணாம்பானால்
வாச்சப்பா வையகங்கள் முழுதுமுன்னை
வளமாகத் தான்வணங்கு முலகமெல்லாம்
நாச்சப்பா சுண்ணமதைச் சிமிழில்வைத்து
நலமான தேவிக்குப் பூசைசெய்து
காச்சப்பா மேருதனிற் பதனம் பண்ணிக்
கண்மணியே பூசித்துப் பதனம்பண்ணே. 293

வெள்ளிச் சுண்ணம்

பண்ணடா சொர்னவெள்ளி சுண்ணஞ்சொல்வேன்
பண்பான வெள்ளியுட காறுவாங்கி
அண்ணடா கெவுரியென்ற மெழுகைப்பூசி
அப்பனே யண்டசுண்ண மதின்மேற்பூசி
விண்ணடா சீலைமண் ணேழுசெய்து
விளங்கியதோ ரவிதனிலே யுலர்த்திக்கொண்டு
கண்ணடா கனபுடத்தில் போட்டுவிட்டால்
கண்மணியே சுண்ணாம்பாய் நீறிப்போமே. 294

போமப்பா சுண்ணமதைச் சிமிழில்வைத்து
புகழான சிமிழெடுத்துப் பதனம்பண்ணு
நாமப்பா விஷ்ணுவுக்குப் பூசைபண்ணி
நலமான வாதத்தின் றொழிலுக் கெல்லாம்
காமப்பா சுண்ணங்க ளெடுத்து ஆடு
கண்மணியே சுண்ணம்விட்டால் வாதியாவான்
வாமப்பா வாதியென்றால் சுண்ணம்பாரு
வளமான சுண்ணமதைக் கண்டுசெய்யே. 295

நாகச்சுண்ணம்

செய்யவே நாகச்சுண்ணஞ் சொல்லக்கேளு
செயலான நாகமதைக் கொண்டு வந்து
வையவே பாஷாண மெழுகெடுத்து
வளமான நாகத்தின் மேலேபூசி
கையவே யுருகாமற் சீலைசெய்து
கண்மணியே ரவிதனிலே யுலர்ந்தபின்பு
மையவே கோழியென்ற புடத்தைப்போடு
மைந்தனே நீறியது சுண்ணாம்பாச்சே 296

ஆச்சப்பா சுண்ணமதைச் சீசாவில் வைத்து
அப்பனே வைரவற்கு பூசைபண்ணி
நாச்சப்பா தோத்திரித்து வேண்டிக் கொண்டு
நலமாக யெந்தனுக்கு அருள்தா வென்று
காச்சப்பா பூசித்துப் பதனம் பண்ணு
கண்மணியே சுண்ணமதைக் காட்டவேண்டாம்
மாச்சப்பா நாககுண்ண மகத்துவங் கோடி
மைந்தனே சுண்ணமதை மருவிப்பாரே. 297

வங்கச்சுண்ணம்

பாரப்பா வங்கத்தின் சுண்ணஞ் சொல்வேன்
பண்பான வங்கத்தைக் கொண்டுவந்து
ஆரப்பா வறிவார்கள் வைங்காயங்கொண்டு
அப்பனே மலப்புளியுங் கூடச்சேர்த்து
நாரப்பா வைங்கோல நீரால்மத்தி
நலமாக மத்தித்து அதன்மேற் பூசி
காரப்பா சீலையது செய்துக்கொண்டு
கண்மணியே புடம்போட நீறிப்போமே. 298

போமப்பா வங்ககுண்ண மார்தான் செய்வார்
புகழான இம்முறைதான் புனிதமாகும்
ஆமப்பா வங்கச்சுண்ணம் போலேயுண்டோ
அரன் சோதி ரசவாத சுண்ணத்தாலே
வாமப்பா காரமென்ற வாதக்காடு
வண்மைபெறச் சொல்லுகிறேன் வளமாய்க்கேளு
நாமப்பா முதற்றீட்சை முப்பைப்பாரு
நலமாக வதன்பிறகு நீரைக்காணே. 299

காணப்பா மெழுகுடனே சுண்ணத்தோடு
கண்மணியே களங்குடனே கட்டுமார்க்கம்
வாணப்பா செந்தூரம் பற்பத்தோடு
வளமான தைலங்க ளண்டப்போக்கு
ஆமப்பா குளிகையுடன் சாரணையின் மார்க்கம்
ஆதியென்ற சவர்க்காரஞ் சரக்குவைப்பு
மாணப்பா முப்புதனை முடித்துக்கொண்டு
மைந்தனே தொழிலெல்லாம் ஆடுஆடே. 300

இரசச்சுண்ணம்

ஆடவே யிரதத்தின் சுண்ணங்கேளு
அப்பனே யிரதமதைக் கல்வத்திட்டு
வாடவே பூர்வமுப்பு கழஞ்சுபோட்டு
வளமான வைங்காயங் கூடப்போட்டு
நாடவே சாமம்ரண்டு ஆட்டினாக்கால்
நலமான மெழுகாகும் வில்லை செய்வாய்
காடவே சீலைமண் ணேழுஞ்செய்து
கண்மணியே ரவியுலர்த்திப் புடத்திற்போடே 301

போடென்ற சுண்ணமது ஆர்க்குக்கிட்டும்
புகழான பொறுமையுள்ளோ னவர்க்கேகிட்டும்
ஆடென்ற சுண்ணமதைச் சீசாவில் வைத்து
அப்பனே பூசைபண்ணித் தொழுதுபோற்றி
வாடென்ற சிவகாமித் தாயாருக்கும்
வளமான சோடசங்கள் ரேசகமாய்ச் செய்து
காடென்ற சுண்ணமதைக் காட்டவேண்டாங்
கைலங்கிரி சுண்ணமடா கருதிக்கேளே. 302

கெந்த சுண்ணம்

கேளப்பா சிவவிந்து சுண்ணஞ்சொன்னேன்
கெடியான சுத்தகெந்தி சுண்ணாங்கேளு
ஆளப்பா கெந்தியதைக் கல்வத்திட்டு
அப்பனே விஷச்சுண்ணங் கழஞ்சுபோட்டு
நாளப்பா சுத்தசலந் தன்னலாட்டு
நலமான வைங்கோல நீராற்சாமம்
வாளப்பா வழித்தெடுத்து வில்லைசெய்து
வளமாக ரவியுலர்த்தி மண்சீலைசெய்யே. 303

செய்யவே காடையென்ற புடத்திற்போடு
செயமாக வாறினபின் னெடுத்துப்பாடு
ஐயவே சீறியது சுண்ணாம்பாகும்
அப்பனே சுண்ணமது கொடியகாரம்
வையவே சுண்ணமதைச் சிமிழில்வைநீ
வளமான தேவிக்கும் வைரவற்கும்
நையவே தோத்தரித்துப் பூசைசெய்து
நலமான சுண்ணமதைப் பதனம்பண்ணே. 304

பண்ணடா சிவமதற்குச் சத்திசொன்னேன்
பண்பான நாதவிந்து சுண்ணாம்பாச்சு
அண்ணடா தன்வந்திரி யென்மகனே
ஆதியென்ற வருவத்தி லமர்ந்தசோதி
வண்ணடா சோதியென்ற மகாரமாகும்
வளமான விஷ்ணுவுட யிருப்பிடமாம்பாரு
கண்ணடா யப்பீடம் பீர்மபீடங்
கண்மணியே பூருவத்தில் பூநீறாச்சே 305

பூநீறு

ஆச்சடா பூநீறைக் கண்டுகொள்ளு
அப்பனே பூநீறுக் காயினீறு
வாச்சடா பழநீறு வமுர்தநீறு
வளமான சுத்தவெள்ளை பூநீறு மாச்சு
நாச்சடா யுவர்மண்ணு யிதற்குப்பேரு
நலமான வுழமண்ணெ ன்றிதற்குப்பேரு
காச்சடா வண்ணானுக் குகந்தமண்ணு
கண்மணியே கொடிமரமென் றிதற்குப்பேரே. 306

பேரான பூர்வமுப்புக் கித்தனைபேராச்சு
பேதமில்லை பூர்வமுப்பை யெடுத்துப்போற்று
ஆராத கற்பமதுக் காதிகேளு
அப்பனே யாதியென்ற முப்புவிருந்தால் சித்தி
வாரான கற்பமதின் சூட்சங்கேளு
வளமாக யிந்தமுப்பூக் கவரோகோடி
காரான தலைப்பிண்டம் பிறந்தநாழி
கண்மணியே யிரந்துதென்றால் சொல்லக்கேளே. 307

சரக்கு வைப்புக் குரு

கேளப்பா யில்லமதிற் புதைத்துப்பாரு
கெடியான மூன்றுபத்து நாளிலையா
ஆளப்பா அந்திடத்தி லுபாயமாக
அப்பனே ஊவன்தா னெடுத்துக்கொள்ளு
நாளப்பா சொல்லாமல் பூசைபண்ணு
நலமாகப் பதனமதாய்ச் செய்துக்கொண்டு
வாளப்பா சரக்குவைப்புக் கிதுவே போடு
வளமான வைப்புகட்கும் சூட்சமாமே 308

அண்டச்சுண்ணம்

ஆமப்பா அண்டசுண்ணந் தன்னைமைந்தா
அப்பனே செந்தூர மாகக்கேளு
நாமப்பா கல்வமதில் அண்டசுண்ணம் போட்டு
நலமான நாதமதால் நவநாளாட்டு
காமப்பா அண்டதிரா வகத்தாற்சாமங்
கண்மணியே ஆட்டியதை வில்லைசெய்து
வாமப்பா விந்தாலே சீலைசெய்து
வளமான ரவிதனிலே காயப்போடே. 309

போடவே யுலர்ந்தபின்பு சொல்லக்கேளு
புகழான காடையென்ற புடத்தைப்போடு
ஆடவே யாறியபின் னெடுத்துப்பாரு
அப்பனே யருணனைப் போற்காந்தியாகும்
வாடவே செந்தூர மெடுத்துக்கொண்டு
வளமான சீசாவிற் பதனம்பண்ணு
நாடவே வைரவற்குப் பூசைபண்ணு
நலமான சீசாவை யில்லறத்தில்வையே. 310

வைக்கவே கடுகளவு கொண்டுவிட்டால்
வளமான சட்டைதள்ளித் திரேகம் பொன்னாம்
கைக்கவே நரைதிரையு மாண்டுபோச்சு
நலமான கிழவனுமே குமரனாவான்
ஐக்கவே யாயிரந்தான் வருசங்காக்கும்
அப்பனே செந்தூரம் வதிகங்காணும்
வைக்கவே செந்தூரம் போலேயுண்டு
மைந்தனே செந்தூர மகிமைதானே. 311

மண்டூரச் சுண்ணம்

தானான மண்டூரச் சுண்ணஞ் சொல்வேன்
தாக்கான மண்டூரங் கல்வத்திட்டு
வானான சுத்தசலந் தன்னாலாட்டு
வழுங்கியதோர் விந்தாலே சாமமாட்டு
கானான முப்புவது கழஞ்சுபோட்டு
கண்மணியே வைங்கோலந் தன்னாலாட்டு
மானான மெழுகாகும் வழித்தெடுத்து
மைந்தனே வில்லைசெய்து வுலரப்போடே. 312

போடவே சீலைசெய்து காயவைத்து
புகழான கெசபுடத்திற் போடுபோடு
ஆடவே நீறியது சுண்ணமாகும்
அப்பனே சுண்ணமகா சாரமெத்த
வாடவே வேண்டாங்காண் சுண்ணத்தாலே
வளமான மண்டூரச் சுண்ணமாச்சு
காடவே வைரவதற்குப் பூசைபண்ணிக்
கண்மணியே சிமிழில்வைத்துப் பூசைபண்ணே. 313

காந்தச் சுண்ணம்

பண்ணவே காந்த சுண்ணஞ் சொல்லக்கேளு
பண்பான காந்தமதைக் கல்வத்திட்டு
அண்ணவே யமுரியிலே சாமமாட்டி
அப்பனே பந்நீராற் சாமமாட்டு
வண்ணவே விஷச்சுண்ணங் கழஞ்சுபோடு
வாகான வைங்கோல நீராலாட்டு
கண்ணவே யரைத்ததனை வழித்துக்கொண்டு
கண்மணியே வில்லையதாய் செய்துக்கொள்ளே. 314

கொள்ளவே ரவிதனிலே காயப்போட்டு
கொடிதானே சீலையது செய்துலர்த்தி
அள்ளவே யரைமட்டும் புடத்திற்போடு
அப்பனே யாறினபின் னெடுத்துப்பாரு
வள்ளவே வெந்நீராய் நீற்றுப்போகும்
வளமான திருநீறு போலாமைந்தா
நள்ளவே வெண்மையது கொடியவெண்மை
நலமான தூளிதமாங் கண்டுபாரே. 315

பாரப்பா சுண்ணமதை யெடுத்துக்கொண்டு
பண்பான சீசாவி லடைத்துப்போடு
காரப்பா கனகசபை சுப்பிரமணியன்
கந்தனுக்கும் பூசைபண்ணு கனகமாகும்
ஆரப்பா வறுமுகற்குத் தோத்திரஞ்செய்து
அப்பனே சாஷ்டாங்க சரணம்பண்ணி
நாரப்பா தொழில்களுக்கு செயமாக் கென்று
நலமாகக் கட்டுயிதைப் பதனம்பண்ணே. 316

கெருடக்கற்சுண்ணம்

பண்ணவே கெருடகற் சுண்ணஞ் சொல்வேன்
பண்பான கெருடக்கல் கொண்டுவந்து
அண்ணவே சுத்தியது யேழும்பண்ணி
அப்பனே வீரமதின் மெழுகுகொண்டு
கண்ணவே யதின்மேலே கவசம் போட்டுக்
கண்மணியே யண்டமதின் றயிலங்கொண்டு
மண்ணவே சீலைதனிற்று வைத்துக்கொண்டு
மைந்தனே யதுமேலே சீலைசுற்றே 317

சுத்தியே மண்சீலை யொன்றுசெய்து
சுகமாகக் கெசபுடத்திற் போட்டுக்கொண்டு
அதியே யாறினபின் னெடுத்துப்பாரு
அரகரா சுண்ணமதை யென்னசொல்வேன்
வத்தியே கடுங்கார மேறியந்த
வளமான சுண்ணாம்பு வெண்மையாகும்
கத்தியே கனகசபைக் கொப்புமிந்தக்
கைலாசக் கெருடக்கற் சுண்ணமாச்சே. 318

மலைப்புளிச்சுண்ணம்

ஆமப்பா கருடக்கற் சுண்ணஞ்சொன்னேன்
அப்பனே புளியினுட சுண்ணஞ்சொல்லேன்
வாமப்பா மலப்புளியைக் கல்வத்திட்டு
வளமான விஷச்சுண்ணம் வழலைசுண்ணம்
நாமப்பா யிதுரண்டுங் கல்வத்திலிட்டு
நலமான வாய்நீராலாட்டிக் கொண்டு
காமப்பா வழித்தெடுத்து வில்லைசெய்து
கண்மணியே ரவிதனிலே காயப்போடே. 319

போடவே காய்ந்தபின்பு சொல்லக்கேளு
புகழான விந்தாலே சீலைசெய்து
ஆடவே காயவைத்து யதன்மேல்மைந்தா
அப்பனே மண்ணாலே சீலைசெய்து
வாடவே ரவிதனிலே யுலரப்போட்டு
வளமான முழநீளங் குழிதான்வெட்டி
நாடவே யெருவடுக்கி வில்லைவளைத்து
நலமாக யெருவடுக்கி தீயைமூட்டே 320

மூட்டவே யாறினபின் எடுத்துப்பாரு
முக்கியமுள்ள திருநீறாய்ச் சுண்ணாம்பாகும்
ஆட்டவே சுண்ணமதை யென்னசொல்வேன்
அப்பனே சுண்ணமதை சிமிழில்வைநீ
நாட்டவே வாமிசிவ காமிக்குந்தான்
நலமாக வாமத்தின் பூசைபண்ணி
மாட்டவே சாஷ்டாங்க ரேசகமாய்நின்று
மைந்தனே தேவியைத்தான் தோத்திரம்பண்ணே. 321

பண்ணவே சுண்ணத்தை யெடுத்துக்கொண்டு
பார்தனிலே சர்க்குருவா மிந்தச்சுண்ணம்
அண்ணமே யெடுத்ததொரு சுண்ணந்தன்னை
அப்பனே யாடவென்றால் கோடிவித்தை
வண்ணவே புளிச்சுண்ண மார்தான் காண்பார்
வையகத்து மாண்பர்களோ காணப்போறார்
கண்ணவே கனகசபைக் குகந்தபத்தன்
கண்மணியே ராசிசிவ யோகிகாணே 322

ஐங்கோலச்சுண்ணம்

காணப்பா வைங்காயச் சுண்ணஞ்சொல்வேன்
கண்மணியே வைங்காயங் கல்வத்திலிட்டு
ஆணப்பா யண்டசுண்ண முப்புச்சுண்ணம்
அரகரா விஷச்சுண்ண மூன்றுங்கூட்டி
மாணப்பா கல்வமதிற் போட்டுக்கொண்டு
மைந்தனே யண்டநீர் தன்னாலாட்டு
வாணப்பா வழலைநீர் தன்னாலாட்டு
வளமாக ஆட்டிவர மெழுப்போலாமே. 323

ஆமப்பா இம்மெழுகை வழித்துக்கொண்டு
அப்பனே சதுரமதாய் வில்லைபண்ணி
நாமப்பா ரவியென்ற வெய்யலிலேவைத்து
நலமாகக் காய்ந்தபின்பு சொல்லக்கேளு
காமப்பா விந்தாலே சீலைசெய்து
கண்மணியே மண்ணாலே சீலையொன்று
வாமப்பா சீலையது செய்துலர்த்தி
வளமாகக் கெசபுடத்திற் போட்டுத்தீரே. 324

தீரென்ற வைங்காய முருகிக்கட்டுந்
திவ்வியமாய்க் கட்டியது நீறும்பாரு
வாரென்ற வைங்காயஞ் சுண்ணாம்பாச்சு
வளமான சுண்ணமதை யென்னசொல்வேன்
காரென்ற கடுங்கார மிந்தச்சுண்ணம்
கண்மணியே குருச்சுண்ண மிந்தச்சுண்ணம்
ஆரென்ற சுண்ணமதைப் பூசைபண்ணி
அப்பனே சிமிழ்தனிலே பதனம்பண்ணே. 325

வழலைமுப்பு

பண்ணவே வழலைமுப்பு சொல்லக்கேளு
பண்பான பூநீறும் விந்துஞ்சேர்த்து
அண்ணவே கலக்கியதைப் பீங்கானிலூற்று
அப்பனே ரவிதனிலே நவநாள்வைக்க
கண்ணவே வட்டதுபோல் சவர்க்காரமாகுங்
கண்மணியே சவுக்கார மெடுத்துக்கொண்டு
வண்ணமே பாண்டமதிற் போட்டுக்கொண்டு
வளமான சுத்தசலம் படிரண்டாமே 326

ஆமப்பா பாண்டத்தில் வார்த்துக்கொண்டு
அப்பனே பாண்டமதை யடுப்பிலேற்றி
ஓமப்பா தீமூட்டி எரித்திட்டாக்கால்
ஒகோகோ வுருகியது குழம்புபோலாம்
நாமப்பா வக்குழம்பை பீங்கானிலூற்றி
நலமான பூவனத்தில் மேடை போட்டு
காமப்பா பீங்கானை யதன்மேல் வைத்து
கண்மணியே புஷ்பபரி மளங்கள் சாற்றே. 327

சாற்றேவே பலகாரம் பாயசங்கள்
சமர்த்தான திதுலெல்லாம் படைத்துவைத்து
ஆற்றவே கிழக்குமுக மாகமைந்தா
அப்பனே மாந்தோலி லிருத்துக்கொண்டு
மாற்றவே வாலையிட தியானத்தைத்தான்
மைந்தனே மண்டலத்தி லட்சமோது
மாற்றவே யண்டத்தில் பூர்க்கும்பூவு
வளமான வழலைமுப்பு யிதுதானாமே. 328

ஆமப்பா இம்முப்பைப் போற்று போற்று
அப்பனே முப்பெடுத்து சீசாவில் வைத்து
நாமப்பா சற்குருவா மிந்தவுப்பு
நலமான முப்புதனை பதனம்பண்ணு
காமப்பா சவுக்கார முப்பிதற்குக்
கண்மணியே யிம்முப்பு வாதமுப்பு
வாமப்பா வழலையென்ன அண்டாகும்
வளமான அண்டமடா கருவுமாச்சே. 329

கருவான வுருவாகுந் திருவுமாகும்
கண்மணியே யண்டமென்ற கருவுமாகும்
அருவான யுருவமென்ற சுரூபமாகும்
அப்பனே யாதியென்ற பிண்டமாகும்
திருவான முக்கருவும் மூர்த்தியாகுந்
தெவிட்டாத போதமென்ற கர்ப்பமாகும்
மருவான மாதியந்தத் தண்மையாகு
மைந்தனே சிவசக்தி யாண்பெண்ணாச்சே. 330

சகலநோய்களுக்குச் செந்தூரம்

ஆச்சென்ற நோய்களுக்குச் செந்தூரம் சொல்வேன்
அப்பனே குப்பியென்ற யெரிப்புமைந்தா
வாசிசென்ற யிரதமுடனே கௌரிலிங்கம்
வளமான கெந்தியுடன் துருசுதுத்தம்
நாச்சென்ற தாரமுடனப் பிரேகம்பூரம்
நலமாக வகைக்குவொரு பலமும்வாங்கி
காச்சென்ற கல்வத்திற் போட்டுக்கொண்டு
கண்மணியே தூளாகப் பொடித்துக்கொள்ளே. 331

கொள்ளவே ரவிதனிலே சாமம்வைத்துக்
கொடிதான வெடியுப்பு கரியுப்போடு
அள்ளவே யிதுரண்டும் போட்டுமைந்தா
அப்பனே புளிசெயநீர் தன்னாலாட்டு
வள்ளவே பனிநீராற் சாமமாட்டு
வளமான பழச்சாற்றாற் சாமமைந்து
கள்ளவே யெருக்கம்பால் தன்னால்மைந்தா
கண்மணியே பதினாரு சாமமாட்டே. 332

ஆட்டவே மருந்தெல்லாம் வழித்துக்கொண்டு
அப்பனே காசியென்ற குப்பிவாங்கி
நாட்டவே குப்பிதனில் வழித்துக்கொண்டு
நலமாக ரவியில் நன்றாய்க் காயவைத்து
வாட்டவே சீலைபோட்டு சீலைசெய்து
வளமாகக் கமலம்போ லிரண்டுநாழி
நாடவே முச்சாமங் காடாக்கினியாய்மூட்டி
நலமாக வதன்பிறகு தீபம்போலாமே. 333

போடவே குப்பியைத்தா னெடுத்துக்கொண்டு
புகழான கழுத்தளவு புதைத்துப்போட்டு
ஆடவே யடுப்பேற்றிச் சொல்லக்கேளு
அப்பனே தீயதுதான் மூட்டிக்கொண்டு
வாடவே தீபமது போலேசாமம்
வளமாகக் கமலம்போ லிரண்டுநாழி
நாடவே முச்சாமங் காடாக்கினியாய்மூட்டு
நலமாக வதன்பிறகு தீபம்போலாமே. 334

ஆமப்பா தீபம்போற் சாமமாகும்
அப்பனே சாமமது யெரித்துக்கொண்டு
வாமப்பா இறக்கியதை வைத்துக்கொண்டு
வளமாகப் பூசை நைவேத்தியஞ்செய்து
காமப்பா குப்பிதனை எடுத்துப்பாரு
கண்மணியே முருக்கம்பூ போலாமையா
நாமப்பா செந்தூர மென்னசொல்வேன்
நலமான செந்தூரம் நவிலொண்ணாதே. 335

ஒண்ணாத மூன்று நாள் கழஞ்சியுண்ண
வுத்தமனே குட்டமுடன் பாண்டுரோகம்
வண்ணாத நெய்தேனிற் கொண்டுவிட்டால்
வளமான சயமுடனே காசரோகம்
கண்ணாத வோமப்பால் தன்னிற்கொள்ள
கசடான வாதபித்தஞ் சிலேற்பனமும் போகும்
அண்ணாத முலைப்பாலிற் கொண்டுவிட்டால்
ஆனதொரு தோஷமுடன் சன்னிபதின்மூன்றே. 336

மூன்றான முலைப்பாலுந் தேனுங்கூட்டி
முக்கியமுட னெல்லிடைதா னதனிற்போட்டு
மன்றான செத்தபிணந் தனக்குமைந்தா
மைந்தனே வாய்திறந்து புகட்டிவிட்டால்
கன்றான தசவாய்வும் வந்துகூட
கண்மூடி திறந்தாப்போ லெம்புவான்பார்
வன்றான நாழிகைதான் மூன்றேமுக்கால்
வளமாக நின்றவனு மிறந்திடுவான்பாரே. 337

பாரப்பா வவனுயிர் தானன்றானாக்கால்
பண்பாக நூறாண்டு யிருப்பானையா
வாரப்பா லபியதுதா னில்லாவிட்டால்
வளமான சகலகல்வி பேசிப்போவான்
ஆரப்பா மேகமது யிருபத்தொன்றும்
அலைந்தோட வகைசொல்வேன னுபானத்தில்
நாரப்பா யோரிலைத் தாமரையிற் கொள்ளக்
கசடான நீரிழிவு மதிமேகம்போமே. 338

போமப்பா கோவெண்ணெய் தன்னிற்காள்ள
போகாத மேகவெட்டை சூடெல்லாம்போம்
ஆமப்பா குண்டனுட கியாழத்திற்றான்
அப்பனே கொண்டிடவே யிரைப்புபோகும்
காமப்பா வனுபானம் நன்றாய்ச் சொன்னேன்
கண்மணியே யென்னைப் போலார்தான் சொல்வார்
வாமப்பா வாதிமகன் வைந்தியர்க்காகும்
வளமான பண்டிதரே யிதனைக்காணே. 339

காணப்பா யெந்தனுக்குத் தேவிதானும்
கண்மணியே யுன்பேர்தா னந்தியென்றாள்
ஆணப்பா நூறாண்டு பணிவிடைதான் செய்தேன்
ஆத்தாள் வாக்கதனா லென்பேர் சொன்னாள்
வாணப்பா வவளாலே நந்தியானேன்
வளமாக சித்தருக்குக் குருவுமானேன்
மாணப்பா அண்டமதின் பூட்டைக்காணு
மைந்தனே சகலகலை யறியலாமே. 340

நூலறிய – சுருக்கிடை நம்பிதேவர் ஜோசியம்

ஆமப்பா சுருக்கிடைமுப் பதையும் பாரு
அப்பனே கருவிகள்தான் மகத்துவங்காணும்
வாமப்பா நம்பிதேவர் ஜோசியத்தைச் சொன்னார்
வளமான ஜோசியமோ தெளிவுமெத்த
காமப்பா ஜோசியத்தை வாங்கிப்பாரு
கண்மணியே ஜோசியமுங் கண்டு தேறு
நாமப்பா ஜோசியம்பா ரறிவுண்டாகும்
நலமான சோசியத்தைத் தேடிக்கேளே. 341

கேளப்பா ஜோசியமிருந் திடத்தேயேகுங்
கேள்விதாய்ப் பணிவிடைக ளுபசாரம்பண்ணு
நாளப்பா அவர்மனது கனிந்துபிள்ளாய்
நலமாக யீய்ந்திடுவார் ஜோசியத்தை
ஆளப்பா நூலிய்ந்தோர் குருவாயெண்ணி
அப்பனே யவரைநித்தந் தொழுதுபோற்று
காளப்பா சோசியமுங் கண்டுகொள்ளு
கண்மணியே யிந்நூலைக் கருத்திலெண்ணே. 342

இரசபதங்கச் செந்தூரம்

எண்ணவே ரச பதங்க செந்தூரங்கேளு
என் மகனே ரசமதனைக் கல்வத்திட்டு
வண்ணவே புளிசெயநீர் தன்னாலாட்டு
வளமாக ஆட்டினபின் விந்தாலாட்டு
கண்ணவே மருந்தெடுத்து யிதனிற்போடு
கண்மணியே காசியென்ற குப்பிவாங்கி
அண்ணவே மருந்தெடுத்து யிதனிற்போடு
அப்பனே தமர்போட்டுச் சீலை செய்யே. 343

செய்யவே யைந்துநாள் ரவியுலர்த்தி
செயலான சட்டிதனில் மணலைப்போடு
மையவே குப்பிதனை யதனில்வைத்து
மைந்தனே யடுப்பேற்றிச் சொல்லக்கேளு
ஐயவே சாமமைந்து கமலம்போல
அப்பனே யெரித்து அதை யிறக்கிவைத்து
நையவே யாறினபின் னெடுத்துப்பாரு
நலமான செந்தூர மருணனாமே. 344

ஆமப்பா செந்தூர மென்னசொல்வேன்
அப்பனே செந்தூர மார்தான் காண்பார்
வாமப்பா நெல்லெடைதான் தேனிற்கொண்டால்
வளமான குஷ்டமுடன் குரைநோயெல்லாம்
காமப்பா சூலையுடன் கீரந்திபுண்கள்
கண்காணா தோடுமடா மேகவேட்டை
நாமப்பா சயகாச மீளைபோகும்
நலமாக யிரைப்புடனே யிருமல்போமே. 345

மூலிகைவேதை

போமப்பா மூலிகையின் வேதைசொல்வேன்
புகழான வேப்பிலையைக் கொண்டுவந்து
ஓமப்பா விஷச்சுண்ணங் கழஞ்சுபோட்டு
உத்தமனே யிதுரண்டுங் கல்லுரலிட்டு
வாமப்பா யெருக்கம்பூ வெடுத்துக்கொண்டு
வளமாக வொருநாழி சாடினாக்கால்
காமப்பா கசகசென்று சலந்தானூறுங்
கண்மணியே யச்சலத்தைப் பிழிந்து கொள்ளே. 346

கொள்ளவே யிரும்பதனைக் காயவைத்துக்
கொடிதான சார்தனிலே தோய்த்தாயானால்
அள்ளவே பத்தரையா மாற்றுக்காணும்
அப்பனே தங்கமடா வாதஞ்செய நீர்
வள்ளவே வாதவித்தை கோடியுண்டு
வளமான வேதாந்தி யுந்தனக்கு
கள்ளவே வாதவித்தை யின்னஞ்சொல்வேன்
களங்கமற்ற நெஞ்சமதாய்க் கசடைப்போக்கே. 347

விலாரிவேதை

போக்கான விலாரியுட தழையைவாங்கி
பொதுவான கல்லுரலிற் போட்டுக்கொண்டு
மாக்கான மாச்சுண்ணங் கழஞ்சுபோட்டு
மைந்தனே யிருப்புலக்கை தன்னாற்சாடு
வாக்கான விலாரிச்சாற் கசிந்துவூறும்
வளமான சாறதனைப் பிழிந்துக்கொள்ளு
ஆக்கான தாம்பரத்தை யுருக்கிக்கொண்டு
அப்பனே சாற்தனிலே சாய்த்திடாயே. 348

சாய்த்திடவே தங்கமதாம் பாருபாரு
சமர்த்தான தங்கமடா வேதைதங்கம்
ஆய்த்திடவே யிவ்வேதை சூட்சமையா
அரகரா வேதைதனை யறிந்துசெய்வாய்
வாய்த்திட வேகாரவித்தை பெரிதுமல்ல
வளமான யோகமது பெரிதாமைந்தா
நாய்த்திட வேவாசியடா வாய்வுமூலம்
நலமான வாசிதனி லூடாடுவாயே. 349

தொட்டால்வாடி

ஆயென்ற தொட்டவுட னுணருமூலி
அப்பனே யம்மூலி வாங்கிவந்து
காயென்ற கல்லுரலிற் போட்டுக்கொண்டு
கண்மணியே யண்டசுண்ணங் கழஞ்சுபோடு
வாயென்ற வயக்காம்பாற் சாடுபாடு
வளமாகச் சாடிவா நீர்க் கசியும்பாரு
நாயென்ற சாறதனைப் பிழிந்துகொண்டு
நலமான பீங்கானி லூற்றிக்கொள்ள. 350

கொள்ளவே அயமதனை யுருக்கிக்கொண்டு
கொடிதான சாறதனிலே வாருவாரு
அள்ளவே ஆறினபின் னெடுத்துப்பாரு
அப்பனே தங்கமதை யென்னசொல்வேன்
மள்ளவே தங்கமதின் மாற்றுசொல்வேன்
மைந்தனே மாற்றதுதா னைம்பதாகும்
கள்ளவே யில்லாத தங்கஞ்சொன்னேன்
கசடர்களே யிந்நூலைக் கருத்திலெண்ணே. 351

சிவப்பூமத்தை

எண்ணவே யின்னமொரு சூட்சம்சொல்வேன்
ஏகவுப நிடத்தினிட வாதப்போக்கு
கண்ணவே சிவப்பூமத் தனிலைதான் கொண்டு
கண்மணியே யண்டசுண்ணங் கழஞ்சுபோட்டு
வண்ணவே கல்வமதி லரைத்துக்கொண்டு
வளமான தாம்பரத்தின் மேலேபூசி
மன்னவே சீலையொன்று செய்துலர்த்தி
மைந்தனே புடம்போடப் பழுத்துப்போமே. 352

போமப்பா புடம் போட்டு யெடுத்துப்போடு
பொருளான பொன்னதுதான் வாதப்பொன்னு
ஆமப்பா மாற்றுதா னெட்டரையுமாகும்
அப்பனே வாதப்பொன் செய்துகொள்ளு
நாமப்பா நாயென்ற வாதப்பொன்னு
நலமான நூலதனில் வாதமாகும்
வாமப்பா சகலகலை யின்னூலாகும்
வளமான நூலதுதான் வண்மைதானே. 353

சிவன்வேம்பு

தானான சிவன்வேம்பு வேதைசொல்வேன்
தாக்கான சிவன்வேம்பு கொண்டுவந்து
ஆனான கல்லுரலிற் போட்டுமைந்தா
அப்பனே வழலைமுப்பு கழஞ்சிபோட்டு
மானான கம்பதனாற் சாடுசாடு
மைந்தனே சாடியதைச் சாற்பிழிந்துகொண்டு
வேனான ங்கானி லூற்றிக் கொண்டு
விளங்கியதோர் பித்தளையைக் காச்சித்தோயே. 354

கறுப்புக்கொடி வேலி

தோய்த்திடவே தங்கமது பத்தரையுமாகும்
துடியான தங்கமடா வேதைத்தங்கம்
ஆய்த்திடவே கறுப்புகொடி வேலிவேர்தான்
அப்பனே கொண்டுவந்து சொல்லக்கேளு
வாய்த்திடவே வாய்நீராற் குழைத்துக்கொண்டு
வளமான செம்பதுமேற் கவசம் பூசி
நாய்த்திடவே ரண்டெருவிற் புடம்போட்டு விட்டால்
நலமான மாற்றதுதா னூறுமாமே. 355

வழலைமெழுகு

ஆமப்பா மூலிவகை வேதைசொன்னேன்
அப்பனே வழலையென்ற மெழுகுகேளு
வாமப்பா வுவர்மண்ணுங் காயங்கூட்டி
வளமாக ரண்டுமொன்றாய்க் கல்வத்திட்டு
நாமப்பா சிவவிந்தாற் சாமமாட்டு
நலமாக வைங்கோலத் தைலத்தாலே
காமப்பா ஆட்டியதை விழித்துக்கொண்டு
கண்மணியே சொர்ணமென்ற சிமிழில்வையே. 356

வையடா வாலைமுன்னே சிமிளைவைத்து
வளமாகப் பூசை செய்ய வகையைக்கேளு
கையடா புனுகு கஸ்தூரி புட்பங்
கண்மணியே சந்தனமுங் கதம்பம்வைநீ
ஐயடா பால்பழங்கள் வஸ்துசுத்தி
அப்பனே பாயசம் பலகாரங்கள்
மையடா தாம்பூலந் தீபதூபம்
மைந்தனே சங்கினோசை செயகண்டியாமே. 357

ஆமப்பா பம்பையுடன் பேரிசங்கம்
அப்பனே துத்தாரி மத்தளங்கள்தாளம்
காமப்பா சங்கீதம் டமாரம்டப்பு
கண்மணியே பதினெட்டு வாத்தியத்தோடே
வாமப்பா வாலைசிவ காமிக்குத்தான்
வளமாகப் பூசித்து வொருநிலையாநில்லு
நாமப்பா ரேசக பூரகமாய்க்குந்தி
நலமான தேவிக்குத் தோத்திரமும்பண்ணே. 358

பண்ணவே சிமிழிதனை யெடுத்துக்கொண்டு
பாங்காக வுன்னிடத்தில் பதனம்பண்ணு
அண்ணவே யிம்மெழுகு ஆசானாசான்
அப்பனே சற்குருவு மிதுவேயாகும்
கண்ணவே கனகமிதிற் கோடாகோடி
கண்மணியே வாதிகட்கு யிதுவேபோதும்
வண்ணவே கடைசரக்கில் வுழன்றலைவார்பாரு
வளமான சற்குருவை யறியார் பாரே. 359

துத்தச்சுண்ணம்

பாரப்பா துத்தமதின் சுண்ணஞ்சொல்வேன்
பண்பான துத்தமதை கல்வத்திட்டு
ஆரப்பா அண்டசுண்ணங் களஞ்சிபோட்டு
அப்பனே சுத்தசலந் தன்னாலாட்டு
வாரப்பா ஆட்டியதை வில்லைசெய்து
வளமாக ரவிதனிலே காயப்போட்டு
நாரப்பா அஞ்செருவிற் புடம்போட்டுத்தீரு
நலமான வெண்ணீராய்க் சுண்ணாம்பாச்சே. 360

ஆச்சப்பா சுண்ணமதை யெடுத்துப்பாரு
அப்பனே சுண்ணமது யென்னசொல்வேன்
வாச்சப்பா சுண்ணவகை செய்துக்கொள்ள
வளமான சுண்ணமதின் மகத்துவங்கோடி
காச்சப்பா யின்னூலைக் கைவிடாதே
கண்மணியே யிந்நூலைப் போலேயுண்டோ
நாச்சப்பா நந்திநான் சொன்ன வாக்கியம்
நலமாகப் பொய்யில்லை நல்லோருக்கே. 361

மிறுதார்சிங்கிச்சுண்ணம்

நலமான மிருதாற் சிங்கி சுண்ணஞ்சொல்வேன்
நசையாத சிங்கியதை கொண்டுவந்து
வலமான சுத்தியது செய்துக்கொண்டு
வழியான கல்வமதிற் போட்டுக்கொண்டு
அலமான விஷச்சுண்ணங் களஞ்சிபோட்டு
அப்பனே யைங்கோல நீராலாட்டு
மலமான புளிசெயநீர் தன்னாலாட்டு
மைந்தனே ஆட்டிவர கசடற்றுப்போமே. 362

போமப்பா வழித்தெடுத்து வில்லைசெய்து
புகழான அஞ்செருவிற் போட்டுத்தீரு
ஆமப்பா ஆறினபின் பெடுத்துப்பாரு
அப்பனே நீறியது மலர்ந்துபோகும்
காமப்பா சுண்ணமதை யென்னசொல்வேன்
கண்மணியே மல்லிகையின் பூப்போலாமே
நாமப்பா சுண்ணமதைக் காட்டவேண்டாம்
நலமான சுண்ணமடா நவிலொண்ணாதே. 363

மகாரவித்தைச் சுண்ணம்

எண்ணாத யின்னமொரு சுண்ணங்கேளு
உத்தமனே மகரவித்தை சுண்ணஞ்சொல்வேன்
வண்ணாத வெடியுப்புக் கம்பியுப்பு
வளமான கல்லுப்பு மூன்றுஞ்சேர்த்து
கண்ணாத வீரமுடன் கெவுரிசேரு
கண்மணியே பஞ்சமலங் கூடப்போடு
வண்ணாத கல்வமதிற் போட்டுக்கொண்டு
வளமான வைங்கோலந் தன்னாலாட்டே. 364

ஆட்டவே சாமமைந்து ஆட்டினாக்கால்
அப்பனே மெழுகதுபோ லாகும்பாரு
வாட்டவே வழித்தெடுத்துச் சொல்லகேளு
வளமாக சதிரமதாய் வில்லைசெய்து
ஆட்டவே ரவிதனிலே வுலர்த்திக்கொண்டு
அப்பனே சீலையது வலுவாய்ச்செய்து
காட்டவே காடையென்ற புடத்திற்போடு
கண்மணியே நீறியது சுண்ணமாச்சே. 365

அச்சப்பா யிச்சுண்ண மார்தான் காண்பார்
அப்பனே கண்டவற்கு மோட்சமெய்தும்
நாச்சப்பா நல்லகுண முள்ளோருக்கு
நவின்றிட்டேன் நலமாக யின்னூல்மைந்தா
வாச்சப்பா வழிதுறையுங் காணச்சொன்னேன்
வளமாக ஞானத்தோர் நன்மைசொன்னேன்.
காச்சப்பா கனகமுள்ள பதியைச் சொன்னேன்.
கண்மணியே சகலகலை யிதிற்சொன்னேனே. 366

அப்பிரேகச் செந்தூரம்

சொல்லவே நோய்க்கென்று செந்தூரஞ்சொல்வேன்
சுகமான வப்பிரேகச் செந்தூரமைந்தா
வல்லவே கிருஷ்ணாக அப்பிரேகம்வாங்கி
வளமான மண்ணைத்தான் போக்கிப்போட்டு
அல்லவே சொல்லுகிறே னின்னங்கேளு
அப்பனே சுத்தியைத்தான் மிகவும்பண்ணு
மல்லவே பலம்பத்து கல்வத்திட்டு
மைந்தனே பழம்புளிதான் களஞ்சுமாமே. 367

ஆமப்பா கல்வமதிற் போட்டுக்கொண்டு
அப்பனே வெங்கோலத் தைலத்தாலாட்டு
வாமப்பா முச்சாம மதினா லாட்டு
வளமாக ஆட்டியபின் சொல்லக்கேளு
நாமப்பா பொற்கையான் சாற்றால்சாமம்
நலமாக ஆட்டியபின் சொல்லக்கேளு
காமப்பா வெள்ளைச்சா ரணையின்சாற்றால்
கண்மணியே சாமமது ரெண்டுமாச்சே. 3

ஆச்சப்பா பெருங்கிழங்கின் சாற்றால்சாமம்
அப்பனே ஆட்டியபின் சொல்லக்கேளு
நாச்சப்பா நாகவேற் சாற்றால்சாமம்
நலமான கோவையுடக் கிழங்குச்சாற்றால்
வாச்சப்பா சாமமது ரெண்டுமாட்டு
வளமான காணிச்சாற் சாமம்ரெண்டு
காச்சப்பா கொடிவேலிச் சாற்றால்சாமங்
கண்மணியே ஆட்டியிதை வழித்துக்கொள்ள. 369

கொள்ளவே வில்லையது செய்துக்கொண்டு
கொடிதான ரவிதனிலே காயவைத்து
அள்ளவே சீலையது யேழுஞ்செய்து
அப்பனே மறுபடியுங் காயவைத்து
விள்ளவே முழப்புடத்திற் போடுபோடு
விளங்கியதோற் சோரமது மாகுமையா
கள்ளவே கனகசபைக் கொப்புமிந்தக்
கைலாச வப்பிரேகச் செந்தூரமாமே. 370

ஆமப்பா ஆறியபின் னெடுத்துப்பாரு
அப்பனே செந்தூர மருணன்போலாம்
காமப்பா செந்தூரஞ் சிமிழில் வைத்துக்
கண்மணியே தேவிமுன்னே வைத்துப்போற்று
வாமப்பா பூசை நைவேத்தியஞ்செய்து
வளமான செந்தூரம் வைத்துப்போற்று
நாமப்பா சொல்லிவிட்டேன் செந்தூரமார்க்கம்
நலமான செந்தூரம் நவிலொண்ணாதே. 371

ஒண்ணாத செந்தூர மெடுத்துக்கொண்டு
உத்தமனே பணவிடைதான் தேனிற்கொள்ள
வண்ணாத வாதசயம் பித்தசயம் ரெண்டும்
வளமான சிலேட்டுமத்தின் சயமும் போகும்
கண்ணாத கோவெண்ணெய் தன்னிற்கொள்ள
கைகடந்த மேகமது யிருபத்தொன்றும்
அண்ணாத ஆக்கைதனை விட்டுவோடும்
அப்பனே செந்தூர மருமைகாண. 372

காணப்பா நீறிழிவு வலிமேகங்கள்
கண்மணியே நீரெரிவு நீர்ச்சுக்கு
வாணப்பா கல்லடைப்பு சதையடைப்பு
வளமான நீரடைப்பு நீர்ப்பாச்சல்குத்தல்
ஆணப்பா கிரந்தியுடன் புண்கள் சூலை
அரையாப்பு குஷ்டமுடன் குலைநோயெல்லாம்
மாணப்பா மதிமயங்கி யோடிப்போகும்
மகத்தான பிணிநோய்கள் மாண்டுபோமே. 373

அஞ்சு – பஞ்ச – சரக்கின் – சத்துருமித்துரு

போமப்பா அஞ்சுபஞ்ச சரக்கின் சூட்சம்
புகழான சத்துரு மித்துருவைக்கேளு
ஆமப்பா வீரமுடன் கெவுரிலிங்கம்
அப்பனே தாரமுடன் பூரமைந்தும்
நாமப்பா வீரமதை கெவுரிகொல்லும்
நலமான கெவுரியதை பூரங்கொல்லும்
வாமப்பா தாம்பரத்தை வீரங்கொல்லும்
வளமான பூரமதைத் தாரங்கொல்லும் 374

கொல்லுகின்ற லிங்கமதை வீரங்கொல்லுங்
கொடிதான லிங்கமது பூரத்தைக்கொல்லும்
வல்லுகின்ற சரக்கினிட மாராட்டஞ் சொன்னேன்
வளமான மாராட்ட மறிந்துகொள்ளு
அள்ளுகின்ற பிரிதீவு அப்புத்தேய்வு
ஆனதொரு சத்தமுடன் வாய்வுமாகும்
மல்லுகின்ற வைம்பூத மிதுவாம்மைந்தா
மகத்தான பிரிதீவு தாரமாமே 375

ஆமப்பா அப்பதுதான் பூரமாகும்
அப்பனே தேய்வதுதான் வீரமாச்சு
காமப்பா கெவுரியது வாய்வுமாகுங்
கண்மணியே சத்தமது லிங்கமாச்சு
நாமப்பா வைம்பூத சரக்கிது தான்மைந்தா
நலமான சரக்குவழி நன்மையாகும்
வாமப்பா வைம்பூதத் தாலேமைந்தா
வளர்ந்துதடா சத்த சாகரமுமாச்சே. 376

ஆச்சப்பா பிரிதீவு பிரமாவாகும்
ஆனதொரு அப்பதுதான் விஷ்ணுவாகும்
காச்சப்பா தேய்வதுதான் ருத்திரனுமாகுங்
கண்மணியே மயேஸ்பரனும் வாய்வுமாகும்
நாச்சப்பா சதாசிவனும் மைந்தாகேளு
நலமான சத்தமதி லொடுக்கமாகும்
வாச்சாப்பா யின்னூலில் வகையாய்ச் சொன்னேன்
வளமான நூலிதுதான் வண்மையாமே. 377

ஆமப்பா அண்டமென்ற மூளைச்சுண்ணம்
அப்பனே சொல்லுகிறேன் கேளுகேளு
வாமப்பா பற்பிணியாம் பிண்டம்வாங்கி
வளமான கோரையுடன் அண்டம்போக்கி
காமப்பா உள்விந்து மூளை வாங்கு
கண்மணியே விந்தின் மேல் சவ்வைபோக்கி
நாமப்பா கல்வத்திற் போட்டுக்கொண்டு
நலமான விஷச்சுண்ணங் களஞ்சிபோடே. 378

போட்டுமே ஆட்டிடவே நீறாய்ப்போகும்
புகழான சாமம்நா லாட்டினாக்கால்
ஆட்டுமே யிருகியது மெழுகுபோலாம்
அப்பனே வழலைசுண்ணங் களஞ்சிபோடு
நாட்டுமே ஆட்டிவரச் சொல்வேன்மைந்தா
நலமாகச் சாமமஞ்சு ஆட்டுஆட்டு
காட்டுமே கற்போலே யிறுகிப்போகுங்
கண்மணியே வழித்தெடுத்து வில்லைசெய்யே. 379

செய்யவே ரவிதனிலே நவநாள்போடு
செயமாகக் காய்ந்ததுவும் யிறுகிப்போகும்
அய்யவே சீலையைத்தான் னாதத்திற்போடு
அப்பனே நாதசீலை கவசமிட்டு
வையவே அதின்மேலே மண்சீலைசெய்து
வளமாகப் பத்தெருவிற் புடத்தைப்போடு
கையவே ஆறியது தணிந்தபோது
கண்மணியே யெடுத்ததனை உடைத்துப்பாரே. 380

பாரப்பா சுண்ணமதை யென்னசொல்வேன்
பண்பான சுண்ணமடா விந்தின்சுண்ணம்
ஆரப்பா வறிவார்கள் சுண்ணப்போக்கு
அப்பான சிவயோகி யவர்க்கேயெய்தும்
வாரப்பா வாதிகளோ செய்யப்போறார்
வளமாக சுண்ணமிது யார்க்குக்கிட்டும்
நாரப்பா நான்முகவன் அடியிற்பூர்க்கும்
நலமான பூருவத்தை யறிந்துபோற்றே. 381

பூர்வமறிய நாதவிந்து சரக்குகளறிவது

போற்றவே பூருவத்தைக் காணாமல்தான்
புகழான மண்ணெடுத்து அலைவார்மட்டி
ஆற்றவே பூருவந்தான் ரசக்கற்பூரம்
அல்லாட்டால் வேறுண்டோ பூர்வமையா
மாற்றவே பூர்வமுப்பு பூர்வமாகும்
மைந்தனே அண்டடா வீரமாச்சு
வாற்றவே நாதமடா தாரமாச்சு
வளமான கெவுரியது விந்துமாச்சே. 382

ஆச்சென்ற கோரையது லிங்கமாச்சு
அப்பனே பஞ்சசரக் கிதுவேயாச்சு
வாச்சென்ற பிண்டமதில் யெல்லாமாச்சு
வளமான சரக்குகள்தா னிதிலுண்டாச்சு
மாச்சென்ற ஆதியந்த மண்டபிண்டம்
மகத்தான கோசமுடன் பீசமாச்சு
காச்சென்ற ஆதார மிதிலுண்டாச்சு
கண்மணியே வைம்பூத மிதிலுண்டாச்சே. 383

ஆச்சப்பா நல்வினையுந் தீவினையுமாச்சு
அப்பனே தொண்ணூாத்தாரிதிலுண்டாச்சு
மாச்சப்பா அகத்தியனு மிதிலுண்டானான்
மகத்தான நந்தியென்ற சித்தநானேன்
வாச்சப்பா நாதவிந்தால் யெல்லாமானோம்
வளமான சத்தமுடன் சாகரமுமாச்சு
காச்சப்பா ஆண்பெண்ணா லெல்லாமாச்சு
கசடர்கள் தான் தெரியாமல் கலங்குவாரே. 384

வசியம்

பாரப்பா யின்னூல்தான் கலைக்கியானமப்பா
பார்தனிலே கிட்டாது பாருபாரு
ஆரப்பா வறிவார்க ளினுனூல்மார்க்கம்
ஆதியிலே ஊமையெழுத் தறிந்தோன்காண்பான்
வாரப்பா ஊமையது மகாரமாகும்
வளமான யெழுத்திதுதான் வசியமாகும்
மாரப்பா வாதமதால் யென்னவாகும்
மைந்தனே யோகமதைக் காணுகாணே. 385

நூலிருக்குமிடந்தேடுவது

காணப்பா யென்மொழியார் கொடுக்கப்போறார்
கண்டாலுங் காணவில்லை யென்றுசொல்வார்
வாணப்பா யிருந்திடத்தை யேகிமைந்தா
வளமாக அவர்மனது யிணங்கச்செய்து
ஆணப்பா அதிலுந்தான் கொடுக்காவிட்டால்
அப்பனே பொருளீய்ந்து நூலைவாங்கு
மாணப்பா யிதுகளுக்குங் கொடுக்காவிட்டால்
மைந்தனே சரணங்கள் உபசாரஞ்செய்ய. 386

செய்யவே அவர்கேட்ட எல்லாமீய்ந்து
செயலாக அவர்மனது கனிந்துயீய்வார்
வையவே நூல்வாங்கிப் பூசைபண்ணு
வளமான வாசியது யிருந்தால்தூக்கும்
அய்யவே வாசியது யில்லாவிட்டால்
அப்பனே மறுபிறப்பில் சித்தனாவாய்
கையவே நூலீய்ந்தார் சற்குருவாயப்பா
கனகமதாய் வைத்து நீ பூசைபண்ணே. 387

பண்ணவே நூல்கொடுத்தார் தன்னைமைந்தா
பண்பாக மோசமது பண்ணவேண்டாம்
அண்ணவே அவரைத்தான் யேசவேண்டாம்
அப்பனே அவர்மனது நொந்துதென்றால்
வண்ணவே வழியதுதான் தேய்ந்தாப்போலே
வளமாகத் தேய்ந்திய்வாய் நாசமாக
கண்ணவே சாபங்க ளனேகமெய்துங்
கடிதான நெஞ்சமதைக் கருத்தால்கட்டே. 388

கட்டவே மனந்தேறி அறிவிலுண்ணு
கசடற்ற மனதாகக் கருத்தில் பூணு
அட்டவே அரனுமையை யனுதினமுமெண்ணு
அசடர்கள் தன்னிடமதனை யேகவேண்டாம்
மட்டவே மகாரமதை மனதிற்பூணு
மகத்தான சிவயோக வாழ்க்கையெண்ணு
வட்டவே கனகசபை மனதிற்தோணும்
வளமான கைலாசப் பதவியாமே. 389

ஆமப்பா வாதமது செய்வோரையா
அசடர்கள்தான் கூட்டமிட்டு அலைவார்கோடி
காமப்பா கழுதையென்ற பலர்கள்கோடி
கண்தெரியா மட்டிகளாங் கழுதைமாண்பர்
நாமப்பா அவர்களிடஞ் சேரவேண்டாம்
நலமான அறிவுள்ளான் வொருத்தனப்பா
வாமப்பா கற்மிகளோ சேர்க்கவேண்டாம்
வளமான அறிவதனால் பூணுபூணே. 390

கோரைச்சுண்ணமறிய

பூணவே யின்னமொரு வகையைச் சொல்வேன்
பொருளான கோரையுட சுண்ணங்கேளு
ஆணவே கோரையென்ற லிங்கம்வாங்கி
அப்பனே அக்கோரை கொண்டுவந்து
வாணவே பாண்டமதிற் போட்டுக்கொண்டு
வளமான சுத்தசலந் தன்னைவார்த்து
காணவே அடுப்பேற்றித் தீயைமூட்டிக்
கண்மணியே யெண்ணெயது கக்கிப்போமே. 391

போமப்பா கோரையதை யெடுத்துக்கொண்டு
புகழான கல்வத்திற் போட்டுக்கொண்டு
ஆமப்பா சாமமது ரெண்டுமாட்ட
அப்பனே நசைஞ்சதுவுங் கூழாய்ப்போகும்
நாமப்பா வைங்கோல நீராலாட்டி
நலமாக ஆட்டியதை வழித்தெடுத்து
காமப்பா வில்லையது செய்துக்கொண்டு
கண்மணியே ரவிதனியே காயப்போடே. 392

போடப்பா மண்சீலை செய்துக்கொண்டு
புகழாக ஊசிகொண்டு கதிற்போல்குத்தி
வாடப்பா காயவைத்துயெடுத்துக்கொண்டு
வளமான சாவலென்ற புடத்திற்போடு
ஆமப்பா ஆறினபின் னெடுத்துப்பாரு
அப்பனே திருநீறு போலாமைந்தா
காடப்பா யந்நீறைத் தெளித்துப்பாரு
கசகசென்று பொங்கியது தூளாய்ப்போமே. 393

போமப்பா தூளிதம்போ லாகும்பாரு
பொருளான சுண்ணமடா அறிந்துபாரு
ஆமப்பா யிச்சுண்ணம் ஆர்தான்காண்பார்
அப்பனே கண்டவர்க்கு மோட்சமெய்தும்
நாமப்பா வேதமென்றால் பிரதானமிந்நூல்
நாடதிலே கிட்டாது கலைக்கியானமப்பா
காமப்பா யிந்நூலைக் குகையில் வைத்து
கண்ணாடி முகம்போலே பூசைபண்ணே. 394

பண்ணவே சுண்ணமதை யெடுத்துக்கொண்டு
பாங்காக வுன்னிடத்தில் வைத்துப்போற்று
அண்ணவே கோரைலிங்கச் சுண்ணமைந்தா
அப்பனே யிச்சுண்ணம் நன்றாய்ச் சொன்னேன்
வண்ணவே வாதத்துக் காதி மூலம்
வளமான ஞானமதுக் காதிமூலம்
கண்ணவே லிங்கயோ காதித்துக்குக்
கண்மணியே யிதுசுறுக்குக் கண்டுகொள்ளே. 395

வாலைமூலம்

கொள்ளவே வாலையுட மூலங்கேளு
கொடிதான ஓம்ஸ்ரீம்கிலி யென்றேசொல்லு
விள்ளவே வம்ரீயு மென்றுசொல்லு
விளங்கவே யுன்னிடத்திற் குடியிருப்பான்
அள்ளவே அனுதினமும் உன்பங்கில் நிற்பாள்
அப்பனே அவளைநிதந் தொழுதுபோற்று
கள்ளவே யில்லாத வாலைத்தாயார்
கசடரிடஞ் சொல்லாள்காண் கண்டுகொள்ளே. 396

வாலைச்சக்கரம்

கொள்ளவே யென்மகனே தர்மபுத்திரா
கொடிதான தேவியவள் சக்கரந்தான்கேளு
அள்ளடா ஐங்கோண மிட்டுக்கொண்டு
அப்பனே அதின்மேலோர் வட்டமிட்டு
வள்ளடா வட்டமது நடுவிருக்க
வளமான அறுகோண மேலேபோடு
மள்ளடா அதின்மேலே யிருவட்டமிட்டு
மைந்தனே சூலங்கள் நாலுமுகமாய்ப்போடே. 397

போடவே நால்வாச லிட்டுக்கொண்டு
புகழான வாசல்முனை சூலம்போடு
ஆடவே அறைகளிலே யெழுத்தைச் சொல்வேன்
அப்பனே ஐங்கோணம் அம் உம்மென்று
வாடவே நடுவினிலே முக்கோணமிட்டு
வளமான இம்மென்று அதிலேமாட்டு
கூடவே ஐங்கோண யெழுத்தைச் சொல்வேன்
கணக்காக ஓம்ஸ்ரீம் கங்கென்றே. 398

யென்றதொரு யிவ்வெழுத்தைக் கோணத்தில்மாட்டு
யென்மகனே நடுவீட்டில் ஆம்மென்றுபோடு
வன்றதொரு யிருவட்டம் தன்னிலையாக
வளமான லானலூ வென்றிபோடு
அன்றதொரு வாசலிலே சொல்வேன்கேளு
அப்பனே கிழக்கினிலே வீரபத்திரன்
நன்றதொரு மேற்கினிலே கணேசன்வைநீ
நலமான வடக்கினிலே வைரவன்றானே. 399

தானான யீசான்னியம் பத்திரகாளி
தாக்கான தீமூலை மசானருத்திரன்
வேனான கன்னிதனில் அனுமன்மைந்தா
விளங்கியதோர் வாய்வுமூலை சாத்தானப்பா
கானான யெட்டுதிக்குங் காவல்வைத்து
கண்மணியே நடுவீட்டில் தேவிதானும்
மானான மாதுமையாள மர்ந்திருப்பாள்பாரு
மைந்தனே சக்கரக்தை வைத்துப்பூசே. 400

பூசவே சகலபாக் கியங்களீவாள்
பொன்னுமையா ளிவளிருந்தால் வாதஞ்சித்தி
ஆசவே ஆசானா யிருந்துசொல்வாள்
அசடர்கண்ணில் தேவியுமை யகப்படாள்பார்
காசவே காசாங்க யோகதெண்டு
கண்மணியே லங்கோடு மிவள்முத்திரைதானாகும்
மாகவே சித்தருக்குத் தாயாய்நின்ற
வாதியந்த மானதொரு தேவியாமே. 401

அயச்செம்பு

ஆமப்பா அயச்செம்பு சொல்வேன்மைந்தா
அப்பனே அயமதனைக் கொண்டுவந்து
வாமப்பா வழலையென்ற மெழுகைக்கொண்டு
வளமான அயத்தின்மேல் கவசஞ்செய்து
காமப்பா யென்மகனே சொல்வேன்கேளு
கண்மணியே மண்ணதனால் சீலைசெய்து
நாமப்பா சாவலென்ற புடத்திற்போடு
நலமாக உருகியது அயச்செம்பாச்சே. 402

ஆச்சப்பா ஆறினபின் னெடுத்துப்பாரு
ஆனதொரு ஆயச்செம்மை யென்னசொல்வேன்
வாச்சப்பா தன்வந்திரி யென்னைப்போல் நன்றாய்
வளமாக ஆர்சொல்வார் வளமைகாணு
நச்சடா உலகிலுள்ள வாதிகட்கு
நலமாகச் சொல்லிவிட்டேன றிந்துகொள்ளு
காச்சடா கண்காட்சி யிந்நூல்மைந்தா
கண்டவர்க்கு மேட்சமடா கருத்திலெண்ணே. 403

எண்ணவே அயச்செம்பை யெடுத்துக்கொண்டு
யென்மகனே தேவிமுன்னே யிதனைவைத்து
வண்ணவே பால்பழங்கள் வஸ்துசுத்தி
வளமாக தூபதீபஞ் செய்துக்கொண்டு
அண்ணவே நைவேத்தியஞ் சாஷ்டாங்கஞ்செய்து
அப்பனே தோத்தரித்து வேண்டிக்கொண்டு
அண்ணவே தேவிக்கிவானம் பண்ணி
மைந்தனே அயச்செம்பை யெடுத்துக்கொள்ளே. 404

அயச்செந்தூரம்

கொள்ளவே அயச்செம்பில் செந்தூரஞ்சொல்வேன்
கொடிதான அயச்செம்பைக் கொண்டுவந்து
விள்ளவே நவகார மெழுகைக்கொண்டு
விதமான சிங்கியென்ற சரக்குங்கூட்டி
அள்ளவே கல்வத்திற் போட்டுக்கொண்டு
அப்பனே சாமமது ஆட்டிக்கொண்டு
மள்ளவே அயச்செம்பின் மேலேபூசி
மைந்தனே அஞ்செருவிற் புடத்தைப்போடே 405

போடவே களங்காகி வெட்டையாகும்
புகழான வெட்டைதனை யெடுத்துக்கொண்டு
ஆடவே கல்வமதிற் போட்டுக்கொண்டு
அப்பனே உடைத்ததனைத் தூளாய்ப்பண்ணி
வாடவே வேண்டாங்காண் சொல்வேன்மைந்தா
வளமான வைங்கோலத் தைலத்தாட்டு
நாடவே அண்டநாதன் னாலாட்டு
நலமாக ஆட்டிவரச் சொல்லக்கேளே 406

கேளப்பா மெழுகாகும் வழித்தெடுத்துக்
கெடியான வில்லையதாய் செய்துகொண்டு
நாளப்பா ரவிதனிலே காயப்போடு
நலமாக அஞ்சுநாள் காயவைத்து
வாளப்பா காய்ந்தபின்பு யெடுத்துக்கொண்டு
வளமாகச் சீலையது யேழுஞ்செய்து
ஆளப்பா முழப்புடத்திற் போடுபோடு
அப்பனே நீறியது செந்தூரமாமே. 407

ஆமப்பா ஆறினபின் னெடுத்துப்பாரு
அரகரா செந்தூர மென்ன சொல்வேன்
வாமப்பா செந்தூர மார்தான் காண்பார்
வையகத்து மாண்பர்களோ காணப்போறார்
நாமப்பா செந்தூரங் கொண்டுவிட்டால்
நால்யுகமும் பராபரமாய் நலமாய் நிற்பார்
காரப்பா கனகமென்ற வாதத்துக்குக்
கைக்குந்த செந்தூரங் கண்டுபாரே. 408

அயச்செம்பு சுண்ணம்

பாரப்பா அயச்செம்பு சுண்ணஞ் சொல்வேன்.
பார்தனிலே யாரறிவார் அயச்செம்பைத்தான்
ஆரப்பா யறிவார் அயச்செம்பு சுண்ணம்
அப்பனே அயச்செம்பு சுண்ணங்கேளு
வாரப்பா அயச்செம்பு களங்கெடுத்து
வளமான கல்வமதிற் போட்டுக்கொண்டு
காரப்பா கனகமென்ற வழலைச்சுண்ணங்கேளு
கண்மணியே கழஞ்சியதிற் கூடப்போடே. 409

போடப்பா வைங்கோல நீராலாட்டு
புகழாக அதின்பிறகு காமநீரால்
வாடப்பா ஆதியென்ற அண்டநீரால்
வளமாகச் சாமமது ஆட்டிக்கொண்டு
ஆடப்பா ஆட்டிவர மெழுகுபோலாம்
அப்பனே வழித்தெடுத்துச் சொல்லக்கேளு
நாடப்பா வில்லையது செய்துக்கொண்டு
நலமான ரவிதனிலே காயவையே 410

வையடா சீலையது யேழுஞ்செய்து
வளமான புடந்தனிலே போடுபோடு
ஐயடா அய்யமில்லச் சுண்ணாம்பாகும்
அப்பனே ஆறினபின் னெடுத்துப்பாரு
நையடா சுண்ணமிது யென்னசொல்வேன்
நலமான சுண்ணமதை சிமிழில்வைத்து
கையடா கனகசபை தேவிமுன்னே
கண்மணியே சுண்ணமிதை வைத்துப்போற்றே. 411

போற்றவே சாஷ்டாங்கஞ் சரணஞ்செய்து
புகழாகத் தேவிக்கி வுபசாரம் பண்ணி
ஆற்றவே நான்முகனைப் பணிந்துபோற்று
அப்பனே சுண்ணத்தை யார்தான் காண்பார்
வாற்றவே வைரவற்குப் பூசைபண்ணு
வளமான சுண்ணாம்பை யெடுத்துக்கொண்டு
மாற்றவே வாதமதுக் கொடுத்துஆடு
மகத்தான வேதையதிற் கோடியாமே. 412

நோய்தீர்க்குஞ்சித்து

ஆமப்பா சித்துவிளையாடச் சொல்வேன்
அன்பான தன்வந்திரி கேளுகேளு
நாமப்பா நோய்தீர்க்குஞ் சித்துசொல்வேன்
நலமான கிராணமதிற் அயத்தைக்கொண்டு
வாமப்பா காச்சியதை விந்தில்தோய்த்து
வளமாக யெடுத்துஅதை மாத்திரைக்கோல்பண்ணி
காமப்பா வழலையென்ற மெழுகெடுத்துக்
கண்மணியே கோல்தனிலே கட்டுப்போடே 413

போடவே பதினேழு கணுவதாகப்
போட்டு அதை வைரவன்முன் வைத்துக்கொண்டு
ஆடவே வைரவரைத் தோத்திரம்பண்ணி
அப்பனே கோலெடுத்து ஆடக்கேளு
வாடவே வேண்டாங்காண் மனிதருக்கு
வளமான ஆனைக்கால் கண்டுதானால்
நாடவே ஒங்கிலிங் கென்றோர்க்கு
நலமாக யேழுநாள் தன்னிற்போமே. 414

போமப்பா சுளுக்குகளும் மேகக்கட்டி
பேரான சூலைகட்டி யிதுகளெல்லாம்
ஆமப்பா அரைநொடியில் கழண்டுபோகும்
ஆதியென்ற வழலைமுப்பு வறிந்துகேளு
வாமப்பா வைப்பெடுக்கச் சித்துகேளு
வளமான அண்டமெழு கெடுத்துக்கொண்டு
நாமப்பா அண்டோட்டில் போட்டுக் கொண்டு
நலமாகக் கரிக்கியதை யெடுத்துக்கொள்ளே. 415

வைப்பெடுக்கச் சித்து

கொள்ளவே வைங்கோலத் தைலத்தாலே
கொடிதாக மத்தித்து சிமிழில் வைத்து
அள்ளவே தேவிமுன்னே வைத்துப்போற்று
அப்பனே பூசைசெய் தெடுத்துக்கொண்டு
வள்ளவே கைதனிலே போட்டுக்கொண்டு
வளமாகப் பார்த்திடவே சூனியங்கள்
மள்ளவே வைப்புடனே பூதப்பிரேதம்
மகத்தான யேவல்களுந் தோன்றுந்தானே. 416

சாத்தான் சித்து

தானான யெதிரியுட தொழிலைக்கேளு
தண்மையுடன் யெடுத்துமவர் முன்னேபோடு
வேனான விருதுகட்டி மாந்தரீகஞ் செய்நீ
விளங்கியதோர் தொழில்களெல்லாம் நீதான்ஆடு
ஆனான சாத்துனுட சித்து சொல்வேன்
அன்பான வழலைமெழு கெடுத்துக் கொண்டு
கானான சாத்தான்போல் வுருவெடுத்து
கண்மணியே சாத்தான் தான் மூலங்கேளே. 417

கேளப்பா கங்சங்லம் வம்மென்று
கெடிதான மூலமதை மண்டலத்தில்
வாளப்பா லட்சமுர மாட்டுமாட்டு
வளமான பதுமைவைத்து புஷ்பபரிமளங்கள் சாத்தி
ஆளப்பா பால்பழங்கள் நைவேத்தியம்பண்ணி
அப்பனே தூபதீபங் காட்டுவாய்நீ
நாளப்பா க்ஷணத்திலவர் வசியமாவார்
நலமான குட்டிச்சாத்தான் நன்மை பாரே. 418

பாரப்பா யிவராலே தொழிலைச் சொல்வேன்
பண்பான யுனக்கெதிரி தனைநினைத்து
ஆரப்பா பதுமையைத் தானுச்சரித்து
அப்பனே போவென்றால் போகும் பாரு
நாரப்பா அன்னமதில் மண்ணுங்கல்லும்
நலமான மலமுடனே மயிரும்போகும்
வாரப்பா நாள்தோறும் மிவ்விதமாய்ச் செய்யும்
வளமான யேவலடா யிதனைப்பாரே. 419

பாரென்ற யில்லமதி ல்கல்போடேன்றால்
பண்பான கல்லெடுத்து நாள்தோறும் போடும்
ஆரென்ற அருமையுள்ள சித்திதுதான் மைந்தா
அப்பனே யிச்சித்தைப் பாருபாரு
வாரென்ற யேவலைத்தான் தீர்க்குஞ்சித்து
வளமான யேவலைத்தான் சொல்வேன்கேளு
நாரென்ற பதுமையதனை யெடுத்துவைத்து
நலமான சாத்தான்தன் பூசைசெய்யே. 420

மாடன் யேவல் சித்து

செய்யவே அவர் தனக்கு மனங்குளிரச் செய்து
செம்மையுடன் யிதுவெல்லாந் தம்பனமாக்கென்று
அய்வே அவர்தன்னை வேண்டிக்கொள்ளு
அப்பனே அட்சணத்தில் செம்மையாகும்
வையவே யேவலது தீர்க்குஞ்சித்து
வளமாக சொல்லிவிட்டேன் வண்மைபாரு
கையவே மாடனுடன் யேவல்சித்துக்
கண்மணியே சொல்லுகிறேன் கருத்தாய்க்கேளே. 421

கேளப்பா அங்நங்சிவா யசிங்கென்று
கெடியான லட்சமுறு மாட்டிக்கொண்டு
ஆளப்பா மாடனவன் வசியமாவான்
அப்பனே வைங்காயப் பாவைப் பண்ணி
நாளப்பா புஷ்பபரி மளங்கள் சாத்தி
நலமாகப் பூசித்து சாஷ்டாங்கம் பண்ணி
வாளப்பா அரவத்தின் விஷப்பல் கொண்டு
வளமாகக் கண்மூக்குச் செவிவாய்நாலே. 422

நாலான யெதிரியவன் பேரெழுதிக்கொண்டு
நலமான பூர்வமுப்பை நாலிடத்தில் தொட்டு
வாலான விஷப்பல்லை அவ்விடத்திற்குத்தி
வளமான யிப்பாவை மயானத்திற்றான்
ஆலான மண்தோண்டி யதிலேவைத்து
அப்பனே புதைத்துவை யெதிரியைத்தான்
மாலான மதிமயங்கி கண்ணொளியும் பாரு
மகத்தான கால்குடைச்சல் கைகுடைச்சலாமே. 423

தீர்க்கும் விதம்

ஆமப்பா அனுதினமும் மாடனையா
அப்பனே யெரித்திடுவான் யெதிரியைத்தான்
வாமப்பா யிதுதீர்க்குஞ் சித்துசொல்வேன்
வளமாக தீர்ப்பதற்கு வகையைச் சொல்வேன்
நாமப்பா அப்பாவை யெடுத்து வந்து
நலமான பூசைநை வேத்தியம் பண்ணி
காமப்பா சுத்தசலந் தன்னிற் கழுவிப் போட்டுக்
கண்மணியே அப்பல்லைப் பிடிங்கிப்போடே. 424

போடவே ஒடுகிற தண்ணீர் தன்னிற்
புகழான பல்லெடுத்துக் கழுவிப்போட்டு
ஆடவே யெதிரிக்கு நோயெல்லாம் போகும்
அப்பனே கண்ணதுதான் பளிச்சென்றுகாணும்
வாடவே யிச்சித்து மகத்தான சித்து
வளமான சித்திதுவை யார்தான் காண்பார்
நாடவே நந்தினான் கண்டுணர்ந்தோம்
நலமான அறிவதனாற் கண்டோம் நாமே. 425

வினோத சித்து ரூபமாறல்

நாமப்பா யின்னமொரு சேதி சொல்வேன்
நலமான வினோதத்தின் சித்து சொல்வேன்
ஆமப்பா கொட்டைப்பாக் கஞ்செடுத்து
அப்பனே நவகார மெழுகைப் பூசி
காமப்பா திருகுகள்ளி மரத்தைத் தோண்டிக்
கண்மணியே பாக்கடைத்துத் தருமம் போட்டு
வாமப்பா நவநாள் சென் றெடுத்துக் கொண்டு
வளமாக உனக்காக ஸ்ரீகளுக்கே. 426

யெக்கனவே யிப்பாக்கைத் தரித்துக்கொண்டு
யென்மகனே வெற்றிலையில் கொடுத்துப்பாரு
வக்கெனவே பெண்ரூப மாறிப் போகும்
வளமாக ஆண்ரூப மாகுமையா
மக்கெனவே நாளுக்குநள் தேய்ந்து போவாள்
மகத்தான சித்திதுதான் மருவிப்பாரு
அக்கெனவே ஆகாத பெண்டீர்கட்கு
அப்பனே செய்திடுவாய் செகத்தோர்க்காகா. 427

ரூபமுண்டாக்க

ஆகாத பெண்டீர்க்குச் சித்திசொன்னேன்
அப்பனே இது தீர்க்குஞ் சித்திகேளு
வாகாத சுத்தசலந் தன்னிலையா
வளமான விஷச்சுண்ணம் போட்டுக்கொண்டு
மாகாதா பெண்டீர்க்கு மூன்றுநாள்தான்
மைந்தனே அவள்முன்னே மந்திரம் பண்ணி
நாகாத மூன்றுநாள் உள்ளுக்கீய்ந்தால்
நலமான ஆண்ரூபம் மறைந்துபோமே. 428

வாய்க்கொழுப்பு அடக்குஞ்சித்து

போமப்பா கழிப்பதுதான் பிலமாப்போடு
பேரான அவள் பீடை விடுதலாச்சு
வாமப்பா வாய்க்கொழுப்புப் பிடித்தஸ்திரீகள்
வளமான அவள்கொழுப்பை யடக்கக்கேளு
நாமப்பா கடுங்கார செயநீரில்தான்
நவகார சுண்ணமதைக் குழைத்துக்கொண்டு
காமப்பா தாம்பூலந் தன்னிலையா
கண்மணியே தடவியவள் கையிலீயே. 429

ஈயவோர் தனிப்பெரும் பாடுபோலே
யேகஉபத் திரவமதாய் வெள்ளமாகும்
வையவே யெட்டுநாட் குள்ளேமைந்தா
வளமாகத் தீர்க்காவிட்டால் மாண்டுபோவாள்
கையவே வாய்க்கொழுப்பு மாண்டுபோகுங்
கண்மணியே சரணமென்று காலில்வீழ்வாள்
ஐயவே யிச்சித்துத் தீர்க்குஞ்சித்து
அப்பனே சொல்லுகிற னறிவாய்க் கேளே. 430

சித்துதீர

கேளப்பா மதியுப்பு மெழுகெடுத்து
கெடியான கோவெண்ணெய தனிற்குழைத்து
ஆளப்பா அவள்தனக்கு பெரும்போக்குசுத்தி
அப்பனே மெழுகெடுத்து கருவொன்றீய்வாய்
வாளப்பா மூன்றுநாளந்தி சந்தி
வளமாகக் கொள்ளென்று சொல்லிப்போடு
நாளப்பா கொண்டவுடன் பிணியெல்லாந்தான்
நலமாக அட்செணத்தி லோடிப்போமே. 431

போமப்பா யிச்சித்து யார்க்குச் செய்வாய்
போதமில்லா கற்மியென்ற ஸ்ரீகளுக்கு
ஆமப்பா அவர்களுக்குச் செய்தாயானால்
அசடான கற்மமது வுன்னைச்சேராது
வாமப்பா யோகியென்றா லிதுகளாகா
வளமான மந்திரவாதிக் காகுமையா
நாமப்பா வெனைப்போலே யார்தான் சொல்வார்
நலமான யிந்நூல்தான் கிடையாதென்றே 432

என்றதொரு மித்தனையு மந்திரவாதி
யென்மகனே செய்துகொண்டு பிழைத்துப்போநீ
அன்றதொரு அன்பான தற்மபுத்திரர்
அப்பனே அறிவதனாற் செய்துக்கொண்டு
வன்றதொரு குருக்களைத்தான் முடித்துக்கொண்டு
வளமான நிட்டையதை முடித்துக்கொண்டு
மன்றதொரு சித்துகள்தான் வேடிக்கையாகும்
மகத்தான கண்புதுமை கண்டுகொள்ளே. 433

உலகமெல்லாம் பிரமை கொள்ளச்சித்து

கொள்ளவே வுலகமெல்லாம் பிரமைகொள்ள
கொடிதான சித்துவகைச் சொல்வேனையா
விள்ளவே யெட்டிப்பழங் கருஊமத்தங்காய்
விளங்கியதோர் கரிநாபி திகைப்பூடோடு
அள்ளவே அழுகண்ணி தொழுகண்ணிவேர்
அப்பனே யிதுவெல்லாங் குழித்தைலம் வாங்கி
மள்ளவே பூருவந்தான் கழஞ்சிபோட்டு
மைந்தனே சிமிழ்தனிலே வைத்துப்போற்றே. 434

போற்றவே சிமிழெடுத்துச் சொல்லக்கேளு
புகழான தெருவேகி வீடுதோறும்
ஆற்றவே பொட்டையிடு மதிகாலத்தில்
அப்பனே யெழுந்திருப்பார் வெடியும்போது
வாற்றவே கருவினுட வாடைப்பட்டு
வளமாக மயங்கிடுவார் பித்துக்கொண்டு
மாற்றவே புருஷருடன் ஸ்ரீகளுத்தான்
மதிமயங்கிச் சுறணைகெட்டுத் தலைகீழாமே. 435

ஆமப்பா அதிசயத்தைப் பாருபாரு
அப்பனே அட்சணத்தில் தெளிந்துபோகும்
வாமப்பா யிச்சித்து புதுமைமெத்த
வளமான சித்துதனைக் காணுகாணு
நாமப்பா அறிந்துகொண்டு உனக்குச் சொன்னோம்.
நலமான சித்துதான் நன்மைபாரு
காமப்பா யென்னூலைப் பாருபாரு
கண்மணியே சகலகரு கண்ணிற்காணே. 436

உலகில் பெண்கள் மயங்க சித்து

காணப்பா வுலகிலுள்ள பெண்களெல்லாம்
கண்மணியே மதிமயங்கச் சித்துசொல்வேன்
வாணப்பா திகைப்பூடு வைங்காயங்கூட்டி
வளமான கல்வமதற்போட்டுக்கொண்டு
ஆணப்பா சிவமுப்பு சத்திமுப்பு
அப்பனே பூர்வமுப்பு மூன்றும்போட்டு
மாணப்பா தூள்பண்ணி சொல்லக்கேளு
மைந்தனே கஸ்தூரிப் புனுகுபூரம். 437

பூரமென்ற சவ்வாது சந்தனமுஞ்சட்டி
புகழான மரமஞ்சள் மரிக்கொழுந்து
ஆரமென்ற விலாமிச்சும் வெட்டிவேரும்
அப்பனே யிதுவெல்லாம் வாசங்கட்டி
வாரமென்ற நவநாள்சென் றெடுத்துப்பாரு
வளமான வாடையடா வாமவாடை
நாரமென்ற வாடையைத்தான் சிமிழில்வைத்து
நலமான தேவிமுன்னே வைத்துப்போற்றே. 438

போற்றவே சோடசமாய் நிருவாணமாகப்
புகழான தேவிக்கும் வாமபூசை
ஆக்கவே பூசைபண்ணி யெடுத்துக்கொண்டு
அப்பனே பணவிடை தானெடுத்துக் கொண்டு
காற்றவே காமநீர் வார்த்திழைத்துக்
கண்மணியே லாடமதிற் பொட்டுமிட்டு
மாற்றவே சேறெனைமார் தன்னிற்பூசி
மைந்தனே தெருவீதி நடந்துப்போவே. 439

போகவே உன்முகத்தைப் பார்த்த பெண்கள்
பொங்கியவள் மனமயங்கி நடப்பாள்மைந்தா
காகவே தெருவிலுள்ள பெண்களெல்லாங்
கலக்கமது வந்தாப்போல் வருவாரையா
ஆகவே நீ நடப்பாய் யிருகாதந்தான்
அப்பனே உன்பிறகே வருவார்நன்னி
நாகவே யவர்களிடம் பொருள்புரிந்து
நலமான பெண்களைத்தான் போபோவென்னே 440

என்னவே தொண்ணூற்றார் நாழிநிற்கும்
யென்மகனே அதின்பிறகு தெளிந்துபோகும்
கண்ணவே கன்னிகள்தான் பிரண்டழுவார்
காடதிலே வந்தோமென்று கலங்குவார்கள்
வன்னவே பிரண்டழுது வோடிப்போவார்
வளமான புதுமையிது வண்மையாரும்
மன்னவே யிதுபுதுமை அதிசெயமாமையா
மைந்தனே யிதுபுதுமை செய்துகாணே. 441

ஸ்ரீஉச்சாடணச்சத்து

காணப்பா ஸ்ரீகளுக்கு உச்சாடணசித்து சொல்வேன்
கண்மணியே அமுக்குறான்தான் தனித்துநின்றால்
வாணப்பா ஓம்வம்சிம் சீசீயென்று
வளமாக லெட்சமுறு காப்பணிந்துமாட்டு
ஆணப்பா அம்மூலி சாபம்போக்கி
அப்பனே அதின்பிறகு கோழியாடு
மாணப்பா பொங்கலுடன் தூபதீபம்
மைந்தனே காட்டியதின் வடக்குவேரே. 442

வேரான அவ்வேரை வாங்கிக்கொண்டு
விளங்கியதோர் தாம்பரந்தான் காப்படிந்து
ஆறான வழலைமெழுகு வேரிற்பூசி
அப்பனே வேரைத்தான் காப்பிலடைத்துக்கொண்டு
காரான கார்முகனைத் தோத்தரித்துக்
கண்மணியே அக்காப்பை யெடுத்துக்கொண்டு
நாரான வலதுகையிற் போட்டுக்கொண்டு
நலமான திகைப்பூடை லாடத்திற்பூசே. 443

பூசவே வீதிதனில் நடக்கும்பெண்கள்
புகழான பெண்களைநீ கண்டபோது
ஆகவே அவர்களைத்தான் உருட்டிப்பார்த்து
அப்பனே காம்பைநீ மேலேதூக்கு
வாசவே யென்னசொல்வேன் மக்காள்மக்காள்
வளமான அவளாடை மேலேதூக்கும்
நாசவே மறுபடியும் பிடித்திட்டாலும்
நலமான சுழல்காத்தா லெழும்பிப்போமே. 444

போமப்பா யிச்சித்து வேடிக்கைமெத்த
புகழான சித்திதுதான் பாவமையா
ஆமப்பா சித்திதுவை யார்தான்காண்பார்
அவனிதனிற் ஆயிரத்தில் வருத்தன்காண்பான்
நாமப்பா சொல்லிவிட்டோம் அறிவுள்ளோர்க்கு
நலமான அவன்நன்மை தன்னாலெய்துங்
காமப்பா யிச்சித்தைப் போலேயுண்டோ
கண்காட்சி வேடிக்கை மனிதருக்கே. 445

தம்பனசித்து

நூக்கான தம்பனத்தின் சித்து சொல்வேன்
நுணுக்கமடா தம்பனத்தைப் போலேயுண்டோ
ஆக்கான ஆதித்த வாரம்நாளில்
அப்பனே சூரியென்ற னத்தைச்சூரி
வாக்கான கன்னிநூல் காப்பணிந்து
வளமான ருத்திரரைத் தியானம்பண்ணி
மாக்கான வேரதனைப் பிடுங்கிக் கொண்டு
மைந்தனே வைங்கோலந் தன்னிற்போடே. 446

போடனே நவநாள்சென் றெடுத்துக்கொண்டு
புகழான பூர்வமுப்பை அதின்மேற்பூசி
ஆடவே பஞ்சலோகந் தன்னால்மைந்தா
அப்பனே குளிசமதாய்ச் செய்துகொண்டு
வாடவே குளிசமிதிற் பொதிந்துக்கொண்டு
வளமான தேவிக்குப் பூசைபண்ணி
காடவே காரடங்கள் செய்யும்போது
கண்மணியே குளிசமதை யெடுத்துக்கொள்ளே. 447

குழந்தையைக் கத்தி கொண்டு வீசுகிறது

கொள்ளவே சிறுகுழந்தைப் பாலனுக்குக்
கொடிதான வேஷமதாய்ச் செய்துகொண்டு
விள்ளவே குளிசமதை அதின்சிரசிற்கட்டி
விளங்கியதோர் வீசுகிற கத்தி கொண்டு
அள்ளவே அனைவோரும் வேடிக்கைப் பார்ப்பார்
அய்யையோ பாலனைத்தான் வெட்டுகிறனென்று சொல்லு
மள்ளவே யிதுயேதுப் புதுமையென்பார்
மைந்தனைத்தான் வெட்டுகிற பாவியுண்டோ. 448

உண்டான வுலகமெல்லாம் பார்க்கமைந்தா
உத்தமனே கத்திக்கொண்டு வீசுவீசு
கண்டான உலகத்தோர் பார்த்துமைந்தா
கண்கலங்கி அழுதிடுவார்க் கண்ணீராக
வண்டான பாலன்மேல் உதிரந்தோன்றும்
வையகத்து மாண்பருக்கு வனாகதோணாமற்
மன்றான பாலனவர்க் கொன்றுமில்லை
மகத்தான மாண்பர்களுங் கண்கெட்டு மயங்குவாரே. 449

வாரான வெட்டினபின் சொல்லக்கேளு
வளமான சீலைதனை யெடுத்துமூடு
காரான யெழுந்திருக்கப் பண்ணுவேனென்று
கண்மணியே மாண்பருக்குச் சொல்லுசொல்லு
நாரான அடாதம்பி யென்றுகூவு
நலமாக அவனுக்குச் சொல்லிவைநீ
மாரான கூவினபின் மைந்தன்தானும்
மகன்தானும் யேனையா வென்பான்பாரே. 450

பாரப்பா உலகோர்க்குப் புதுமைமெத்த
பண்பான சித்தனிவ னெவனோவென்பார்
ஆரப்பா அதின்பிறகுக் கூவுகூவு
அப்பனே கொக்கரித்து யெழும்புவான்பார்
வாரப்பா வையகத்தோர்க் கெல்லாமைந்தா
வளமாக அதிசெயிப்பார் வண்மையாக
நாரப்பா யெனைப்போலே ஆர்தான் சொல்வார்
நலமாகச் சொல்வார்கள் சித்தர்கானே. 451

தானான யென்னுடைய நூலைமைந்தா
　　தனதாகப் பழித்தோர்கள் நாசமாவார்
வேறான விதிவிதமாய்ப் பிரித்துச்சொன்னேன்
　　விளங்கியதோ ரிந்நூலை விபரமாக
மானான மதனையே வொருமைசெய்து
　　மைந்தனே சோதித்தோர்க் கெல்லாஞ்சித்தி
கானான கபடுடனே சூதும்பொய்யுங்
　　களங்கமறச் செய்தோர்க்கு யெல்லாமாமே. 452

மயேந்திரசித்து

ஆமப்பா மயேந்திரத்தின் சித்துசொல்வேன்
　　அப்பனே யேமகுடி குழைதாசன்பாம்பு
வாமப்பா சுருட்டையுடன் மலையன்சாரை
　　வளமான நீர்க்குத்தித் தண்ணீர்ப்பாம்பு
நாமப்பா கருந்தேளுஞ் செந்தேளுமையா
　　நலமான நண்டுக்கால்க் கருநாகந்தான்
காமப்பா யிதுவெல்லாங் கொண்டுவந்து
　　கண்மணியே பெரும்பாண்டந் தன்னிலிட்டே. 453

இட்டுமே பெரும்பாண்டந் தன்னிலிட்டு
　　யியல்பான குழித்தைலந் தன்னைவாங்கி
நட்டுமே சீசாவில் வைத்துக்கொண்டு
　　நலமான தேவிக்குப் பூசைசெய்நீ
கட்டுமே வைங்கோலத் தைலம்வார்த்து
　　கண்மணியே பூர்வமுப்பு கழஞ்சிபோட்டு
மட்டுமே தைலத்தை ரவிதனிலே நவநாள்வைத்து
　　மைந்தனே காயவைத்து யெடுத்துக்கொள்ளே. 454

கொள்ளவே பெரும்பாதைத் தன்னிலேகிக்
　　கொடிதான கம்பிளியை விரித்துப்போர்த்து
அள்ளவே சுழலப்பை யதனிற்சீசா
　　அதிற்தொட்டு மண்ணெடுத்து முன்னேபோடு
நள்ளவே முன்னெடுத்த சீவனெல்லாம்
　　நலமாக அவர்கண்ணில் தோற்றுமைந்தா
மள்ளவே மாண்பருக்குப் பாம்புதேளும்
　　மைந்தனே தோற்றிடவே வோடுவாரே. 455

ஓடவே காரடங்கள் செய்வேனென்று
உருவான பாம்பெடுத்து முன்னேபோட்டால்
காடவே ஓடிடுவார் மனிதரெல்லாங்
கண்காட்சி வேடிக்கை யென்றுசொல்லு
வாடவே வேண்டாங்காண் மனிதரெல்லாம்
வாவாவா வென்றுசொல்லி அழைத்துக்கொள்ளு
நாடவே காயத்தைலந் தொட்டுக்கொண்டு
நலமான மண்ணையள்ளிப் போடுபோடே. 456

போடடா யென்மகனே பாம்பெல்லாந்தான்
போதமது வொண்ணுமில்லாப் போகும்பாரு
ஆடடா அதுகண்டு அதிசெயமாய்ப் பாரப்பா
அப்பனே அதுகண்டு தொழிலைச்செய்நீ
வாடடா கூந்தற்பனை ஒலைகொண்டு
வளமான ஒலைதனிற் றைலந்தொட்டு
நாடடா அவர்கள் முன்னே போட்டாயானால்
நலமான புடலங்கா யாகும்பாரே. 457

பாரடா அக்கருவைத் துடைத்துப்போடு
பண்பான ஒலையதாய்ப் போகும்பாரு
ஆரடா வெகுகோடி அதிசயமுமாக
ஆனதொரு தந்திரத்தா லெல்லாமாச்சு
வாரடா பேய்க்கரும்பிற் தடவிப்போடு
வளமான செங்கரும்பாம் முன்னேபோடு
நாரடா வொடித்தவர் தின்பார்பாரு
நலமாகத் தித்திக்கு மென்று சொல்வார்பாரே. 458

ஸ்ரீகள் வசியசித்து

பாரப்பா பெண்டீர்கள் வசியசித்து
பண்பான சித்துமுறை சொல்லக்கேளு
ஆரப்பா அறிவார்கள் வல்லூர்க் குருவிதன்னை
அப்பனே கொண்டுவந்து சொல்வேன்கேளு
நாரப்பா வதனுடைய பிச்சுங்கூட்டி
நலமான ஊர்க்குருவி பிச்சுவாங்கி
வாரப்பா பழந்தின்னும் வவ்வால்பிச்சும்
வளமான நரிப்பிச்சும் அருணன் பித்தே. 459

பித்தான யிவையெல்லாங் கபாலம்போட்டுப்
பெலமான வைங்கோலத் தைலம்வார்த்து
அத்தான அடுப்பேற்றித் தீயைமூட்டி
அப்பனே யெரித்திடவே கருகும்பாரு
நத்தான கரிக்கினபின் னெடுத்துக்கொண்டு
நலமான முத்தூசில் திரித்துக்கொள்ளு
வத்தான அகலிலிட்டுக் காயத்தைலம்வார்த்து
வளமான விளக்கேத்திக் கபாலமூடே 460

மூடப்பா மையதுதான் கபாலம்பத்து
முக்கியமுள்ள மையதனை சுரண்டிக்கொண்டு
ஆடப்பா புனுகுடனே கஸ்தூரிபூரம்
அப்பனே வாசமது நன்றாய்க்கட்டி
வாடப்பா தங்கச் சிமிழில்வைத்து
வளமான மோகினியை உச்சரித்து
நாடப்பா மைசிமிளை யெடுத்துக்கொண்டு
நலமான லாடமதிற் பணந்தான்வையே. 461

வையப்பா ஓம்ஸ்ரீ வசியமென்று
வளமான நாடதிலே போனாயானால்
கையப்பா கன்னியர்கள் கண்டபோது
கண்மணியே மதிமயங்கி மோகங்கொண்டு
நையப்பா ஸ்ரீகளுமுன் பிறகேமைந்தா
நலமாக வந்திடுவார் வெறிதான்கொண்டு
ஐயப்பா குலமழிந்து முறைகள்கெட்டு
அப்பனே வெறிகொண்டு அலைவார்பாரே. 462

பாரப்பா உன்வாக்கால் யென்பெண்களென்று
பரிவாக வந்திடுங்கோள் யென்றுசொல்லு
ஆரப்பா அட்செணத்தி லடிபணிவார்மைந்தா
அரகரா உன்வாக்குக் குபேரன்வாக்கென்பார்
நாரப்பா அவர்களிடம் புணரவேண்டாம்
நலமாகப் புணர்ந்தாக்கால் யோகம்போகும்
வாரப்பா சித்துமயம் பார்த்துக்கொண்டு
வளமான திலர்தமதைத் துடைத்துப்போடே. 463

போடவே வெறிதெளிந்து சுவாசமாகும்
 புகழான சித்திதுதா னருமைகாணும்
ஆடவே யிச்சித்து அருமைகாணும்
 அல்லா விட்டா லொன்றுமில்லை அறிந்துபாரு
வாடவே வேண்டாமடா அறிவுள்ளானே
 வகையாகச் சொல்லிவிட்டோம் வண்மைதன்னால்
நாடவே நான்முக னடியைப் போற்றி
 நலமான யிந்நூலையு ணர்ந்துபாரே. 464

புருஷமயச்சித்து

பாரப்பா ஸ்ரீவசிய சித்துச்சொன்னேன்
 பண்பான புருஷவசியச் சித்துச்சொல்வேன்
ஆரப்பா அறிவார்கள் புருஷசித்து
 அவனிதனிற் மாண்பர்களோ காணமாட்டார்
நாரப்பா நல்லோர்கள் சிவயோகத்தார்
 நலமாகத் தானறிவார் நன்மைதன்னால்
காரப்பா ஆந்தைக்கண் லல்லூர்பித்துங்
 கண்மணியே சுழல்வண்டு ஆனையாமே. 465

ஆமப்பா வைங்காயந் திகைப்பூண்டுபோடு
 அப்பனே வால்நீண்டான் பித்துங்கூட்டு
வாமப்பா யிதுவெல்லாஞ் சமமாய்க் கொண்டு
 வளமான ஸ்ரீகளுட முதாததுகிலூட்டி
காமப்பா திரியாகத் திரித்துக்கொண்டு
 கண்மணியே அகல்தனிலே போட்டுமைந்தா
நாகப்பா மயிலெண்ணெய் யிறக்கிக்கொண்டு
 நலமான அகல்தனிலே ஊத்திக்கேளே. 466

கேளப்பா தலைப்பிண்டங் கபாலங்கொண்டு
 கெடியாக மேல்மூடி விளக்கையேத்தி
நாளப்பா ருத்திரசெபம் லெட்சமோது
 நலமாகத் தோத்தரித்துச் சொல்லக்கேளு
வாளப்பா மையதுதான் அடைபோல் பற்றும்
 வளமான மையதனைச் சொரண்டிக்கொண்டு
ஆளப்பா சிவமுப்பு கழஞ்சி போட்டு
 அப்பனே வைங்கோலத் தைலத்தாட்டே. 467

ஆட்டவே கஸ்தூரி புனுகுபூரம்
அப்பனே யிதுமூன்றுங் கவசங்கட்டி
நாட்டவே சொர்ணமதின் சிமிழில்வைத்து
நலமாகச் சிமிழில்வைத்து சொல்லக்கேளு
நீட்டவே மயானத்தில் வுருவுமேத்தி
நிலையான மனோன்மணியின் கடாட்சம்பெற்று
வாட்டவே பணவிடைதான் திலர்தம்போடு
வளமான புருஷரெல்லாம் வசியமென்னே. 468

என்னவே புருஷரவர் கண்டாரானால்
யேனையா சரணமென்று பணிவார்பாரு
அன்னவே உங்களுட வாக்காலையா
அரகரா வென்றுசொல்லி அலைவார்பாரு
வன்னவே யென்றுவுன்னைக் கேழ்ப்பாரையா
வாய்வசனம் யென்னுடைய ஆசிர்வாதங்
கன்னவே ஆசீர்வாத மீய்ந்துப்போட்டுக்
கண்மணியே உன்பாதம் புட்பிப்பாரே. 469

பாரான அவர்களுக்குத் தெய்வமென்று
பண்பாக உன்பாதம் பணிவார்மைந்தா
ஆரான அவர்களிடம் பொருள்பறித்துக்கொள்ளு
அசடர்தனை யகத்திவிட்டு அப்புரத்தைச்செல்லு
வாரான அப்புரத்தைச் செல்லாவிட்டால்
வழங்கவே மாட்டாய்நீ மாய்கைகொள்ளும்
நாரான உலகமதிற் சித்துவிளையாடு
நன்மைபெற வேண்டுமென்றால் கைலைக்கேகே. 470

வாய்வு ஸ்தம்பனம்

ஏகவே புருஷமயச் சித்துச்சொன்னேன்
யென்மகனே வாய்வுஸ்தம்பச் சித்துகேளு
வாகவே மகாராச பட்டணமேயேகி
வளமான பசார்வீதியில் குந்திக்கொண்டு
நாகவே சிவசத்தி முப்புகொண்டு
நலமான விஷச்சுண்ணம் பூர்வச்சுண்ணம்
மாகவே பூரணாதி செந்தூரங்கூட்டு
மைந்தனே யிதுவைந்துஞ் சமனாய்ச்சேரே. 471

சேரப்பா நாதவிந்தால் குழைத்துக்கொண்டு
சிவசிவா கழுஞ்சிடைதான் உள்ளேகொள்ளு
ஆரப்பா பணவிடைதான் வாயடக்கம்பண்ணி
அப்பனே ஊமையனை கும்பத்திலூணு
வாரப்பா வாயுவது தம்பித்து வோங்கும்
வளமான மாந்தோலுடனே தூங்குமைந்தா
மாரப்பா யோசனைதா னொசப்பிலேகி
மைந்தனே அவ்விடத்தில் ஸ்தம்பம்பண்ணே. 472

பண்ணவே அவ்விடத்தில் அஷ்டகாசஞ் செய்நீ
பண்பான யிப்புதுமை மனிதர்பார்ப்பார்
அண்ணவே அக்கோரமென்ற செபத்தாலையா
அரகரா தியானித்து இரங்குவாய் நீ
வண்ணவே மனிதரெல்லாம் யிப்புதுமைகண்டு
வகாரசிவ யோகிவுன்னை வணங்குவார்பார்
மண்ணவே யிச்சித்து மாதியோற்கு
மைந்தனே புதுமையடா மருவிப்பாரே. 473

சலஸ்தம்பச்சித்து

பாரப்பா வாயுதம்பச் சித்துச் சொன்னேன்
பண்பான சலஸ்தம்பச் சித்துகேளு
நாரப்பா வெண்சாரைக் கொண்டுவந்து
நலமான கபாலமதில் வார்த்துக்கொண்டு
வாரப்பா அடுப்பேற்றிக் கருக்கிக்கொண்டு
வளமான சக்திசிவ முப்பைப்போட்டு
காரப்பா வைங்கோலத் தைலந்தன்னால்
கண்மணியே மத்தித்துச்சிமிழில்வையே. 474

வையப்பா மயேஸ்பரிக்கிப் பூசைபண்ணி
வளமான பெண்புலியாம் அண்டச்செளவும்
ஐயப்பா புலியதுதான் வேறொன்றில்லை
அப்பனே அப்பீடஞ் சதாசிவத்தின்பீடம்
நையப்பா அவ்வனத்தில் வேணதுண்டு
நலமான யிதினிறச் சிகற்பமாகும்
கையப்பா யித்தொழிலாற் பொட்டுயிட்டுக்
கண்மணியே மான்தோலில் நடுவைத்தையே. 475

தைக்கவே திலர்தமதை மான்தோலிலையா
தண்மையுடன் நாலுபோட்டு நால்பக்கமிட்டு
வைக்கவே சமுத்திரத்திற் போட்டுமைந்தா
வளமான கடைச்சரக்கு யிந்திரசாலம்
மைக்கவே சமுத்திரத்தில் தொழிலெல்லாமாடு
மகத்தான யெதிரியெனக்கில்லை யென்று
நைக்கவே அனுமனுடன் கொடியைக்கட்டி
நலமான விருதுகளுங் கட்டியாடே. 476

ஆடவே சலஸ்தம்பம் யென்னசொல்வேன்
அரகரா யிச்சித்தைப் போலேயுண்டோ
வாடவே வேண்டாங்காண் வேடிக்கைமெத்த
வளமான சித்திதுதான் யார்தான்காண்பார்
நாடவே சமுத்திரத்தில் கடைதான்வைத்து
நலமான சரக்குவகை வியாபாரம்பண்ணு
காடவே மாகாசித் தானால்மைந்தா
கணக்காகக் கடைசரக்கு வாங்குவாரே. 477

வாங்கவே சித்துமயம் பதனம்பண்ணு
வளமான சித்துப்போ லுண்டோவித்தை
ஆங்கவே அரனெனக்கு அருளிக்கார்ப்பார்
ஆதவன்போ லூங்களுக்கோ திறந்து சொன்னேன்
மாங்கவே மகாசித்தன் நந்திசித்தன்
மாதியந்தத் தலைமைமுத லாராதாரம்
நாங்கவே கருவிகளோ டொக்கச்சேர்ந்து
நாதகிண் கிணியோசை நல்குவோமே. 478

அக்கினிஸ்தம்பனச்சித்து

ஓமப்பா அக்கினியாம் ஸ்தம்பஞ்சொல்வேன்
உத்தமனே வெண்புலியைக் கொண்டுவந்து
ஆமப்பா சவ்வுடனே யெண்ணெய்போக்கி
அப்பனே போக்கிவிட நெய்யாய்ப்போகும்
வாமப்பா அந்நெய்யை யெடுத்துக்கொண்டு
வளமான குப்பிதனிற் பதனம்பண்ணு
காமப்பா மயேஸ்பரருக்கும் ருத்திரர்க்குங்
கண்மணியே யிவர்களுக்குப் பூசை செய்யே. 479

செய்யவே நெய்யதனை யெடுத்துக்கொண்டு
செயமான உடம்பதிலே தொக்கிடம்போடு
அய்யவே நடம்பெல்லாந் தடவிக்கொண்டு
அப்பனே யாகசாலை வளைத்துக்கொண்டு
மையவே யதில்விழுந்து மாற்றமிட்டால்
மைத்தனே யோகியவர் காணோமென்பார்
நையவே அக்கினிதான் உரவுமாகும்
நலமான மனிதரவர் சொல்லுமார்க்கம் 480

மார்க்கமென்ற வகையதனைச் சொல்வேன்மைந்தா
மகத்தான அக்கினியில் மடிந்தானெனன்பார்
ஆர்க்கமென்ற தணலாறி சாம்பலாச்சு
அப்பனே உன்னைத்தான் காணோமென்பார்
வார்க்கமென்ற மாத்தமதைத் துடைத்துப்போடு
வளமான வுன்னுருவைக் காண்பார்மாண்பர்
நார்க்கமென்ற அதிசயந்தான் கோடாகோடி
நலமான அதிசெயந்தான் நன்மைகாணே. 481

ருத்திரகளைச் சித்து

காணவே நெய்தடவி பானந்தன்னை
கண்மணியே யெடுத்துவிடு வேகாதையா
மாணவே அக்கினியாம் ஸ்தம்பச்சித்து
மைந்தனே சொல்லிவிட்டே னின்னங்கேளு
ஆணவே சூத்திரர்களைச் சித்துகேளு
அப்பனே சித்தினுட மார்க்கங்கோடி
வாணவே கொடிமுடியாம் ருத்திரனைவாங்கி
வளமான சுத்திசெய்து சொல்லக்கேளே. 482

கேளப்பா அகலமுள்ள சட்டிவாங்கி
கெடியான கற்பமதை அதனிற்போட்டு
ஆளப்பா சுத்தசலம் படிரெண்டிட்டு
அப்பனே அடுப்பேற்றிச் சொல்லக்கேளு
வாளப்பா ருத்திரசிவ மக்கினியைமூடி
வளமான நால்சாமம் யெரித்தாயானால்
காளப்பா கறுகறுத்து நீர்ச்சுண்டித்தான்
கண்மணியே வட்டதுபோல் கருகிநிற்கும். 483

நிர்க்குகின்ற வகையறிந்து நிலையைப்பார்த்து
நேரான வேளைநாழி கையைப்பார்த்து
அர்க்குகின்ற கஸ்தூரி புனுகுபாசம்
அப்பனே வைங்கோலத் தைலத்தால்தான்
வர்க்குகின்ற வயணமதாய் மத்தித்துக்கொண்டு
வளமான தாம்பிரத்தின் சிமிழில்வைத்து
மற்குகின்ற ருத்திரனைத் தியானம்பண்ணி
மகாமாய்கை சுவாகாவென் றனுதினமும்பூசே. 484

பூசவே திலர்தமது பணவிடைதான்போட்டு
புகழான ருத்திரரைத் தியானம் பண்ணி
ஆசவே நடுவீதிப் பட்டணத்தேயேகும்
ஆனதொரு ருத்திரசிவ மூர்த்தியென்பார்
வாசவே ருத்திரர்கள் தான்கோடாகோடி
வளமான சிவரூப முனக்குமாகும்
மாசவே மகாமூர்த்தி மகத்தான
மூர்த்தி யெனப்பே ருண்டாச்சே. 485

ஈஸ்வரச்சித்து

ஆச்சன்ற அகமாளுஞ் சித்துச்சொன்னேன்
அப்பனே ஸ்பரகுல சித்துகேளு
வாச்சன்ற திகைப்பூட்டைக் கொண்டுவந்து
வளமான ஆதியென்ற கபாலந்தன்னிற்
நாச்சென்ற பூடதனைக் கரிக்கிக்கொண்டு
நலமான சிவவிந்தால் மத்தித்துக்கொண்டு
காச்சென்ற மையாகும் மைந்தாமைந்தா
கண்மணியே பரிச்சிமிழில் மையைவையே. 486

வைக்கவே பராபரன்தன் னடியைப்போற்றி
வளமான சிமிழெடுத்துச் சொல்லக்கேளு
மைக்கவே கிளிஞ்சகலம் பொட்டையிட்டு
மைந்தனே பாரபரன்தன் னடியைப் போற்றி
ஐக்கவே உலகிலுள்ளோர் உன்னைக் கண்டால்
அப்பனே ரிஷபவா கனத்தின்மேலே
நைக்கவே சிவமூர்த்தி நின்றாப்போலே
நலமாகத் தோற்றுமடா மாண்பருக்கே. 487

மாண்பரென்ற மாண்பருக்கு மகாசித்தப்பா
மகத்தான சிவயோகி மருவிப்பாரு
ஆண்பரென்ற அனைவோர்க்கு மெய்தாதையா
அல்லாட்டால் சிவயோகிக் கெய்தும்பாரு
வீண்பரென்ற வீணரவர் குருவைக் காணார்
விருதாவா யலைந்துசுத்தி வீணராவார்
காண்பரென்ற கருவறியார் கழுதைமட்டி
கைலாச மூர்த்தியுடக் கமலமாமே. 488

கிராணச்சித்து

ஆமப்பா சாலியென்ற கிராணச்சித்து
அப்பனே சொல்லுகிறேன் அறிவாய்க்கேளு
வாமப்பா விஷக்கல்லை யெடுத்துக் கொண்டு
வளமான வழலைமெழு கதனாலையா
சாமப்பா லிங்க ஆவடையார்போலக்
கண்மணியே செய்துகொண்டு சொல்லக்கேளு
நாமப்பா நாதகிண் கிணிதாணோசை
நலமான புஷ்பபரி மளங்கள்சாத்தே. 489

சாத்தவே ஆபரணம் நைவேத்தியத்தோடு
சகலஅபி ஷேகமுடன் தோத்திரம்பண்ணி
ஆத்தவே சாலியென்ற கிராணம்வைக்க
அப்பனே பெட்டியொன்ற ழகாய்ப்பண்ணி
நாத்தவே அதில் வைத்துப் பூசைபண்ணு
நலமான சித்தனடா நாதசித்தன்
மாத்தவே ஆதியந்தத் தலமைக்கண்டோன்
மகத்தான சித்தனடா மருவிப்பாரே. 490

பாரப்பா யிதிலாடுஞ் சித்துச் சொல்வேன்
பண்பான ஊர்பதியை யேகிக்கொண்டு
வாரப்பா யில்லறந்தா னொன்றுவாங்கி
வளமாக யில்லாததினால் யிப்பதியைவைத்து
காரப்பா முன்செய்ய பூசைநேமங்
கண்மணியே செய்துகொண்டு கனலைத்தூண்டு
ஆரப்பா அறிவார்கள் உலகமெல்லாம்
ஆச்சரியங் குருநீயே வரைந்தோம்பாரே. 491

பாரென்ற உலகமெல்லாந் திரண்டுருண்டு
பண்பாக உன்னிடத்தில் வருவார் மைந்தா
ஆரென்ற சிவயோகம் மறக்கவேண்டாம்
அப்பனே உன்னிடத்தில் பாதம்வீழ்வார்
காரென்ற கனலான நோய்கண்டோர்க்குக்
கண்மணியே விபூதியள்ளிக் கருத்திலூணு
வாரென்ற வியாதியெல்லாம் வழிகெட்டோடும்
வளமான உலகமெல்லாம் வசியமாமே. 492

ஆமப்பா உலககுரு சித்தநீயே
ஆதவன்போ லுனைப்பணிவார் உலகமெல்லாங்
காமப்பா சித்தனுட மகிமைகோடி
கைலாச மூர்த்தியென்றுங் கருதுவார்கள்
வாமப்பா சீஷருக்கு யிதைச்சொல்லாதே
மகராஜ சிவயோக மென்வாய்ஞானம்
நாமப்பா யிந்நூலை மனதில்வைத்து
நன்மைதர வேண்டுமென்று நவிலுவாயே. 493

விநாயகர் சித்து

வாயென்ற சாலிக்கிராணச் சித்துச்சொன்னேன்
வளமான திசமுகவன் சித்துகேளு
மாயென்ற சத்திமுப்பூ சிவத்தின்முப்பு
மகாதீட்சை பூர்வமுப்புங் கல்வத்திட்டு
காயென்ற கரும்புரசம் நாதவிந்தால்
கண்மணியே நவநாள் தான்விடாதேஆட்டு
நாயென்ற நாற்பதுபோல் மெழுகுமாகும்
நன்மையிது யிம்மெழுகை விக்கினம்போற்பண்ணே. 494

பண்ணவே விக்கினரைப் பெட்டியில்வைத்துப்
பண்பாகப் பூசித்துச் சொல்லக்கேளு
அண்ணவே ஊர்க்குருவி வந்துநின்று
அப்பனே விக்கினரை மேற்கேவைத்து
வண்ணவே விக்கினர்க்கு லட்சமோது
வளமான வளர்ந்தவந்தான் நூறுபாகங்
கண்ணவே யெமகிரிபோற் றோன்றுவார்பார்
கண்மணியே அதிசெயந்தான் கருதிக்காணே. 495

காணப்பா யிச்சித்தையார் தான்காண்பார்
கைலைகிரி யமுர்தமதைப் பொசித்தோன்காண்பான்
வாணப்பா குளநண்டைக் கண்டுகொள்ளு
வளமான பிண்டமது நண்டேயாகும்
ஆணப்பா அண்டபிண்டத் தாலே மைந்தா
ஆச்சப்பா கொடிமுடியும் அமர்ந்தவாறு
மாணப்பா மாதியந்த மானநண்டு
மகத்தான நண்டியதுதான் மகிமையாமே. 496

ஈடுசித்து

ஆமென்ற குண்டலியின் சித்துசொன்னேன்
அரகரா யீடுசித்துச் சொல்லக்கேளு
வாமென்ற நரிப்பிச்சு நாரைப்பிச்சு
வழங்குகின்ற பூனைக்கண் பூனைப்பித்துங்
காமென்ற நீர்க்கோழிக் கண்ணும் பிச்சுங்
கண்மணியே காடையுடப் பித்துங்கூட்டு
நாமென்ற சுழல்வண்டு சுணங்கன்பித்தும்
நலமான காந்தமுடன் சிலையுமாச்சே. 497

ஆச்சப்பா தொட்டவுடன் வாடிவேரும்
அழகான கருங்காக்கண் பித்துங்கூட்டு
வாச்சப்பா நாகமல்லி வேறுங்கூட்டு
வளமான காக்கணத்தின் கழுதைப்பிச்சு
நாச்சப்பா மினிப்பூச்சித் தேவாங்குப்பிச்சு
நலமானப் பழந்திண்ணும் வவ்வால்பிச்சும்
காச்சப்பா அட்டையுடன் ரோசனையுங்கூட்டு
கண்மணியே வால்நீண்டான் பிச்சுங்கூட்டே. 498

வேறு

கூட்டுநிலப்பனைக் கூடொக்கச்சேர்ந்திடு
நாட்டிலுள்ளோர்கள்தான் நவாக்குமைங்காயமாம்
தேட்டும்விராகனிடைச் சரியாகச்சேர்த்திடு
வாட்டும்வகைக்கு வகைவசை சரிதானே. 499

தானேயிதுகளைத் தனதாகக்கல்வத்தில்
வானேயிதுவெல்லாம் வகையாகப்போட்டு
மானேபெண்ணாதத்தை வழியாகயாட்டிடு
காணேனால்சாமங் கருதியரைத்திடே. 500

அரைத்திடும்போது அழுகண்ணிச்சாற்றினால்
வகைத்திடும்போது வழியாகஆட்டுநீ
கரைத்திடுமைந்தாக் கருவுமைங்கோலத்தால்
மரைத்திடுமத்தின் சாற்றினால்சாமமே. 501

சாமமாம் பறங்கிச் சாராயம்விட்டிடு
ஆமமாஞ்சாம மரைத்திடுமப்போது
காமமாமெழு கதுபோலேகாணுமாம்
வாமமாம்போது வழித்துயெடுத்திடே 502

வழித்துயெடுத்து வகையாகவேநீதான்
நழித்தப்பயர்போல நலமாகச் செய்திடு
மழித்திடுஞ்சூரியன் ரவிதனிற்போட்டுநீ
கழித்ததுகொண்டு கனல்போலுருகுமே. 503

பரணியில் வைத்துப்பூசிப்பது

உலருமேசெப்புப் பரணியில் வைத்து நீ
உலருங்கணேசர் உத்தமாம்விக்கின்ற
உலரும்நைவேத்தியம் உண்மையாய்ப்பூசிடு
உலருமேநாதன் உண்மையைச்சொல்வாரே. 504

வாறானபோது வழங்குமம்மருந்தைநீ
சீரான விந்தில் சுருட்டியெழைத்திடு
தீரானதிண்பண்டம் திகட்டிடும்பெண்ணுக்கு
ஆரானபோது அழிந்திடுவாளே. 505

வாளானஸ்ரீகள் வணங்குவாருன்னை
தேளானபோது தெகட்டிடுமேகத்தை
ஆளானபெண்ணுக்கு அரைத்திடும்புருஷன்
மாளாமல்வசியம் மகிழ்ச்சியாய்நீகேளே. 506

கேளேநீயெண்ணெய்க் கெடியானமாத்திரை
ஆளானபோது அழகானநாதத்தில்
பாளேநீபண்டிதன் சொன்னபடிகேளு
மாளேநீபெண்ணே மத்திடும்நாதமே. 507

மதியான நாதத்தில் மத்தித்துக்கொண்டுநீ
சதியும் புருஷனும் சையோகமப்போது
அதியானகன்னத்தி லழித்திக்கலந்திடு
கதியானதாம்பூலங் கலந்துக்குடுத்திடே. 508

கொடுத்திட்டபோது குரையானபுருஷனை
அடுத்திட்டுஉன்னை அனுதினம்பூசிப்பான்
வடுத்திட்டவித்தை வகையானசூட்சுமம்
மடுத்திட்டயிந்நூலை மருவிநீபாருமே 509

வேறு – செகவசியம்

பாருமென்ற யிடுமருந்து சித்துச்சொன்னேன்
பண்பான செகவசியம் சித்துகேளு
ஆருமென்ற நன்னாரிக் கொடிப்பிரட்டி
ஆனதொரு சுழல்வண்டு நீர்வண்டப்பா
வாருமென்று திகைப்பூடும் வொக்கச் சேர்த்து
வளமாக கருக்கியதைச் சொல்லக்கேளு
நாருமென்ற செகவசியக் காய்த்தயிலம்விட்டு
நலமாகமத் தித்துப்பொன் சிமிழில்வையே. 510

வையடா மயேஸ்புரிக்குப் பூசைபண்ணி
வாழ்வுகர ணாதியுடன் அனாதிகெட்டு
மையடா மகாரமதை உள்ளேயேகும்
மகத்தான திலர் மததை லாடந்தொட்டு
கையடா கனகசபை மூலாதாரங்
கருவிகர ணாதியுடன் கருணைகூர்ந்து
ஐயடா செகமதிலே யேகுயேகு
அப்பனே உலகமெல்லாம் வணங்குவாரே. 511

வாரான சற்குருவென் றடிபணிந்து
வளமான உலகுக்கு சற்குருவும்நீதான்
ஆரான செகச்சால மயேந்திரசாலம்
ஆனதொரு யிதுகளெல்லா மடியிற்போற்றுங்
காரான தந்திரங்க ளெல்லாமைந்தா
கருத்தறியா மூடருக்குக் கருவென்பார்கள்
மாரான மதியமூர்தம் நிலைகண்டோர்க்கு
மகத்தான சித்தெல்லாம் க்ஷணத்திலாமே. 512

அநும ரூபச்சித்து

ஆமப்பா அநுமரூபச் சித்துச்சொல்வேன்
அப்பனே வைங்கோலங் காய்த்தையிலம்ரெண்டு
நாமப்பா அண்டபிண்டத் தைலமூன்றும்
நலமான திகைப்பூடு முப்புரெண்டும்
காமப்பா கல்வத்திற்போட்டுக்கொண்டு
கண்மணியே சாமமது ஆறுமாட்டி
வாமப்பா வழித்தெடுத்துச் சிமிழில்வைத்து
வளமான மயேஸ்பரற்குப் பூசைபண்ணே. 513

பண்ணடா நெத்திதனிற் போட்டுபோட்டு
பண்பான அங்குலப் பிரடாணமாக
அண்ணடா சவுக்கமதாய்ப் பொட்டையிட்டு
அப்பனே கானகத்தில் நின்றுகொண்டு
வண்ணடா ஊமைதனைப் பூரகத்தினாட்டி
வளமாகப் கும்பித்து நின்றிட்டாக்கால்
கண்ணடா மகத்தான அநுமார்தானுங்
கண்மணியே யெதிர்நிற்பார் மலைபோலாமே. 514

ஆமப்பா அவரழகை யார்தான்காண்பார்
அப்பனே விஷ்ணுகளை ரொம்பவுண்டு
காமப்பா ஆதியந்த மொன்றாய்நிற்பார்
கண்மணியே யிச்சித்தைக் கண்டுகொள்ளு
வாமப்பா வகாரசிவ யோகவித்தை
வளமான சித்திதுதான் வண்மைகாணும்
நாமப்பா நல்லோர்க்கு வாய்க்குமிந்நூல்
நலமான நூலிதுதான் நவின்றுகாணே. 515

அஞ்சனச்சித்து

காணப்பா அஞ்சனமாஞ் சித்துச் சொல்வேன்
கண்மணியே தேவாங்குக் கண்ணுவாங்கி
ஆணப்பா வைங்காயங் கூடச்சேர்த்து
அப்பனே பிரவிடையாள் சீலைதன்னில்
வாணப்பா திரிதிரித்து விளக்கில்போட்டு
வளமான தலைப்பிண்டங் கபாலமூடி
மரணப்பா காரெள்ளு யெண்ணெய்வார்த்து
மைந்தனே விளக்கேற்றி யெரித்திடாயே. 516

ஆயப்பா யெரித்திடவே மைதான்பத்து
அப்பனே மையதுவை யென்னசொல்வேன்
காயப்பா வைங்காய மையைத்தாடா
கண்மணியே சொறண்டிகொண்டு சொல்லக்கேளு
நாயப்பா சிவமுப்புக் களஞ்சிபோட்டு
நலமான வைங்கோலம் வார்த்தெழைத்து
மாயப்பா மகாக்கொம்பு சிமிழில்வைத்து
மைந்தனே அஞ்சனா தேவியாமே. 517

ஆமப்பா தேவிக்கு வுருலட்சமோதி
அப்பனே மையத்தான் யெடுத்துக்கொண்டு
வாமப்பா யிடதுகையில் போட்டுப்பாரு
வளமான புவியிலுள்ள பொருளெல்லாந்தான்
நாமப்பா யுன்கண்ணிற் றோன்றும்பாரு
நலமான பொருளெல்லாம் நன்மைகாணும்
காமப்பா பன்னிறு காந்தந்தானோடுங்
கண்மணியே யிம்மையைக் கருதிகேளே. 518

கேளப்பா கேள்வியுடன் குறிகள்சொல்லுங்
கெடியானக் கடினமது பிடிக்கலாகும்
பாரப்பா பாதாள அஞ்சனமாமையா
பாரிலுள்ள தொழில்களெல்லா மாமாடும்
காளப்பா கனகசபை யிந்நூல்மார்க்கங்
கண்வெளிச்ச மாகுமடா கண்டுகொள்ளு
ஆளப்பா யிந்நூலைப் பூசைபண்ணி
அரகரா தொழில்களெல்லாம் யெடுத்துஆடே 519

மாத்தமச்சித்து

ஆடவே ஆஞ்சனத்தின் சித்துச்சொன்னேன்
அப்பனே மாத்தமென்றே சித்துகேளு
வாடவே வேண்டாங்காண் மைந்தாமைந்தா
வளமான லிங்கம்அடி மூலம்வாங்கி
தேடவே கதிரோட்டில் போட்டுக்கொண்டு
தேனான நாதமதை விட்டுமைந்தா
காடவே அடுப்பேற்றித் தீயைமூட்டி
கண்மணியே சுருக்கியதை யெடுத்துக்கொள்ள. 520

கொள்ளவே முப்புடனே திகைப்பூடும் போட்டு
கொடிதான வைங்கோலந் தன்னாலையா
விள்ளவே மத்தித்து பரிச்சிமிழில்வைத்து
விளங்கியதோர் தேவிக்குப் பூசைபண்ணி
அள்ளவே சரக்குவறு பத்துநாற்கும்
அன்பாக யிச்சரக்கைக் கவசம்செய்வாய்
கள்ளவே யில்லாத மனமாய்நின்ற
கசடற்ற தேவிக்கு அங்கிபூட்டே. 521

பூட்டவே வாசமுடன் கஸ்தூரி கூட்டி
புகழான லாடமதிற் பணவிடைதான் போட்டு
ஆட்டவே ய-வ-சி-ம-ந வென்றுசொல்லி
அசடற்ற மனமாக நின்றாயானால்
தேட்டவே தேட்டெல்லா மறைந்துபோகுத்
திரிலோக புவனமுந்தான் காணமாட்டார்
மாட்டவே மாற்றமை யிதற்கீடுண்டோ
மைந்தனே மகத்தானசித்திது தான்மருவிக்கேளே 522

காந்தருவச் சித்து

கேளப்பா திலர்தமதைத் துடைத்துவிட்டால்
கெதிகெட்டுத் திரிலோகம் பார்ப்பாரையா
ஆளப்பா காந்தருவச் சித்துபகளு
அப்பனே யிச்சித்தை யார்தான்காண்பார்
வாளப்பா சிவமுப்பு சத்திமுப்பு
வளமான பிண்டமெழு வண்டச்சுண்ணம்
நாளப்பா வைங்காயம் வழலைச்சுண்ணம்
நலமான யிவையெல்லாங் கல்வத்திட்டே 523

இட்டுமே வைங்கோலந் தன்னாலாட்டு
இயலாக ஆட்டிவர வெண்ணைபோலாம்
வட்டுவழி யதில்கோடி வேதைகோடி
வளமான சித்தியிலே யளந்தங்கோடி
நட்டுமடா வலதுகையில் தடவிக்கொண்டு
நலமான நெற்றிதனில் திலர்தம் போட்டு
அட்டியே யில்லாமல் வங்சிங்கென்று
அன்பாக வாசிகொண்டு யிழுத்துப்பாரே. 524

பாரேநீ தன்வந்திரி யுற்றுப்பாரு
பண்பான சித்தியா வித்தியாதரர்கள்தானும்
ஆரேநீ கெருட காந்தருவர்போலுமவர்
அன்பான சிவசக்தி விஷ்ணுலட்சுமி
நாரேநீ நான்முகவன் குண்டலியுந்தோற்றும்
நலமான வுன்முன்னே கனகசவைதோன்றும்
மாரேநீ யிச்சித்தின் மகிமைகாணார்
மகிமையிதிற் கோடியடா மகிமைகாணே 525

சர்வரூபச் சித்து

காணேநீ தன்வந்திரி யின்னஞ்சொல்வேன்
கனமான சர்வரூபச் சித்துகேளு
மாணேநீ மங்கையுட நாதம்வாங்கி
மருவிவந்த வெங்காயம்தி கைப்பூடும்போடு
வானேநீ சிவமுப்பு வஸ்துதான்போடு
வளமான கறியுப்பு கழஞ்சிபோட்டு
ஆணேநீ கலக்கியொன்றாய் ரவியில்வைத்து
அப்பனே யண்டசவ் வெடுத்துக்கொள்ளே 526

கொள்ளவே யண்டசவ் வெடுத்துக்கொண்டு
குணமாகத் தோய்த்லுர்த்தி தோய்த்துக்கொண்டு
அள்ளவே மூன்றுநாளிவ்விதமாய்த் தோய்த்துலர்த்தி
அப்பனே சவ்வைத்தா னெடுத்துக்கொண்டு
மள்ளவே மங்நங்யங் சிங்கென்றூணி
மைந்தனே சவ்வதனை மேலேபாரு
வள்ளலே நினைத்தரூபம் உன்முன்னே தோன்றும்
வளமான சித்திதுதான் வண்மையாமே. 527

சிம்சகரணாதிசித்து

ஆமேதான் சிம்சகரணாதி சித்துசொல்வேன்
அப்பனே சொல்லுகிறே னறிவாய்க்கேளு
நாமேதான் சொல்லுகிறோம் நன்மையாக
நலமான விபரமதாய்ச் சொல்வேன்கேளு
காமேதா னாதமதி லூறுஞ்சவ்வை
கண்மணியே யெடுத்துக்கொண்டு கபாலத்திட்டு
வாமேதா னடுப்பேற்றித் தீயைமூட்டி
வளமான கரிபோலே சுருக்கிக்கொள்ளே. 528

கரியான கரியெடுத்துக் கல்வத்திட்டுக்
கண்மணியே கரியுப்பு சிவமுப்பிட்டு
வரியான வெங்கோலத் தைலம் வார்த்து
வளமாக வோர்நாழி யரைத்திட்டாக்கால்
மரியானே மைப்போலே மையாப்போகும்
மகத்தான மையதனைச் சிமிழில்வைத்து
சரியான வாதமது மிகவேகட்டி
அப்பனே யீசுரத்தி யானம்பண்ணே 529

பண்ணவே அங்கிலி ஓம்கிலிசாவென்று
பண்பான தியானமது மூலத்தேற்றி
அண்ணவே யல்லிப்பூ பிரமாணந்தான்
அப்பனே லாடமதில் மையைப்போட்டு
கண்ணவே கடைவீதி தன்னிலேகி
கண்மணியே யிருத்திநன்றாய் நில்லுநில்லு
வண்ணவே கடைவீதி தன்னிலேகி
வளமாக வுன்முகத்தைப் பார்த்தார்க்கேளே 530

கேளேநீ தன்வந்திரி யுனக்கீடுண்டோ
கெடியான சிம்பம்வந்து நிற்குதென்பார்
வாளேநீ வாசியதை யிழுத்துக்கும்பி
வளமாகக் கும்பிக்கமலைப்போற்றோற்றும்
நாளேநீ மனிதரெல்லாம் வெகுளியாக
நலமாக மிரண்டுகொண்டு ஓடுவார்பார்
ஆளேநீ தன்வந்திரி சித்தைக்காணு
அசடரிடஞ் சொல்லாதே யறிவிற்பூணே 531

திசைரூபச்சித்து

பூணேநீ தன்வந்திரி யின்னஞ்சொல்வேன்
புனிதமாய்த் திசைரூபச் சித்துகேளு
மானேநீ முன்சொன்ன வழலை முப்பை
மைந்தனே பலமொன்று கல்வத்திட்டு
காணேநீ வினோதனைத் தைலம்வார்த்துக்
கண்மணியே யிதன்கூடத் திகைப்பூடிட்டு
ஆணேநீ கரமதுவால் மத்தித்தாக்கால்
அப்பனே மையாகு மறிந்துபாரே. 532

பாரேநீ தன்வந்திரி வாசங்கூட்டி
பண்பான சிமிழ்தனிலே பதனம்பண்ணி
ஆரேநீ யிடதுகையில் மையைப்போட்டு
அப்பனே மங்வங்கென்று பாரு
வாரேநீ ரேசகத்தை யிழுத்துக்கும்பி
வளமாகக் கும்பித்துக் கையைப்பாரு
மாரேநீ யெதிர்நோக்கிப் பாருபாரு
மைந்தனே நீநினைத்த மிருகங்காணே. 533

நினைத்ததொரு மிருகமது பத்துசாதி
நிலையாகக் பத்துவிதந் தோன்றும்பாரு
வளைத்ததொரு வையகத்தில் சித்துதானும்
வளமான மகிமையடா வையகத்தில்
மனைத்ததொரு மாண்பருக்கு யிதுவெல்லந்தான்
மைந்தனே மகிமையடா மகிழ்ந்துபாரு
அனைத்ததொரு சித்திதுதா னாருங்காணார்
அசடர்க்கு யிந்நூலைச் காட்டாதென்றே. 534

பசாசுசித்து

காட்டாத கருங்கொள்ளிப் பசாசுசித்து
கண்மணியே சொல்லுகிறேன் கருத்தாய்க்கேளு
வாட்டாத வழலைமெழு வண்டமுப்பு
வளமான பிண்டமடா மலப்புளியுங்கூட்டி
நாட்டாத கல்வமதிற் போட்டுக்கொண்டு
நலமான வண்டபிண்டத் தைலம்வார்த்து
மாட்டாத சாமமது விடாதேயாட்டு
மைந்தனே யாட்டிவர மையாப்போமே. 535

போமேதான் மையெடுத்துச் சிமிழில்வைத்துப்
புகழான மூதேவி முன்னேவைத்து
ஆமேதான் தூமதூமா பதியீஸ்பராவென்று
அப்பனே தோத்தரித்து மையெடுத்து
காமேதான் லாடமதிற் பணவிடைதான்போட்டு
கார்முகமாய் மூலமதிற் கண்ணையோட்டி
வாமேதான் மேல்நோக்கிப் பார்த்திட்டாக்கால்
வளமான கொள்ளிக்காய் கூட்டந்தானே. 536

தானான கூட்டமடா ஐயன்துர்க்கை
தனதான சாமுண்டி பிடாரிக்கூட்டம்
வேனான காட்டேரி முனிகள்பூதம்
விளங்கியதோர் பசாசெல்லாந் தோற்றும்பாரு
கானான கைலங்கிரி நின்றாற்போலே
கண்முன்னே தோற்றுமடா கருவாயென்று
மானான சித்திதுதான் மகத்தாஞ்சித்து
மைந்தனே யிச்சித்தை மருவிக்காணே. 537

சாலச்சித்து தேங்காய்விழ

காணவே சாலமென்ற சித்தைக்கேளு
கண்மணியே கறுப்பில்லா மணக்குமைந்தா
வானவே கன்னிநூல் கொண்டுகட்டி
வளமான ஸ்ரீம்–வம்–ஆம்–ஊம்மென்று
மாணவே லட்சமுரு மாட்டுமாட்டு
மைந்தனே யேகசாமம் நிவர்த்தியாச்சு
ஆணவே பழந்தேங்காய்த் தாம்பூலம்வைத்து
அப்பனே பொங்கலுடன் ஆடுபன்றிகோழி வெட்டே 538

வெட்டுகிற நாளது தானாதிவாரம்
வெளிதான வன்னாளில் வேரைவாங்கு
தொட்டவே தொக்குமிதி னாளைச்சொல்வேன்
தொகுப்பான தீங்களிலே தொக்குதொக்கு
காட்டுமதின் வேரைநன்றாய் வாங்கிக்கொண்டு
கண்மணியே யயச்செம்புக் குளிசத்திட்டு
மாட்டுமிதைத் தேவிமுன்னே வைத்துப்போற்று
மகத்தான குளிசமிதின் மகிமைகேளே. 539

மகிமையென்ற குளிசமிதைப் பெருவிரலிற்கட்டி
மகத்தான தென்னங்காய் மரத்தண்டையேகு
அகியான வொருதட்டு விரலாற்றட்டு
ஆச்சரிய மொருதேங்காய் விழும்பாரு
மகிமையுள்ள தட்டுக்கொரு காய்தான்வீழும்
மைந்தனே சித்திதுதான் மகிமையப்பா
நகியான சாலத்தின் சித்துமைந்தா
நலமான சித்திதுவை நவிலொண்ணாதே. 540

மகாசாலச்சித்து

ஒண்ணாத சாலமதின் சித்து சொன்னேன்
உண்மையுள்ள மகாசால சித்துகேளு
வண்ணாத பசும்பொன் முருங்கைதன்னை
வளமான குருவாரந் தன்னில்மைந்தா
கண்ணாத கன்னிநூல் கொண்டுகட்டி
கண்மணியே நமசிவய நம்வம் வாவென்று
மண்ணாத மண்டலத்தி லட்சமுருவோதி
மைந்தனே தேங்காய்ப்பால் பழங்களாமே. 541

ஆமெனவே பூசைசெய்து பெலிகொடுத்து
அப்பனே வோறாமற் பிடிங்கிக்கொண்டு
வாமெனவே பொன்குளிசஞ் செய்துமைந்தா
வளமான கருத்தொட்டு வேரைப்போட்டு
நாமெனவே யாணுவத்தை நீக்கிப்போடு
நலமான தேவிமுன் வைத்துப்போற்று
காமெனவே காரடங்க ளாடக்கேளு
கண்மணியே யம்மியதை முன்னேவையே 542

வைக்கவே குரிசமிதைச் சுண்டுவிரற்றன்னிய்
வளமான பட்டுநூல் தன்னாற்கட்டி
எய்க்கவே அம்மென்று வாவாவென்று
அப்பனே விரல்நொடிக்கு வருகும்பாரே
மைக்கவே வந்தவம்மி போகவென்றால்
மைந்தனே பெருவிரல் தன்னாற்கட்டி
பைக்கவே பம்உம்போ வென்றாக்கால்
பண்பான விரல்நொடிக்கப் போகும்பாரே 543

செகசால சித்து

பாரேநீ தன்வந்திரியிச் சித்தைத்தான்
பண்பான தந்திரமடா மகாசாலந்தான்
வாரேநீ தந்திரமிது சாலவித்தை
வளமான வித்தையடா செய்துபாரு
ஆரேநீ செகச்சால சித்துசொல்வேன்
ஆச்சரிய மாரறிவார் சாலந்தன்னை
நாரேநீ கரும்பருத்தி மூலந்தன்னைக்
கண்மணியே கன்னிநூல் கொண்டுகட்டே 544

கட்டவே அங்–சிங்–நங்–மங்–வங் கிலியோமென்று
கண்மணியே மண்டலத்தி லட்சமுருவோது
வட்டவே புதவாரந் தன்னிலையா
வளமான பொங்கலுடன்பூசை நைவேத்தியம்பண்ணு
நட்டவே பெலிகொடுத்து வேரைவாங்கி
நலமான வேரதனைச் செம்பட்டுக்குள்வைத்து
மட்டவே வைத்துஅதை தேவிமுன்வைத்து
மைந்தனே யெடுத்துஅதைத் தொழிலாடக்கேளே. 545

கேளெனவே யாரறிவார் சித்துமார்க்கங்
கெடியான சித்திதான் பாருபாரு
ஆளெனவே கத்திமுனை தன்னிற்கட்டி
அப்பனே சிறுபயலைப் படுக்கப்போட்டு
நாளெனவே மனிதரைத்தான் பார்க்கச் சொல்லி
நலமாக வீசடவே மயிரறாது
வாளெனவே வெட்டவெட்ட மயிரறாது
வளமான வதிசயந்தா னூல்கற்றோற்கே 546

திசைசாலசித்து

தேர்க்காண சித்திதுதா னாறுங்காணார்
தொகுப்பறியா மூடரவர் நூலைக்காணார்
வாக்கான திசைசால சித்தைக்கேளு
வளமான வித்தையடா பாவமெத்த
நாக்கான கறுப்புகொடி மூலமையா
நலமான கிருஷ்ணாவில் ரொம்பவுண்டு
மாக்கான வாதித்த வாரநாளில்
மைந்தனே பூர்வமெழு காப்பணிந்தே. 547

கரகமேலேநிற்க

காப்பான ந–சி–ம–ய–வ ந–சியென்று
கண்மணியே மூவாரந் தன்னிற்குள்ளே
நாப்பான லட்சமுரு மாட்டுமாட்டு
நவகோடி சாபங்கள் நிவர்த்தியாச்சு
வாப்பான சகலவபி ஷேகஞ்செய்து
வளமான பூசைபரி நைவேத்தியங்காட்டு
ஆப்பான பெலிகொடுத்து வேரைவாங்கி
அபிஷேகஞ் செய்துஅதை யெடுத்துக்கொள்ளே. 548

கொள்ளேநீ தன்வந்திரி குணமுள்ளானே
குருவான முப்பூவும் வைங்கோலஞ்சேர்த்து
அள்ளேநீ யழைத்துநன்றா யதின்மேற்பூசி
அப்பனே தங்கமதின் குளிசம்பண்ணி
வள்ளேநீ குளிசத்துக் குள்ளேமைந்தா
வளமான வேரறுத்துப் பிட்டைபோட்டும்
மள்ளேநீ தேவிமுன்னே வைத்துப்போற்று
மைந்தனே குளிசமிதை சிரசிற்கட்டே. 549

கட்டவே வுலகமதிற் மோடாகோடி
கரகத்தை யெடுத்துக்கொண்டாடுவார்கள்
மட்டவே மோசமது செய்யவென்றால்
மைந்தனே யவருகில் நின்றுக்கொண்டு
நட்டவே சிங்—வங் கென்றுகும்பி
நலமான கரகமது அந்தரத்தில் நிற்கும்
அட்டவே யவனைத்தா னுலகத்தோர்கள்
அகடளித்து வெகுளியதா யேசுவாரே. 550

ஏசவே யவர்மனது துடித்தால் நல்ல
என்னம்மா தேவியென் வாவாவென்பான்
வாசவே வருகாது கரகந்தானும்
வளமாகக் கட்டிவிட்டா னென்றுசொல்வான்
நாசவே யிச்சித்து மகத்தானசித்து
நாடதிலே வினோதமையா நன்மைநன்மை
ஆசவே யவனோடே தர்க்கம்பண்ணி
யட்சணத்தி லழைக்கிறேன் பரரென்றுசொல்லே. 551

சொல்லவே குளிசமதை மடியில்வைத்து
ஓங்அங் கென்றுசொல்லி ரேசகத்திற்பூசி
அல்லவே யம்மம்மா தேவியாயி
ஆகாச ரூபியென் னம்மாவென்று
வல்லவே யவன்சொன்னாப் போலேசொல்லி
வளமான மனதுள்ளே ரேசகத்தைப்பூசு
கல்லவே யவன்றலையிற் கரகந்தானுங்
கடினமதாய் வந்திரங்குங் கண்டுகொள்ள. 552

கொள்ளவே யபிஷேகம் பூசைபலிசெய்து
கொடிதான வுலகத்தில் பிரளிபண்ணு
நள்ளவே யுனக்கெதிரி பவிசுகெட்டு
நலமான முத்திரையைக் கொடுத்துப்போவாள்
கள்ளமே யில்லாமற் சொல்லிவிட்டேன்
களங்கமிதி லில்லையடா கண்டுகொள்ளு
மள்ளவே மடையருக்குச் சொல்லவேண்டா
மகத்தான பாவத்தால் மடியலாச்சே. 553

ஆச்சரியசித்து

ஆச்செனவே யுலகமெல்லா மாச்சரியசித்து
அரகரா சொல்லுகிறே னறிவாய்க்கேளு
வாச்செனவே விக்கனியின் கொழுப்பை வாங்கி
வளமாகப் பத்துபலம் நிறுத்துக்கொண்டு
போச்செனவே யயச்சட்டி தன்னிற்போட்டு
புகழான வடுப்பேற்றித் தீயைமூட்டி
நாச்செனவே உருக்கிடவே நெய்யாய்ப்போகும்
நலமான நெய்யதனை யிறுத்திவையே. 554

வைக்கவே சற்றுத்தான் கருகிக்கொண்டு
வளமாக மைபோலே மத்தித்தேதான்
நைக்கவே மையதனை சிமிழில் வைத்து
நலமான தேவிமுன் வைத்துப்போற்று
மைக்கவே மையதனைத் திலர்தம்போட்டு
மைந்தனே யுடம்பெல்லாம் நெய்யைப்பூசி
ஐக்கவே அவ்வுமவ்வு மென்றுசொல்லி
அப்பனே காலைசந்தி தெருவிலோடே. 555

ஓடவே மாண்பருக்கு ஆச்சரியமாகும்
உற்றரெத்தந் தனிற்புறண்டாப் போல்தோற்றும்
வாடவே யுத்தத்திற் புரண்டாப்போலே
வளமாகத் தோன்றுமடா மனிதருக்கு
நாடவே யுனைப்பார்த்துப் பயந்துபோவார்
நாடதிலே யதிசயந்தா னன்மைபாரு
ஆடவே யிச்சித்தை ஆடு ஆடு
ஆச்சரிய முலகத்தி லதிசயமாந்தானே. 556

சுக்கிலசித்து

தானான சித்துதான் தண்மையையா
தனதாக வேடிக்கை வினோதமாச்சு
வேனான சுக்கிலத்தின் சித்துசொல்வேன்
விளங்கிய தோர் சுருங்கொள்ளுக் காவாளைமூலம்
ஆனான செடியைமிக கண்டுபார்த்து
அப்பனே கன்னிநூல் கொண்டுகட்டி
மானான மறங்ஸ்ரீங் கென்றுமைந்தா
மைந்தனே மூவாயிரந் தானோதே 557

ஓதவே யம்மூலி சாபம்போச்சு
வுத்தமனே பூசைநன்றாய்ச் செய்துக்கொண்டு
மாதமது பெலிகொடுத்தும் பிடிங்கிக்கொண்டு
மைந்தனே வைங்கோலந் தன்னிற்றோய்த்து
காத்துமே போகாமல் அயச்செம்பைத்தான்
கண்மணியே குளிசமதாய்ச் செய்துக்கொண்டு
வாதமே குளிசமதிற் போட்டுக்கொண்டு
வளமான பிறட்டையைத்தான் மூடுமூடே. 558

மூடியே தேவிமுன் வைத்துப்போற்று
முக்கியமுள்ள குளிசமதை யிடுப்பில்கட்டி
ஆடியே ஸ்தீரிளுடன் போகஞ்செய்நீ
அசையாம லாயிரம் ஸ்திரீகளுடன் புணரலாம்பார்
வாடியே திரியாதே யிதனைப்பாரு
வளமான சித்திதுதான் மகிமைமைந்தா
தேடியே திரிந்தாலு மென்னவுண்டாந்
தெவிட்டாத போதமிதைத் தேடிவாங்கே. 559

மயில்சித்து

வாங்கவே வெற்றிமயில் சித்துசொல்வேன்
வளமாகத் திகைத்துநின்ற பூண்டைவாங்கி
நாங்கவே ரசக்கிண்ணந் தன்னிற்போட்டு
நலமான விந்துவையு மதனில்வார்த்து
மாங்கவே ரவிதனிலே நவநாள்வைக்க
மைந்தவேன மையாகு மெடுத்துக்கொள்ளு
ஆங்கவே சிமிழ்தனிலே யடைத்துக்கொண்டு
அரகரா சுப்பிரமணியந் தன்னைப்போற்றே. 560

போற்றவே ஒங்கிலியுஞ் சிவாயாவென்று
புகழான லட்சமுரு மாட்டுமாட்டு
ஆற்றவே தூபதீப நைவேத்தியஞ்செய்து
அப்பனே சிமிழைத்தா னெடுத்துக்கொண்டு
காற்றவே மையைந்தான் திலர்தம்போடு
கங்கிலியும் வாலைசுப்பிர மணியாவென்று
மாற்றவே மனதிலெண்ணி யுற்றுப்பாரு
மைந்தனே மயிலதுதான் தோற்றும்பாரே. 561

பாரேநீ தன்வந்திரி யுற்றுப்பாரு
பண்பான மயில்மீதில் சுப்பிரமணியர்
பாரேநீ யுன்முன்னே வந்துநிற்பார்
ஆச்சரியங் கண்கோடி பார்க்கக்கூடும்
வாரேநீ பஞ்சவர்ண மயில்போலேதோற்றும்
வளமான சித்திதுதான் மகிமைகாணார்
நாரேநீ நன்மையுள்ள யோகவானே
நலமான சித்துவகை நம்மைகாணே. 562

காணுநீ தன்வந்திரி யிதுவெல்லாந்தான்
கண்மணியே கண்டுணர்ந்து யெனைப்போலாவாய்
வாணுநீ யென்னைப்போ லாருஞ்சொல்லார்
வளமான யிந்நூலோகலைக் ஞானமார்க்கம்
தாணுநீ தன்மையுள்ள நூலாமையா
தண்மையுள்ள நூல்மகிமை யார்தான்காண்பார்
வேணுமெந்த நூல்மார்க்க மியார்தான்காண்பார்
வெகுளிவிட்டுப் பூரகத்தில் நின்றோர்க்கெய்தும். 563

லோகமாய்கை சித்தி

எய்துமென்ற லோகமாய்கை சித்துகேளு
இயல்பான தாம்பரத்தின் தகடுவாங்கி
மைதுமென்ற வாலையுட சக்கரத்தைக்கீறி
மைந்தனே முப்புடனே வைங்காயந்திகைப்பூடு சேர்த்து
ஐதுமென்ற வைங்கோலந் தன்னைவார்த்து
அப்பனே மத்தித்து அதன்மேற்பூசி
மைதுமென்ற வூரருகே நின்றுக்கொண்டு
வளமான சக்கரத்தை வைத்துப்போற்றே. 564

போற்றவே அங்கிலியும் இரீயுமென்று
புகழான லட்சமுரு வோதுவோது
ஆற்றவே யுலகமெல்லா மடியிற்போற்றும்
ஆரகரா வுலகமெல்லாம் வணங்குவார்பார்
நாற்றவே கெசகோடி யுலகமெல்லாம்
நலமாகப் பணியுமடா வுன்பாதத்தில்
வாற்றவே சக்கரத்தில் மகிமை கோடி
வளமான சித்திதுதான் மகிழ்ந்துபாரே. 565

மயேந்திரகுலச்சித்து

பாரான மயேந்திரத்தில் சித்துகேளு
பார்தனிலே விள்ளாதே பரிக்குலத்தை
ஆரான பரியென்ன தங்கந்தங்கம்
அன்பான நாதமடா விவேகத்தங்கம்
வாரான பர்ப்பினியாங் கன்னிநாதம்
வளமான நாதமதை வாங்கிவந்து
தேராத மனத்தோர்க ளிதனைப்பாரு
தேராமல் நின்றமனந் தேன்போலாமே. 566

தானான நாதமதை வாங்கிமைந்தா
தேசத்தி லேரழிஞ்சி செடியைக்கண்டு
வானான வடபக்கந் தோன்றினாக்கால்
வளமான வேரதுதான் வடக்கிற்போகும்
வேனான வேரென்று மதற்குப்பேரு
விளங்கிய தோர்சிவமூலி யென்றும்பாரு
கானான வம்மூலி வாங்கிக்கொண்டு
கனகமென்ற நாதமதி லூறப்போடே. 567

போடுகிற விதமறிந்துபோடச் சொல்வேன்
புகழாக விதின்கூட சிவமுப்பிட்டு
நாடுகிற ரவிதனிலே நவநாள்வைநீ
நலமான வேரதுவுஞ் சத்துகக்கும்
ஆடுகிற விதமறிந்து யெடுத்துக்கொண்டு
அப்பனே நாதமதைச் சீசாவில் வைத்து
வாடுகிற வேரைத்தான் கருக்கிக்கொண்டு
வளமான நாதமிதை விட்டிழைத்தே. 568

இழைத்துமே சிமிழதனிலே பதனம்பண்ணு
என்னசொல்வேன் தேவிமுன்னே வைத்துப்போற்று
வழித்துமே யெடுத்ததனைத் திலதம்போட்டு
வளமான நாதமதைத் தொக்கிடம்போட்டு
அழைத்துமே அங்கிறியும் அல்லம்மாவென்று
அப்பனே யாயிரத்தெட் டுருச்செபித்து
பிழைத்துமே போற்றிநன்றாய்க் கும்பித்தாக்கால்
புகழான மயேந்திரகிரி போலாவாயே. 569

போலாவா யென்மகனே யுனைப்பார்த்தோர்க்குப்
புகழான மயேந்திரகிரி நின்றாற்போலே
ஆலாவாய் வெகுகோடி யதிசயமாமைந்தா
அப்பனே யிப்புதுமை யார்காண்பார்கள்
வாலாவாய் கொடிமுடியை யெட்டிநிற்கும்
வளமான மாண்பருக்கு மலைபோற்றோற்றும்
காலான கால்தன்னால் நடந்துபோநீ
கண்மணியே சஞ்சீவி மலையென்பாரே. 570

என்னவே பயந்தோடு முலக, மெல்லாம்
பென்மகனே மையைநன்றாய்த் துடைத்துப்போடு
கன்னவே மயேந்திரகிரி மாயமாகுங்
கண்மணியே புதுமையென்பான் கசடன்றானும்
வன்னீவே மகாசித்து யிதமாய்ப்பாரு
வளமான சித்திதுதான் மகிமைகாணும்
மன்னவே மகாகோடி சித்தெல்லாந்தான்
மருவிவந்த பூருவத்தா லெடுத்ததாச்சே 571

பஞ்சபூதச்சித்து

ஆச்சென்ற பஞ்சபூத சித்துகேளு
அரகரா யாரறிவா ரிச்சித்தைத்தான்
வாச்சென்ற மதனவல்லிப் பூடுவாங்கி
வளமான விநோதமையின் தைலம்வார்த்து
நாச்சென்ற கரமதுவால் மத்தித்தேதான்
நலமான சிமிழ்தளிலே வழித்துவைத்து
காச்சென்ற தேவிமுன்னே வைத்துப்போற்று
கண்மணியே மையெடுத்து கண்ணீற்றீத்தே. 572

தீத்தியே லாடமதில் திலர்தம்போடு
திமிர்த்தெண்ட மிடுஅங்கிலி அல்லென்று
வாத்தியே பூரகத்தில் தியானம்பண்ணு
வளமாக வுற்றுப்பா ருன்முன்னேதான்
நாத்தியே யீஸ்பரனும் விஷ்ணுதானும்
நலமான ருத்திரனுப் பிரமதேவன்
ஆத்தியே சதாசிவத்தோ ரடைவர்தானும்
அன்பாக வுன்முன்னே நிற்பார்பாரே. 573

நிற்கவே யவரவர்தான் வாகனத்தின்மீதில்
நிலையாக வவரவர்தா னிற்பார்பாரு
நிற்கவே நிலைபெறா திருப்பாரையா
நேரான யைவருட காந்திகோடி
நிற்கவே வரங்கோடி யீவாரையா
நெறிதவறா தறிவதனாற் கேட்டுக்கொள்ளு
நிற்கவே வாசிநிலை தன்னைக்கேளு
நிலைக்காதே பூரணத்தி னிலையைக்கேளு 574

கேளேநீ தன்வந்திரி விந்துநிலையெல்லாங்
கெடியாகக்கேட்டு அவர்தன்னை மைந்தா
வாளேநீ மையைத்தான் துடைத்துவிட்டால்
வளமாக மறைந்துஅவர் போவார்மைந்தா
ஆளேநீ யரைநொடியில் சித்துவகையெல்லாம்
அப்பனே யாடும்விதம்நன்றாய்ச் சொன்னேன்
மாளேநீ யின்னூலாங் கலைக்ஞானத்தில்
மருவிவருஞ் சித்துகள்தன் மகிமைகாணே. 575

வசியச்சித்து

காணவே வசியமென்ற சித்தைக்கேளு
கண்மணியே திகைப்பூடைக் கொண்டுவந்து
நாணவே கருக்கியதைப் பரணியில்வைத்து
நலமாக வொருவாரம் பலவேளைக்கு
வாணவே வீதியென்ற வீதிதன்னில்
வளமான யெட்டாநாள் போவீராகில்
ஆணவே யுன்வாயால் பேசினாக்கால்
அமுர்தமது விழுந்திடுமென் றடிபணிவார்பாரே. 576

பாரான வசியத்தி லிதற்கீடில்லை
பாலகனே யிம்முறைதான் பகர்ந்தோம்நாமும்
ஆரான வாதாரப்பூட்டில் மைந்தா
ஆச்சரிய மாரறிவார் திகைப்பூட்டைத்தான்
நீராகப் பதைநீறு வமுர்தநீறு
நிலைத்தகங்கை சுத்தபண் யமுர்தநீறு
வாரான வந்நீரில் திகைப்பூடாச்சு
வளமான யென்னிகண்டில் திறந்திட்டேனே. 577

குறுநீர்வசியச்சித்து

திறக்கமில்லா வசியச்சித்துச் சொல்லக்கேளு
திருவான முக்கருவை யெடுத்துவந்து
வார்க்கமில்லாப் பனிநீரை வார்த்துமைந்தா
வளமாகப் பிசைந்துநன்றா யுண்டைபண்ணி
மாற்கமில்லா விந்தாலே சீலைசெய்து
மைந்தனே கெசபுடத்திற் போடுபோடு
ஆற்கமில்லா வாறினபின் னெடுத்துப்பாரு
அரகரா சந்திரன்போல் திருநீறாமே 578

ஆமென்ற சுரக்குடுக்கில் திருநீறு வைத்து
அப்பனே சிங்–லங் யங்கென்றோதி
வாமென்ற வாயிர முருத்தானோதி
வளமான பூசை நைவேத்தியம் பண்ணி
நாமென்ற வாணுவத்தாற் சொல்லிவிட்டோம்
நலமான திருநீறு விள்ளவேண்டாம்
காமென்ற திருநீறை லாடம்பூசிக்
கண்மணியே லயநமசி ஓமென்றேற்றே. 579

ஏற்றியே நடுவீதி போபோவையா
என்மகனே யுனைக்கண்ட மனிதரெல்லாம்
வாற்றியே வாவையா சரணமென்று
வளமாகத் தான்பணி வாருலகமெல்லாம்
நாற்றிசையு முனைப்போற்று முலகமெல்லாம்
நலமாகத்தான் பணிவார் நாற்றிசையுமைந்தா
வாற்றியே வசியமது மகத்தாஞ்சித்து
மகத்தான சித்திதுதான் மருவிக்காணே. 580

சேனைமாரணச்சித்து உடன்கட்டைச் சாம்பல்

காணப்பா யின்னமொரு சித்து சொல்வேன்
கருத்தான சித்திதுவை யார்தான்காண்பார்
மாணப்பா சேனைமாரண சித்தைச்சொல்வேன்
மகத்தான சித்திதுவை யார்தான்காண்பார்.
வாணப்பா வுடன்கட்டை யேறுஞ்சாம்பல்
வளமான சாம்பலத்தை வாரிவந்து
நாணப்பா ஆம்ஊம் – அரிவோமல்லம்மா சுவாகாவென்று
நலமாக லட்சத் தெண்ணாயிரந்தான் சேவி. 581

செவிக்கவே பூசைபெலி பானஞ்செய்து
செயமான மண்பாண்டங் கொண்டுவந்து
அவிக்கவே யதிற்போட்டுக் கருவைத்தொட்டு
அம்மம்மா தேவியென வடிபணிந்து
நவிக்கவே சேனைதள முன்னேபோய்நீ
நலமான பாண்டமிதைச் சிரசில்வைத்து
வலிக்கவே மசியநவ உச்சாடாயாவென்று
வளமாக நூற்றியெட்டு வுருத்தானோதே. 582

ஓதியே மேற்காற்றுத் திரும்பும்போது
உத்தமனே குடத்தை நன்றாயுடைத்துப்போடு
வாதியே வந்தபடை சேனைதளமெல்லாம்
வளமாக அவரவரால் வெட்டுண்டுசாவார்
நாதியே யவன்சேனை யவனைக்கொல்லும்
நலமாகச் சணமதிலே படுகாடாகும்
வீதியே வந்தபடை சேனை தளமெல்லாம்
விளங்கியதோர் காற்றதனில் தூசி போலாமே. 583

பொய்க்குருக்கள்

தூசான தூசெல்லா மடிந்துபோகுந்
துஷ்டகெணங் கோடாகோடி துடித்துக்கொல்லும்
மாசான பூருவத்தா லெல்லாமாச்சு
மடிந்ததொரு சேனையெல்லாம் பூர்வமாச்சு
காசான காசாய மெடுத்தாலென்ன
கணக்கறியாத் தாடிதலை வளர்ந்தாலென்ன
பாசான லங்கோடு கட்டினதாலென்ன
பருவமென்ற யோகதண்டு வைத்தாலென்ன. 584

என்னவடா விபூதியைப் பூசினதாலென்ன
யேகமென்ற ருத்திராட்சம் பூண்டாலென்ன
கன்னவடா கஞ்சாவைக் கொண்டாலென்ன
கருவறியா வேடமதைப் பூண்டாலென்ன
மன்னவடா மதியமுர்த மென்றுசொல்லி
மதியறியாய்ச் சாராயங்கள் குடித்தாலென்ன
அன்னவடா வாய்மூடித் திரிந்தாலென்ன
அழகான மவுனமென்றுஞ் சொன்னாலென்னே. 585

மவுனமெனச் சித்தனென்றுந் திரிவார்கோடி
மகத்தான சித்தனென்றுந் திரிவார்கோடி
கெவுனமென்று குளிகைசித்த னென்றுசொல்லி
கேள்வியது பேசிக்கொண் டலைவார்கோடி
அவுனமில்லா மடையரவ ரழுவார்கோடி
அழும்புண்ட வசடர்களை யகலத்தள்ளு
கனவுமது கொண்டலைந்த கசடர்கோடி
கனவான ஸ்ரீமாய்கை கொண்டலைவார்காணே. 586

காணப்பா தன்வந்திரி கருவுள்ளானே
களங்கமற்றுப் பூரகத்தில் கருவாயொட்டி
வாணப்பா ரகமெட்டுங் கட்டிக்கொண்டு
வளமான சாத்திரங்கள் பார்த்தால்சித்தி
ஆணப்பா மற்றமற்ற மடையர்பார்த்தால்
ஆவதென்ன சாத்திரங்கள் பொய்யாப்போகும்
மாணப்பா புத்தியுள்ள சிவயோகிக்கு
மகத்தான சாத்திரங்க ளெய்தும்பாரே. 587

பாரப்பா தன்வந்திரி யெந்தனுக்குப்
பண்பான தேவியவ ளெனக்குச்சொன்னாள்
ஆரப்பா யான்கண்டு வுந்தனுக்கு
அன்பாகச் சொல்லிவிட்டே னறிந்துகொள்ளு
வாரப்பா யின்னூலில் சகலகலையெல்லாம்
வளமாக மாட்டிவிட்டே னாருக்கெய்து
மாரப்பா மனமடங்கி நின்றோருக்கு
மைந்தனே யின்னூல்தா னெய்தும்பாரே. 588

செப்படியின் சித்து

பாரென்ற செப்படியின் சித்துகேளு
பருங்கடுக்காய் தனையெடுத்துக் கருக்கிக்கொண்டு
நேரென்ற நெறிதவரா முப்புசேர்த்து
நிட்களமா மதிற்கலந்து சொல்லக்கேளு
வாரென்ற வைங்கோல தைலம்வார்த்து
வளமாக மத்தித்துச் சிமிழில்வைத்து
காரென்ற தேவிமுன்னே வைத்துப்பூசி
கனகமென்று மனதிலெண்ணிக் கருவாய்ப்போற்றே 589

போற்றவே தேங்காயைக் கொண்டுவந்து
புகழான மையதனை யதன்மேற்பூசி
ஆற்றவே நேர்ந்தமயேஸ்வரனை வங்சிங்கென்று
அநாகதத்தில் கும்பித்துச் சொல்லக்கேளு
வேற்றவே தேங்காயை மேலேபோட்டு
வேதாந்த பயிரவி சாமுண்டிதேவி
மாற்றவே மாயிமகா தேவியென்று
மைந்தனே வெகுளிபண்ணி நின்றுக்கொள்ளே 590

கொள்ளநீ தன்வந்திரி நின்றுபாரு
குருவான கருத்தேங்கா யந்திரத்தில்நிற்கும்
கொள்ளேநீ யுலகமெல்லா மதிசயமாய்ப்பார்ப்பார்
குணமுள்ள குருவென்றும் பணிவார்மைந்தா
கொள்ளேநீ யிச்சித்து மகத்தாஞ்சித்து
குருவந்து ஆடுகிறா ரென்றுசொல்வார்
கொள்ளேநீ செப்படியின் சித்தைமைந்தா
குருவதனா லாடுகிற வித்தையாச்சே 591

காரடசித்து

ஆச்சென்ற செப்படியின் சித்தைச்சொன்னேன்
அப்பனே காரட சித்தைக்கேளு
வாச்சென்ற குசவனிடந் தன்னிலேகி
வளமான சிறுவடுப்பு பண்ணச்சொல்லு
காச்சென்ற வடிதனிலே புதைத்துவைத்து
நலமான செம்மண்ணைக் கரைத்துப்பூசி
காச்சென்ற ரவிதனிலே காயவைத்து
கண்மணியே வப்பிரேகம் விருத்தம்போல்வெட்டே 592

வெட்டியே விளாம்பிசினை யுரைத்துப்பூசி
விளங்கியதோர் தலைசரியா யடுப்பிலேயொட்டி
வெட்டியே தலைமீதி லடுப்பைவைத்து
விளங்கியதோ ரக்கினியை மூட்டிக்கொண்டு
வெட்டிய நெய்ச்சட்டி யடுப்பிலேற்றி
வேதாந்தப் பலகாரஞ் சுட்டுப்போட்டு
வெட்டியே யக்கினித்தம்பக் காரனென்று
வேதாந்தி யுன்னடியில் பணிவார்பாரே. 593

பாரென்ற குங்கிலியந் தூளாய்ப்பண்ணி
பண்பான யெண்ணெய்தனிற் போட்டிட்டாக்கால்
ஆரென்ற வெகுளென்று அக்கினிதான் வீசும்
அப்பனே யுலகத்தோர் புதுமையென்பார்
வாரென்ற சித்திதுவைச் செய்துபாரு
வளமான சித்திதுதான் காரடங்களையா
நாரென்ற தந்திரத்தா லொன்றுமில்லை
நலமான கருத்தொழிலை ஆடுஆடே. 594

யட்சணியின் சித்து

ஆடவே யட்சணியின் சித்துசொல்வேன்
அரகரா யிச்சித்து ஆர்தான்காண்பார்
வாடவே பஞ்சமலம் புளியுஞ்சேர்த்து
வளமான முப்புதா னோர்கழஞ்சுபோட்டு
நாடவே கல்வத்திற் போட்டுக்கொண்டு
நலமான விநோதமைத் தைலம்வார்த்து
காடவே யரைக்கையிலே யண்டரசம்வார்த்துக்
கண்மணியே யிருசாம மரைத்திடாயே 595

அரைத்திடவே மெழுகாகு மெடுத்துக்கொண்டு
அப்பனே சிமிழ்தனிலே பதனம்பண்ணு
வரைத்திடவே தேவிமுன்னே வைத்துப்போற்றி
வளமான நிம்பப்பழங் கொண்டுவந்து
கரைத்திடவே யூசிகொண்டு குத்திமைந்தா
கண்மணியே மெழுகதிலே கடுகளவுபோட்டு
மரைத்திடவே தேன்மெழுகா லடைத்துப்போட்டு
மைந்தனே மேல்நோக்கி வீசிப்போடே.

போடவே யந்திரமாய் நிற்கும்பாரு
புகழான யட்சணியி னகத்தைமைந்தா
நாடதிலே வெகுகோடி யதிசயமாய்ப்பார்ப்பார்
நலமான சித்திதுதா னன்மைபாரு
ஆடவே யிச்சித்தை யாடிப்பாரு
ஆனதொரு விநோதமிது யார்தான்காண்பார்
வாடவே யொருநாளும் வேண்டாமையா
வளமான சித்திதுதான் வண்மைகாணே 597

காணே நீ தன்வந்திரி யறிவுள்ளானே
 களங்கமில்லாச் சித்தெல்லா மாடுஆடு
வாணேநீ யென்மகனே தர்மயோகி
 வளமான மனமடங்கி யறிவில்நில்லு
ஆணேநீ யரனவர்தா னுமைக்குச்சொல்ல
 அப்பனே யுமையவளு மெனக்குச்சொன்னாள்
மாணேநீ மதியமுர்த மெனக் கேயீய்ந்தாள்
 மகத்தான காஷ்டசௌ பாக்கியமாச்சே. 598

உச்சாடனச் சித்து

ஆச்சென்ற வுச்சாடனத்தின் சித்துசொல்வேன்
 அரகரா அங்–சங்–நசி–மங்கென்று
வாச்சென்ற யெதிரியவர் பேரைமாற்றி
 வளமான வாயிரத்தெட் டுவைச்சொல்லி
காச்சென்ற பூசைபெலி நன்றாய்ச்செய்து
 கண்மணியே கருவெடுத்து அவருட்டில்தொட்டு
நாச்சென்ற நீயிருக்கு மிடத்தையேசி
 நலமான வுருவைத்தா னோதுவோது. 599

ஒதவே மாடனவ னுச்சாடிப்பான்
 னுத்தமனே மாடனவ னெரிப்பான்பாரு
காதவே யில்லையடா மூலமூலங்
 கண்காட்சி வேடிக்கை விநோதமாச்சு
நாதவே தெண்டகத்திற் கருவாய்ச்சொன்னேன்
 நலமான தெண்டகமும் பாருபாரு
வாதவே யின்னூலிற் கோடாகோடி
 வளமான சித்தெல்லா மாடுவாயே. 600

ஆடுநீ யிடுமருந்து சித்துசொல்வேன்
 அரகரா ஏரழிஞ்சிச் செடியைப்பார்த்து
வாடுமடா கன்னிநூல் காப்பணிந்து
 வளமான டிங்–டிங்–றிங் றிங்கென்று
நாடவே யாயிரத்தெட் டுருவுமோது
 நலமான பெலிகொடுத்து வேரைவாங்கி
காடுநீ கல்வமதிற் போட்டுக்கொண்டு
 கண்மணியே விந்துவிட்டு வரைத்துக்கொள்ளே. 601

இடுமருந்து சித்து

கொள்ளவே தன்னுடைய பஞ்சமலஞ்சேர்த்துக்
கொடுத்துவிடு மதின்பண்ட மதனில்மைந்தா
அள்ளவே யரைநொடியில் ஸ்திரீகடானும்
அப்பனே யுன்னினைவைப் போற்றுவார்கள்
யள்ளவே முனிகள்சொன்ன யீடெல்லாந்தான்
வளமாக யிதற்கீடு வுண்டோமைந்தா
மள்ளவே சூட்சுமமா மூலிவித்தை
மகத்தான வித்தையிது மருவிப்பாரே. 602

சந்தனச்சித்து

பாரேநீ சந்தனமாஞ் சித்துசொல்வேன்
பண்பான யேரழுஞ்சிக் கொட்டைதன்னை
ஆரேநீ சுத்தமென்ற சலத்திற்போட்டு
அப்பனே மூன்றுநா ளூறவைத்து
காரேநீ கடுரவியி லுலரப்போட்டுக்
கண்மணியே வாசமதை நன்றாய்க்கட்டி
நாரேநீ நங்—வங் கென்றேசொல்
நலமாக நூற்றெட்டு வுருத்தானோதே. 603

ஓதவே மூலிவிரை சாபம்போச்சு
உத்தமனே யுரைத்துநன்றாய்த் திலர்தம்போட்டு
வாதந்த வழிதனிலே போனாயானால்
வளமான ஸ்ரீகளுன்னை வணங்குவார்பார்
நாதந்த வசியமிது ராசாளிபோலாம்
நலமான வசியமடா நன்மைகாணும்
காதந்தா னில்லையடா யனேகமுண்டு
கண்மணியே மலைச்சாரல் தன்னிலுண்டே. 604

சவர்க்காரச்சித்து

உண்டான சவர்க்காரமைசித்துச் சொல்வேன்
உத்தமனே யண்டசவர்க் காரம்வாங்கி
உண்டான யேழுகண்ட சட்டிவாங்கி
யுணர்வாக வதிற்போட்டு வடுப்பிலேற்றி
உண்டான தீமூட்டிக் கருக்கிக்கொண்டு
வுருவான வண்டபிண்டத் தயிலம்வார்த்து
உண்டான கரமதுவால் மத்தித்தேதா
னுருளையென்ற பாணியிலே வழித்துப்போடே. 605

போட்டுமே வாசமது மிகவுங்கட்டிப்
பொன்னுமையாள் தேவிமுன்னே வைத்துப்போற்றி
நாட்டுமே பூசைநைவேத்தியஞ் செய்து
நலமான மையெடுத்துத் திலர்தம்போட்டு
காட்டுமே யுன்முகத்தைக் கண்டபேர்க்குக்
கனகரத்தின நின்றாப்போல் கலங்கிநிற்பார்
வாட்டுமே நீ கேட்ட தெல்லாமீவார்
வளமான மோகவெறி கொண்டலைவார்தானே. 606

தானான வசியமிதற் கீடுண்டோமைந்தா
தண்மைவெகு தண்மையடா வசியமார்தாம்
வேனான வசியங்க ளிதற்கீடுண்டோ
விளங்கியதோர் மாயப்பொடி யிதற்கீடுண்டோ
மானான மாய்கையிலே கோடாகோடி
மயக்கமென்ற மோகவெறி கோடாகோடி
வானான வித்தையடா வழியாய்க்காணும்
வளமான சித்துதான் வண்மையாமே. 607

மதிமயக்குஞ்சித்து

ஆமென்ற மதிமயக்கும் பொடியைச்சொல்வேன்
ஆதியென்ற பூர்வமுப்பு வைங்காயங்கூட்டு
நாமென்ற திகைப்பூடுஞ் சிறியாநங்கை
நலமான மூலிவகை சொல்வேன்கேளு
காமென்ற விஷமூலி சிறுகரந்தை
கண்மணியே வெட்டிவேர் விலாமிச்சுவேர்
வாமென்ற தொட்டால்வாடி யிந்திரகோபம்
வளமான திவையெல்லாம் பொடியாய்ப்பண்ணே 608

பண்ணவே முன்கருவில் கலந்துகொண்டு
பண்பான புதுக்கலயந் தன்னிற்போட்டு
அண்ணவே கஸ்தூரி புனுகுசவ்வாது சட்டம்
அப்பனே வாசமது கட்டிக்கொண்டு
கண்ணவே தேவிமுன்னே வைத்துப்போற்றி
கண்மணியே வாடைதனை யெடுத்துக்கொண்டு
வண்ணவே ஸ்திரீமீதில் வீசினாக்கால்
வளமாக மதிமயங்கி மோகவெறிகொள்ளும். 609

கொள்ளவே நடந்துவிடு முன்னேமைந்தா
கொடிதான வெறிகொண்டு வருவாள்பாரு
அள்ளவே ராஜருட வருகில்நின்று
அப்பனே காற்றுவாடை தன்னில்வீசு
வள்ளவே மதிமயங்கி யுன்னைப்பார்த்து
வளமாகத் தானழைப்பா ருன்னைத்தானும்
கள்ளமில்லாத் தாம்பூலந் தன்னில்மைந்தா
கண்மணியே பொடியைவைத்து மடித்துயீயே. 610

ஈயவே நீகேட்ட செல்வமீவார்
இயலான வசியமடா யிதற்கீடுண்டோ
நையவே ராஜருட நேசமெய்தும்
நலமான சித்திதுதா னன்மைநன்மை
வையவே குபேரனவ னுனக்கீடில்லை
வளமான வுன்வாக்கு பரித்தங்கமாச்சு
மையவே வாதமது வேறுண்டோமைந்தா
மகத்தான குபேரனிதி நீதானாச்சே. 611

மோடிவித்தை

ஆச்சென்ற மோடிவித்தை தன்னைக்கேளு
ஆச்சரிய மாச்சரியஞ் சொல்வேன்மைந்தா
காச்சென்ற சாரமுடன் சூரஞ்சேர்த்து
கண்மணியே குருவண்டு வைங்காயந்தான்
வாச்சென்ற கருநாபி சவ்வீரந்தான்
வளமாக வகைக்குவொரு பலமும்வாங்கி
நாச்சென்ற பூரமுட னண்டரசம்வாங்கி
நலமாகத் தியானமுடன் துருசுநீரே. 612

நீரான வகைக்குமொரு பலமும்வாங்கி
நிலையான பாண்டமதிற் போட்டுக்கொண்டு
நீரான குழித்தலைந் தன்னைவாங்கி
நிமித்தமென்ற சீசாவில் பதனம் பண்ணி
நீரான வாலைமுன்னே வைத்துப்பூசி
நிட்களமாந் தேவிமகா மாயியென்று
நீரான தேவிசிவ காமியென்று
நீமகனே கும்பித்துப் பூசைபண்ணே. 613

பண்ணியே தைலமதை யெடுத்துக்கொண்டு
பார்தனிலே சாலமென்றே மோடியாட
பண்ணியே பசார்வீதி தன்னிற்குந்தி
பாலகனே நைவேத்திய மன்பாய்ச்செய்து
பண்ணவே பூசையுடன் பெலிகள்வைத்து
பண்பான தேங்காயொன்று டைத்துக்கொண்டு
பண்ணியே தைலமதை நன்றாய்ப்பூசி
பகுர்தியென்ற விகுர்திசித்து ஆடக்கேளே. 614

கேளென்ற தேங்காயை வைத்துமையா
கெட்டியடா மோடியெடு வென்றுசொல்லு
கேளென்ற மாண்பனவ னோடிவந்து
கேளிதோ வெடுக்கிறேன் பாரென்றுசொல்லி
கேளென்ற தேங்காய்தா னோடும்பாரு
கேளிக்கை வினோதமடா பிடிக்கமாட்டான்
கேளென்ற தேங்காயைப் பிடித்தாற்கொல்லுங்
கெடியான சம்பிரமதாய் மிகுதிப்பாரே. 615

பாரப்பா புதுத்தோண்டி யொன்றுவாங்கி
பாலகனே மோடியண்டை வைத்துக்கொண்டு
ஆரப்பா பெருவிரலில் தைலந்தொட்டு
ஆச்சரியம் பனையோலை கையில்வைத்து
நாரப்பா பச்சைப்பாம் பதுபோற்றோன்றும்
நலமாக யெடுவென்று பாண்டம்போட்டு
வாரப்பா யெதிரியவ னெடுத்தானாகில்
வளமான பனையோலை கையிற்சிக்கும். 616

சிக்கியே யெடுத்தவனு மாய்வான்பாரு
சீசீசீ யோலைதனை யீய்ந்தாயென்று
சிக்கியே வாதாடித் தர்க்கஞ்செய்து
சணத்திலே பாம்பழைப்பே னென்றுநீயும்
சிக்கியே கருத்தொட்டு ஒலைதனைப்போடு
செகசால முள்ளபதி பாம்பாய்த்தோன்றும்
சிக்கியே யுலகத்தில் வினோதமையா
சிவசிவா யென்னசொல்வேன் மோடிமார்க்கம். 617

மார்க்கமென்ற மோடிதனை யென்னசொல்வேன்
மகத்தான மோடிவித்தை மருவிப்பாரு
மார்க்ககமென்ற மோடியது பத்துநான்கு
மகாசால மென்றதோ வறுபத்துநான்கும்
மார்க்கமென்ற கருக்களறு பத்துநாலு
மைந்தனே யெட்டுத்தொழி லட்டகர்மம்
மார்க்கமென்ற சித்துக ளறுபத்துநாலு
மடிபிடிகள் வாடைதொழில் கோடாகோடி. 618

நூலறிய—தண்டகம்—பூரணநூல்—நிகண்டு—காவியம்

கோடியென்ற கெசகோடி சித்தர்க்கெல்லாங்
குருவான சற்குருவை யின்னூலிற் சொன்னேன்.
கோடியென்ற நவமூலந் திசைமூலமெல்லாங்
குணமான விந்நூலிற் கூர்ந்துபாரு
கோடியென்ற பிதிர்க்களெல்லா மிந்நூலிற்பாருபாரு
குறியறியா னென்னிகண்டைக் கூர்ந்துபாரு
கோடியென்ற பூரணநூ லதனைப்பாரு
குருடருக்குந் தோற்றுமடா யெந்நூல்பாரே. 619

நூலனா நூலப்பா தெண்டகத்தைப்பாரு
நுணுக்கமில்லா கருவெல்லா மிதிலேதோற்றும்
நூலான காவியநூல் தன்னைப்பாரு
நுண்மையுள்ள காவியத்தை யார்தான்காண்பார்
நூலான நூலையா யார்க்குக்கிட்டும்
நுருவழிந்த மாண்பருக்குக் கிட்டாதையா
நூலான சாத்திரத்தைக் கண்டோருக்கு
நுண்மையது சித்திக்குங் காட்டொண்ணாதே. 620

ஒண்ணாத சகலகலை யெல்லாஞ்சொன்னேன்.
நுண்மையுள்ள பொருளெல்லா மிதிலேசொன்னேன்.
காணாத கண்காட்சிக் காணச்சொன்னேன்
கலங்கியதோர் பொதியதீர்த்தங் கொள்ளச்சொன்னேன்.
வண்ணாத வாசியுட நேர்மைசொன்னேன்
வழங்கியதோர் பிராணாயக் கூத்துஞ்சொன்னேன்
அண்ணாத சிவசத்தி மார்க்கஞ்சொன்னேன்
அன்பான வைம்பூதத் தாதியாச்சே. 621

சரக்குவைப்பு – மெருவு

ஆச்சப்பா சரக்குவைப்புக் கெல்லாமைந்தா
ஆச்சரிய மெருவைநன்றாய்ச் சொல்வேன்கேளு
வாச்சப்பா முதற்பிண்டம் வாங்கிவந்து
வளமான கத்திகொண்டு பிளந்துமைந்தா
நாச்சப்பா நஞ்சுகொடி மாமிஷங்களுண்டு
நலமான கசடெல்லா மெடுத்துவந்து
காச்சப்பா வுவருப்பில் பிரட்டிக்கொண்டு
கண்மணியே ரவிதனிலே யுலர்த்துலர்த்தே. 622

உலர்த்தவே யெருவாகு மைந்தாமைந்தா
உற்றசவர்க் காரயெரு வுண்மையுண்மை
உலர்த்தவே சரக்குவைப்புக் கெல்லாம்போடு
உத்தமனே யெருவிதுதா னுண்மையுண்மை
உலர்த்தவே மலப்புளிதா னெருவுமாகு
முத்தமியாள் சுத்தமல மெருவுமாச்சு
உலர்த்தவே யிதுகளுடன் வேறொன்றில்லை
உருவான திதுரண்டு முண்மையுண்மை. 623

சீனவைப்பு

உண்மையென்ற சரக்குவைப்பின் குருதான்சொன்னே
னுணர்வான சரக்குவைப்பின் மகத்துவங்கேளு
வண்மையென்ற கல்லுப்பு கரியுப்போடு
வளமான திதுரண்டுங் கல்வத்திட்டு
அண்மையென்ற காமநீர் தன்னாலாட்டி
அழகான யெருமைக்கடா தயிர்வார்த்தாட்டி
பண்மையென்ற பாண்டமதிற் போட்டுமைந்தா
பண்பான சில்போட்டுச் சீலைசெய்யே. 624

செய்யவே குழிவெட்டி யெருவைக்கொட்டி
செயமாக மேலுமந்த யெருவைக்கொட்டி
வையவே மாதிநின்ற பாண்டந்தன்னை
வளமக மண்டலஞ்சென் றெடுத்துப்பாரு
ஐயவே சரக்குவைப்பை யென்னசொல்வேன்
ஆச்சரியஞ் சரக்குவைப்பு யிதுபோலுண்டோ
கையவே சீனமதை யென்னசொல்வேன்
கண்மணியே யிச்சீன மகத்துவமாமே. 625

பூரவைப்பு

ஆமப்பா பூரமதின் வைப்புசொல்வேன்
ஆச்சரிய மாரறிவார் வைப்புமார்க்கம்
நாமப்பா சீனமுடன் விந்துசேர்த்து
நலமாகப் பிசைந்துவதைப் பாண்டத்திட்டு
காமப்பா சீலையதுது நன்றாய்ச்செய்து
கண்மணியே குழிவெட்டி யெருவைப்போட்டு
வாமப்பா மேலுமந்த வெருவைக்கொட்டி
வளமான சமாதிடத்தில் குருபூசைபண்ணே 626

பண்ணவே மண்டலஞ்சென் றெடுத்துப்பாரு
பண்பான பூரமடா வெண்சாரைபோலாம்
அண்ணவே–முனிகள் சொன்ன பூரமெல்லாம்
ஆச்சரிய மிதற்கீடு வொன்றுமில்லை
கண்ணவே வெகுகோடி சூட்சமெல்லாங்
கைமுறையாய்ச் சோதித்து யிதனைச்சொன்னேன்
வண்ணவே சித்தரவரிவ்விதமாய்ச் சொல்வார்
வளமாகச் சொல்லிவிட்டேன் மகிழ்ந்துபாரே. 627

பாரான பூரமிதை யெடுத்திட்டாக்காற்
பண்பான கெசகோடி வேதையாகும்
நேரான நெறியெல்லாம் பூரத்தாலே
நின்றநெறி பூரணமும் பூரத்தாலே
வாரான வகையெல்லாம் பூரத்தினாலே
வளர்ந்துதடா தொந்தங்க ளிதனாற்கோடி
வேரான வேதைமயம் ஞானமயமெல்லாம்
விளங்கியதோர் பூரத்தா லெடுத்தகூரே. 628

வெண்காரவைப்பு

கூரறியா மடையர்களே சொல்லக்கேளு
குருவான வெண்கார வைப்புசொல்வேன்
ஆருமறி யாததொரு பூநீறுதான்
அழகான கல்லுப்புப் பிண்டமுப்பு
வாரறியா விந்துவுடன் சிவவுப்புமாகும்
வகைவகையாச் சரியிடைக்குச் சரியாய்ச்சேர்த்து
மாரறியாச் சதுரக்கள்ளிப் பாலை வார்த்து
கருவான வெண்காரம் உப்புமாச்சே. 629

போடவே மேலுமொரு சட்டிமூடி
பேரான மண்சீலை யேழுஞ்செய்து
நாடவே குழிவெட்டி யெருவைக்கொட்டி
நலமாகப் பாண்டம்வைத்து சமாதிசெய்து
நீடவே மண்டலஞ்சென் றெடுத்துப்பாரு
நிசமான வெண்கார மென்னசொல்வேன்
காடவே கருக்குருவாம் வெண்காரப்போக்குக்
கருவான வெண்காரம் உப்புமாச்சே. 630

சுத்தவெண்காரம்

உப்பான உப்பதனை யென்னசொல்வேன்
உருவான வெண்கார வைப்புவையா
அப்பான சுத்தவெண் காரஞ்சொல்வேன்
ஆச்சரியம் வெண்கார மென்னசொல்வேன்
வப்பான சீனமுடன் பொட்டிலுப்புத்தான்
வளமான முன்வைப்பு வெண்காரங்கூட்டு
கப்பான பிண்டமாச் சரியாய்ச்சேரு
கண்மணியே யெருக்கம்பால் தன்னைவார்த்தே. 631

வார்த்துமே பிசைந்து நன்றாய் கிண்டிக்கொண்டு
வளமான பாண்டமதிற் சீலைபோட்டு
வார்த்துமே பனிநீரைத் தெளித்துப்போட்டு
வகையாகச் சில்போட்டுச் சீலைசெய்து
வார்த்துமே குப்பைதனிற் குழியைவெட்டி
வாழ்வுகர ணாதியென்ற வெருவைக்கொட்டி
வார்த்துமே பாண்டமிதை வைத்துப்பிள்ளாய்
வகைதெரியச் சமாதியது வைத்துப்போற்றே 632

போற்றியே மண்டலஞ்சென் றெடுத்துப்பாரு
புகழ்சுத்த நீர்வெண்கார மென்னசொல்வேன்
போற்றியே சாரமென்ற வைப்பைக்கேளு
புகழான பிண்டமடா அண்டமாவு
போற்றியே நாதமுடன் சிறுநீருஞ்சேர்த்துப்
புகழான மூன்றுமுறை மடக்கிக்காச்சு
போற்றியே வைந்துவகை நீரோடொக்க
பேரான சத்திமுப்பு கழஞ்சிபோடே. 633

சாரவைப்பு

போடவே யண்டச்சுண்ணம் விஷச்சுண்ணங்கேளு
புகழான பிண்ட சவர்க்காரஞ்சேரு
ஆடவே யிதுவெல்லாஞ் சமநாய்க்கொண்டு
அப்பனே பாண்டமதிற் கலந்துபோட்டு
நீடவே பசுநின்ற யிடத்திலேகி
நிசமான குழிதோண்டி சமாதிவைத்து
நாடவே மண்டலஞ்சென் றெடுத்துப்பாரு
நலமான சாரமிதை நவிலொண்ணாதே. 634

ஒண்ணாத சாரத்தா லெல்லாமாச்சு
ஒடுங்குகிற வாய்வதுவு மிதனாலாச்சு
ஒண்ணான வேதைமயம் ஞானப்போக்கும்
ஒகோகோ வைத்தியமு மிதனாலாச்சு
ஒண்ணான சாரமிது யிருந்தாலையா
உயர்ந்தெழும்பும் வாய்வதுவு முள்மூலம்புக்கும்
ஒண்ணான வயித்தியற்கும் வாதிகட்கும்
முண்மையுள்ள ஞானிகட்கும் யோகத்தார்க்காமே 635

காரவைப்பு

ஆமேதான் காரவைப்பு சொல்லக்கேளு
யார்சொல்வார் யான்சொல்வே னறிவாய்க்கேளு
காமேதான் வெண்காரஞ் சீனங்கூட்
கண்மணியே விந்துவுடன் சிவமுப்பிட்டு
நாமேதான் கிண்ணிதனிற் போட்டுமைந்தா
நலமாக மேல்மூடிச் சீலைசெய்து
வாமேதா னெல்விளையும் பூமிதன்னில்
வளமான யெருப்போட்டுப் புதைத்துப்போடே. 636

போடவே மூன்றுபத்து நாளுக்குள்ளே
புகழான மல்லிகைப்பூப் போலேபூர்க்கும்
ஆடுவது காரத்தால் கெசகோடிவேதை
ஆச்சரியங் காரசார வைப்புச்சொன்னேன்
வாடவே யொருநாளும் வேண்டாமையா
வளமான வேதை வெங்காரத்தாலாச்சு
நாடவே முப்பதுநாட் குள்ளேமைந்தா
நலமான காரமதை யெடுத்துப்போற்றே. 637

துருசு வைப்பு

போற்றுவது காரசாரந் தன்னைமைந்தா
புகழாக வடிபணிந்துப் போற்றுபோற்று
ஆற்றுவது துருசுவைப்பு சொல்லக்கேளு
ஆச்சரிய மாரறிவார் துருசின்மார்க்கம்
வாற்றுவது கரியுப்பு கல்லுப்போடு
வகையான சீனியுப்பு காரசாரம்
மாற்றுவது யெருமையுட தயிரும்வாங்கி
மகத்தான யெருமைப்பால் கூட்டுவாரே. 638

வாராய்நீ சிறுநீருங் கூடச்சேர்த்து
வண்மையுள்ள தாம்பரக்கிண்ணந் தன்னைவாங்கி
நேராய்நீ யிவையெல்லாஞ் சேர்த்துக்கிண்டி
நீமகனே கிண்ணத்தில் போட்டுக்கொண்டு
ஆராய்நீ யிதன்மேலோர் சீலைசெய்து
அகண்டமதாய்க் குழிவெட்டி யெருவைக்கொட்டி
நாராய்நீ யதன்மேலே கிண்ணம்வைத்து
நன்மையென்ற கொடியெருவை யதன்மேற்போடே. 639

போடாய்நீ தன்வந்திரி சமாதிசெய்து
புகழான மண்டலஞ்சென் றெடுத்துப்பாரு
ஆடாய்தீ யரனுதித்தாப் போலேதோன்றும்
அப்பனே யச்சரக்கைப் பூசைபண்ணு
நீடாய்நீ நீடுழி காலம்வாழ்வாய்
நிச்சயமா யிச்சரக்கி லெல்லாமாச்சு
காடாய்நீ கனகசபை தன்னிற்காண்பாய்
கைலாச மூர்த்தியெய்துங் கண்டுகொள்ளே. 640

பாஷாணவைப்பு

கொள்ளவே பாஷாண வைப்புசொல்வேன்
கொடிதான சீனியுப்பு பொட்டிலுப்போடு
விள்ளவே யண்டசுண்ணம் வெண்காரஞ்சேர்த்து
விதமான விந்துவிட்டுப் பிசைந்துக்கொண்டு
மெள்ளவே தாம்பரத்தின் பாத்திரந்தன்னில்
மேலான மருந்தெடுத்து அதனிற்போட்டு
அள்ளவே யொருசீலை நன்றாய்ச்செய்து
அரகரா யதன்மேலோர் கிண்ணிமூடே. 641

மூடியே சீலைசெய்து சொல்லக்கேளு
முக்கியமுள்ள வுவர்மண்ணுங் கரியுப்புஞ்சேர்த்து
மூடியே பாண்டமதி லரைமட்டிட்டு
முருவான கிண்ணத்தை யதன்மேல்வைத்து
மூடியே யதன்மேலே மண்ணும்போட்டு
முக்கியமாய்ச் சீலையைத்தா னன்றாய்ச்செய்து
மூடியே யடுப்பேற்றித் தீயைமூட்டி
முணர்வாக முச்சாம மெரித்திடாயே 642

எரித்திடவே ரேசித்து வுருகிக்கட்டி
யென்மகனே யுருகியது வெண்மைபோலாம்
வரித்திடவே வெள்ளைபா ஷாணமாகும்
வளமான பாஷாண மென்னசொல்வேன்
கரித்திடவே கனகசபைப யிதிலேகாண்பாய்
கருவான பாஷாண மிருந்தாற்போதும்
அரிந்திடவே யரனுமையு மெனக்குச்சொல்ல
அன்பாக வுந்தனுக்கு அருளினேனே. 643

கெந்திபாஷாணவைப்பு

அருளவே கெந்திபா ஷாணஞ்சொல்வேன்
ஆச்சரிய மாரறிவார் கெந்திரசம்வாங்கி
வருளவே கெந்திநீ ரண்டநீரும்
வளமான பூநீறும் நாதங்கூட்டி
மருளவே யிவையெல்லாஞ் சமனாய்ச்சேர்த்து
மைந்தனே கரைத்துவதை ரவியில்வைக்க
கருளவே சூடேறி யனல் தான்மீறி
கனகுத்த நாதமதி னிறம்போலாமே. 644

ஆமென்ற வப்போது சிவமுப்பிட்டு
அரகரா கிளறியதை ரேசிக்கச்செய்து
வாமென்ற புளியதுதான் கழஞ்சிபோட்டு
வளமாக மறுபடியுங் கிளறிக்கொண்டு
நாமென்ற மேலுமொரு சட்டிமூடி
நலமான மண்சீலை யேழுஞ்செய்து
காமென்ற வடுப்பேற்றித் தீயைமூட்டிக்
கண்மணியே பாண்டமதை யதன்மேல்வையே. 645

வைக்கவே யிருசாம மெரித்திட்டாக்கால்
வளமான கெந்தி பாஷாணமாகும்
நைக்கவே நான்முகனைப் பூசைபண்ணு
நலமான பாஷாண மென்னசொல்வேன்
ஐக்கவே யட்டமா தொழிலுமாகும்
ஆச்சரிய மார்றிவார் கெந்திபாஷணந்தான்
மைக்கவே கெந்தி பாஷாணஞ்செய்தால்
மானிலத்தில் நீயுமொரு சித்தனாச்சே. 645

கெவுரிவைப்பு

ஆச்சப்பா கெவுரியென்ற வைப்பைக்கேளு
ஆச்சரிய மார்சொல்வார் கெவுரியைத்தான்
காச்சப்பா வெடியுப்பு படிகாரந்தான்
கண்மணியே காரமுடன் சாரங்கூட்டி
வாச்சப்பா பூரணமாம் விந்துங்கூட்டு
வளமாக யிவையெல்லாம் பாண்டத்திட்டு
நீச்சப்பா மேல்மூடி சீலைசெய்து
நிச்சயமா யடுப்பேற்றித் தீயைமூட்டே 646

மூட்டவே முச்சாம மெரித்திட்டாக்கால்
முக்கியமதா யுருகியது நாதம்போலாம்
ஆட்டவே யிறக்கியதை யோர்நாள்மைந்தா
அப்பனே மதிதனிலே வைத்துப்போற்று
நீட்டவே சீலையைத்தான் தட்டிப்பாரு
நிசமான கெவுரியேன்ற பேருமாச்சு
வாட்டவே கெவுரியதற் கீடுண்டோமைந்தா
வளமான தொந்தங்க ளிதிலேபாரே 647

சிவபதம் – பூரணமறிய

பாரேநீ கெசகோடி வேதைக்கெல்லாம்
பண்பான கெவுரியது யிருந்தால்போதும்
ஆரேநீ தன்வந்திரி யறிவுள்ளானே.
அந்தமென்ற வகண்டபரி பூரணத்தாலாச்சு
வாரேநீ மனதடங்கிகப் பூரணத்தைக் கொள்ளு
வளமான பூரணத்தா லெல்லாஞ்சித்தி
காரேநீ கருவதுதான் விந்தைக்கட்டு
கண்மணியே கயிலைகிரி தன்னைநோக்கே. 648

நோக்கவே பூரணத்தை நோக்கவேணும்
நுண்மையுள்ள சிவபதத்தைக் காணவேணும்
நோக்கவே பூரணத்தை யறியாமூடர்
உருவழிந்து விந்துவதை விட்டுச்சார்வார்
நோக்கவே வாசியதால் மனதைக்கட்டி
நுண்மைவெகு நுண்மையதாய் நுழைந்துக்கொண்டு
நோக்கவே மதச்சாரி வகையைச் சொல்வேன்
உணர்வுகெட்டு வுரிசைகெட்டு மதப்பேதமாமே. 649

ஆமேதான் பரப்பிரமந் தாந்தானென்று
அழகான வதில்ஞானி யென்றுசொல்வார்
நோக்கவே பூரணத்தை யறியாமூடர்
உருவழிந்து விந்துவதை விட்டுச்சார்வார்
நோக்கவே வாசியதால் மனதைக்கட்டி
நுண்மைவெகு நுண்மைதாய் நுழைத்துக்கொண்டு
நோக்கவே மதச்சாரி வகையைச்சொல்வேன்
நுணர்வுகெட்டு வுரிசைகெட்டு மதப்பேதமாமே. 650

ஆமேதான் பரப்பிரமந் தாந்தானென்று
அழகான வதில்ஞானி யென்றுசொல்வார்
வாமேதான் வயிர்பிழைக்க வலைவார்கோடி
வையகத்து ஞானியடா வுலகஞானி
காமேதான் வேதாந்த சாத்திரங்கடன்னை
கசடனவன் பொய்யென்று பழிப்பான்மட்டி
மாமேதான் மட்டிய வனீடேறாமல்
மகத்தான தீவினையும வனிடத்திற்சேரும். 651

சவ்வீரவைப்பு

இடமான சவ்வீர வைப்புசொல்வேன்
யேகவுன் னிடமான சவர்க்காரந்தான்
வடமான காரமுடன் சாரஞ்சேரு
வளமான சீனமுடன் வெடியுப்புத்தான்
கடமான கல்லுப்பு ரெண்டாங்காச்சல்
கண்மணியே யிவையெல்லாஞ் சமனாய்ச்சேர்த்து
மடமான கல்வத்திற் போட்டுக்கொண்டு
மங்கையர்தன் சுத்தசலந் தன்னைவாரே. 652

வாரான நாதநீர் தானும்பாரு
வகையாக ஆட்டிநன்றாய்ப் பீங்கானிற்போட்டு
சீரான பாண்டமொன் றெடுத்துவந்து
செகமகழும் வழலையெரு தன்னைப்போட்டு
நாரான பீங்கானை யதன்மேல்வைத்து
நல்லசிவ கெங்கைச்சவ்வை யதன்மேற்போட்டு
காரான குருவெருவை யதன்மேற்போட்டு
கண்மணியே பாண்டமதிற் சீலைசெய்யே. 653

செய்யவே பாண்டமதை யடுப்பபிலேற்றிச்
சிவசிவா யக்கினியை மூட்டுமூட்டு
வையவே முச்சாம மெரித்திட்டாக்கால்
வளமான குழம்புபோ லிறுக்கிக்கட்டும்
பையவே நான்முகனை ஓமென்றேத்தி
நலமாகத் தொழுதுவடி பணிந்துபூசு
கையவே பாண்டமதை யிறக்கிக்கொண்டு
கண்மணியே சீலைநன்றாய்த் தட்டிப்போடே. 654

போடவே பீங்கானை யெடுத்துப்பாரு
புகழான சவ்வீரமென்ன சொல்வேன்
ஆடவே வீரத்தா லாடலாகும்
அஷ்டமா சித்துடனே வேதைகோடி
நாடவே நான்முகனைத் தொழுதுபோற்றி
நல்லசவ் வீரமிது நவின்றுபாடு
காடவே கனகசபை தன்னிற்சேற்றுங்
கண்மணியே வீரத்தைச் செய்துபாரே. 655

கார்முகில்பாஷணம்

பாரேநீ கார்முகில் பாஷாணந்தான்
பண்பாகச் சொல்லுகிறே னறிவாய்க்கேளு
ஆரேநீ வெடியுப்புப் பத்தாங்காச்சல்
அப்பனே கெந்தியுடன் வெண்குங்கிலியஞ்சேரு
காரேநீ சவ்வீரந் துருசுஞ்சேரு
கண்மணியே யிதுவகைக்குஞ் சமனாய்க்கொண்டு
வாரேநீ கல்வமதிலி ட்டுக்கொண்டு
வளமான யெருக்கம்பால் விட்டு ஆட்டே. 656

ஆட்டுகிற விதங்கண்டு ஆட்டும்போது
அசையாமல் மெழுகதுபோல லாகும்பாரு
வாட்டுகிற பீங்கானில் வழித்துப்போட்டு
வகையாக வதன்மேலோர் சீலைசெய்து
நாட்டுகிற பாண்டமதி லெருவைக்கொட்டி
நலமான பீங்கானை யதன்மேல்வைத்து
காட்டுகிற மறுபடியு மெருவைக்கொட்டி
கண்மணியே சீலையைத்தான் செய்துக்கொள்ளே. 657

கொள்ளவே யடுப்பேற்றித் தீயைமூட்டி
கொடிதாக முச்சாம மெரித்திட்டாக்கால்
வள்ளவே வங்கார மோற்கியாகும்பாரு
வளமான தேவியைத்தான் தொழுது போற்று
மள்ளவே பாண்டமதை யிறக்கிக்கொண்டு
மைந்தனே பீங்கானை யெடுத்துப்பாரு
கள்ளமே யில்லாத காற்மோகித்தான்
கண்மணியே பாஷாண மாகும்பபாரே. 658

பாரப்பா வேதைக்குஞ் சித்துக்குந்தான்
பண்பான் பாஷாண மெடுத்துஆடு
ஆரப்பா வறிவார்கள் பாஷாணத்தை
ஆத்துமத்தை யறிந்துணர்ந்து கருக்கண்டோர்க்கு
சீரப்பா சித்துக்கம் பாஷாணந்தான்
சிவசிவா யாரறிவர் மோட்சமாகும்
வாரப்பா பார்த்தறிந்து நன்றாய்ச்சொன்னேன்.
வளமாக யார்சொல்வார் வண்மைகாணே. 65

தொட்டிபாஷாணவ்வைப்பு

காணப்பா தொட்டியென்ற பாஷாணந்தான்
கண்மணியே சொல்லுகிறேன் கருவாய்க்கேளு
ஆணப்பா சூதமுடன் கரியுப்போடு
அப்பனே ரசகாந்தம் வடியப்போடு
வாணப்பா சீனியுப்புப் படிகாரந்தான்
வளமாகச் சமன்சேர்த்துத் தூளாய்ப்பண்ணி
மாணப்பா விந்துவிட்டுப் பிசைந்துகொண்டு
மைந்தனே யயப் [illegible] தளிற்போடே. 660

போட்டுமே யன்புடனே யெருவுஞ்சேர்த்துப்
புகழாகக் கலந்துவொரு பாண்டத்திட்டு
ஆட்டுமே சுண்ணமதை யதன்மேல்வைத்து
அரகரா மேலுமந்த வுப்பைக்கொட்டி
வாட்டுமே யடுப்பேற்றித் தீயைமூட்டி
வளமாகச் சாமமைந்து யெரித்திட்டாக்கால்
காட்டுமே தொட்டி பாஷாணமாகுங்
கைக்குகந்த முறையிதுதான் கண்டுசெய்யே. 661

செய்யவே யிதில்கோடி வேதையாகுஞ்
செயமான வயித்தியத்துக் காதியாகும்
வையவே வாதத்துக் குருவுமாகும்
வளமான கற்பமதுக் காதியாச்சு
மையவே செயநீரு மெழுகுமாகும்
மென்மேலும் யோகமுடன் ஞானமாச்சு
கையவே கனகசபை யதிலுண்டாச்சு
கைமுறையாய்ச்ச சித்துவிளை யாடலாச்சே. 662

சிங்கிவைப்பு

ஆச்சென்ற சிங்கிவைப்பு சொல்லக்கேளு
ஆச்சரிய மாச்சரிய மார்தான்காண்பார்
நீச்சென்ற வெடியுப்புக் கரியுப்போடு
நிலையான படிக்காரஞ் சீனாக்காரம்
காச்சென்ற கருநாகம் பூநாகந்தான்
கண்மணியே வளையலுப்புயிது வெல்லாந்தான்
வாச்சென்ற வகைக்குசரி சமனாய்ச்சேர்த்து
வளமான வங்கமது யிடைசரியாய்ச்சேரே. 663

சேர்த்துமிகக் கல்வத்தில் போட்டுக்கொண்டு
செயலான நாதவிந்தை விட்டுஆட்டு
வார்த்துமிக ஆட்டையிலே மெழுகுபோலாம்
வளமான தாம்பரக் கிண்ணத்திறபோட்டு
மார்த்துமே துருசுப்பொடிய யதன்மேற்றூவி
மறுபடியுந் தாம்பரக் கிண்ணத்தின்மேல்மூடி
நீர்த்துமிகச் சட்டிதனில் மூன்றுப்புப்போட்டு
நிசமான சுண்ணத்தை யதன்மேல்வையே. 664

வைக்கையிலே மறுபடியு முப்பைக்கொட்டி
வளமாக மேல்மூடிச் சீலைசெய்து
தைக்கையிலே யடுப்பேற்றித் தீயைமூட்டி
தாயான மயேஸ்வரியைத் தோத்திரஞ்செய்து
நைக்கையிலே முச்சாம மெரித்திட்டாக்கால்
நலமான பொன்போலே யுருகிமின்னும்
மைக்கையிலே மறுபடியும் சாமமைந்தா
மைந்தனே யெரித்திட்டு யிறக்கிக்கொள்ளே. 665

கொள்ளவே யாறினபின் சீலையைத்தான்
குருபரனைத் தொழுதுநீ யவிழ்த்துப்போடு
அள்ளவே கிண்ணத்தை யெடுத்துப்பாரு
ஆச்சரியங் கிண்ணிமுறை சிங்கிமைந்தா
வள்ளவே தங்கவட்டு அதுபோற்காணும்
வளமான சிங்கியடா விவேகசிங்கி
கள்ளவே யில்லாத மிறுதாரசிங்கி
கைக்குகந்த முறையிதுதான் வேதைக்காச்சே. 666

சிங்கிவேதை

ஆச்சடா சிங்கிதனில் வேதைசொல்லேன்
ஆச்சரிய மாரறிவார் சிங்கியைத்தான்
பேச்சடா வொன்றுமில்லை மூச்சையுண்ணு
பேதைமனந் தனையகற்றுப் பிரிவாய்நில்லு
காச்சடா கல்வமதில் சிங்கியிட்டு
கண்மணியே பொடித்துநன்றா யெடுத்துக்கொண்டு
வாச்சசடா அயமுடனே தாம்பரஞ்சேர்த்து
வளமான குகையிலிட்டு வுருக்குருக்கே 667

உருக்கையிலே சிங்கிபொடித் தன்னைத்தூவு
உத்தமனே தூவிடவே களங்காம்பாரு
உருக்கையிலே அயக்களங்கை யெடுத்துக்கொண்டு
வளமாகப் பொடித்துநன்றாய்ச் சிமிழில்வைத்து
மருக்கையிலே தாம்பரத்தை யுருக்கிக்கொண்டு
மைந்தனே நூற்றுக்கொன் றிப்பொடியையீந்து
கருக்கையிலே வயசதுதான் பதினாறாகுங்
கண்மணியே அயக்களங்கின் மகத்துவங்காணே 668

லிங்கவைப்பு

காணப்பா லிங்கமென்ற வைப்புகேளு
கண்மணியே கெந்தியுடன் வெடியுப்போடு
வாணப்பா கரியுப்பு கருநாகந்தான்
வளமான சீனியுப்பு வளையலுப்பு
காணப்பா கல்வத்திற் பொடித்துக்கொண்டு
மைந்தனே யண்டசெய நீரைவார்த்து
பேணப்பா பிசைந்துஅதைக் குப்பிலேபோட்டு
பேரான சீலையைத்தா நன்றாய்ச்செய்யே. 669

செய்யவே சட்டிதனி லுப்பைக்கொட்டி
செயமான குப்பிதனை யதிற்புதைத்து
வையவே யடுப்பேற்றித் தீயைமூட்டி
வளமாக முச்சாம மெரித்திட்டாக்கால்
கையவே யண்டவிந்து வுருகிமைந்தா
கம்பிகம்பி யாகவுந்தா னுருகிநிற்கும்
ஐயவே யில்லாத ஜாதிலிங்கம்
ஆச்சரிய மிதிற்கோடி மகிமையாமே. 670

ஆமேதான் யாறினபின் னெடுத்துப்பாரு
அப்பனே லிங்கமதை யென்னசொல்வேன்
வாமேதான் லிங்கமதின் மகத்துவங்கோடி
வளமான ஞானத்துக் கதுவேயாதி
காமேதான் யோகஞ்செய்வோர்க் கிதுவேகற்பங்
கைலாச மூர்த்தியையும் காணலாகும்
நாமேதான் மனதுகந்து சொல்லிவிட்டோம்
நல்லகுண முள்ளசிவ யோகிக்காமே. 671

நூலறிய–தெண்டகம்–பட்சணி–முப்புஞானம்–யோகம் சாலம்–பஞ்சபட்சி–நிகண்டு பூரண சூத்திரம்

ஆமெனவே யறிவுள்ளோ ரென்னூலைப்பாரு
அழகான யென்னிகண்டை யார்தான்காண்பார்
வாமெனவே பூரண சூத்திரத்தைப்பாரு
வளமான தெண்டகத்தை மருவிப்பாரு
காமெனவே பட்சணிநூற் றெட்டைப்பாரு
கருவான முப்புயெண் பதும்பாரு
நாமெனவே யோகமுடன் ஞானமார்க்கம்
நலமான வைந்நூறில் நவின்றிட்டேனே. 672

நவிலவே யன்னூற்றை யார்தான்காண்பார்
நாடதிலே மனிதர்கண்டால் சித்தனாவார்
ஓவிலவே யோகமது அதிலேயெய்தும்
உலுத்தருக்குக் கிட்டாது வைந்நூல்மைந்தா
கவிலவே வைந்நூற்றைத் தேடிவாங்கு
கசடர்களே வைந்நூற்றை யார்கொடுக்கப்போறார்
மவிலவே யென்னுடைய சாலம்பாரு
மகத்தான் வித்தைகளை மருவியாடே. 673

ஆடவே பஞ்சபட்சி யிருநூறைப்பாரு
அன்பான கோர்வையெல்லாந் தேடிவாங்கு
மாடவே நூல்தோறுஞ் சோதித்தேரு
மகத்தான முறையெல்லாங் கைபாகமாக
நாடவே முறையெல்லாஞ் செய்துகொண்டு
நலமான யோகத்தைச் செய்துதேறி
வாடவே ஞானமதை யறிவாலோட்டி
வளமான குளிகைகொண்டு மலைமேலேறே. 674

ஏறியே சித்தனென்ற பேரும்வாங்கி
யென்மக்காள் சாகாத கல்விபெற்று
வாழியே யமுதுகொண்டு நீதான்மைந்தா
வையகத்துச் சடங்கெல்லாம் வழியாய்த்தள்ளி
மாறியே மழைமாரி பொழிந்தாப்போலே
மைந்தனே சித்தர்களோ டொக்கக்கட்டு
காறியே கரிமுகனைத் தொழுதுபோற்றிக்
கடவுளென வனுதினமுங் கனிவாய்ப்பூசே. 675

தசரதக் கற்பம்

பூசியதோர் தசரதர்தான் சொன்னகற்பம்
புகழான கற்பமதைச் சொல்வேன்மைந்தா
காசியதோர் காசிதனில் பூமிநாதங்
கண்மணியே யன்னாதம் பூர்வமுப்பு
வாசியதோர் வாசிக்கு வயிராமுப்பு
வளமான கெவுனத்துக் குயிராமைந்தா
மாசியதோ ரிஃதிரண்டு மத்தித்தேதான்
மைந்தனே மண்டலந்தா னிருபோதுண்ணே. 676

உண்ணவே திரேகமற் கழிவோயில்லை
ஒகோகோ ஆர்சொல்வார் கற்பப்போக்கு
வண்ணவே வழிதுறையும் நன்றாய்தோற்றும்
வகாரமது யிருந்திடமும் வளங்காண்பாய்நீ
மண்ணவே தலமாறும் நன்றாய்த்தோன்றும்
மகத்தான வாயிரத்தெட் டண்டங்காப்பாய்
கண்ணுமது மனக்கண்ணும் வெளிச்சம்போலாம்
காட்சியிதி லுண்டாகுங் கண்டுகொள்ளே. 677

வேதவியாசர் கற்பம்

கொள்ளவே வேதவியாசர் தானுங்
கொண்டகற்பஞ் சொல்லுகிறேன் குருகற்பந்தான்
மள்ளவே யடிமுடியுஞ் சுத்திபண்ணி
மைந்தனே மண்டலந்தான் கொள்ளுகொள்ளு
கள்ளவே நறைதிரையு மறைந்துபோகும்
நான்முகனைப் போலாவாய் நன்மைநன்மை
கள்ளவே யில்லாத கற்பந்தானையா
கசடர்கொள்ள மாட்டார்கள் கனயோகிக்காமே. 678

வசிஷ்டர்கற்பம்

யோகமுள்ள பதியறிந்தா லுண்மையாச்சு
உணர்வான வமுர்தமதைக் கொண்டால்மெய்தான்
யோகமுள்ள கற்பமிதில் வாசிசித்தி
ஓகோகோ வாக்கமுர்த மிதிலேசித்தி
யோகமுள்ள சகலகலை யிதிலுண்டாச்சு
உத்தமனே சிவபாக்கிய மிதில்சித்தியாச்சு
யோகமுள்ள கருக்களெல்லா மிதனாற்சித்தி
உற்றசிவ பாக்கியமிதி லுகந்துண்டாச்சே 679

ஆச்சப்பா வசிஷ்டருண்ட கற்பஞ்சொல்வேன்
ஆச்சரிய மாச்சரிய மார்தான்காண்பார்
நீச்சப்பா நீச்சான அண்டந்தன்னை
நினைவாகக் கொண்டுவந்து சொல்வேனையா
வாச்சப்பா அண்டவிந்து முளைவாங்கி
வளமான ரசக்கிண்ணி தனிலேபோட்டு
காச்சப்பா வழலைசுண்ணங் கழஞ்சிபோட்டுக்
கண்மணியே யண்டவிந்து சலம்போலாமே. 680

ஆமென்ற அண்டநீர் மண்டலந்தான் கொள்ளு
அரகரா யாக்கையதுக் கழிவோயில்லை
வாமேதா னிளமைவய சதுபோற்காணும்
வளமான சித்தரெனப் பேருண்டாகும்
காமேதான் றொண்ணூற்றாறு கருவிதானுங்
களங்கமற வுன்மனதிற் கட்டுண்டுபோகும்
நாமேதான் சொல்லிவிட்டோம் நந்திதேவர்
நலமான தன்வந்திரி நவில்வேன்கேளே, 681

கேளப்பா யிவர்மூவர் வரத்தால்தேர்ந்தார்
கெணிதமுட னிவர்களுக்கு வொருவரீடோ
நாளப்பா வுமைதேவி யருடன்னாலே
நலமான விவர்களுக்குக் குருவுமானேன்
வாளப்பா வாசிதனை யுபதேசித்தேன்
வளமான சிவயோக மருளினேன்பார்
ஆளப்பா யனுதினமு மெனைத்தொழுதார்
அஷ்டதிசை சித்தருக்ககுக் குருவானேனே. 682

வானான யின்னூல்தான் சகலகலைக்கியானம்
வளமாகத் திறந்துநன்றாய் வகையாய்ச்சொன்னேன்
கானான கருக்குருவா மின்னூல்மார்க்கங்
கசடருக்குக் கிட்டாது கண்டுகொள்ளு
ஆனான வறிவுள்ள சிவயோகிக்கும்
அட்டமா சித்துகளு மாடலாகும்
வேனான வேதாத்தி பார்ப்பானின்னூல்
வித்தழிந்த மாண்பருக்கு வீணாய்ப்போமே. 683

சோசியம் – ராசி – மாதபலன்களறிய

போமப்பா சோசியத்தைச் சொல்லக்கேளு
புகழான சோசியத்தை யாரறிவார்
ஆமப்பா சித்திரையில் மேஷமாகும்
அடுத்துநின்ற ரிஷபமது வைகாசியாகும்
காமப்பா மிதுனமது ஆனியாகும்
கண்மணியே ஆடியிலே கர்க்கடகமாகும்
நாமப்பா ஆவணியில் சிம்மமைந்தா
நலமான புரட்டாசி கன்னிதானே. 684

தானான வைப்பசியில் துலாத்தின்ராசி
தன்மையுள்ள கார்த்திகையில் விருச்சிமாகும்
மானான மார்கழியில் தனுசுமைந்தா
மகத்தான தைமாத மகரமாகும்
வானான மாசிதனில் கும்பராசி
வளமான பங்குனியில் மீனமாகும்
தேனான ராசிபனி ரண்டுக்குந்தான்
திருவான மாதமது பனிரண்டாம்பாரே. 685

பாரான சித்திரையில் வித்தையில்லை
பண்பான வைகாசி வித்தையுண்டு
நாரான ஆனிதனில் மெத்தநன்று
நலமான ஆடிதனில் தரித்திரவானாம்
வாரான ஆவணியில் கோபக்காரன்
வளமான புரட்டாசி ஞானயோகி
காரான வைப்பசியில் சித்தன்சித்தன்
கார்த்திகையில் தனஅயிஸ் வரியோன்றானே. 686

தானென்ற மார்கழியில் லதிகாரத்தோன்
தைதனிலே யெளியவனாந் தண்மையாரு
மானென்ற மாசிதனில் மகரசித்தன்தான்
மருவிவந்த பங்குனியில் ஞானியாவான்
வானென்ற பனிரண்டு ராசிமார்க்கமையா
வளமாகச் சொல்லிவிட்டே னார்தான்சொல்வார்
நானென்ற வாணுவத்தை நீக்கினோர்க்கு
நல்லசிவ ராசபத மெய்தும்பாரே. 687

இராசிபலன்களறிய

பாருமே ராசியது யிருந்தாலுந்தான்
பண்பான கிரகவுச்சம் வருகாதையா
நாருமே திரேகமது யிருந்தால்மைந்தா
நலமான சகலபாக்கியங் களெய்தும்
ஆருமே யறியாமல் வந்துயெய்தும்
அப்பனே யாரறிவா ராசிமார்க்கம்
வாருமே வந்ததொரு கிரகத்தால்தான்
வளர்ந்துதடா பாவபுண்ணி யங்கள்ரண்டே. 688

ரெண்டான ரெண்டறிந்து வொன்றைக் கண்டால்
ரேசகபூர கும்பகமு மிதனால்சித்தி
ரெண்டான வென்றாலே யெல்லாஞ்சித்தி
ரேவதியாம் ரேகையதிற் கமலமாச்சு
ரெண்டான பொருளாச்சு ரிஷிகளாச்சு
ரேகையதிற் கமலமென்ற சுழிகண்ணாச்சு
ரெண்டான யெட்டுமிரண்டும் பத்தாய் நின்ற
ரேசகத்திற் கொலுவிருந்த வாலையாச்சே. 689

சுவர்க்காரம்

வாலையென்ற சிறுபிள்ளை பத்தாந்திங்கள்
வரிசையாய்ப் பிண்டவக் காரங்கேளு
ஆலையென்ன பிண்டத்தைக் கொண்டுவந்து
அப்பனே கோரையுடன் சட்டைபோக்கி
காலையென்ற ரவிதனிலே யுலர்த்திக் கொண்டு
கண்மணியே கல்லுரலி லிட்டுக்கொண்டு
மாலையென்ன அயக்கரம் பாற்சாடுகாடு
மைபோலே தூளாகு மெடுத்துக்கொள்ள 690

கொள்ளுமே தெள்ளியதைப் பாண்டத்திட்டு
குருவான சுத்தசலம் பனிரண்டிட்டு
அள்ளுமே யண்டசுண்ணம் பலந்தான்போட்டு
அரகரா கலக்கியதை யடுப்பிலேற்றி
வள்ளுமே தீமூட்டி யறுசாமந்தான்
வளமாக யெரித்திடவே சவர்க்காரமாகும்
மள்ளுமே குழம்புபோ லாகும்பாரு
மைந்தனே யிக்குழம்பைப் பீங்கானிலூற்றே 691

சவர்க்காரச் சுண்ணாம்பு

ஊற்றவே வுப்பாகு மென்னசொல்வேன்
உணர்வான வுப்பதனை யார்தான்செய்வார்
மாற்றவே மனோன்மணிக்குப் பூசை பண்ணு
மருவிவருந் தொழிலெல்லா மிதனாலாடும்
வாற்றவே சுண்ணாம்பை செய்யக்கேளு
வளமான சுண்ணாம்பை யார்தான் செய்வார்
சாற்றவே கனசபை நடனத்தோர்க்குங்
கனகமிதி லெய்துமடா காணும்பாரே 692

பாரேநீ சவர்க்காரங் கல்வத்திட்டுப்
பண்பான அண்டகுண்ணம் விஷச்சுண்ணம்போட்டு
ஆரே நீ வழலைமுப்பு யிருகழஞ்சுபோட்டு
அரகரா விந்தாலே சாமமாட்டு
நாரேநீ பனிநீரால் சாமமாட்டு
நல்லசிவ பூபதியை யாட்டிநன்றாய்
காரே நீ வழித்தெடுத்து வில்லைசெய்து
கண்மணியே ரவிதனிலே யுலரப்போடே 693

போட்டவுடன் விந்தாலே சீலைசெய்து
புகழான [illegible]யேழுஞ்செய்து
ஆட்டவுடன் ரவிதனிலே யுலர்த்திநன்றாய்
அப்பனே கெஜபுடத்திற்போடுபோடு
வாட்டவுட னாறினபின் னெடுத்துக்கொண்டு
வளமான சீலையைத்தான் தட்டிப்போடு
மாட்டவுடன் வில்லையது வெள்னீர்போல
மகத்தான சுண்ணமிதை மருவிக்காணே 694

காணேநீ தன்வந்திரியிதில் தான்மைந்தா
கனயோகஞ் செய்வதற்கு வேதைகோடி
மானேநீ மானிலத்தி ல[illegible]ான்செய்வார்
மகத்தான சுண்ணமடா மருவிப்பாரு
ஆனேநீ யறிவுள்ளா னிதனைப்பாரு
ஆரறிவார் சவர்க்ககார வித்தைமார்க்கம்
வானேநீ வகாரவித்தைக் காதிச்சுண்ணம்
வளமான சுண்ணமடா மருவிப்பாரே 695

அண்டசவர்க்கரரம்

பாரப்பா யண்டசவர்க் காரங்கேளு
பாரதனிலே பொருள்காணார்
ஆரப்பா அண்டோடு கொண்டுவந்து
அப்பனே கல்லுரலிற் போட்டுக்[illegible]டு
வாரப்பா யெகுக்காம்பால் சாடினாக்கால[illegible]
வளமான மாப்போலே தூளாய்ப்போகும்
நாரப்பா யத்தூளை யெ[illegible]ல்வேன்
நலமான பாண்டம[illegible]டுபோடே.

போடவே பன்னீர்தான் படிரண்டிட்டு
புகழான பூநீறு பலமூன்றிட்டு
ஆடவே வழலைமுப்பு பலந்தானொன்று
அரகரா வதிற்போட்டுக் கலக்கிக்கொண்டு
வாடவே யடுப்பேற்றித் தீயைமூட்டி
வளமாக வொருசாம மெரித்திட்டாக்கால்
நாடவே நான்முகன்போல் சவர்க்காரமாகும்
நல்ல சவர்க்காரமதைப் பதனம்பண்ணே. 697

பண்ணையிலே யிதினுடைய மகத்துவத்தைப்
பார்தனிலே யாரறிவார் பண்போர்காண்பார்
அண்ணையிலே வேதைக்கு யாதியாச்சு
ஆச்சரியம் ஞானத்துக் கிதுவேவேணும்
வண்ணையிலே வயித்தியற்குங் கற்பத்தோர்க்கும்
வளமாக யிதுவேணும் வண்மையாக
மண்ணையிலே மகாகோடி வித்தையாடு
மகத்தான வுப்பிதுதான் மகிமையாமே. 698

அண்டசவர்க்காரச் சுண்ணம்

ஆமப்பா யண்டசவர்க் காரச்சுண்ணம்
அறைகிறேன் தன்வந்திரி யன்பாய்க்கேளு
வாமப்பா சவர்க்காரங் கல்வத்திட்டு
வளமான வெங்காயச் சுண்ணாம்போடு
நாமப்பா விஷச்சுண்ணம் பலந்தான்போடு
நலமான நாதத்தால் சாமமாட்டு
காமப்பா ரோமநீர் தன்னாற்சாமங்
கனமான காரநீர் சாமமாச்சே. 699

ஆச்சப்பா யிதனாலே வேதைகோடி
ஆச்சரியச் சுண்ணமிதற் கீடுண்டோமைந்தா
நீச்சப்பா வெகுநீச்சு அண்டநீச்சு
நிலையான சவர்க்காரச் சுண்ணமார்க்கம்
வாச்சப்பா வாசமுள்ள பூரணமாஞ்சுண்ணம்
வையகத்திற் கிட்டுமோசொல்லிச் சுண்ணந்தான்
மாச்சப்பா யிதனாலே கோடாகோடி
மகத்துவந்தா னெய்துமடா மருவிப்பாரே. 700

லிங்க சவர்க்காரம்

பாரப்பா லிங்கச்சவர்க் காரங்கேளு
பார்தனிலே யாரறிவார் சவர்க்காரமார்க்கம்
ஆரப்பா பூநீறு படிதானொன்று
அப்பனே பாண்டமதி லிட்டுக்கொண்டு
வாரப்பா சுத்தசலம் படிரண்டிட்டு
வளமாகக் கரைத்துநன்றாய்த் தெளிவைவாங்கி
மாரப்பா காச்சிடவே குழம்புபோலா
மைந்தனே குழம்புதனில் சொல்லக்கேளே. 701

கேளப்பா வெடியுப்பைத் தூளாய்ப்பண்ணி
கெடியாகத் தூவிநன்றாய்க் கிளறிக்கொண்டு
ஆளப்பா வகலமுள்ள சட்டிதன்னில்
அப்பனே வார்த்திடவே சவர்க்காரமாகும்
நாளப்பா நல்லசவர்க் காரம்பூசை
நளமான லிங்கசவர்க் காரமாகுமையா
மாளப்பா சவர்க்காரம் பூசைபண்ணு
மகத்தான சவர்க்கார மகிமைதானே. 702

தானென்ற சவர்க்காரத் தாலேமைந்தா
தனதாக விதிற்கோடி வேதையாகும்
வானென்ற சவர்க்கார மார்தான்செய்வார்
வளமான சவர்க்காரம் வாதிக்காகும்
மானென்ற சவாக்காரஞ் செய்தால்மைந்தா
மகத்தான சித்துவகை மகிமையெய்தும்
கானென்ற கடவுளுட கிருபையுண்டு
கடாச்சிப்பார் சகலகலை யிதிலுண்டாமே. 703

லிங்க சவர்க்காரச் சுண்ணம்

உண்டான லிங்கசவர் காரமைந்தா
உத்தமனே சுண்ணாம்பாய்ச் செய்யக்கேளு
வண்டான சவர்க்காரங் கல்வத்திட்டு
வளமாக முக்களஞ்சு சிவமுப்பிட்டு
கண்டான காரநீர் தன்னாற்சாமங்
கண்மணியே சுத்தசலந் தன்னாற்சாமம்
அண்டாக யரைத்ததனை வில்லைசெய்து
அப்பனே ரவிதனிலே காயப்போடே. 704

போடவே யுலர்ந்தபின்பு சொல்லக்கேளு
புகழான நாதமதாற் சீலைசெய்து
ஆடவே மண்சீலை யேழுஞ்செய்து
அப்பனே ரவிதனிலே காயப்போடு
நாடவே கெஜபுடத்திற் போடுபோடு
நலமாக வாறினபின் னெடுத்துக்கொண்டு
சாடவே சீலையைத்தான் தட்டிப்போடு
சமர்த்தாகப் பார்த்திடவே சுண்ணாம்பாச்சே 705

ஆச்சப்பா சுண்ணாம்பை யென்னசொல்வேன்
அப்பனே சுண்ணமிதில் வேதைகோடி
வாச்சப்பா ஞானத்துக் கிதுவேவேணும்
வளமான சுண்ணமடா மகத்தாஞ்சுண்ணம்
நாச்சப்பா கடுங்காரச் சுண்ணமையா
நலமான சுண்ணமிதை யென்னசொல்வேன்
காச்சப்பா கனகசபை யிதிலேதோற்றுங்
கைலாச மூர்த்தியுனக் கெய்தும்பாரே. 706

வீரசவர்க்காரம்

பாரப்பாவீர சவர்க்காரஞ் சொல்வேன்
பண்பான முன்னோர்கள் மறைத்துச்சொன்னார்
வீரப்பா வெடியுப்பு வைந்தாங்காச்சல்
விளங்கிநின்ற பூநீறு படிதான்ரண்டு
ஆரப்பா வறிவார்கள் பாண்டத்திட்டு
அரகரா சிறுநீறு படிநால்வார்த்து
வாரப்பா வழலைமுப்பு பலந்தான்போட்டு
வளமாகக் கலக்கியதை யடுப்பிலேற்றே. 707

ஏற்றவே யேற்றினபி ன்னண்டசவர்க்காரம் போடு
என்மகனே கலக்கியதை யெரித்திடாய்நீ
வாற்றவே சாமமைந்து யெரித்திட்டாக்கால்
வளமாகக் கொழுப்புபோ லாகுமையா
மாற்றவே யக்கொழுப்பைப் பீங்கானிலூற்ற
மகத்தான சவர்க்கார மென்னசொல்வேன்
ஆற்றவே வீரசவர்க் காரமாகும்
அரகரா சவர்க்காரம் பதனம்பண்ணே. 708

பண்ணவே யிதற்கீடு வொன்றுமில்லை
பார்தனிலே யிதுவொன் றிருந்தாற்போதும்
அண்ணவே யரனுமையுமிதனாற் காண்பாய்
அப்பனே வெகுகோடி சித்துக்காகும்
வண்ணவே வாதவித்தை கோடாகோடி
வாசியிலே யோகவித்தை யிதனாற்சித்தி
கண்ணவே சவர்க்காரம் நன்றாய்ச்சொன்னேன்
கனயோகஞ் செய்வதற்குக் காட்சியாமே. 709

வீர சவர்க்காரச் சுண்ணம்

காட்சியென்ன வீரசவர்க் காரச்சுண்ணம்
கண்மணியே சொல்லுகிறேன் கேளுகேளு
காட்சியென்ன சவர்க்காரங் கல்வத்திட்டு
கனமான நஞ்சுகொடிச் சுண்ணம்போடு
காட்சியென்ன பனிநீராற் சாமமாட்டக்
கரைந்து குழம்பதுபோலா குமையா
காட்சியென்ன வழலைமுப்பு பலந்தான்போடக்
கனிவாகக் கட்டியது மெழுப்போலாமே. 710

ஆமப்பா வழித்ததனை வில்லைசெய்து
அப்பனே ரவிதனிலே காயப்போட்டு
நாமப்பா சொல்லுகிறோ மின்னங்கேளு
நலமான விந்தாலே யோர்சீலைசெய்து
காமப்பா கரையி லுலரப்போட்டுக்
கண்மணியே மண்சீலை யேழுஞ்செய்து
வாமப்பா கெசபுடத்திற் போடுபோடு
வளமாக நீறியது சுண்ணாம்பாச்சே 711

ஆச்சப்பா யிச்சுண்ணங் கடுங்காரமெத்த
அரகரா வேதைக்குப் பாச்சினாக்கால்
வாச்சப்பா கெசகோடி மாற்றுகாணும்
வளமான பரித்தங்க மிதிலேகோடி
நாச்சப்பா ஞானகற்பத்தின் யோககற்பம்
நலமான கற்பத்தின் குருவிதாகும்
காச்சப்பா கனகசபை நடனத்தோர்க்குக்
கண்மணியே யென்றுமின்னூல் கண்டுகொள்ளே. 712

கெவுரிசவர்க்காரம்

கொள்ளுமே கெவுரிசவர்க் காரங்கேளு
கொடிதான சீனியுப்பு பூநீறுங்கூட்டி
அள்ளுமே வகைக்குவொரு படிதான்வாங்கி
அன்பான விந்தைவிட்டுப் பிசைந்துகொண்டு
வள்ளுமே வாராமல் நீதான்மைந்தா
வகையாகப் பிசைந்துஅதை ரவியில்வைக்க
மள்ளுமே யெண்ணையதுக் கக்கிப்போகு
மகத்தான முறையிதுதான் மருவிப்பாரே. 713

பாரேநீ தன்வந்திரி யின்னங்கேளு
பண்பாகச் சொல்லுகிறேன் பரிவாய்மைந்தா
ஆரேநீ பாண்டத்தி லெடுத்துப்போடு
அப்பனே சுத்தசலம் படிரண்டிட்டு
வாரேநீ கரைத்துஅதை யடுப்பிலேற்றி
வளமாகத் தீமூட்டி யெரித்திட்டாக்கால்
காரேநீ யிறுகியது குழம்புபோலாங்
கண்மணியே யிக்குழம்பைப் பீங்கானிலூற்றே. 714

ஊற்றியே மதிதனிலே வைத்திட்டாக்கால்
உண்மையுள்ள சவர்க்கார மென்னசொல்வேன்
வாற்றியே யிதனைநன்றாய்ப் பூசைபண்ணி
வளமான கெவுரிசவர்க் காரமென்று
ஆற்றியே யரனுமையைத் தியானம்பண்ணி
அன்பாக ரேசக பூரகமும்பண்ணி
மாற்றியே மகாகோடி தொழிலுக்கெல்லாம்
மகத்தான கெவுரிசவர்க் காரமாச்சே. 715

கெவுரிசவர்க்காரச் சுண்ணம்

காரமென்ற கெவுரிசவர்க் காரச்சுண்ணங்
கண்மணியே சொல்லுகிறேன் கருவாய்க்கேளு
ஆரமென்ற கல்வமதில் சவர்க்காரம்போட்டு
அரகரா யென்சொல்வேன் பனிநீர்வார்த்து
நாரமேன்ற அண்டசுண்ணங் கழஞ்சிபோட்டு
நலமாக ஆட்டிவா மெழுகுபோலாம்
வாரமென்ற வழித்ததனை வில்லைசெய்து
வளமான ரவிதனிலே காயப்போடே. 716

காயான வில்லைதனை யெடுத்துக்கொண்டு
கண்மணியே மண்சீலை நன்றாய்ச்செய்து
வாயான கசபுடத்தில் வளமாய்ப்போட்டு
வகையாக வாறினபின் னெடுத்துக்கொண்டு
மாயான சீலைதனை தட்டிப்பாரு
மைந்தனே திருநீறுபோல வெண்மையாகும்
ஆயான காரமடா அக்கராகாரம்
ஆச்சரிய மாச்சரிய மார்க்காண்பாரே. 717

பஞ்சபூதக்குறி

பாரேது பதியேது கருவில்லாட்டால்
பகரறியா கருக்குருவும் பண்போர்க்கெய்தும்
ஆரேது நீரேது மண்ணில்லாட்டால்
அவ்விதமாய்ச் சவர்க்கார மிருந்தால்முத்தி!
வாரேது வாய்வேது தேய்வில்லாட்டால்
வழங்குகிற தேய்வதுதான் வாய்வைக்கொள்ளும்
சீரேது வாரேது பேச்சுமுண்டோ
சீரறிந்த பதிகண்டு க்ஷணத்திற்கட்டே. 718

சினமான மாய்கையதை யகலத்தள்ளி
சிவபதத்தி லனுதினமு மனதைக்கூர்ந்து
சினமான லோகவஞ் சனையைத்தன்னி
சீர்கெட்டு அலையாமல் மனதைக்கட்டி
சினமான செகசால மாய்கையெல்லாஞ்
சிவசிவா யுன்னறிவால் கட்டிக்கொண்டு
சினமான காமமிதை சுத்திபண்ணி
சிறுபிள்ளாய் காயாதி கற்பமுண்டேனே. 719

உண்டான படிசொன்னே னுண்மையாக
உண்மையுள்ள பூரணத்தைத் தினமுங்கொண்டால்
உண்டான திரேகத்தில் கசடெல்லாந்தா
னோகோகோ வுறைத்துநன்றாய்ச் சுத்தமாகும்
உண்டான காயத்தில் வினையுமில்லை
யுறுதியுள்ள கற்பத்தைக் கொள்ளலாகும்
உண்டான வோராண்டில் பனிரண்டுந்தாண்டி
யுற்றசௌ பாக்கியமெல்லா முணர்வதாச்சே. 720

உணர்வான யென்மகனே புத்திமானே
யுண்மையதாய் திரேகத்தைச் சுத்திபண்ணி
உணர்வாக நீகேளு தர்மவானே
உத்தமமாஞ் சமாதிதனில் யோகஞ்செய்நீ
உணர்வாகச் சித்திக்கும் வாசிமைந்தா
வுண்மையடா திரேகத்தில் தங்கும்வாசி
உணர்வாகச் சணமதிலே சித்திக்கும்பார்
ஒகோகோ உண்மையுண்மை யுகந்துபாரே. 721

சூதபற்பம் சூலை கிரந்தி அரையாப்பு வாதம் அசபவுத்திரம் முளைமூலம் சயங்களெட்டுக்கும்

பாரப்பா சூதபற்பஞ் சொல்லக்கேளு
பண்பான சூதமது சேர்தானொன்று
ஆரப்பா வறிவார்கள் பாறையுப்பை
அப்பனே பலமூன்று அதனிற்சேர்க்க
வாமப்பா கல்வத்திற் போட்டுக்கொண்டு
வளமான வைங்கோலத் தைலம்வார்த்து
நீரப்பா நிச்சயமாய் மூன்றுமாச்சு
நினைவாக யாட்டிவர மெழுப்போலாமே. 722

ஆமப்பா ஆட்டியதை வில்லை செய்து
அப்பனே ரவிதனிலே யுலரப்போட்டு
காமப்பா மண்சீலை யேழுஞ்செய்து
கண்மணியே கெஜபுடத்திற் போடுபோடு
வாமப்பா வாறினபின் னெடுத்துக்கொண்டு
வளமான சீலையதைத் தட்டிப்பாரு
நாமப்பா பற்பதை யென்னசொல்வேன்
நலமான சீசாவில் பதனம்பண்ணே 723

பண்ணவே பணவிடைதான் பனைவெல்லத்திற்
பண்பாகக் கொண்டிடவே சொல்லக்கேளு
அண்ணவே சூலையுடன் கிரந்தியரையாப்பு
ஆனதொரு வாதமெண் பத்துநான்கும்
வண்ணவே வழிபார்த்து ஓடிப்போகும்
வளமாக பற்பத்தில் மகத்துவங்கோடி
மண்ணவே நெய்தனிலே கொண்டுவிட்டால்
மகத்தான பௌத்திர முளைமூலம்போமே. 724

போமப்பா மிளகதனைக் கியாழமிட்டுப்
புகழாக யிதிற்கொள்ளச் சயந்தானெட்டும்
ஆமப்பா பொறிகலங்கி யோடிப்போகும்
ஆச்சரியம் பற்பத்தி லனந்தநோய்கள்
வாமப்பா வழிகாணா தோடிப்போகும்
வளமான பற்பந்தா னென்னசொல்வேன்
காமப்பா கருக்கிடையு மின்னூல்மைந்தா
காட்டாதே யொருவருக்குங் கருச்சொல்லாதே. 725

கெந்திபற்பம்

சொல்லாதே கெந்திபற்பஞ் சொல்லக்கேளு
சூட்சுமமா யாரறிவார் சூட்சாசூட்சம்
வில்லாதே சுத்திபண்ணி கெந்திசேர்தான்
விதமான கல்வத்திற் போட்டுக்கொண்டு
மல்லாத நஞ்சுசுண்ணங் கழஞ்சிபோட்டு
மைந்தனே பனிநீராற் சாமமாட்டு
கல்லான விந்தாலே சாமமாட்டு
கண்மணியே மெழுகுபோலாங் கண்டுகொள்ளே. 726

காணடா வழித்தெடுத்து வில்லைசெய்து
கண்மணியே ரவிதனிலே காயப்போடு
வீணடா அகலதனைப் படியத்தேய்த்து
விதமாக வுட்பக்கம் வைங்காயம்பூசி
மாணடா வில்லைதனை யதனுள்வைத்து
மைந்தனே மேலகலுங் கவிழ்த்துமூடி
ஆண்டா மண்சீலை யேழுஞ்செய்து
அப்பனே கெசபுடத்திற் போடுபோடே. 727

போடவே யாறினபின் னெடுத்துக் கொண்டு
புகழான சீலைதனைத் தட்டிப்போடு
ஆடவே கெந்தியது கட்டிநீறும்
அரகர கெந்திபற்பந் திருநீர்போலாம்
வாடவே பற்பத்தைச் சீசாவில்வைத்து
வளமான தேவிக்குப் பூசைபண்ணி
மாடவே வரங்கேட்டு வரத்தைப்பூண்டு
மகத்தான வயித்தியத்தை யாடக்கேளே. 728

சயம் காசம் ஈளை அப்பால் அனுபானமறிவது

கேளப்பா கோவெண்ணை தன்னிற்கொள்ளக்
கெடியான மேகமது யிருபத்தொன்றும்
ஆளப்பா யரைநொடியிற் பறந்துபோகும்
அரகரா பராபரத்தின் மகத்துவங்காணார்
நாளப்பா கெந்தி பணவிடைதான்கொள்ள
நகையாத சயகாச மீளைபோகும்
மாளப்பா வனுபானமறிந்து கொண்டால்
மகாகோடி மதியெல்லா மதிகேடாச்சே. 729

தாளகபற்பம்

கேளான தாளகத்தின் பற்பங்கேளு
கெடியான தாளகமோ பலந்தானைந்து
வாளான தாளகத்தைச் சுத்திபண்ணி
வளமான கல்வத்திற் போட்டுக்கொண்டு
நாளான அண்டசுண்ணங் கழுஞ்சிப்போட்டு
நான்முகனைத் துதிசெய்து பனிநீர்வார்த்து
மாளான விந்ததுவுங் கூடவிட்டு
மைந்தனே முச்சாம மாட்டுஆட்டே. 730

ஆட்டையிலே மெழுகுபோ லாகும்பாரு
அப்பனே வருத்தெடுத்து வில்லைசெய்து
காட்டையிலே கனரவியி லுலரப்போட்டு
கண்மணியே விந்தாலே யோர்சீலைசெய்து
வாட்டையிலே யண்டசுண்ண மகல்போற்பண்ணி
வளமான வில்லையதை யதனில்வைத்து
மாட்டையிலே மேலகலுங் கவிழ்த்துமூடி
மகத்தான சீலைமண் ணேழுஞ்செய்யே. 731

செய்கையிலே ரவியுலர்த்திச் சொல்லக்கேளு
சிவசிவா கெசபுடத்திற் போடுபோடு
ஐயையிலே யாறினபின் னெடுத்துப்பாரு
அரகரா யென்ன சொல்வேன் பற்பமார்க்கம்
வையையிலே சீசாவிற் பதனம்பண்ணு
வளமான தேவிக்குப் பூசைபண்ணு
நையயிலே தாளகத்துக் கொப்புமுண்டோ
நலமான தாளகந்தா னன்மையாச்சே. 732

வயித்தியம் – சயம் – காசம் – மந்தாரகாசம் – ஈளை – இருமல் இரத்தம் – இரைப்பு – உப்பிசம் – மூன்றுசயம்

ஆச்சென்ற பணவிடைதான் றேனிற்கொள்ள
அசடான சயகாசந் தாரகாசம்
வாச்சென்ற யீளையுட னிருமல்ரத்தம்
வளமான யிரைப்புவுப் பிசங்கள்போகும்
நாச்சென்ற மரதசயம் புத்தசயமிரண்டு
நலமான சிலேற்பனத்தால் கபந்தான்மூன்றும்
காச்சென்ற மூன்றாலே யெடுத்துரோகங்
கைக்கடந்த ரோகமெல்லா மகன்றுபோமே. 733

அப்பிரேகபற்பம்

கண்டுபோ மப்பிரேக பற்பங்கேளு
கண்மணியே கிருஷ்ணாப் பிரேகம்வாங்கி
கண்டுபோஞ் சுத்தியது நன்றாய்ப்பண்ணி
கனமான கல்வத்திற் போட்டுக்கொண்டு
கண்டுபோம் கெவுரிமெழு கழுஞ்சிபோட்டுக்
கரமான விந்தாலே கலக்கஆட்டி
கண்டுபோம் வழித்நதனை வில்லைசெய்து
காட்சியென்றே மூட்டைபோ லுண்டைபண்ணே. 734

பண்ணியே ரவிதனிலே யுலரப்போட்டுப்
பண்பாக விந்தாலே சீலையதுதான்
வண்ணியே மண்சீலை நன்றாய்ச்செய்து
வளமாக கெஜபுடத்திற் போடுபோடு
மண்ணியே நீறியது பற்பமாகு
மைந்தனே யாறினபின் னெடுத்துக்ொண்டு
அண்ணியே சீலைதனைத் தட்டிப்பாரு
அரகரா யென்னசொல்வேன் பற்பந்தானே. 735

வயித்தியம்–மேகம்–21–க்கும்

தானான பற்பத்தை சீசாவில்வைத்து
தன்மையுள்ள தேவிக்குப் பூசைபண்ணி
வேனான பணவிடைதா னெய்யிற்கொள்ள
விதமான மேகமது பிழுபத்தொன்றும்
மானான மனுஷசென்மக் கூட்டைவிட்டு
மதிகெட்டுப் பறந்தோடு மேகமெல்லாம்
ஆனான பற்பத்தி னனந்தநோய்கள்
ஆக்கைதனை விட்டோடு மறிந்துபாரே. 736

கல்நாற்பற்பம்

பாரென்ற கல்நார்தன் பற்பங்கேளு
பார்தனிலே சொல்லார்கள் பண்மையாக
ஆரென்ற கல்நாரைச் சுத்திபண்ணி
அப்பனே யகல்தனிலே போட்டுக்கொண்டு
வாரென்ற யேரழிஞ்சி யிலைச்சார்வார்த்து
வளமாக ரவிதனிலே காயவைத்து
நாரென்ற வில்லைதனை யரைத்துஅப்பி
நலமாக மேலுமொரு வகலைமூடே. 737

மூடையிலே சீலைமண் நன்றாய்ச்செய்து
முக்கியமுள்ள கோழிபுடந் தன்னிற்போடு
ஆடையிலே யரைநொடியிற் பற்பமாகும்
அரகரா பற்பத்தைச் சீசாவில்வைத்து
வாடையிலே தேவிக்குப் பூசைபண்ணி
வலமாகப் பணவிடைதா னனுபானத்தில்
நாடையிலே கொண்டிடவே நோய்களெல்லாம்
நலமாகப் பறந்தோடும் நவின்றிட்டேனே. 738

சகலநோய்விஷங்கள்தீர

நவிலவே சகலநோய் விஷங்கள்போக
நாட்டுகிறே னவிழ்தமொன்று நன்மையாக
கவிலவே சிவன்வேம்பு முக்கத்தாரி
கனமான நரிமிரட்டி பூனைக்காலி
மவிலவே பில்லாம ணக்கினோடு
மகத்தான கீறிபுள் ளடியின்மூலம்
வவிலவே யெலிக்காது மூலமோடு
வளமான வம்மையார் கூந்தலாமே. 739

ஆமென்ற வீறுதனை வெருட்டிமூலம்
அப்பனே கன்னியாக் குமரிமூலம்
நாமென்ன முடியா லழகிப்பூண்டு
நலமான சிறியநங்கை பெரியாநங்கை
காமென்ற சுணைநங்கைக் காக்கணத்தின்
கனமான ஆலடியிற் கீழானமூலம்
வாமென்ற விஷ்ணுமூலஞ் செவ்வகத்தி
வளமான கோரக்கர் மூலியாச்சே. 740

ஆச்சென்ற யேரழுஞ்சி யறுகங்கட்டை
அப்பனே செம்பருத்தி யானைப்பூண்டு
காச்சென்ற செங்கையான் வெள்ளறுகுமூலம்
கனமான கருங்குன்றி வெண்குன்றிவேரும்
நாச்சென்ற நிலைப்பனையு மத்தன்வேரும்
நலமாக யிதுவகைக்குப் பலந்தான்ரண்டு
வாச்சென்ற ரவியுலர்த்தி கல்லூரவிற்போட்டே
வளமாக யிடித்ததனைத் தூளாச்செய்ய 741

செய்யவே வடிகட்டி யெடுத்துக்கொண்டு
செயமான பீங்கானிற் போட்டுமைந்தா
வையவே சுத்தசலந் தன்னைவார்த்து
வளமாகப் பிசறியதை ரவியில்வைத்து
மையவே யுலர்ந்தபின்பு விஷச்சுண்ணம்பலந்தானிட்டு
மகத்தான அண்டசுண்ணம் ரண்டுபலம் போட்டு
கையவே கலந்துஅதை யெடுத்துக்கொண்டு
கணபதிக்குப் பூசித்துச் செப்பில்வையே 742.

செப்பான பணிவிடைதான் கொண்டுவிட்டால்
செய்மருந்து போனவிஷங் கக்கிப்போகும்
அப்பான சிலேற்பனத்தால் குளிமைதோஷம்
அசந்துகை விட்டதொரு நோயெல்லாம்போம்
வப்பான யரவமென்ற சாதிவிஷமெல்லாம்
வழிபாரா தோடிவிடும் வகுத்துப்பாரு
மப்பான பராபரமால் தேவிக்குச் சொல்ல
மகிழ்ந்தெனக்குத் தேவியவ ளுரைத்தாள்பாரே. 743

உரைசெய்தா ளெந்தனக்கு வுன்மையாக
ஒளிக்காமல் தன்வந்திரி யுனக்குச்சொன்னேன்
உரைசெய்தா ளெந்தனிட மனதைக்கண்டு
உண்மையென்ற பொருளெல்லா மெனக்குச்சொன்னாள்
உரைசெய்தாள் வாமிசிவ காமிவாலை
யுகத்துநான் கேட்டிட்டே னுண்மையெல்லாம்
உரைசெய்தாள் சொற்பனத்திற் கினவுபோல
வுகந்துநான் விழித்திட்டே னுண்மைதானே. 744

லிங்கபற்பம்

தானான லிங்கபற்பஞ் சொல்லக்கேளு
தன்மையுள்ள லிங்கமதைச் சுத்திபண்ணு
வேனான கல்வித்திற் பலமைந்திட்டு
விளங்கிநின்ற நவசாரத் தயிலம்வார்த்து
கானான முப்பதுவுங் கழஞ்சிபோட்டுக்
கண்மணியே முச்சாம மாட்டினாக்கால்
மானான மெழுகுபோ லாகுமையா
மகத்தான மெழுகதனை வில்லைசெய்யே. 745

செய்யயிலே ரவியுலர்த்திச் சீலைசெய்து
செயமான கெஜபுடத்திற் போடுபோடு
வையையிலே யாறினபின் னெடுத்துப்பாரு
வளமாகநீறியது பற்பமாகும்
நையையிலே லிங்கபற்ப மென்னசொல்வேன்
நலமான பற்பத்தை நவிலொண்ணாது
கையையிலே சீசாவில் வைத்துக்கொண்டு
கண்மணியே வாலைக்குப் பூசைபண்ணே. 746

பண்ணியே பணவிடைதா னெய்யிற்கொள்ள
பண்பான நோயெல்லாம் பறந்துபோகும்
வண்ணியே வாதமிதிற் கோடாகோடி
வளமான பற்பமடா வண்மைவண்மை
அண்ணியே பற்பமிதை யார்தான்செய்வார்
அசடருக்கு யெய்தாது ஆண்மைதன்னால்
மண்ணியே நோய்களுக்கு ராஜானியாகு
மகத்தான பற்பமடா மருவிப்பாரே. 747

வீரபற்பம் – குன்மநோய்க்கு

பாரப்பா குன்மநோய் போவதற்குப்
பண்பான வீரபற்பந் தன்னைக்கேலு
ஆரப்பா வீரமதைச் சுத்திபண்ணி
அப்பனே கல்வத்திற் போட்டுக்கொண்டு
நாரப்பா பூநீறு சிவமுப்பிட்டு
நலமான காய்த்தைலஞ் தன்னாலாட்ட
வாரப்பாா மெழுகதுபோ லாகுமைந்தா
வளமாக வில்லையது செய்துலர்த்தே 748

உலர்த்தியே யண்டசுண்ணம் விந்துங்கூட்டி
யுண்மையதாய் வில்லையின்மேற் கவசஞ்செய்து
உலர்த்தியே மண்சீலை யேழுஞ்செய்து
உத்தமனே கோழிபுடந் தன்னிற்போடு
உலர்த்தியே யாறினபின் னெடுத்துக்கொண்டு
உலவாகச் சீலையதைத் தட்டிப்பாரு
உலர்த்தினதோர் பற்பமதை யென்னசொல்வேன்
உண்மையாம் பற்பமிதை யுகந்துபாரே. 749

பாரப்பா சூலைபதி னெட்டும்போகும்
பண்பான குன்மமது யெட்டும்போகும்
ஆரப்பா வறிவார்க ளிதின்போக்கையா
ஆதவன்போற் சொல்லிவிட்டே னறிந்துபாரு
சீரப்பா யின்னூல்போ லார்தான்சொல்வார்
செகமதிலே கிட்டாது யின்னூலையா
வாரப்பா யின்னூலைப் பாருபாரு
வளமான நூலிதுதான் வண்மைதானே. 750

யோகமார்க்கம்

தானான கால்நீட்டி கையைக்கட்டி
தண்மையுடன் கண்மூடி யோகம்பாரு
வேனான கும்பகத்தி லிம்மென்றுகும்பி
விளங்கிநின்ற வாசியது மூலம்பார்க்கும்
கானான அந்திடத்தில் பழக்கம்பண்ணு
கைவசிய மாகுமடா கண்டுகொள்ளு
மானான மதிதனிலே யங்கென்றேகும்பி
மகிழ்ந்துநின்ற ரவிதனிலே வங்கென்றேத்தே 751

ஏத்தையிலே யந்திடத்திற் பழக்கம்பண்ணு
யெழுந்திருக்க மாட்டாது வாசிதானும்
காத்தையிலே கீழுமில்லை மேலுதுல்லை
கனமான அந்தரத்தில் கட்டும்வாசி
மாத்தையிலே கும்பகமென் றோரைச்செய்தோர்
மகத்தியி னிருப்பிடமா மகிழ்ந்துபாரு
வாத்தையிலே வாசியது யெழும்பாதையா
வளமான வாசியிருப் பிடத்திற்போமே. 752

இருப்பிடமா மோராண்டு பழக்கஞ்செய்தா
லென்மகனே பத்தாந்திங்களிற் பாலனாவாய்
வருப்பிடமா மூன்றாண்டு பழக்கம்பண்ணால்
வாய்விருக்கு மிடங்களெல்லாம் வளங்காண்பாய் நீ
அருப்பிடமா மரிசிவனுங் கண்ணிற்றோற்றும்
ஆதவன்போல் திறந்துநன்றா யறைந்திட்டேன்பார்
மருப்பிடமா மாதியந்தத் தலைமைக்குள்ளே.
மகிழ்ந்துநின்ற வாசியபடி மூலங்காணே. 753

காணுகின்ற ஆறுதலம் நன்றாய்த்தோன்றும்
கைலாச சத்திமுத்தி யெய்தும்பாரு
வாணுகின்ற வாசியதா லெல்லாமாச்சு
வளமான வகாரமடா சிவயோகந்தான்
ஆணுகின்ற வடிமுடியும் நடுவில்நின்று
அபானமென்ற வாய்வதனா லெல்லாமாச்சு
மாணுகின்ற மதியாச்சு ரவியுமாச்சு
மகிழ்ந்துநின்ற வதற்கடியில் சகல முமாச்சே 754

அக்கினிச்சூரணம்

சிவமான வக்கினியாஞ் சூரணத்தைக்கேளு
சிவசிவா யாரறிவா ரிந்நூல்மார்க்கம்
செலமான நீரின்மேல் நெருப்புமூலம்
செகந்தனிலே முளைத்ததொரு கண்டங்கத்திரி
செலமான கொடிவேலி சிவன்வேம்போடு
சிறப்பான தூதுவளை முட்கத்தாரி
செலமான மிளகருணை பிரண்டைகூட்டு
செவப்பான வாளையுட மூலமாமே. 755

மூலமென்ற வெடியுப்பு கரியுப்போடு
முக்கியமுள்ள வளையலுப்பு வகைக்குவொன்று
ஆலமென்ற வுப்பதனைச் சுத்திசெய்து
அரகரா தூளாகச் செய்துகொண்டு
வாலமென்ற வேர்வகையை யுலர்த்திக்கொண்டு
வகையாகத் தூளிடித்து வடித்துக்கொண்டு
சீலமென்ற திவையெல்லாங் கலந்துகொண்டு
சிவசிவா சிவமுப்பு கழஞ்சிபோடே. 756

தேவிபூசை—ஊஷ்ணம்—மூலச்சூடு—கிராணி செறியாமந்தம்—அசீரணந்திர

போட்டபின்பு தேவிக்குப் பூசைபண்ணி
புகழான வெடுத்ததனைச் சொல்லக்கேளு
ஆட்டபின்பு வெருகடித்தூள் கொள்வீராகில்
அரகரா வூஷ்ணமொடு மூலச்சூடெல்லாம்
வாட்டபின்பு கிராணியொடு செறியாமாந்தம்
வளமான வசீரணமும் வகையாய்ப்போகும்
கேட்டபின் வோடிவிடும் நோய்களெல்லாம்
கெடிகெட்டு வோடுமடா மருந்தைக்கண்டால். 757

மருந்தான மருந்திதுபோ லாருஞ்சொல்லார்
மகத்தான யிந்நூலை மருவிடாய் நீ
மருந்தான வக்கினியாஞ் சூரணத்தைச்சொன்னேன்.
மானிலத்தில் விள்ளாதே மாண்பருக்கு
மருந்தான மருந்தாலே தீரும்நோய்கள்
மகத்தான வாதநோ யெண்பத்துநான்கும்
மருந்தான பித்தச்சூட் டாலேவந்த
மருவிவந்த வினையெல்லா மோடிப்போமே. 758

சகலநோய் தீரக் காந்திசூரணம்

போமப்பா சகலநோய் காந்திதீரப்
புகழான சூரணந்தா னொன்றுகேளு
நாமப்பா யோரிலைத் தாமரையினோடு
நலமான கீழ்க்காயி னெல்லியோடு
வாமப்பா கன்னியாா குமரிவேரும்
வளமான செம்பருத்தி நிம்பவேரும்
காமப்பா யிலந்தைவே ரிலாமிச்சம்வேர்
கனமான கொன்றைவேர் வெட்டிவேரே. 759

வேரான வில்வேர் சங்கம்வேரும்
விளங்கிநின்ற அத்திவேர் முருக்கம்வேரும்
காரான கையானும் பொன்னாங்கண்ணி
கனத்துநின்ற முல்லையோடு சித்தாமுட்டி
ஆரான நிலைப்பனையுங்க கரந்தையல்லி
அம்பைவேர் சந்தனவேர் வல்லாரைதான்
மாரான கட்டுக்கொடி சமூலங்கூட்டு
மகத்தான நெல்லிமுள்ளி நெருஞ்சில்செப்பே. 760

செப்பான தக்காளிக் கோவைவேருஞ்
செயமான பாதிரிவேர் குருந்தல்வேரும்
மப்பான மலைமுருங்கை மாதளையின்வேரு
மகத்தான திவையெல்லாம் நிழலுலர்த்தி
கப்பான கல்லுரலிற் போட்டுக்கொண்டு
கண்மணியே யிடித்தனை வடித்துக்கொண்டு
அப்பான சிவகங்கை தனிலேபோட்டு
அரகரா கரைத்துநன்றாய் ரவியில்வையே 761

ரவியில்வைக்க மாந்தம் கிரந்தி சூடுபோகும்

வைப்பது வுஞ்சித்திரைதன் மாதந்தன்னில்
வகையாக நவநாள்தான் ரவியில்வைக்க
ஐப்பதுபோல் கசடற்றுச் சவர்க்காரம்போலாம்
அரகரா மறுபடியும் ரவியில்வைநீ
கைப்பதுவு முலர்த்தியதைத் தூளாய்ப்பண்ணிக்
கண்மணியே சிவமுப்பு கழஞ்சிபோட்டு
மைப்பதுவுங் கரண்டிநிறை கொள்வீராகில்
மகத்தான கிரந்தியுடன் சூடும்போமே. 762

மேகத்தினால் காந்தி மருந்துசூடும்

போமப்பா மேகத்தா லெழுந்தகாந்தி
புகழான பித்தத்தால் வந்தசூடும்
காமப்பா மருந்ததனால் வந்தசூடும்
கனலெழும்பிச் சிரசுகளின் கபாலச்சூடும்
நாமப்பா நாசிதனில் பீனிசத்தால்காந்தி
நசையாத பிணிகளெல்லா நவிலாவோடும்
வாமப்பா சொரிசிறங்கு குஷ்டசொரியெல்லாம்
வளமாகப் பரந்தோடும் வகுத்துப்பாரே 763

சன்னிக்குத் திரிபிடிக்க சன்னி 13 விஷதோஷங்கள் குளுமையும் போகும்

பாரென்ற குளுமைசன்னி தோஷம் போகப்
பகருகிறேன் திரியோன்று பகரக்கேளு
ஆரென்ற பேய்மிரட்டி பெருமருந்து
அழகான மஞ்சளுடன் வேம்பின்பட்டை
வாரென்ற சவுரிவே ரிதுவெல்லாந்தான்
வகையாக நிழலுலர்த்தி சமனாய்க்கொண்டு
மாரென்ற கல்லுரலில் தூளாய்ப்பண்ணி
மைந்தனே வடிகட்டிச் சொல்லக்கேளே. 764

கேளப்பா சீலைதனில் திரித்துக்கொண்டு
கெடியாகக் கொளுத்தியிதை நாசிக்கேற்றி
வாளப்பா வந்ததொரு தோஷமெல்லாம்
வழிபாரா தோடுமடா சன்னிபதின்மூன்றும்
ஆளப்பா குளுமையுடன் விஷதோஷங்கள்
அரைநொடியி லகன்றுவிடு மறிந்துபாரு
நாளப்பா நாள்செல்ல மாட்டாதையா
நமனில்லை நோயில்லை நலமாங்காணே 765

சொரிகுட்டத்துக்கு மேற்பூசயெண்ணெய்

காணப்பா சொரிகுட்ட மதன்மேற்பூச
கண்மணியே யெண்ணெயொன்று கருதிக்கேளு
மாணப்பா தாரமுடன் கெந்திசூதம்
மைந்தனே மயில்துத்தம் பால்துத்தந்தான்
ஆணப்பா நாபியுட னிதுவெல்லாந்தான்
அப்பனே யோரெடையாய்த் தூக்கிக்கொண்டு
வாணப்பா தென்னங்கா யெண்ணெய்வாங்கி
வலிமாக யிவையெல்லா மிடித்துப்போடே 766

போட்டுமே கலக்கியதை யடுப்பிலேற்றிப்
புகழாக வொருநாழி யெரித்திட்டாக்கால்
ஆட்டுமே யெண்ணெயது முறிவுபதங்காண்கில்
அக்கணத்தி லிறக்கியதைச் சலத்திலூற்ற
வாட்டுமே யெண்ணெயுட விஷமெல்லாந்தான்
வளமாகச் சலந்தனிலே கக்கிப்போகும்
மாட்டுமே யெண்ணெயதை மெதுவாகமைந்தா
மாசியது போல்நன்றாய் வழித்துக்கொள்ளே. 767

நூலைக் காட்டாமற் பூசைசெய்யவும்

கொள்ளவே சீசாவில் பதனம்பண்ணு
கொடிதான சொரிகளுக்கும் பூசினாக்கால்
விள்ளவே யோடிவிடுங் குஷ்டசொரியெல்லாம்
விதமான மருந்திதுதான் விவேகமாகும்
கள்ளமே யில்லாமற் சொல்லிவிட்டேன்
கண்மணியே யின்னூலைக் கருத்திலெண்ணு
அள்ளவே யின்னூல்போ லார்தான்சொல்வார்
அசடர்கண்ணிற் காட்டாதே யரையில்வையே. 768

ஆறுதலங்கண்டு எழுத்துகளைப்பூசிக்கவும்

அரையில்வைத்துப் பூசித்து அபானஞ்செய்து
அப்பனே யின்னூலை வெளிவிடாதே
கரையில்வைத்துக் கனகசபை தன்னைப்பூசி
கடாட்சிப்பார் கந்தனவர் காட்சியீவார்
வரையில்லா ஆறுவரை தன்னைக்கண்டு
வாசிதனை மேலேற்றி வங்கென்றூணி
மறையான வறுதலமு மறையாற்பூட்டி
மங்கென்று சிங்குவங்கை மனதிற்பூணே. 769

சாத்திரமே குருவறிய

மனமான யறிவைவிடக் குருவங்கேது
மனமறியார் சாத்திரவீதி வாசானேது
குணமான வைம்புலனை விட்டால் மோசங்
குறியறிவார் புலனிருந்தால் மோட்சமேது
வனமான பிரமனவன் கண்டால்ஞானம்
வனமறியார் பிரமகற்பங் கண்ணங்கேது
சினமான வாழ்க்கையைதின் வாழ்க்கைதன்னால்
சிவசிவா திரிலோக மாண்டுபோச்சே. 770

சாலத்தைலம் சித்து அக்கினித்தம்பனம்

போச்சென்ற சித்துமுறை யின்னங்கேளு
புகழான சித்துவின் மார்க்கம்பாரு
ஆச்சென்ற நாய்ப்பாகல் பேயின்பாகல்
அன்பான புனைப்பாகல் நீர்ப்பாகல்தான்
நாச்சென்ற வெள்ளைத் தாமரைக்கிழங்கு
நலமான பேய்ப்பிர்க்கன் வித்துஞ்சேரு
மாச்சென்ற மருளூமத்தன் விரையுஞ்சேரு
மகத்தான கெஞ்சாவித்து நத்தைச்சூரியாமே 771

ஆமென்ற திதுவெல்லா நிழலுலர்த்தி
அப்பனே பாண்டத்திற் போட்டுக்கொண்டு
நாமென்ற குழியில்வைத்துத் தைலம்வாங்கி
நலமான காய்த்தைலந் தன்னைவார்த்து
வாமென்ற முப்பூவுங் கழஞ்சிகூட்டி
வளமான தேவிமுன்னே வைத்துப்போற்றி
காமென்ற கங்கிலிஓங் வங்மங்கென்று
கண்மணியே நூற்றெட்டு வுருத்தானோதே. 772

தைலமிதின் சாபம் போச்சு

ஓதவே தைலமிதின் சாபம்போச்சு
வுத்தமனே தொழிலாடும் வகையைக் கேளு
வாதவே முன்கைமுச் சூடுமைந்தா
வளமான தைலமிதைப் பூசிப்போட்டு
ஆதமில்லாச் சீலைதனை யெண்ணெயிற்றோய்த்து
அரகரா முன்கைமுச் சூடுஞ்சுத்தி
மாதவே யக்கினியைக் கொளுத்திவிட்டால்
மகாமேரு யெரிந்தாற்போற் றோணும்பாரே. 773

விந்துகட்ட

எரியையிலே கையதுவுஞ் சுடாதுபாரு
என்மக்காள் குளிர்ந்ததண்ணீ ரதுபோலாகும்
மரியையிலே மனிதருக்கு மகாசித்தப்பா
மனிதரவ ருன்னடியை வணங்குவார்பார்
அரியையிலே யிதைக்கடு களவெடுத்து
அப்பனே நல்லவெல்லந் தன்னிற்கொள்ளு
கரியையிலே யனுபோகஞ் செய்துபாரு
கண்மணியே யாயிரம்பெண் புணரலாமே. 774

புணர்ந்தாலும் விடுகாது விந்துதானும்
பேதைமன மானபெண்கள் பிரேதமாவார்
அணர்ந்ததுபோல் வெடியுப்பைக் கழஞ்சிகொள்ள
ஆச்சரியம் விந்துவது பளிச்சென்றுவீழும்
கணர்ந்தாலு மிம்முறைபோல் யாருஞ்சொல்லார்
காட்சியிது வேடிக்கை கண்டுகொள்ளும்
மணர்ந்தாலும் மங்கைப்பெண் யோகவித்தை
மகத்தான வித்தையடா மருவிப்பாரே. 775

மாரணசித்து

பாரான மாராணமாஞ் சித்துகேளு
பார்தனிலே சொல்லார்கள் புதுமையாகும்
ஆரான வைங்கோலத் தைலஞ்சேர்த்து
அரகரா மத்தித்து வைத்துக்கொண்டு
சீரான பதிநோக்கிப் பாவைபண்ணி
சிவசிவா வலதுபக்கங் கருத்தோடொற்றி
தாரான யெதிரியவன் பேரெழுதிக்கொண்டு
வளமான முள்ளெடுத்து கருத்தொட்டுணே 776

ஊணவே யெதிரியவன் மாண்டுபோவான்
உத்தமனே யுனக்கொருத்த ரீடுண்டோசொல்
வாணவே யிதுவொன்றா லெதிரியில்லை
வையகத்தில் நீயுமொரு பிரமனாச்சு
காணவே கருக்கண்டால் மோட்சமாச்சு
கைமுறையுஞ் செய்முறையும் நூலிலாச்சு
மாணவே மாதியந்தத் தலைமையெல்லா
மகத்தான கொடிமுடியில் சமைந்ததாச்சே. 777

சமர்த்தானசித்து

சமர்த்தான சித்துவொன்று சொல்லக்கேளு
சாகரத்தில் மாவதனால் பாவைபண்ணி
சமர்த்தான ஆடையா பரணம்பூட்டி
சச்சிதானந்தமென்ற கருவெடுத்து
சமர்த்தான கமலத்தில் தடவிமைந்தா
சகசம்பா லோகவூசி கொண்டுகுத்தி
சமர்த்தான யெதிரியவன் பேரைமைந்தா
சகலபிணி வருகவென்று தலைகாலாய்மாறே. 778

மாறியே மாடனுக்கு மங்சிங்கென்று
மைந்தனே வாயிரத்தெட்டு ருவுமோதி
வாறியே வஸ்துகொண்டு பூசைபண்ணி
வளமான பாலதனை யெடுத்துக்கொண்டு
நாறியே யெதிரியவர்ன வீட்டில் புதைத்துப்போடு
நலமாக வவன்வீட்டில் செனமெல்லாந்தான்
ஆறியே நோயாக விழுவாரெல்லாம்
அக்கணத்தில் அவர்வீடு பாழடைந்துபோமே. 779

போமப்பா சமர்த்திதுதா னிதுபோலுண்டோ
புகழாக வக்கணத்தில் வெல்வதற்கும்
ஆமப்பா குளிர்ந்தகாச்சல் தலைநோயுந்தான்
அந்திடத்தை விட்டுஅது போகாதையா
வாமப்பா பிசாசகளு மந்திடத்தைச்சுற்றும்
வளமான கவுரியிதுவு மிகவுங்காணும்
காமப்பா சூனியமென் றிதற்குப்பேரு
கண்காட்சி சமர்த்திதுதான் கண்டுகொள்ளே. 780

கண்டுணர்ந்து சொல்லுகிறேன் தர்மவானே
கண்ணான மனக்கண்ணை யொட்டிப்பாரு
கண்டுணர்ந்து சாந்திரத்தைத் தேடிவாங்கிக்
கண்டிதமாய்ச் சோதித்துக் கருக்கண்டப்பா
கண்டுணர்ந்து குருக்களைத்தான் முடித்துக்கொண்டு
கண்மணியே கனயோகஞ் செய்தீரானால்
கண்டுணர்ந்து வாசியைத்தா னிழுத்துக்கட்டி
கனமான பொறியைந்தை விலக்கிப்போடே 781

விலக்காமல் நின்றாக்கால் வினைகளெய்தும்
விருதாவாய்ப் பூரணமுஞ் சொக்காதையா
விலக்காமே லைம்புலனு மிருந்துதானால்
வீணாகிச் சடலமது அழிந்து போகும்
விலக்காம னின்றாக்கால் வினையுங்கூத்தும்
வீணான மண்பாண்டங் கரைந்துபாழாம்
விலக்காம னின்றதினாற் சடலம்போச்சு
வெகுகோடி புண்ணியத்தால் விலக்கலாச்சே. 782

யோகஞ் செய்ய – அங்கம் – ஞானம் – அறியவும்

புண்ணியந்தான் செய்வதற்கு யோகராசி
பூண்டதுவு மட்சணத்திற் புனிதமாகும்
புண்ணியந்தான் புருஷசென்மம் பிறந்தாலென்ன
போக்கரிய நீக்கரிய புத்திவேணும்
புருஷசென்மம் புருஷசென்மம் பிறக்கலாச்சு
போதமது அழிந்தகர்மத் தாலேபெண்ணாம்
புண்ணியத் தால்புத்தி விவேகனாவாய்
பிறக்கிறது வரிதுமெத்த சிவயோகிதானே. 783

பிறந்தாலும் ராசியது கூடவேணும்
பேரான ராசியில்லா விட்டாற்பொய்யாம்
பிறந்தாலும் நாள்திதியில் பிறக்கவேணும்
புகழரிய திதியிருந்தால் யோகம்வேணும்
பிறந்தாலும் ஐந்துமூன்றுஞ் சரியாய்வேணும்
பூட்டிதுதா னில்லாமற் பிறந்தாலென்ன
பிறந்தாலும் போக்கரிய சாஸ்திரம்வேணும்
புத்தியுள்ளோர் நூல்தேடிப் பார்ப்பார்பாரே. 784

கருக்குருவின்மை

பாரென்ற கருக்குருவா மையைக்கேளு
பார்தனிலே விள்ளாதே கருவை மைந்தா
ஆரென்ற கருங்குருவிக் கண்ணும்பித்தும்
ஆச்சரியம் ஆந்தைக்கண் பித்துஞ்சேரு
வாரென்ற செம்போத்துக் கண்ணுப்பித்தும்
வளமான ஊர்க்குருவிக் கண்ணுப்பித்தும்
நாரென்ற நரிப்பித்துங் கண்ணுஞ்சேரு
நலமான அடைக்கலத்தின் கண்ணும்பித்தே. 785

பித்தான செம்பருந்தின் கண்ணும்பித்தும்
பிலமான வேங்கைப்புலிக் கண்ணும்பித்தும்
பித்தான கரும்பூனைக் கண்ணும்பித்தும்
பேதைமன மானவவ்வால் கண்ணும்பித்தும்
பித்தான பசுந்தேரை சமூலங்கூட்டு
பிரபல்லி யமானதொரு கழுதைப்பித்தும்
பித்தான காக்கணத்தின் கண்ணும்பித்தும்
பிறந்ததொரு பாலனுட நஞ்சுங்கூட்டே. 786

நஞ்சான கருங்குரங்கு கண்ணும்பித்தும்
நலமான காடைப்பித்துங் காடைக்கண்ணும்
வஞ்சான துரிஞ்சல் பித்தந் துரிஞ்சற்கண்ணும்
வளமான புழுகுபூனைக் கண்ணும்பித்தும்
மஞ்சான வல்லூறின் கண்ணும் பித்து
மகத்தான மயிற்கண்ணு மயிலின்பித்தும்
அஞ்சான யிப்புலியு மிந்திரகோபம்
அப்பனே குழியானை செண்பகப்பூவாமே. 787

கனகமைசிமிள்

ஆமப்பா யிதுவகைக்கு விராகனெடைகொண்டு
அப்பனே யுலர்த்தியதைத் தூளாய்ப்பண்ணி
காமப்பா தூசிதனில் பந்தம்போற்பண்ணி
கண்மணியே பெருஞ்சட்டி தன்னிற்போட்டு
நாமப்பா காரெள்ளி னெண்ணை படிவார்த்து
நலமாக தீக்கொளுத்தி மேற்சட்டிமூடி
வாமப்பா யெரிக்கவே மைதான் பற்றும்
வளமான மையதனைச் சுரண்டிக்கொள்ளே 788

மைசாபம் போக பீசமந்திரம்

கொள்ளவே சவ்வாது புனுகுபூரங்
கொடிதான கஸ்தூரி குங்குமப்பூ
அள்ளவே கோரோசினையு மிதுவெல்லாந்தான்
அப்பனே யதிற்போட்டு ஐங்கோலந்தொட்டு
உள்ளவே மத்தித்துச் சொல்வேன் மைந்தா
வளமான பொன்சிமிழில் பதனம்பண்ணி
மள்ளவே மனோன் மணித்தாய் பூசை செய்து
மைந்தனே மங்றிங்கென்றும் இறியுங்கிறியே. 789

என்றான யிம்முல மார்தான் காண்பார்
இகத்திலுள்ள காமுகரோ காணப்போறார்
வண்டான மூலமிது லெட்சமோது
வளமான மைதிலதம் சாபம்போச்சு
கன்றான கண்காட்சி யிதிலுண்டாச்சு
கனகசித்து யிதற்கீடு யில்லைமைந்தா
மன்றான மையப்பா யார்தான் செய்வார்
மைந்தனே செய்தாக்கால் சித்தன்றானே. 790

மையிட மந்திரம்

தானான மையதனைத் திலதம்போட்டு
தன்மை வெகுதண்மையதாய் – வங் – சிங்கென்று
மானான லோகமதிற் போனாயனால்
மாண்பரவர் லோகமதில் வணங்குவார்கள்
சேனான சேனாபி ஷேகஞ்செய்வார்
செம்மையுட னவர்பதத்தைப் போற்றுவார்கள்
வேனான வேதகுரு நீதானென்பார்
விகுர்திமன மனமகற்றி விளம்புவாரே. 791

வசியம்

வாரான நேத்திரத்தில் மையைத்தீற்றி
வளமான கடுகுபோல் திலதம்போட்டு
காரான மான்முகனை ககங்கங்கென்று
காட்சியெனக் கெய்தவென்று கமலத்தேற்றி
மாரான கண்சுழட்டிப் பாருபாரு
மாநிலத்தில் மாந்தர்சித்தர் தோன்றுவார்கள்
சீரனே வவரிடத்தில் தர்க்கம்பண்ணு
சிவசிவா வுன்னடியில் வணங்குவாரே. 792

சித்தரைக்காண்க

வாரென்ற மையதனைக் கேட்பார்சித்தர்
வழங்குமவர் வாய்ப்பேச்சை வாங்கிக்கொண்டு
நீரென்ற சூட்சமெல்லாங் கேட்டாயானால்
நிமிஷத்தில் சூட்சமெல்லாம் வெளியாய்ச்சொல்வார்
காரென்ற மையதனைக் குலைத்துப்போட்டு
கண்மணியே குளிகை சாரணையைக்கொண்டு
மாரென்ற மாற்றமையுந் திலதம்போட்டு
மைந்தனே குளிகையதா லெழும்பிப்போவே. 793

போனபின்பு சித்தரவர் மெச்சுவார்கள்
புதுமையிது புதுமைவெகு சித்தனென்பார்
ஆனபின்பு வகத்தியர்க்கு அதிகசித்தன்
அப்பனே நந்தியுட சீஷனென்பார்
வானபின்பு மகாசித்தர் நந்திசீஷன்
வலமையுள்ள சர்க்குருவின் பிள்ளையென்பார்
கானபின்பு பல்விதமாய்ப் பேசிக்கொண்டு
கண்கலங்கி முகமயங்கிக் கலக்கமாமே. 794

ஆமப்பா நாமம்போல் மையைவிட்டு
அப்பனே கடுமிரவி லிருட்டிற்போனால்
போமப்பா பூதபிரேத பிசாசுதானும்
புகழான வுன்கண்ணிற் றோற்றும்பரு
நாமப்பா விநோத வேடிக்கையாகும்
நலமான வேடிக்கை யென்னசொல்வேன்
காமப்பா கண்காட்சி வினோதமாகுங்
கண்மணியே விள்ளாதே கருவைத்தானே. 795

வசியமையின்விதம்

தானான மையொன்று சொல்லக்கேளு
தண்மைவெகு தண்மையிது ஆர்தான்செய்வார்
வேனான மூலியொடு விஷ்ணுமூலி
விளங்கியதோர் சிவமூலி நத்தைச்சூரி
மானான மட்டுக்கொடி சிவகரந்தை
மகத்தான புல்லுருவி சமனாய்வாங்கு
ஆனான யானைக்கண் சட்டிவாங்கி
அப்பனே யிதுவெல்லா மதனிற்போடே. 796

போட்டுநீ ஐங்கோலத் தயிலம் வார்த்து
புதுமையதா யடுப்பேற்றித் தீயைமூட்டி
வாட்டுநீ கருக்கியதை யெடுத்துக்கொண்டு
வளமான சிவமுப்பு கழஞ்சிபோட்டு
நாட்டுநீ புனுகு ரோசனைகஸ்தூரி
நலமாக மத்தித்துச் சிமிழில்வைத்து
மாட்டுநீ தேவிமுன் வைத்துப்போற்றி
மைந்தனே மங்சிங் வங்கென்றேத்தே. 797

ஏற்றவே நூற்றெட்டு வுருவுமோதி
யென்மகனே தேவியைத்தான் தியானம்பண்ணி
வாற்றவே பூசைபரி மளங்குள்மைந்தா
வளமாக மிகவுநன்றாய்க் கனிந்துசெய்து
மாற்றவே மாமுகனை யடிவணங்கிப்போற்றி
மகத்தான செஞ்சடையான் குஞ்சரமேயென்று
ஆற்றவே கரனியாச மப்பியாசஞ்செய்து
அப்பனே சோடசமாய் நின்றுகேளே. 798

கேளப்பா மையதனை யெடுத்துக்கொண்டு
கெணிதமாய்ப் பணவிடைபோல் திலதம்போட்டு
வாளப்பா சிங்கென்று போனாயானால்
வளமான ஸ்திரீகளவர் மயங்கிப்போவார்
நாளப்பா செல்லாமல் வருவார்பாரு
நாடதிலே ராசருக்கு ராசநீயே
ஆளப்பா யுலகமெல்லா மரைநொடிக்குள்
ஆச்சரிய முன்னடியில் பணிவார்பாரே. 799

பாரப்பா ராசருக்கு மவசியமென்னில்
பண்பான ராசரவர் போற்றுவார்கள்
ஆரப்பா வறிவார்கள் புருஷருக்கு
அரகரா – அங் – சிங் – வம்–யம் யென்னில்
வாரப்பா புருஷரெல்லாம் வசியமாவார்
நலமான வசியமிது மைபோலுண்டோ
காரப்பா கங்கங் கசிமசியென்னில்
கண்மணியே லோகமெல்லாம் வசியமாமே. 800

ஆமப்பா மையைப் போலுண்டோவித்தை
அப்பனே யின்னூல் மகிமைமெத்த
வாமப்பா யின்னூல்போ லார்தான் சொல்வார்
வளமான யின்னூலை மருவிப்பார்த்தால்
தேமப்பா தேறாத மனங்களெல்லாந்
தெளிந்து மிகத்தோயுமடா மறைப்பேயில்லை
காமப்பா கனவில்கருக் கண்டாப்போலாங்
கண்மணியே யின்னூலைக் கடாட்சிப்பாயே. 801

காட்சியென்ன பூரணமே காட்சிகாட்சி
கைலாச முத்தியடா கண்டுகொள்ளு
தாட்சியென்ன பூரணத்தில் தாழ்வுமில்லை
தண்மைவெகு தண்மையடா பூரணத்தின்மார்க்கம்
மாட்சியென்ன வறிவுள்ளோர் மனமேசாட்சி
மகத்தான வறிவல்லோ வாசானாசான்
ஆட்சியென்ன வழியாக சாஸ்திரபாகம்
அன்பான யின்னூல்கைப் பாகமாச்சே. 802

பாகமென்ன பொருளறியார் பதியைக்காணார்
பன்பாக விதற்கெல்லா மாசான்வேறே
பாகமென்ற வாசானைத் தேடுவாயென்றும்
பதியறியாச் சாஸ்திரத்தைப் பாராய்பாராய்
பாகமென்ற பாகமது யிதிலேதோன்றும்
பிரபல்லி யமானகரு யிதிலேதோன்றும்
பாகமென்ற கருக்குருவா மின்னூல்மார்க்கம்
பஞ்சாட்சரம் போலின்னூலைப் பதித்திட்டேனே. 803

வைத்தியம் – தேங்காய் நெய்

இட்டதொரு வயித்தியத்தின் செயலைக்கேளு
யிதமான நெய்யொன்று சொல்வேனையா
வட்டமில்லாத் தென்னங்காய்ப் பாலும்வாங்கி
வளமான கோவினெய் கோவின்பாலும்
அட்டதொரு வல்லாரை யாரைக்கீரைச்சாறு
அப்பனே யவுரிச்சா ராவாரஞ்சாறும்
மட்டுமருங் கில்லாத கோவைச்சாறு
மருவிவரு மத்திப்பா லாலம்பாலே. 804

பாலான கழுதைப்பால் கன்னிமுலைப்பாலும்
பண்பான நெல்லிச்சாற் நிலைப்பனையின் சாறுஞ்
ஆலான யிவைவகைகுப் படிதான்வாங்கி
அப்பனே கற்க்கவகை சொல்லக்கேளு
வாலான சாதிக்காய் சாதிபத்திரி
வளமான செண்பகப்பூ வேலங்கிரம்பு
நாலான கடுக்காயுங் கடுக்காய்ப்பிஞ்சும்
நலமான கடுக்காய்ப்பூ கசகசாவே. 805

வேயான திதுவெல்லா மிளவறுப்பாய்ச்செய்து
விளங்கியதோர் தூளிடித்து வைத்துக்கொண்டு
காயான பனிக்குடத்தின் பனிநீர்வாங்கி
கண்மணியே படியொன்று வாங்கிநீயும்
மாயான சீனியது யிருபத்தைந்துகூட்டி
மைந்தனே சாறும்பா லொன்றாய்ச்சேர்த்து
ஆயான கலக்கியதை யடுப்பிலேற்றி
அப்பனே சாமமைந்து யெரித்திடாயே. 806

எரித்திடனே யிறுகியது பாகம்பாரு
என்மகனே கர்க்கமது போட்டுக்கிண்டு
மரித்திடவே நெய்யாகு மென்னசொல்வேன்
மகத்தான நெய்யிதுதான் மருவிப்பாரு
கரித்திடவே கரண்டிநிரை கொண்டிட்டாக்கால்
கனகரதந் தேகமது போலாமையா
வரித்திடவே வல்வினைக ளகன்றுபோகும்
வளமான நெய்யிதுதான் வன்மைதானே. 807

எக்கலா தேவிபீசம்

தானான யெக்கலா தேவிமூலந்
தண்மையதாய்ச் சொல்லுகிறேங் கேளுகேளு
வேனான ஓங்கிரியுங் கிறாங்கிரியும்மென்று
வேதாந்த யெக்கலாதேவி – றாறா – வென்னில்
ஓனான ஒருலட்சம் நாற்பதுநாளோது
உத்தமியா ளெக்கலா வசியமாவாள்
மானான தேவியவள் வசியமானாள்
மகாகோடி சித்துவித்தையாடலாமே 808

பொம்மக்காள்மூலம்

ஆமெனவே சத்திபொம் மக்காள்மூலம்
அறைகிறேன் தன்வந்திரி யன்பாய்க்கேளு
வாமெனவே இம்—கிறியும்—இவ்விலிங்கிறியும்
பொம்மக்காள் தேவிறாறாவளமாக மண்டலத்தி லட்சமோது
காமெனவே கன்னிபொம் மக்காள்தேவி
களங்கமற வுன்பங்கிலச் சுடர்போல் நிற்பாள்
நாமெனவே யுனக்கெதிரி நசைந்துபோவார்
நாடதிலே நீயுமொரு சாலமரமே. 809

ஜாலக்காள்மூலம்

சாலமென்ற ஜாலக்காள் மூலங்கேளு
ஞானிகட்கு யிம்மூலம் நவில்வோங்கேளு
ஆலமென்ற ஆம்அறியும் அவ்வும்அய்யும்
அரகரா ஜாலக்காள் ஆக்கிருஷாயாறாறா
வாலமென்ற வடமுகமாய்க் குந்திக்கொண்டு
வளமாக லட்சமுரு மண்டலந்தானோது
காலமென்ற காலமதில் செபந்தான்செய்ய
கனவுபோ லுண்பங்கில் கருச்சொல்வாளே. 810

மல்லம்மாள் மூலம்

சொல்வாளே மல்லம்மாள் மூலஞ்சொல்வேன்
சொற்பெரிய மங்மறியும் மாமாசிறியும்
சொல்வாளே – அங் – அறியும் – மன தல்லி – றாறா
சோசியம்போ லுன்னிடத்தில் சொல்வான்பாரு
சொல்வானே சோசியங்க ளெட்சணிபோல
சொல்லாளே சுகாதீத முள்ளபதியறிவிப்பாள்பார்
சொல்வாளே யெத்தேச சேதியெல்லாஞ்
சூட்சமதாய்த் துறைகாண வழிசொல்வாளே. 811

வாழியாக நீகேளு தர்மயோகி
வளமாக மண்டலத்தி லட்சமோது
அழியாத பாலகனே யறிவுள்ளானே
அரகரா மல்லம்மாள் வசியமாவாள்
கழியாத மனம்நீக்கிக் கசட்டைப்போக்கி
கசடற்ற மனமாக நின்றுகொண்டு
வெளியான வெளியற்று ரேசகத்தில்நின்று
வேதாந்தி பொறுமையுள்ளோர்க் கெய்துந்தானே. 812

மயேந்திரையின்மூலம்

தானான மயேந்திரையின் மூலங்கேளு
தண்மையுள்ள தேவியென்ற மயேந்திரைதான்
வேனான – வம்வறியும் – வையும் வாவா –
வேதாந்த மயேந்திரையாள் தேவிறாறா
ஆனான வன்புள்ள மைந்தாகேளு
ஆச்சரிய மாச்சரிய மைந்தாசொல்வேன்
மானான நாள்வித மாயிரத்தெட்டாக
மண்டலந்தான் னுருச்செய்ய வசியமாமே. 813

விமலிமூலம்

ஆமேதான் விமலியுட மூலஞ்சொல்வேன்
அரகரா குறுமசிம சிம்மென்றேத்த
நாமேதான் மண்டலத்தி லட்சமுருவோத
நலமான யீஸ்பரிதான் பிரகாசிப்பாள்
வாமேதான் யீஸ்பரியின் மூலம்
வளமாகச் சாற்றுகிறோம் சாற்றக்கேளு
காமேதான் கங்கிரியும் கவங்கிங்கென்று
காட்டடா லட்சமுரு கருவாய்த்தானே. 814

வடந்தையீஸ்பரிமூலம்

தானென்ற வாணுவத்தால் வடந்தை சொன்னேன்
தாரணியில் முன்னோர்கள் சொல்லவில்லை
வேனென்ற மூலமிது வெளியாய்ச்சொன்னேன்
வேதாந்த மூலமிது வடந்தைமூலம்
கானென்ற கருக்குருபோல் சொல்லிவிட்டேன்
கைலசமா முனியோர்கள் கருக்கண்டார்பார்
மானென்ற மடப்பயல்கள் பாராரிந்நூல்
மகத்தான சிவயோகிக் காகும்பாரே. 815

சிவகாமி மூலம்

பாரப்பா தேவிசிவ காமிமூலம்
பாடுகிறேன் பாடுகிறேன் பண்பாய்க்கேளு
ஆரப்பா வறிவார்கள் அய்யும்சிம்மென்று
அரகரா சவ்வென்றும் மவ்வென்றேசொல்
காரப்பா மண்டலத்தி லட்சமோத
கைவசியமாய் விடுவாள் கண்டுகொள்ளு
நேரப்பா மந்திரத்தை நினைவாயோது
நிட்சயமா யின்னூலை நிறுத்திட்டேனே. 816

இட்டமொழி யின்னூலோ சகலகலைக்ஞானமாக
யெடுத்துரைத்தே னென்பேரே நந்திநந்தி
நட்டவகை யென்மகனே குஞ்சரமேமைந்தா
நானென்ற வாணுவத்தாற் சொல்லிவிட்டேன்
மட்டுமித மில்லாமற் சொன்னேன்மைந்தா
மைந்தனே தேவியுட மகிமையாலே
வட்டமில்லாப் பூமலரைக் காணவேணும்
வையகத்துச் சேதியெல்லாம் வகையாய்த்தள்ளே. 817

நளராச செந்தூரம்

தள்ளவே நளராசன் செந்தூரங்கேளு
தண்மைபெரு செந்தூரஞ் செய்செந்தூரம்
கள்ளவே நத்தையது பத்துவாங்கி
கடிதான தமரிட்டுஅண்டச் சுண்ணம்போடு
மெள்ளவே தானெடுத்துப் பனியில்வைக்க
மெய்யான தண்ணீராஞ் செய்துபாரு
விள்ளவே யான்விண்டே னின்னூல்மார்க்கம்
வேதாந்தி யறிவதற்கு விளம்பினேனே. 818

விளம்பினேன் அண்டோடு பத்துபலம்வாங்கி
விதமாகக் கல்லுரலிற் போட்டுக்கொண்டு
துளம்பினேன் கம்பதனாற் சாடுசாடு
தூளிதம்போ லாகுமையா அண்டத்தூளு
நளம்பினே னத்தூளைக் கல்வத்திட்டு
நன்மைபெறு மப்பிரேகம் பலந்தானிட்டு
குளம்பினேன் குருபரனை யனுதினமுந்தொழுதுகொண்டு
குஞ்சரமே யந்நீரை யிதனில்வாரே. 819

வார்த்துமே சாமம்நன்றா யாட்டுஆட்டு
வளமான கெந்தியுடன் பூரம்வீரம்
ஆர்த்துமே சங்கோடு வகைக்குவொன்று
அரகரா யிதைப்போட்டு அந்நீர்வார்த்து
சீர்த்துமே யறுபத்து நாற்றயிலந்தொட்டு
சிவசிவா வழித்தெடுத்து வில்லைசெய்நீ
மூர்த்துமென்ற ரவியுலர்த்தி மைந்தாகேளு
முக்கியமென் றறூகை சுத்துசுத்தே. 820

சுத்தியே மண்மேலோர் மண்சீலைசெய்து
சுகமாக கெசபுடத்திற் போடுபோடு
நத்தியே யாறினபின் னெடுத்துக்கொண்டு
நலமாகக் கணபதிமுன் வைத்துப்போற்று
வத்தியே செந்தூர மருணன்போலாம்
வளமாகச் செந்தூர மென்னசொல்வேன்
கத்திக்கொண்டு வீசுமடா வினையைமைந்தா
காரணத்து நளராச செந்தூரந்தானே. 821

தானான செந்தூர மார்தான்காண்பார்
தாரணியி லாரறிவார் தவசிகாண்பார்
வேனான மூலமையா செந்தூரபோக்கு
வேதாந்திக் கெய்துமின்னூல் விளம்பினேன்பார்
கோனான செந்தூரங் கொண்டாலையா
கொடியதீ வினையற்று நல்வினையுமெய்தும்
மானான தேகமது யெகுப்போலாகு
மருவினதோர்க் கையதற் கழிவோயில்லை. 822

தாம்பரவேதை வெங்கலக்களங்கு

இல்லையே யென்மகனே தர்மயோகி
யேகாந்த யோகத்துக் கிதுவேசூட்சம்
அல்லையே தாம்பரத்தில் பணந்தானிய
ஆதிப்பொன் தங்கம்பத் தரைதானாகும்
வெல்லையே வேதைக்குத் தொந்தங்கேளு
வெங்கலத்தி னுருக்குமுனை தன்னிலிய
அல்லையே யென்னசொல்வேன் களங்கம்பாரு
அக்களங்கை யெடுத்துமிகத் தொந்தங்கேளே. 823

கேளேநீ யென்மகனே யன்புள்ளானே
கேசரம்போ லிம்முறையைக் கிழித்திட்டேன்பார்
தானேநீ களங்கிதனைத் தாம்பரத்திலிய
தண்மைபெரு மன்னூறா மென்னசொல்வேன்
நானேநீ களங்கெடுத்துக் கல்வத்திட்டு
நாரணனை மனதிலெண்ணி நன்மைபூண்டு
வாளேநீ சர்க்குருவைக் கழஞ்சிபோட்டு
வாலையைத்தான் றொழுதுவடி பணிந்துபோற்றே. 824

இட்டமொழி யின்னூலோ சகலகலைக்ஞானமாக
யெடுத்துரைத்தே னென்பேரே நந்திநந்தி
நட்டவகை யென்மகனே குஞ்சரமேமைந்தா
நானென்ற வாணுவத்தாற் சொல்லிவிட்டேன்
மட்டுமித மில்லாமற் சொன்னேன்மைந்தா
மைந்தனே தேவியுட மகிமையாலே
வட்டமில்லாப் பூமலரைக் காணவேணும்
வையகத்துச் சேதியெல்லாம் வகையாய்த்தள்ளே. 817

நளராச செந்தூரம்

தள்ளவே நளராசன் செந்தூரங்கேளு
தண்மைபெரு செந்தூரஞ் செய்செந்தூரம்
கள்ளவே நத்தையது பத்துவாங்கி
கடிதான தமரிட்டுஅண்டச் சுண்ணம்போடு
மெள்ளவே தானெடுத்துப் பனியில்வைக்க
மெய்யான தண்ணீராஞ் செய்துபாரு
விள்ளவே யான்விண்டே னின்னூல்மார்க்கம்
வேதாந்தி யறிவதற்கு விளம்பினேனே. 818

விளம்பினேன் அண்டோடு பத்துபலம்வாங்கி
விதமாகக் கல்லுரலிற் போட்டுக்கொண்டு
துளம்பினேன் கம்பதனாற் சாடுசாடு
தூளிதம்போ லாகுமையா அண்டத்தூளு
நளம்பினே னத்தூளைக் கல்வத்திட்டு
நன்மைபெறு மப்பிரேகம் பலந்தானிட்டு
குளம்பினேன் குருபரனை யனுதினமுந்தொழுதுகொண்டு
குஞ்சரமே யந்நீரை யிதனில்வாரே. 819

வார்த்துமே சாமம்நன்றா யாட்டுஆட்டு
வளமான கெந்தியுடன் பூரம்வீரம்
ஆர்த்துமே சங்கோடு வகைக்குவொன்று
அரகரா யிதைப்போட்டு அந்நீர்வார்த்து
சீர்த்துமே யறுபத்து நாற்றயிலந்தொட்டு
சிவசிவா வழித்தெடுத்து வில்லைசெய்நீ
மூர்த்துமென்ற ரவியுலர்த்தி மைந்தாகேளு
முக்கியமென் றறூகை சுத்துசுத்தே. 820

சுத்தியே மண்மேலோர் மண்சீலைசெய்து
சுகமாக கெசபுடத்திற் போடுபோடு
நத்தியே யாறினபின் னெடுத்துக்கொண்டு
நலமாகக் கணபதிமுன் வைத்துப்போற்று
வத்தியே செந்தூர மருணன்போலாம்
வளமாகச் செந்தூர மென்னசொல்வேன்
கத்திக்கொண்டு வீசுமடா வினையைமைந்தா
காரணத்து நளராச செந்தூரந்தானே. 821

தானான செந்தூர மார்தான்காண்பார்
தாரணியி லாரறிவார் தவசிகாண்பார்
வேனான மூலமையா செந்தூரபோக்கு
வேதாந்திக் கெய்துமின்னூல் விளம்பினேன்பார்
கோனான செந்தூரங் கொண்டாலையா
கொடியதீ வினையற்று நல்வினையுமெய்தும்
மானான தேகமது யெகுப்போலாகு
மருவினதோர்க் கையதற் கழிவோயில்லை. 822

தாம்பரவேதை வெங்கலக்களங்கு

இல்லையே யென்மகனே தர்மயோகி
யேகாந்த யோகத்துக் கிதுவேசூட்சம்
அல்லையே தாம்பரத்தில் பணந்தானிய
ஆதிப்பொன் தங்கம்பத் தரைதானாகும்
வெல்லையே வேதைக்குத் தொந்தங்கேளு
வெங்கலத்தி னுருக்குமுனை தன்னிலிய
அல்லையே யென்னசொல்வேன் களங்கம்பாரு
அக்களங்கை யெடுத்துமிகத் தொந்தங்கேளே. 823

கேளேநீ யென்மகனே யன்புள்ளானே
கேசரம்போ லிம்முறையைக் கிழித்திட்டேன்பார்
தானேநீ களங்கிதனைத் தாம்பரத்திலிய
தண்மைபெரு மன்னூறா மென்னசொல்வேன்
நானேநீ களங்கெடுத்துக் கல்வத்திட்டு
நாரணனை மனதிலெண்ணி நன்மைபூண்டு
வாளேநீ சர்க்குருவைக் கழஞ்சிபோட்டு
வாலையைத்தான் றொழுதுவடி பணிந்துபோற்றே. 824

சுண்ணம்

போற்றவே பனிநீரை வார்த்தரைத்துப்
புகழ்பெறவே வழித்தெடுத்து வில்லைசெய்து
வாற்றியே ரவியுலர்த்தி சீலைசெய்து
வளமான புடம்போட்டு வண்மைகாணு
நீற்றியே குழிவெட்டி யெருவைப்போட்டு
நினைவாக வக்கினியை மூட்டுமூட்டு
தீற்றியே புடம்போடு மிதனில்மைந்தா
திவ்வியமுள்ள சுண்ணாம்பா மென்னசொல்வேன். 825

மென்னமுள்ள சுண்ணாம்பை யெடுத்துக்கொண்டு
மேதினியோர் குப்பிதனிற் பதனம்பண்ணி
வன்னமுள்ள பூமலரை யர்ச்சித்தேதான்
வாயுவைநீ தொழுதுவடி பணிந்துபோற்றி
சொன்னமுள்ள சுன்னமிதை யெடுத்துக்கொண்டு
சுயமான அயமதுதா னுருகும்போது
அன்னமிதைப் பணவிடைதா னதுவாயிற்போடே
அரகரா யென்னசொல்வே னதிதங்கானே. 826

சுண்ணமெழுகு

அதிதமென்ன வாயிரந்தான் பழுக்குந்தங்கம்
ஆர்காணப் போறார்க ளதீதப்போக்கு
வதிதமென்ன சுண்ணத்தைக் கல்வத்திட்டு
வகாரத்தை நோக்கியபடி பணிந்துபோற்றி
மதிதமுள்ள வைங்கோலத் தைலம்வார்த்து
மாமுகனைத் தொழுதுவடி பணிந்துபோற்றி
நிதிதவறா முச்சாமம் நன்றாயாட்டி
நீமகனே யம்மெழுகி நேர்மைபாரே. 827

நேர்மைபா ரம்மெழுகை வழித்தெடுத்து
நினைவோடே தாய்மனோன் மணியைப்பூசி
கூர்மைபார்க் கருக்குருவி னோட்டங்காணுங்
சுவாம லென்னாளுங் குருவைப்பூசி
தீர்மைகெட் டலைந்ததினா லென்னவுண்டு
தேவியைத்தா னனுதினமுந் தெண்டஞ்செய்தால்
கூர்மையுண்டாங் குணமுண்டாங் குருவாமுன்போல்
கொண்டுவடி பணிந்தவர்க்கு கொடுமைபோமே. 828

கொடுமைபோம் சொர்னமதை யுருக்கிக்கொண்டு
குணமான மெழுகதனில் பணந்தானீய
வருமைபோ மூவைந்து நூறுமாற்று
வளமாகப் பழுத்திடுங்கா ணென்னசொல்வேன்
அடுமைபோம் தங்கமிதை யெடுத்துக்கொண்டு
அரைதனிலே சிவயோகஞ் செய்யும்போது
நடுமையென்ற சிறுமையது வருகுங்காலம்
நாள்தனிலே தங்கமிதை மாறிக்கொள்ளே. 829

மாறியே செலவுசெய்து யோகஞ்செய்வாய்
மைந்தனே யிச்செலவில் தர்மஞ்செய்நீ
தேறியே வைந்துபல மித்தங்கங்கொண்டுத்
திறமான முன்கழஞ்சு கண்ணத்தாலே
வாறியே விந்துவிட்டு மத்தித்தேதான்
வானவனை நமஸ்கரித்து வணங்கிக்கொண்டு
ஆறியே தங்கத்தின் மேலேபூசி
அழகான சோமனாள் ரவியுலர்த்தே. 830

செந்தூரம்

நாள்ரவியில் விந்தாலே சீலைசெய்து
நலமான கோழிப்புடம் போடுபோடு
தாள்ரவியிற் போட்டெடுத்துக் கல்வத்திட்டு
தட்டிப்பார் வெட்டையதா மென்னசொல்வேன்
வாள்ரவியில் சுத்தகங்கை வார்த்தரைத்து
வானவனை நமஸ்கரித்துத் தொழுதுபோற்றி
ஆள்ரவியில் வில்லைதனை யுலர்த்திக்கொண்டு
அரகரா பழம்புளியால் குகைதான் பண்ணே. 831

குகையைப்பார் குகைதனிலே வில்லைவைத்து
குருவான நாதமதாற் சீலைசெய்து
வகையைப்பார் மண்சீலை யதன்மேற்செய்து
வானவனைப் பணிந்துமடி வணங்கிக்கொண்டு
துகையைப்பார் முழுப்புடத்திற் போடுபோடு
துருவமென்ன வக்கினியை மூட்டுமூட்டு
சிகையைப்பா ராறினபின் னெடுத்துக்கொண்டு
சிவசிவா வுடைத்தாக்கா லருணனாமே. 832

அருணனாஞ் செந்தூர மென்னசொல்வேன்
ஆதிகுரு செந்தூர மார்தான்காண்பார்
வருணனாஞ் செந்தூரம் பார்க்கக்கூசும்
வகையாகப் பணவிடைதான் மண்டலமேகொள்ள
கருணனாந் திரேகமுன் வச்சிரதிரேகங்
கமலமலைக் கொப்பான தேகமாகும்
மருணனைப்போற் காந்தியது வீசுமைந்தா
மானிலத்தில் நீயுமொரு சித்தனாமே. 833

சித்தனாஞ் செந்தூரம் கவசம்பட்டால்
சிவசிவா மலைபொன்னாஞ் செய்கைசெய்கை
பத்தனா யிருநத்ரர்க்குப் பலிதமுத்தி
பாவிகட் கெய்யாது பழியோமிறும்
கத்தனா முலகுக்கு முனைப்போலுண்டோ
கனகசபை நடனத்தாற் காணுங்காட்சி
முத்தனா யிருந்தாக்கா லெல்லாஞ்சித்தி
மூவுலகு மெச்சுமுன் முகத்தைப்பாரே. 834

முகத்தைப்பார் செந்துவதின் விபரந்தோற்று
முக்கியமாந் திருவடியோ மாய்கைமூலம்
அகத்தைப்பா ராயிதிரோ தாயிமாய்கை
அதுவறவே யதன்கீழே சலமுமற்றும்
மகத்தைபார் மதியற்ற மனமுமோங்கி
மாசற்ற திருவடியை யனாதிகண்டு
செகத்தைப்பா ரறிவில்மனந் தன்னைப்போற்றி
சிவசிவா ரோகமணி பூரகந்தானாமே. 835

அறுபத்துநான்கு அண்டவித்தை

ஆமேதா னாடுமறு பத்துநான்கும்
அண்டத்தைச் சொல்லுகிறே னழகாய்மைந்தா
தாமேதா னொவ்வொன்றாய் விரித்துச் சொல்வோம்
தாமணியி லாரறிவரர் தன்மைகாணார்
வாமேதான் குக்குடத்தி னண்டவோடு
வகையாகக் காகத்தி னண்டவோடு
நாமேதான் முதலையண்ட மாமையண்டம்
நல்லரவ மென்றதொரு வண்டமாமே. 836

அண்டமா மூர்க்குருவி வல்லூறாந்தை
அழகான காடைகிளி மாடமுட்டை
பிண்டமாம் சிட்டுஅண்டம் வானம்பாடி
பிலமான கருங்கோட்டான் செம்போத்தண்டம்
கண்டமாந் தூக்கணத்தி னண்டமண்டம்
கடிதான கழுவண்டம் பருந்தினண்டம்
வண்டமாம் பட்சிபன்றி யண்டமண்டம்
வகையான நாரையயண்டங் கேசரியினண்டம். 837

அண்டமென்ற நரியண்டம் பூனையண்டம்
அன்பான நாயினண்டங் கரடியண்டம்
வண்டமென்ற புழுகுபுனை யண்டமோடு
வகையான தேவாங்கி னண்டமோடு
கண்டமென்ற தலைப்பிள்ளை யண்டம்வாங்கி
காரணமாங் கீரியண்டம் அணிலினண்டம்
தேண்டமென்ற பச்சோந்தி காட்டுக்காடை
திறமான வாலநீண்டா னண்டங்கூட்டே. 838

கூட்டண்ட மொருவர்க்கத் திரண்டுசாதி
ஒகோகோ வறுபத்து நாலுமாச்சு
ஆட்டண்ட மஸ்தியொன்று சுருத்தானொன்று
அரகரா மூன்றுபத்து நாலாலையா
வாட்டண்ட மறுபத்து நாலுமாச்சு
வகையாக விதன்மகிமை மகத்துவஞ்சொல்வேன்
நாட்டண்ட மிவையெல்லா முரலிற்போட்டு
நலமான கம்பதினாற் சாடுசாடே. 839

சாடினால் வழித்தெடுத்துப் பாண்டத்திட்டு
சமரசமாய்ப் பூநீறு அரைச்சேர்போட்டு
வாடினால் சுத்தசலம் படினால்வார்த்து
வகைவிபர மாகவதில் கரைத்திறுத்து
ஆடினால் தெளிவதனை யடுப்பிலேற்றி
அரகரா சாமம்ரண்டு காச்சுகாச்சு
பாடினால் குழம்பைப்பீங் கானிலூற்றிப்
பதப்படுத்திச் சமாதிதனில் வைத்துப்பூசே. 840

முப்புவெடுக்கவகை

வைத்துப்பார் மண்டலமே சோடசமாய்க்குந்தி
வாசியிட மூலமதை வணங்கிப்போற்றி
கைத்துப்பார் மண்டலஞ்சென் றெடுத்துப்போரு
காரணத்துக் கேற்றமுப்பு கண்டுபாரு
வைத்துமே குப்பிதனி லடைத்துக்கொண்டு
அரகரா பராபரனைத் தொழுதுபோற்றி
மைத்துமுள்ள தூளெல்லாம் ரவியுலர்த்தி
மைந்தனே தூளிடித்துப் பாண்டத்திட்டே. 841

இட்டுமே மத்தஞ்சாறி ரண்டுபடிவாரு
யெழிலான அமுரிபடி கருப்பஞ்சார்படிதான்
தட்டுமே கரைத்து அதை தெளிவிறுத்து
தண்மையுள்ள பூரமணமதை மனதாற்பூசி
மட்டுமருங் குழலாளை மனதிலெண்ணி
மனோன்மணியைத் தாயெனவே யறிவாற்போற்றி
வட்டுமே தெளிதனைப் பாண்டத்தூற்றி
வளமான வடுப்பேற்றித் தீயைமூட்டே. 842

தீமூட்டி சாமமைந்து யெரித்தட்டாக்கால்
திறமான நீர்வற்றி சப்பாய்ப்போகும்
வைமூட்டி யிறக்கியதை பீங்கானில்வைத்து
வளமாகப் பீங்கானை வலத்தில்வைத்து
கைமூட்டிப் பூசையபி ஷேகஞ்செய்து
கணபதியைத் தொழுதுவடி பணிந்துபோற்றி
மைமூட்டி யறுபதுநாள் சென்றபின்பு
மயக்கமுன் மயக்கமற்று மதிவிலாசமாமே. 843

மதிவிலாசமாங் கல்லுப்பை யென்னசொல்வேன்
மைந்தனே தன்வந்திரி மகிழ்ந்துபோற்றி
அதிவிலாச மாரறிவா ரண்டப்போக்கு
ஆதிபயன் விதித்ததுதி யமைப்புள்ளோர்க்கு
வதிவிலாசமாய்த் தோன்றுமடா மகிமையெல்லாம்
வைப்பவர்க்குக் கிட்டாது வினையுள்ளோர்க்கு
மதிவிலாசமாய்த் தோன்றுகின்ற மகிமையெல்லா
மரைட் சணத்தில் வெளித்தோன்ற வறையுறேனே. 844

அறையுறே னிம்முப்பு பதனம்பண்ணு
அரகரா யென்னசொல்வே னதீதப்போக்கு
வறையுறேன் முன்னண்ட வண்டமெல்லாம்
வளமாக விடித்துநன்றாய்த் தூளிடித்து
மறையுறேன் வடிகட்டிக் கலசத்திட்டு
மனோன்மணியைத் தொழுதுவடி பணிந்துபோற்றி
கறையுறேன் புனுகு சவ்வாதுபூரம்
கனமான கஸ்தூரி யோலைப்பூவே. 845

வாடை

பூவான கொழுந்துவெட்டி விலாமிச்சோடு
புகழான சந்தனமுற் தேவதாரம்
சீவான திதுவெல்லாம் வாசங்கட்டி
சிவசிவா மோகினிதான் லட்சமோதி
கோவான வாடைதனை வீசிப்போட
குவலயத்து ஸ்திரீகளுட னிராசமன்னர்
மாவாக மயங்கிடுவா ருலகமெல்லா
மைந்தனே வாடையுட மகிமைபாரே. 846

மகிமைபார் சித்துவறு பத்துநான்கு
மக்களே யாடுமடா முன்னுப்பாலே
மகிமைபார் வேதையெல்லாங் கல்லுப்பாலே
வளமாக ஆடுமடா கல்லுப்பு அறிவாற்செய்வாய்
தகிமைபார் தவசிகட்கு மின்னூலாகந்
தன்னிலையை யறிவார்க்குத் தவமேதென்றே. 847

தவமெங்கே பொருளாசை மயக்கத்தோர்க்கு
கருதாது வொருநாளுந் தவமெங்கேதான்
அவயோகஞ் செய்திடு மசடர்கோடி
ஆதியிலே விதித்தவிதி யறியார்மூடர்
மவமங்கே பதியினிட விவேகத்தோர்க்கு
மயங்கிடுவார் மயங்கிடுவார் மதியினாலே
கவியமாங் கருவங்கே பூணாதையா
கடாட்சித்த மகிமைதனைக் கண்டுபாரே. 848

கண்டுபா ரின்னமொரு சேதிசொல்வேன்
 கண்மணியே முன்னண்ட வறபத்துநான்கும்
அண்டுபா ரதைவாங்கிப் பாண்டத்திட்டு
 அரகரா சில்போட்டுச் சீலைசெய்து
வண்டுபார் குழிவெட்டிக் கலயம்வைத்து
 வானவனை நமஸ்கரித்து வணங்கிப் போற்றி
மண்டுபார் பாண்டத்தி னடியில்மைந்தா
 மைந்தனே தமரிட்டுக் குழியில்வையே. 849

வைக்கவே மண்பக்க மடவாய்மூடி
 வளமாக யெருவடுக்கித் தீயைமூட்டி
தைக்கவே குழித்தயிலந் தன்னைவாங்கி
 தனதான குப்பிதனி லடைத்துக்கொண்டு
மைக்கவே மனோன்மணியைத் தொழுதுபோற்றி
 மைந்தனே தயிலமதின் மகிமைகேளு
யைக்கவே வைப்புக்கு யிதுவேசூட்சம்
 ஆரறிவா ரறுபத்து நாலுங்கட்டும். 850

விரைவாதம் – அறுபத்து நாலுக்கும் – அண்டத்தைலம்

கட்டுமே காசிடைதான் கொடிவேலிதன்னில்
 கணக்காகக் கொண்டிடவே வாதமெல்லாம்
சிட்டுமே பறந்தாப்போல் ஓடிப்போகுஞ்
 சிவசிவா ஓடுமடா விரைவாதங்கள்
கட்டிவிடு மிம்மருந்தால் ரோகமெல்லாந்
 தான்பறந்து வோடுமையா யகத்தியம்பாரு
மட்டுமருங் குழலாளே மனதாற்கண்டு
 மைந்தனே தயிலமிதை மனதில்வையே 851

நூலறிய

வையப்பா யிந்நூலோ சகலகலைக்ஞானம்
 வசனித்தே னாயிரமாய் பாடினேன்பார்
ஐயப்பா தன்வந்திரி யறிவுள்ளானே
 ஆதியிலே யாதிவிந்தைக் காணும்பிள்ளாய்
மெய்யப்பா பொருளாசை சகஸ்திரந்தன்னை
 மேதினியி லாரறிவார் சிவயோகிகாண்பான்
மையப்பா பரித்தங்க மகிமைபோலே
 மயங்காதே யொருநாளு மனதைப்பாரே. 852

பாரப்பா தெண்டகமும் பாருபாரு
பங்கயத்தி னமுதமதைப் பண்பாய்க்கொள்ளு
நேரப்பா நின்றநெறி தன்னைக்காணு
ரேசகப் பூரகமதனை நினைவாற்கும்பி
கூரப்பா குருவருளாற் றானேகண்டு
குஞ்சரமே யிந்நூலைக் குவிந்துபோற்றி
ஆரப்பா வறிவார்க ளாதியந்தம்
அடுக்குநிலை யறிவாரே யறிவுள்ளோரே. 853

அறிவுள்ளோ ரிம்மொழியைப் பார்ப்பார்மைந்தா
அரகரா யனேகவிதம் வாக்கேதோன்றும்
அறிவுள்ளோர் சகலகலை யறிவார்பாரு
அப்பனே மறைப்பில்லை வெளிச்சூட்சந்தான்
அறிவுள்ளோர் மனமடங்கி யறிவில்நிற்பார்
வையகத்தின் வாழ்க்கைதனை வசனிக்கார்பார்
கறிவுள்ளோ ரட்டசித்து மனதாற்காண்பார்
கடாட்சித்தே னிந்நூல் வகைக்குத்தானே. 854

தானென்ற வாணவத்தாற் சொன்னோமிந்நூல்
தாரணியி லெந்நூலை யார்தான்காண்பார்
வேனென்ற மயேஸ்பரியா ளெனக்குச்சொன்னாள்
விபரமெல்லாம் வெளியாக விளம்புறேன்பார்
மானென்ற வென்குருவாந் தேவியம்மாள்
மகிமைதனை யிந்நூலில் மாட்டினோம்பார்
தேனென்ற சிவகலையாய் சாபமாகி
தேன்மதுவா யின்னூலை திட்டினோமே. 855

நூலறி கலைக்ஞானம் 1000 கருக்கிடை 80
சூட்சமம் 60 ஒடுக்கம் 40 காவியம் 1000

திட்டினோம் சகலகலை சேதியெல்லாந்
திறமான சாஸ்திரமாய்ப் பாடினோம்பார்
மிரட்டினோ மாயிரந்தான் கலைக்ஞானமார்க்க
மெய்நிறைந்த பூரணமாய்ப் பாடினோம்பார்
சிருட்டியொரு அங்குலத்தி லடக்கிப்போட்டோம்
சிவசிவா கருக்கிடையெண் பதைத்தான்பாரு
குருக்கியொரு மூலமதா யொடுக்கிவைத்தோங்
குருபரனைத் தொழுதுயிந் நூலைப்பாரே. 856

பாரப்பா விதன்சூட்ச மறுபதையும்பாரு
பண்பான ஒடுக்கம் நாற்பதையும்பாரு
ஆரப்பா வறிவார்க ளிந்நூல்போக்கு
ஆதியமைப் பிருந்தோர்க் கெய்துமின்னூல்
நேரப்பா நின்றநெறி தன்னைக்காணு
நேசமுடன் பூரகத்தில் மனதைநாட்டு
வாரப்பா காவியநூல் தன்னைக்காணு
வளமாக பிந்நூலை வணங்கிப்போற்றே. 857

வேறு

போற்றும் பொருளன்னுயிர்ப் பொறிபடர்ந்த மேவிலர்
காற்றுதப்பிலாக்கருக்க யிந்துயிர்ப்பதம்பொருள்
தூற்றுமா சுடர்ந்தவெளி தோற்றம்யாவுங்கண்டிலர்
தேற்றுநந்திமாதருக்கு தெளியவுரைக்குமூலமே 858

மூலமா மெனப்படித்த மூலமாங்கணேசனுள்
தூலமாகுமெந்தநூல் துணித்தநூல் படித்தநற்
காலமானபாஷையைக் கண்டறிந்தவல்லவர்
கோலமாங் குருவெனக் கூறுதற் கருவிதே. 859

வேறு

அடவுக்குருவிது அறிந்தபண்போர்கள்
ஆசானைத்தேடார்களறிவைப் பூசிப்பாரனேகர்
தெருணமாய்மதிகட்டா தப்போதம்
திவ்வியப் பொருளம்பாள் திறங்கண்டேன்பார்
திரிகோணசத்தியடா யட்டமாசத்தி
தீட்சையாமைப்பத்தோ ரட்சரமதிலே
வருவிமுப்பத்தியரட்சரஞ் சூட்சமாகும்
வகைகண்டவைம்பதுக் குயிரெழுத்திதுதானே. 860

வேறு

எழுத்தான சூட்சமிது விடவேவேறோ
யென்மக்கா ளாயிரமென் சொல்வாரோ
மழுத்தான அஷ்ட வசியமுமாடு
மானிலந் தன்னில்சர்வ மோனமாம்
வழுத்தான நந்திநா னுரைத்தாப்போலே
வசனித்த சுரஸ்திரங்க லைக்கியானப்போக்கு
செழுத்தான சென்ம ராசியுஞ்சொன்னேன்
சிவசிவா யிந்நூலின் செய்கைதனைப்பாரே. 86·

அகவல் சந்தம்

பாருமொருகடல் வாழிதிமிதலப்
பண்டுமொருவிரை வொன்றுக்குதவிய
ஆறுமறியவே யேறும்ரவிதனில்
அண்டுமரசரைக் கண்டுமருவிட
சேரும்பைதனில் ஆருமறியவே
செய்யும்விதமிது கந்தனருள்பெற
வாருங்கடல்பெறத் தேருமாயிரம்
வழலைப்பெருமையைக் கண்டுமருவிட
கோருங்குழல்சிவ தீருமம்பிகை
கொப்பணிந்திட வையந்தீர்க்கவள்
சோருஞ்சோங்குழல் தீரும்வன்னியைச்
சோடாசப்பதினில் பிச்சமதிகவள்
ஓரும்வடமொழி தேரும்பண்பிது
ஒற்றைப்பதிதனில் சித்தமகிழ்ந்திட
சீருஞானியத் தேறுமிவ்விதம்
செய்கைப்பதமிது ஆருமறியவே. 862

பதமிதுநப்புறக் குருதவன்னியே
பண்டுமொருவிதம் அண்டுமொருவர்சொல்
சிதமிதுபண்புறக் கதமருள்சிவமயம்
சித்தனமிது நித்தம்பணிந்திட
அதமிதுயொருவிதம் கதசிவப்பிண்டனர்
அண்டுமதிதனைக் கண்டுபிடுங்கிட
தொதமிதகுருவருள் தேகக்கனியென
கொண்டுபரப்புற நின்றுமகிழ்ந்திடி
சதமிதுகனியிதே விதமருள்கொண்டிடச்
சன்னும் நோய்களை விண்ணுமலைகுலை
தெதமிதுவயதிது தேகமீறிடுந்
தேடிப்பிடிமண் முடிதீதக்குருபரன்
ஓதுமிதுதனில் கீதமருள்புரி
ஒத்தப்பரிபுர தித்தம்பூசிடு
நதமிதுபாலர்கள் தாத்தக்கண்டுன்ற
நன்மைபெறுமனந் துண்மையில்லையே. 863

துண்மைசுழிமுதலத் தண்மையறிபவர்
தொண்டுபனிரண்டு மதிவிலாதனவோசொல்
வண்மையருள பெண்மையிருபவர்
வாசிதனைகூசி யருள்புரிநினைவாக
தண்மைநினைமை கூர்மையருள்புழை
தண்டுமதிகண்டு மறலிகுலகாலாநீ
பெண்மையிருகுல வண்மையதிபதி
பேசுங்கலைபனி ரண்டில் அருளீவார்
கொண்மைக்கூழ் வண்மைப்பேர்தன் வந்திரி
கோதைக்கனியாதப் படியென அறிவாய்நீ
சென்மைச்சோதி வண்மைவழலையே
சேதம்பிறவாதக் கனியதுமகிழ்வாய்நீ
திண்மையது குறையதுதனிலே
திண்டுபனிரண்டும் விந்திடப்பதிதானாம்
ஆண்மைப்பெற நந்திக்கருளியது
அண்டப்பிரசண்டப் பொருளிது கலையாமே. 864

பொருளிதுகலையறி போகக்குருபரன்
பொன்னுமனிதனைத் தின்னுமனதறியணியாக
அருளிதுசிவமென திரளதுபரமென
அழகனவிஷ்ணுவா தழகனசிவமருளாக
வருளிதுபொருளென வேதப்பொருளிது
வழபோநந்தியா மாட்டியநூலிது
அடியார்க்குநாளது மனிதர்கள்திரளதுதேரவே
நாட்டிப்பிரபல போட்டிமனமறிவாக
திரளதுகிரகமு மருள்புரிராசியுந்
திதியுடனவமியும் வருமதுகூடிடில்
பெரனிதுமுனியென பேரதுகூடிடுல்
பேசுங்கலைதனில் நாசியோடு
கொறளிதுஅடியென வறளதுபணமிது
கோடப்பரமாடத்தினில் நாடப்பரமறியாயோ
தளறதுக்கிளருற வெளமெனப்பேசுதல்
தன்னிலையறியேன் உன்னிலைவன்னிலையே. 865

வன்னிதனத்தொடு தன்னிப்பிழைப்போ
வரக்கிக்குழை தருக்கியருளென
நந்தியான சின்னிசிறுக்க
கன்னியருளெனசித்தம் போமத்தரெங்குருசெல்வமாம்
தன்னிப்பிழை வல்லியுமையென
தண்டுமதிகண்டேன் வருளறிவாலே
மன்னைக்கணை சின்னப்புயலோடு
மாதப்படயாதங் கூத்திடுமறிவாக
தென்னக்கரை வன்னியதுதன்னில்
தினமும்பரகுருகண்டு மகிழ்ந்திட அடியார்க்கு
சென்னிப்பிழை நன்னித்திரியென
ஷேகக்கடல்வாழ்த்தினில் அலைவார்பார்
முன்னியிதுதனை வன்னியருள்பெற
முழக்கப்பறைதழக்கையருளென அறிவாய்நீர்
கன்னிமையென உன்னைப்பிரபலங்
கண்டுமனம்விண்டு மகிழ்ந்திடச்சொன்னோமே. 866

மகிழ்ந்திடச்சுக்கு மிளகுடன் திப்பிலி
மகிழுடன்வால் மிளகுடன்கூட்டு
திகிழ்ந்திடச்சீரக மிரண்டையுங்கூட்டு
தன்னிலையறியவே வெள்ளெருக்காகும்
மகிழ்ந்திடக்கண்டு பரங்கியும்
வாழைவகைக்குணமுள கரணையுங்கூட்டு
நிகழ்ந்திடமுக்கத்தாரி யழிஞ்சியும்
நேர்சங்குவேம்புடன் மதுரமும்
தொகிழ்ந்தீடத்திரிபலை சின்னிகொப்பரையும்
தண்டாமரை முத்தக்காசுடன் வட்டத்திருப்பியும்
நகிழ்ந்திடக்கண்டங் கத்திரிகுன்றியும்
நலம்பெறச்சித்திர மூலஞ்சிவதையுஞ்
சிகிந்திடமதிகு வளமும்நிலப்பனை
சன்னிராஷ்டகம் வெட்பாலரிசியும்
நகிழ்ந்திடவெட்டி வேருடன்சந்தனம்
ரகசியப்பொருளிது வகைபலமொன்றே. 867

வகைபலஞ்சரக்கிது சமனதாயுலர்த்திடு
வளம்பெறக்கல்லுர லதினிற்போட்டு
துகையதா யிடித்து வகைபெறவடித்திடு
துய்யசூரண மையமல்லிபை
தகையெனச்சுத்தி சூரணஞ்செய்திடு
தாச்சீனிவெங்கஞ் சாதிக்காயுடன்
மலைமலைமாமுனி நந்தீசருரைத்தது
மகிமையிதுதனைக் குகையிலறிபவர்
செகைபெறவாச முடித்திடும்போது
செயகைக்கணபதி துய்யம்போற்றிடு
அகைமலைநோய்க ளணுவளவுட்கொள்ளு
அணுவதுபோட மலையதுகரையும்
நகைமுடிவாதப் பிரேதபூதங்கள்
நாசமாயிடுந் தேசமதில்விளா
குகைகுருவருள்பெற வாதமெண்பதுங்
குருவருள்கூடுவிட் டகற்றிடும் 868

அகத்திடுமகத்தினி லசடதுபோய்விடும்
அண்டும்பீடைக்கு கண்டனிதுபொருள்
வகத்திடும்கடுநற் வியாகவேபத்தியம்
வகைவகையாகத் திருந்தோர்க்கு
திகைத்திடுமரன்செயல் மகைத்திடுமைந்தா
மாநிலந்தன்னில் மண்டும்பீடையை
மற்றதுங்கண்டு மிதுவகையாக
திகைத்திடுங்கல்வி ஞானமுமெய்திடும்
திண்டுஞ்சனியனைக் கண்டுமருவிடும்
செகைத்திடுமரன்செய லவகையதுகூடுஞ்
செய்கைப்பதமிது ல்கையருள்பெறவே
நகைத்திடும்நோய்களை நன்றறிவெனவிடும்
நன்மைபெருஞ்ஞரணம் தண்மையிதுபொருள்
எதிர்த்திடும்புறபோல் நோய்களைக்குத்திடும்
என்னருள்மகனே யின்னங்கேட்டிடு
குதித்திடுஞ்செல்வங் கூடுமருள்புரி
குணமயல்மனமறி நினைவறிமனமே. 869

நினைவரிப்பரிபுரை நீண்டுமப்பதிதனில்
நிலையறிமருள் நீடும்புவிதனில்
கலையறிசுழுமுனை கண்டருள்புரியென
கரிமுகன்திருமுகனடி யினைபோற்றுவா
கெனவரிஅருள்வருள் கெடிபிடிதக்கென
கேசரிமனமருள் நீபிடியருளென
மனமதுகண்டிட மையம்புரியருள்
மகரயிகரமும் தகரவுகரமாம்
குணமிது முப்புரம் கூடும்பதியிது
குவலயமுழுதினில் கூறும்பதியிது
அனமனமாகிலும் அறிவதுபெரும்பயம்
அண்டுமதுதனைக் கண்டுமருவிட
வனவறியருளென வையகத்ததிபதி
வழங்குகுருபரன் வகரசிகரமாம்
சினமருள்புவிதனில் செண்டுமதிபதி
சிவசிவயதிபதி கொகைமுகமருளிதே. 871

சாலத்தொழில் — திராவகம்

அருளது சாலத் தொழிலது சொல்வேன்
ஆடும் பணமது தேடுமருள்புரி
தொளது கேசரி குருவண்டுடனே
தென்னப்புயல வைங்கோலத்துடனே
வாளதுகுண்டலி மாவுடனே புழை
வாராக்ககணை மதியுடன்ரவியும்
மாளதுவாலை திராவகமிறக்கிடு
மையக்குப்பியி லடைத்திடுதிராவகம்
சிரனதுவுந்திக் கமலமதுதனில்
சீர்பெறக்குண்டலி வல்லபைதேவியும்
கொரளது போதகங் குருபரன் மகனைக்கொண்டு
தொழுதிடுதேவியும் வல்லபை
வொளிகுவேதப் பொருளிதுபோதம்
வேங்கை மரந்தனை விரும்பிப் போற்றிடு
தொரளனதிராவகம் துண்டுந் தொழில்தனை
தொழுது போற்றிடு விரும்பியனுதினம்
கொரளிது கலைக்கியானம் பொருளிதுகொண்டு
யருள்புரிகுருபரன் மோட்சமே. 871

தெரிசிங்கி

மோட்சத்திரா வதிக்குகள்யெடுத்து
முத்திப்பிர்ம மத்தித்தெளித்திடு
நிட்சயமாகவே தட்சையைத்தீர்க்கும்
நிலைபெறச்சூலை கலைபெறப்பிளவையும்
வட்சைவலுமையாய் மட்சநோய்களும்
வண்டுகடியுடன் குஷ்டரோகமும்
தீட்சைப்பெற வந்திடும்பீடைகள்
தீண்டுஞ்சனிய னகன்றிடுங்காலமும்
மட்சைக்கதனை பிட்சைக்குதவன்
மண்டுபிழைபெற திண்டுசரகுவன்
லெட்சணக்கவி நிட்சயப்பொருள்
லேமனத்தினில் கோபகோப்பரன்
செட்சையாகிலும் தெரிசிங்கியிதுதனை
சேவித்தருள்பெற மரணமாயிடு
மட்சையெதிரிகள் உன்னெதிர்நிற்கார்
இன்னபடிகள் திராவகமிதுதனை
யெடுத்த தொழில்க ளாடிடும்பாரே. 872

வேறு

பாரெனவே பூரணத்தின் பட்சமில்லா தோர்க்கு
சதமாக வந்தாலுஞ் சாற்றுமே அக்கல்வி
நீரெனவே நின்றிலங்கும் நேர்ந்தபஞ் சாட்சரத்தை
வேதப் பொருளாக விளம்பினோம் வல்லமையால்
காரெனவே கந்தனருள் கடாட்ச மில்லாதோர்க்கு
நீதிரவி குலகங்கே நிலையாது அந்திடத்தில்
பேரெனவே சகலகலை பேணித்தே மென்றறிவால்
நீதமென்ற வேதமிது நிலையாது கன்மிகட்கே. 873

நிற்காத பொருளென்னா நேசமுற்ற ஞானமது
தக்காது ஒருவருக்குந் தன்யோக மல்லாமல்
வற்கமுற்ற கோபிகட்கு வருகாது யோகமுதல்
வெற்றிநிலை யறியாத விவேகிகட்கு சித்தம்வைத்து
தற்காக்கும் யோகந்தண்மை யறிந்தாக்கால்
இரக்க மென்னாளு மிருக்கும்பார்
தன்சடலம் மற்காத மாமுனியா மாந்தருக் காகவிந்நூல்
எக்காலம் புகழ்பெறவே யெண்ணிசொன்னோ மின்னமொன்றே. 874

குறு – காயத்தயிலம்

இன்னமொன்று தானறிய இன்னமொன்று சொல்லுகிறோம்
கைலையனு மாடுதற்கு கந்தனருள் வல்லமையால்
பன்னுமரன் காயத்தயிலம் பண்புபெற வைங்கோலம்
வேலமென்ற அண்டம் விந்துடனே நாதமுதல்
கன்னியம்மை வைங்காயம் கடைச்சரக்கு யிந்துமுதல்
நீலமென்ற வகைக்குநிக ரஞ்சு பலங்கணக்காய்
தென்னபுயல் வண்டுடனே தேகக் கனியமுர்தம்
எழிலென்று யிருபுறமு மேக மென்றே. 875

ஏகமுத லாகிநின்ற யெழிலெல்லாந் தானெடுத்துவர
நேர்வெகுளித் தயிலம்வாங்கி நல்லதேக முதலான
உகருதினந் தோறுமரைச் சணத்து யேறுமே
வுருவங்கே யிரண்டு லட்சம் உண்மையதாய்
பாகமென்ற தயிலமது பணிந்தோர்க் கென்னாளும்
சீர்பெறவே தேவி க்ஷணமதிலே வாழ்வுபெற
தாகமென்ற தடாகந்தன் னருவேயருள் புகட்டி
நீதி யொப்பாக நிலைக்குமே வாதமங்கே. 876

சாலமென்ற வித்தயிலஞ் சன்னாசி ஞானிகட்கு
வேதமாய் நிற்குமாம் வேந்தனருள்
கோலமென்ற வித்தியிலங் கொண்டு திலதம்போட
நீதியொப் பாகுமே நின்றுகொண்டு சூரியனை
ஞாலமதி லேயோனி நன்மையாய் வாசிபதம்
வாணியுமை வாணியைத்தான் வர்ச்சிக்க உன்னறிவால்
நீலமென்ற வுலகமுந்தா னிகரோசொல் லறியார்க்கு
வேந்தர்களும் உன்னடியில் வருந்துவா ருன்பதத்தை 877

பதமான தேங்காயின் பண்ணுங் குடுமைதன்னில்
நிசமாகத் தான்றடவி நிகரவியில் வைப்பீரால்
அதமான தேங்காய்தான் அண்டிடுமாம் அந்திரத்தில்
திலதவர்க்க மெங்கே கூடிடுமாம் வாய்வுகொண்டு
நிதமான பேச்சிதுதா னின்றிலங்குங் கோகரணம்
சகமாக சயன்னாளுங் காக்குமா மிப்புவியில்
சதமான சிறுவிறலில் சங்கையற்ற முப்பூவை
வலமாகத் தான்றடவி வைத்திருந்து கொடுப்பீரே. 8·

நொடிக்கவே தன்கையி லுண்மையதாய் வந்திடும்
நலமான வுலகமெல்லாந் தான்பார்த்து மகிழ்வார்கள்
அடிக்கவே கையுடைக்க அரனாலு மரியாலுந்
தெரிந்தாலுந் தெறிக்காது தென்னங்கா யருள்பெறவே
வடிக்கவே வையகர்க்கு வருங்கர்மம் போங்கர்மம்
நீதியாய்ச் சொல்லுதற்கு நிகழ்த்துகிறோம் வல்லமையால்
பிடிக்கவே கைத்தடவிப் பேரெண்ணிப் பார்த்திடவே
நிசமாகச் சொல்லுமாம் நேராகக் கர்மமங்கே. 879

வேறு

கர்மமங்கே வெளியாகத் தெரியுமைந்தா
காசியெல்லா மறைநொடியிற் கண்ணாற்காண்பாய்
வர்மமென்ற வர்மிகட்கு வருகாதையா
வயிர்பிழைக்கப் பொய்சொல்லி யலைவாரையா
தர்மமென்ற பொருளென்ன பூரணமேயாகுந்
தம்தீவினை தானென்ன வென்றால் கோபம்கோபம்
சென்மமென்ற வுத்தமனாய்ப் பிறக்கவேணுஞ்
சிவசிவா யென்னசொல்வேன் வினையைப்பாரே. 880

செய்வினையாஞ் செகசால மாய்கைப்போக்கு
சிவசிவா தடாகத்தின் பொய்கையைப்போல்
தீவினையாம் பாவத்தால் வந்துகப்பி
திறமான கோபத்தால் வினையுமாகி
முன்வினையால் வந்ததொரு பாவமென்று
உண்மையுள்ள கருவெல்லா மிவனைச்சேரும்
தன்வினையைச் சேர்ந்ததொரு பாவமெல்லாந்
தனதாக வவன்கொடுமைக் கீடேறாதே. 881

ஈடேறக் கண்டயெழில் சிவமாமார்க்கம்
யேகாந்த தேசிசிரோன் மணிவாலையா
நீடேற மாகவே நினை வறிவாலேமைந்தா
நின்றபரி பூரண ரேசகந்தன்னில்
கீடேறத் தேவிமாது பெண்வாலை
கிளிமொழி தேவிசிரோன் மணிமாது
வீடேறக் கண்டு வெளி பங்கமாக
வேதாந்த பூசை விரும்பியளித்திடே. 882

அளித்திடக் கிரியுமரியுஞ் சிவாய அய்யுமே அறு
அளித்திட லட்சம் வளித்திடுமண்டம்
வரிசையுரைத் திடுவகை பெறவம்பிகை
வசியமாகும் பார்வழிக ளறிந்திட
தெளிந்திடப் பால்பழம் பூசைநை வேத்தியந்
திறமான தேங்காயின் வஸ்துடன் சுத்தியும்
களித்திடப் புட்பபரி மளங்கள்காட்ட
கண்மணியே யுனக்குமவள் கடாட்சிப்பாள்பாரே. 883

பாரே யின்னொன்று பகருவோங்கேளு
பண்பான சோதி விருட்சமகிமை
ஆரே கணேச னடிமூலந்தன்னில்
அழகாய் சோதி கொண்டருள் பெறவுண்டு
நீரே மலைபோல் நிகரதுவொன்று
நேசமுட னந்தி பதத்தைப்போற்றி
வாரே அவ்வனம் நாற்பதுநாளும்
வகைபெறத் தவஞ்செய் தருள்பெறுவாயே. 884

பெறுவது புண்ணியம் பேசுங்கலைதனில்
பிரிபெற வமுர்தமே கொண்டிடுமவ்விதம்
எருவதுக் கருவிது யேகப்பொருள்தனை
யினியென தென்னருளென் றிருவனுதினம்
குருவது சோதி விருட்சமது குன்றிடையதாகக்
கொண்டிடு குருவரு ளனுதினமாகவே
திருவது மூன்று திவ்வியப் பொருளிது
வருவது விதமாய் கைவகையாய்ப் போற்றுமே. 885

வகையாய்ப் போற்றியே வகையெனத் தேவி
வகையருள் புரிவாள் வாலைமனோன் மணி
முருவது முத்தி பொருவது கந்தன்
முக்கியப் பெருளிது திக்கியக்கடவுளுஞ்
செருவினில் பாயுத லருவுருவமுர்தமை
செய்கைக் காலும் வைகைப்பாலுடன்
தருவது விசிதமாய்க் கொண்டிட
தனநச் சடலம் விகிதப்பதமிதே. 886

பாதம் பணியுறு வோலக்கருளெல்லாம்
 பங்கைச் சோதிப் பழமிது அருளால்
சீதஞ் சணத்தினில் சிவயருள் உடைய
 சிவனனு தினமுஞ் சித்தியருள்வார்
தீத மதிகைக்குத் திருவடியெனவோர்
 திருவருள் கோடி யருளெனச்சீஷர்
காத மடைக்குங் கருகுணமின்பங்
 கண்டு மகிழத் தொண்டருள்புரிவாள். 887

வேத மிதுபொருள் விதியுடையோர்கள்
 விளங்கு மொரு அரு விதமருளாக
கோத மென்றுருக் கொண்டருள்வுண்டனர்
 கொய்ய மென்பவர் ஐயத்திலனுதினம்
வாதப் பொருளிதே வகை நினையாமல்
 வையக் கடவுள் யோகமனப்படி
நீதம் வாதமதீத யோகமும் ஞானமும்
 நிகழ்ந்த பண்பினால் நீர்வழிறைக்கே. 888

வேறு – யோகம் ஞானம்

தூர்மேவு வுலகத் தோரைக்கார்க்க
 துஞ்ச மனமற வெஞ்சகத்தை
தார்மேவு ஞானவடி வருளால்
 தன்னருள் நின்ற பெருமைதன்னால்
கூர்மேவுக் குண்டலிக் குஞ்சரமே
 குருபாதங் கண்டருள் விண்டோமே
வார்மேவும் வையகத் தாதிகண்டு
 வாசியைப் பூட்டி – வங்கென்றேத்தியே. 889

வங்கென மங்கென யாட்டிவே
 வையா புரிதனி லானைக்கொம்பு
அங்கென்று வாங்கியே யிங்கேவைத்து
 ஆனை முகத்தனைப் போற்றிசெய்து
சிங்கென்று கொண்டு கும்பித்து
 சிவசிவா யோகப் பதிதனிலே
மங்கென் றிங்கென ரண்டுவுண்டு
 மாமுனி தன்னையெ போற்றிசெய்யே. 890

போற்றிட யோகம் பொருந்துமங்கே
பொன்னு மணிதனை விண்டுவிட்டோம்
நாற்றிசை நாலையு மொன்றதிலே
தாட்டுமாம் யோகப் பிரிவினைதானையா
ஒற்றிட யோகப் பதம்விண்டோம்
ஒகோகோ ஞானப் பதம்விள்ளுவோம்
தேற்றிட மனமொன் றாகவல்லோ
திரியா சத்தியைப் போற்றிசெய்யே. 891

சத்திய மாய்கையை விட்டகற்றி
சன்னா சமாகப் பூண்டுகொண்டு
வெற்றியாய் நின்ற விளக்கது போல்
வேண்டி மனதைப் பூசைபண்ணி
கத்தியே குவா ளறுத்துக்
கல்வி தனக்குப் பூசைசெய்து
மத்தியாய் நின்ற மரம்போலே
மாட்டிய பீட மறைவுகட்டே. 892

மறைவுகேள் நீயும் வெற்றியதாய்
மாய்கை யனேக மொழித்துவிட்டு
நிறைவுகேள் சூதக குளிகைகண்டு
நேரான வெள்ளெருக்கன் கயிர்திரித்து
அறிவுகேள் கோர்த்துக் கழுத்தில்கட்டி
ஆசா னென்றமொழி காவியத்தை
பிறிவு கேடக மதில் வைத்துப்
பேசா மலேநீயு மிருந்துவிடே. 893

வேறு – சித்தர்பெருமை

பேராமல் ஞானப் பெருமை சொன்னோம்
பேணியே சித்தருட பெருமை சொல்வோம்
கூசாமல் புலித்தோல் கவுபீனங்கட்டி
குருமுப்புச் செந்தூரப் பொட்டையிட்டு
ஆசான யதின்கீழ் மாற்றமிட்டு
ஆத்தாளை யனுதினம் பூசைபண்ணி
வீசாம லோகத்தில் தானடந்து
வேண்டிய சித்து விளையாடலாமே. 894

வயித்தியர் பெருமை

ஆடவுஞ் சித்த ருருமை சொன்னோம்
அழகான பண்டிதலே பெருமை சொல்வேன்
நீடவுஞ் சர்க்குருவு துப்புசெய்து
நிசமான வாலைவசப் படுத்திக் கொண்டு
தேடவுஞ் சரக்குத் தொட்டாடத்
திரிலோக மெல்லா முனைவணங்கும்
ஓடிவிடும் நோய்க ளுன்னைக் கண்டால்
ஓடிடு மையா வயித்தியரே. 895

ஓடிடவே பண்டித மிவ்விதந்தான்
ஒகோகோ நாடிப் பரீட்சை வேணும்
தேடிட வேயிவ்விதம் பண்டிதத்தால்
திசையெட்டுப் பதினாறு கோணமெங்கும்
வீடிடவே உன்னுடைய பெருமைத்தான்
அரனயன் மாலுக் கீடொப்பாகும்
வாடிடவே மோட்சத்துக் கீடாகும்
வையகத்தி லினங் கோடிக்கொன்றே. 896

கோடியே சகலகலைக் ஞானம்
குருமொழி யாயிர மின்னூலும்
தேவியே வாங்கிப் பார்த்தோர்க்குத்
தெவிட்டாத காமப் பாலெய்தும்
நீடியே யஷ்ட பாக்கியமும்
நிலைக்கும் நீதி யுள்ளோர்க்கு
ஆடியே யென்னூலைக் கண்டோர்க்கு
அரகரா தவங்கோடி புண்ணியமாமே. 897

புண்ணிய மான தல மதுதான்
பேர்பெற வம்ச மீடேறும்
தண்ணீர் விழுந்த குளம்போலே
மனந்தயங் குவாரவர் கோடியுண்டு
அன்னி யரும்பிறவன் னியரும்
அஸ்வணி யான குலம்படைத்தோர்
மண்ணில் விழுந்தால் கோடிக் கொன்று
மகார மறிவா ரவர்பாரே. 898

வேறு—சித்தர்கள் சாதி தெரிய

பாரே கும்ப முனிபார்ப்பான்
படுத்த பிரமச் சாதியிலே
ஆரே கோடிக் கொன்றவர்கள்
அறிந்த பத்தன் சித்தனவன்
தேரே தெட்சண மாமுனியாற்
தேர்த்த மண்ணு வெள்ளாழன்
வாரே பத்து லட்சமதில்
வகுத்த சித்த னொருவனுண்டோ 899

உண்டே சிறையன் தன்வந்திரி
வுற்ற குலத்தி லிரண்டுகோடி
தண்டே சித்த னொருவனுண்டாந்
தாண்டி யேறு மகத்துவந்தான்
கண்டே புரியுங் கண்ணாளன்
கருத் தறிந்தோன் கோடிக்கொன்று
அண்டே சூது சித்தனவன்
அடுத்த புத்தி யவன்தனக்கே. 900

புத்தி பத்தியு மில்லாத
புகழ்ந்த சித்தன் வெகுளியவன்
வெத்தி தெரிந்த வைசியகுலம்
வேண்டிக் கோடிக் கொன்றதிலே
கத்துத் தெரிந்த சித்தனவன்
காசிக் கொப்பா குமாயச்சாதி
சுத்தித் திரிந்த தர்மகுணங்
சூரசங் கார வசியனென்றே 901

சங்கார மான வீரபாகு
சஞ்சீவிக் கோடிக் கொன்றதிலே
சிங்ககர மான சித்தனவன்
தேறு மவ்விதங் கண்டீர்பார்
ஆங்கார மான குலமதிலே
அதனி லொருவன் தேறுவான்பார்
வங்காள மான தத்தனவன்
வையகத் திலவ னீச்சனென்றே. 902

வேறு–கல்லுப்பு மார்க்கம்

காணப்பா கல்லுப்பு மணியைவாங்கி
கரியிலே மெள்ளவைத்து வுருக்கிப்பாரு
பூணப்பா பொன்போலே உருக்கியாடும்
புகழாக நிறையதுவும் சரியாய்நிற்கும்
தோணப்பா கம்பியே ரரிகுச்சானால்
சுகமாக பூநீறு காரம்வீரம்
தாணப்பா காரநீர் விட்டு ஆட்டி
தவறாமல் மணிமேலே பூசிப்போட்டே. 903

மணிமேலே பூசியே உலர்ந்தபின்பு
வளையலுப்பு பலம்பத்து பொடியாய்ப்பண்ணி
கனிமேலே கலையத்திற் பாதிவைத்து
கல்லுப்பு நடுவைத்து மேலும்போட்டு
தினிமேலே சில்லிட்டு சிலைசெய்து
செப்பமாய் நூறெருவிற் புடத்தைப்போடு
அனிமேலே ஆறவிட்டு யெடுத்துப்பாரு
அரகரா வயிரம்போல மணியுமாமே. 904

வயிரமா மணிநின்று உருகும்போது
மாட்டுநீ நாலுக்கு ஒன்றுதங்கம்
தயிரமாம் தங்கயிடை னாகம்போடு
தன்னாகத் திடைபோடு சூதம்தன்னை
துயிரமாஞ் சூதமிடை கெந்திபோடு
துட்டயிலே காரத்தை ஒக்கவிட்டு
கயிரமாம் யெடுத்துடனே களங்குமாகும்
கணக்கான நவலோகம் நூற்றுக்கொன்றே. 905

ஒன்றான களங்கத்தை குன்றியுண்ணு
வுத்தமனே யுகாந்தவரை யிருத்தும்தேகம்
தன்றான சட்டைக்கு பாலையாகும்
சந்திரன்போல் சூரியன்போல் தேகமாகும்
குன்றான மலைதனிலே குத்தினாக்கால்
குமுங்கியே தவடுபொடி மாவுமாகும்
உன்றான உப்பினுடை வுறுதிபோல
ஒன்றுக்கு மில்லையில்லை உத்துப்பாரே. 906

உத்துமே உப்பான மணியைவாங்கி
உறுதியாம் வீரமொடு புழுகுசீனம்
தத்துப்பார் சாரநீர் விட்டுஆடி
தண்மணிமேல் பூசியல்லோ உலரவிட்டு
புத்துப்பார் புளிப்பறணி சாம்பல்தன்னில்
புதைத்துமே புடம்போட பூப்போலாகும்
கொத்துப்பார் குருவென்ன நாமமாச்சு
கொள்கியிந்த குருவறியார் குருடர்தானே. 907

குருடர்தான் குருவரிந்து செய்யமாட்டார்
கூகூகூ யதினுடைய கூர்மைமெத்த
திருடர்தான் குருவாச்சு செயனீராச்சு
செந்தூர மாச்சுதென்பார் திருட்டுவாதி
மருடர்தான் வந்துதென்பர் வகையறியார்மாண்பர்
வகையுடனே உப்பினுட வன்மைகாணார்
புருடர்தான் உப்பினுட குருவைக்கண்டால்
போக்கான கோடிதொழில் உப்பிலாச்சே. 908

உப்பான குருவதுவும் பலந்தான்பத்து
உரவான சாரமது பலந்தான்பத்து
கப்பான கல்வத்தி லிதனைப்போட்டு
கணக்காக யேழுநா ளாட்டுஆட்டு
அப்பனே அகலிலிட்டு புடத்தைப்போடு
ஆரவிட்டு பனியில்வைக்க செயனீராகும்
செப்பான செயனீரின் மகிமைசொல்ல
சிவன்தானும் முன்பின்னும் தியங்கினாரே. 909

தியங்கினார் யிதினுடைய ஆட்டைப்பார்த்து
சின்மயமாய் குருவோடு சித்தரெல்லாம்
மயங்கினார் யிதினுடைய வார்மம்காணார்
ஆயிசொல்ல யான்கண்டு மகிழ்ந்தேனையா
கயங்கினார் காலாங்கி நாயனாரும்
கருத்துரைத்துப் பின்புசொல்லக் கருணைகூர்ந்து
தயங்கினார் சதுர்யுகமும் பார்த்துப்பார்த்து
சாத்தினேன் நிகண்டுக்குள் சாத்தினேனே. 910

சாத்தினதோர் நிகண்டுக்குள் வாதம்பொய்யோ
சதாசிவன்தான் வொளித்திருந்த மூலம்பொய்யோ
ஆத்தினதோ ரஷ்டாங்க யோகம்பொய்யோ
அண்டரண்டம் கடந்தோடும் குளிகைபொய்யோ
மாத்தினதோர் வாதசித்தி காயசித்திபொய்யோ
மறைத்துவைத்த சவுக்காரஞ் சுண்ணம் பொய்யோ
தூக்கினதோர் வுப்பினுட குருதான்பொாய்யோ
சுணங்கவே சுண்ணத்தின் சூட்சம்பாரே. 911

பார்க்கவே சித்தான சவுக்காரந்தான்
பாடுகிறேன் சாத்திரத்தில் பண்பாயில்லை
ஏர்க்கவே யிடுப்பாக சொன்னாரென்று
யீசனுடன் கோள்சொல்வார் சித்தரெல்லாம்
கூர்க்கவே யீசனுக்கு கோபமாகும்
குணமான சட்டைமுனி தீட்சைவிதிசொன்னார்.
சேர்க்கவே சித்தரெல்லாம் கூடிக்கொண்டு
தீட்சைவிதி பாயிரனூர் மகிழ்ந்தார்காணே. 912

காணப்பா சவுக்கார வர்மஞ்சொன்னால்
கயிலாச சின்மயமுங் கோபமாகும்
ஆணப்பா யிட்டருக்கு கோபமாகும்
பேர்பெரிய சித்தருக்குங் கோபமாகும்
ஆணப்பா ஆனந்தர் சொல்லுவோமா
அருட்டென்ற விடுவோமே ஐயர்சொல்லுந்
தோணப்பா தொழுதிரஞ்சி தெண்டம்பண்ணி
சுகாதீத ஆனந்தர் சொல்லுவாரே. 913

பரப்பிவைக்கப் பளபளெனச் செயநீராகும்
பாங்கான யிந்நீரில் வீரம்பூரம்
உரப்பிவைக்க யிட்டுமே வொருநாள்தானும்
உருட்சியாய்ச் சாரமது கட்டிவாங்கி
அரப்பிவைக்க அண்டம்போல் வொருபலத்தைச்சீவி
ஆண்மையாம் நீர்தோச்சு ரவியில்போட்டு
நரப்பிவைக்க பட்சமொன்று போட்டுவங்கி
சேர்மையங் கல்வத்தின் நிலைமைகேளே. 914

கேளுமே சீனமொடு வளையலுப்பு
கெடியான சவுட்டோடு கல்லுப்புவிந்து
வாளுமே வகைக்குவொரு பலந்தான்தூக்கி
வகையான வெடியுப்பு நீராலாட்டி
யேழுமே யேளுநா ளரைத்தபின்பு
யிதமாக வோட்டிலிட்டு வூதிப்போடு
சூளுமே சுண்ணாம்பாம் சாரத்தின்மேல்
சுகமாக மேலிது கவசங்கட்டே 915

கட்டுவது வெடியுப்பு நீரினலே
காஞ்சபின்பு கவுதாரி புடமாய்ப்போடு
கொட்டுவது குக்குடத்தின் புடத்தைப்போடு
கொள்கியபின் கலசத்தை உடைத்துவாங்கி
தட்டுவது தந்தம்போல் சாரங்காணும்
சகலதுரை யிதுக்குள்ளே தயங்கிப்போகும்
ஒட்டுவது பூரத்தை ஒட்டியேட்டு
வொடுக்கமிது கொத்தமிது யூணிப்பாரே. 916

ஆட்டியே யேழுநா ளரைத்துமைபோல்
ஆண்மையாம் நீர்தன்னில் குழைப்பிக்கொண்டு
காட்டியே கல்லுப்பில் தோச்சுவாட்டி
கவரம்போல் பிடித்தபின்பு முன்னிற்கும்கவசம்
நீட்டியே நீர்தன்னி லரைத்துமைபோல்
நிலவரமா யதின்மேலே கவசங்கட்டி
தாட்டியே உலர்த்தபின்பு சவுட்டுமண்தான்
தாக்கான கலயத்திற் பாதிபோடே. 917

பாதிமேல் உப்பையெல்லாம் பரப்பிவைத்து
பாங்காக வதின்மேலே மண்ணைப்போட்டு
மீதியெல்லாம் மேலோடு கொண்டுமூடி
முடுக்கான சீலைசெய்து குழியில்வைத்து
ஆதியே அன்பதெரு அடுக்கிப்போடு
ஆரவிட்டு யெடுத்துப்பார் தந்தம்போலாம்
வாதியாம் வாய்வாதம் தொட்டுகெட்டால்
வருமோதான் யிந்தஉப்பின் வளப்பங்கேளே. 918

வளப்பமெல்லாம் உப்பாலே மைந்தாகேளு
வருகுமப்போ மெய்ஞ்ஞான வாதமாகும்
தளப்பமென்று யெண்ணாதே சமுசயங்களில்லை
சங்கற்ப கெற்பமென்ற சட்டைநீக்கும்
இளப்பமொன்று வாராது யேமசித்தியாகும்
யிழக்கான சரக்கையெல்லாம் யினமாய்க்கட்டு
அளப்பமென்று ஆதாரம் சித்தியாகும்
அறிவிலே புக்கிநின்று அண்ணத்துண்ணே. 919

உண்ணவே வுப்பைவிட்டால் ருசியே போச்சு
வோடுகிற காலுக்கு உறுதிபோச்சு
கண்ணவே கையோஞ்சு காயசித்தி போச்சு
கருத்தூணி வோடு கிறவாசிபோச்சு
பண்ணவே பரந்தோடுங் சூளிகைபோச்சு
பயமென்ற நாசமற்றுப் பஞ்சாய்ப்போச்சு
அண்ணவே வுப்பில்லா கருமமெல்லா
மழிப்பாச்சு ஆதியுப்பின் ஆண்மைபோச்சே. 920

ஆண்மையாம் உப்படங்கி கட்டினாக்கால்
அறுபத்து நாலுசித்தும் ஆடலாகும்
வாண்மையாம் வாதமது யேவல்கேட்கும்
மகத்தான யோகசித்தி காயசித்தியாகும்
கேண்மையாங் கெவுனசித்தி வோடலாகும்
கெவுனத்தில் சித்தருக்குள் கீர்த்தியாகும்
தாண்மையாம் சமாதிக்கு ளிருக்கலாகும்
சரக்கெல்லாம் கால்வாரி யடிக்கலாமே. 921

அடிக்கலாங் கட்டினதோர் கல்லுப்பாலே
அறுபத்து நாலான பாஷாணங்கள்
உடிக்கலாம் உபசரங்கள் நூத்திரண்டு
உப்பாகு மிருபத்து அஞ்சுதானும்
நொடிக்கலாம் நிமிஷத்தில் கட்டிப்போகும்
நொருங்கியதோர் சத்தெல்லா மெதுவுகாணும்
படிக்கலாம் வேதாந்தக் கூட்டத்தோடு
பராபரைதான் முன்வந்து பாஷிப்பாளே. 922

பாஷித்தால் சகலகரு வெல்லாந்தோற்றும்
பராபரைக்கு வஸ்த்துசுத்தி பானமீய்வாய்
தூஷித்தால் துரைகளெல்லாம் பொய்யாய்ப்போயும்
துரோகியாய்ச் சுட்டலைந்து சூட்சங்காணாய்
பூஷித்தால் வாமத்தை பொருளுங்காண்பாய்
பூதசித்தி காயசித்தி பொன்சித்தியாகும்
ரொஷித்தரல் குளிகையுமாங் குறிகள்கூர்மையாம்
ரொம்பவுந்தான் வுப்புடைய குணம்தான் கொல்லே 923

கொல்லுகின்ற காமத்தை மதியிலேற்று
குறிப்பாக வாறுதலம் கூர்ந்துபாரு
வெல்லுகிற மனக்குறைகள் மெத்தவுண்டு
விகாதங்கள் பேசாமல் வாளால்வீசி
மல்லுகிற யோகத்தை சாதகம்நித்தம்
மறவாமல் நிற்குகின்ற அமுர்தத்தையுண்ணு
அல்லுகிற ஆத்தாளை நித்தம்பூசி
அறிவில்நின்ற குருபதத்தை அடுத்துக்கேளே. 924

கேளப்பா கரிசாலைக் குப்பைமேனி
கெடியான கரந்தையொடு வல்லாரைநீலி
வாளப்பா பொற்றலையின் செருப்படையினோடு
வகையாக நிழலுர்த்தி யுலர்த்திக்கொண்டு
சாளப்பா யிடித்துநன்றாய் சூரணமேசெய்து
சாதகமாய் வெருகடிதான் தேனிலுண்ண
கேளப்பா கொட்டியதோர் வேகம்போல
க்ஷணத்திலே காயசித்தி யாகுமுண்ணே. 925

உண்ணப்பா மண்டலந்தான் நோயும் போகும்
வுதரத்தில் வுத்தமனே கிருமிபோகும்
பண்ணப்பா பவளம்போல் சிவந்திருக்கும்
காயமெல்லாம் சம்பழத்தின் வாசம்வீசும்
விண்ணப்பா அந்தரத்தில் மீனங்களெல்லாம்
வெகுளாமல் பகல்காணத் தோத்திவிக்கும்
மண்ணப்பா பாதாளம் நிதிகள்தோற்றும்
வாய்திறத்த தளமாறும் வெளியாய்ப்போமே. 926

வேம்பு

போமப்பா யிதுகடந்த பின்புநீதான்
புகர்பெறவே நூறாண்டின் வேம்பைப்பார்த்து
ஆமப்பா பட்டையைத்தான் வெட்டிவந்து
அப்பனே நிழல்தனிலே யுலர்த்திப்பின்பு
காமப்பா யிடித்து நன்றாய்ச் சூரணமே செய்து
கரிசாலை மல்லிகையின் சாறுவார்த்து
நேமப்பா அஞ்சுதரம் பாவினையே செய்து
சிறப்பான வெருகடிதூள் கொண்டிடாயே. 927

கொண்டிடவே யனுபான வகையைக்கேளு
குதித்துத்தே னதில்குடிப்பீர் நார்ப்பதுநாள்
விண்டிடவே யந்திசந்தி கொள்ளுகொள்ளு
மெய்யெல்லாங் கருங்கல்லின் வயிரம்போலாம்
துண்டிடவே நரைதிரையு மெல்லாம்போகும்
சுக்கிலந்தான் மேலேறும் கீழோடாது
கண்டிடவே யாறுதலம் வெளியேகாணும்
காலனுமே அஞ்சிடுவான் காணுங்காணே. 928

சர்க்கரை வேம்பு

காணவே மலைதோறுஞ் சர்க்கரைவேம்புண்டு
காய்தின்றால் கற்கண்டு போலேதோன்றும்
பூணவே யிலைதின்றால் மண்டலத்தில்சித்தி
புகழாகக் காய்த்தின்றா லப்படியே சித்தி
யாணவே நீளவனி பறக்குமப்பு
மாச்சரியம் லோகத்திற் கிதுக்கொவ்வாறு
தோணவே வியாதியெல்லா மாண்டுபோகும்
தொகுத்தறிந்து தேடிநீ யறிந்துகொள்ளே. 929

சிவப்புக் கத்தாழை

கொள்ளவே சிவப்பான கத்தாழைச்சாறும்
கொண்டுவர மண்டலந்தான் அந்திசந்தி
விள்ளவே தேகமது கஸ்தூரி வீசும்
வேர்வைதான் தேகத்தில் கசியாதப்பா
துள்ளவே நரைதிரைக ளெல்லாமாறும்
சோம்பல் கொட்டாவி நித்திரையுமில்லை
கள்ளவே காகமது வுடம்பிலூறும்
கண்களும் செவ்வலரிப் பூப்போலாமே. 930

ஆமிந்த சோறெடுத்து சூதத்துக்கு
அண்ணலே வைத்துமெள்ள சுருக்குப்போட்டால்
வாமிந்த சூதமது மணிபோலாகும்
வகைவகையாய் பாஷாணங் கட்டிப்போகும்
சேமித்தச் சூதத்தை யுருக்கிச்சாய்க்கச்
சணத்திலே செம்பாகும் தூறுவுண்ணும்
நாமுமிப் படிபார்த்தோம் காரியம் செம்பாம்
நாதாக்க ளிப்படியே பார்த்திட்டாரே. 931

மூலிகைவகை

பார்த்திட்ட மலைகளிலே மூலிகைகேளும்
பரிவான கருநெல்லிக் கருத்தநொச்சி
பூர்த்திட்ட புல்சோதி பெரியசோதி
புகழ்பெரிய வெள்ளைப்பூந் துத்தீயோடு
ஏர்த்திட்டாம் கல்லுக்குள் கொஞ்சமப்பா
எளிதான விருச்சங்கள் ரோமசாதி
கார்த்திட்டக் கருவேலி சுணங்கைவிருட்சம்
கறுத்திருக்குங் கொடிவேலி சோந்திராயே. 932

சோந்திரா வெண்புரசு வெள்ளைக்கண்டன்
செங்கழலி செம்பல்லி குண்டமாம்பாலை
காந்திரா கசப்பான பசளையோடு
கடியதொரு பொற்சீந்தி சாய்கைபேதி
ஆந்திரா கருவீழி சிறுத்தவாழை
அதிவெள்ளை தூதுவனைக் கறுத்ததில்லை
காந்திராக் கறுப்பான கறியசாலை
கறுத்தமத்தை வெண்காரை கல்லையாமே 933

ஆமப்பா மூவிலையாங் கருத்தினோடு
ஆச்சரியங் கருந்தும்பை வெள்ளைக்காந்து
யோமப்பா வெண்டான ஆதண்டையோடு
முத்தமனே முப்பத்தி ரண்டுமூலி
வாமப்பா மலைதோறு முண்டுவுண்டு
மகத்தான மூலிகைதான் பரிசவேதை
காமப்பா வொவ்வொன்றிற் சூதங்கட்டும்
கலந்துநின்ற வாசனைக்குப் பாஷாணம்சாமே. 934

சாகவே சரக்கான அறுபத்துநாலும்
தனதளவே வேதையுமாம் சகத்திரத்துக்கோடும்
சாகவே வுபரசங்கள் நூற்றிரண்டுபத்து
சவளைபோல் சத்தாகு மிறங்கும்பாரு
சாகவே லவணமுத விருபத்தஞ்சும்
தனித்தனியே கட்டாகும் சரக்கைக் கொல்லும்
சாகவே பண்ணாம லிருத்திவைக்கும்
சங்கற்ப விகற்பமென்ற சட்டைபோக்கே. 935

போக்கான கிளிமூக்கு மரமொன்றுண்டு
புகழான கிளிபோலக் காயுங்காய்க்கும்
வாக்கான யிலையதுவு மரசிலைபோற்காணும்
மைந்தனே யிதனுடைய பழத்தையுண்ணு
நோக்கான வழிநடக்கச் சுறுக்காயோடும்
நொடியிலே காயசித்திக் கிடைக்குமப்பா
போக்கான பூபூத்த மற்றாநாள்பழமாம்
புண்ணியமாம் சித்தருக்கு ளெய்தும்வாறே. 936

விடத்தேர்வேர்

வாறுகேள் விடத்தேர்வேர் பட்டைவாங்கி
மருவநன்றாய் நிழலுலர்த்திச் சூரணமேசெய்து
பேறுகேள் பலம்நாலு நிறுத்துக்கொண்டு
பேசரிய சூதமது பலந்தானாலு
தாறுகேள் கல்வத்தி லிதனைப்போட்டு
சாதகமாய் மல்லிகையின் சாறுவிட்டு
தேறுகேள் எண்சாம மைபோலரைத்து
தேன்வார்த்து வுண்டைசெய்து சிமிழில்வையே. 937

வைத்ததொரு மருந்தெடுத்து அந்திசந்தி
வகையாக மண்டலந்தா னுண்டாயானால்
நைத்ததொரு சடமிருகித் தங்கம்போலாம்
நாடியெல்லாம் பிகுவாகி யழுத்தும்திரேகம்
கைத்ததொரு பித்தமதுக் கபத்தைச்சாடும்
கடகடென்று ஆறுதலம் நீர்ந்துபோகும்
மெய்த்ததொரு சரஸ்வதியு நிர்த்தஞ்செய்வாள்
வீணைபோல ஒலியாகும் நாக்குத்தானே. 938

பொற்சீந்தி

தானென்ற பொற்சீந்தி யானால்நன்று
சாதகமாய் சிவப்புநன்று கிடையாவிட்டால்
பானென்ற சீந்திமேற் றோலுபோக்கி
பருந்துண்டாய்க் கொண்டுவந்துக் கிழித்துப்போட்டு
கோனென்ற நிழலுலர்த்திச் சூரணித்து
கூரான சர்க்கரைதான் சரியாய்ச் சேர்த்து
வேனென்ற வெருகடிதூள் அந்திசந்தி
வெருளாதே மண்டல முண்டுபாரே. 939

பாரப்பா மேகமென்ற தெல்லாம் போகும்
பருவான வாதபித்தம் பக்குவமுமாகும்
சேரப்பா கபாலத்தில் வெட்டைபோகும்
செகமறிய அஸ்திசுரம் மேகம்போகும்
சாரப்பா தாதுமுத்தும் தழைக்குந்திரேகம்
சதுரான ஆறுதலம் வன்னிமீறும்
போமப்பா சீந்திக்குச் சாவுமில்லை
பேரின்ப சாஸ்திரத்தைப் பேணிப்பாரே. 940

நெல்லிக்காய்

பேணிப்பார் நெல்லிக்காய் முத்தல்வாங்கி
பேரான பால்விட்டு யவித்துக்கொண்டு
ஊணிப்பார் நிழலுலர்த்திச் சூரணித்து
வுத்தமனே சுத்திகெந்தி சரியாய்க்கூட்டி
பேணிப்பார் தேனதிலே குழைத்துவுண்ணப்
பேரான மண்டலந்தா னுண்டாயானால்
ஆணிப்பார் முன்னெடுத்த தேகமையா
ஆச்சரியம் சிவசத்தி தேகமாச்சே. 941

சத்தியது யேதென்றால் கெந்தகமுமாச்சு
தனித்துநின்ற சிவந்தானு மருகமாச்சு
புத்தியது யேதென்றால் அறிவுக்குள்புக்குப்
பாரப்பா பாதத்தில் பணிந்ததுவேயல்ல
முத்தியது யேனென்றால் மவுனந்தாண்டா
மோசமில்லை சைதன்னிய முத்தியாமே. 942

சிவனார் வேம்பு

ஆமப்பா யிதுகடத்து சிவனார் வேம்பை
அப்பனே யிடித்துநன்றாய்ச் சூரணித்து
தேமப்பா வாலுளுவைச் சரியாய்க்கூட்டி
சிறப்பாகக் கரந்தைச்சார் தன்னாலாட்டு
காமப்பா வில்லைபண்ணி நிழலுலர்த்திச்
சாதகமாய்ப் பூப்புடத்தில் தயிலம்வாங்கி
மாமப்பா முக்களஞ்சி அந்திசந்தி
மறவாமல் மண்டலமுங் கொண்டிடாயே. 943

கொண்டிடவே குஷ்டமெல்லாம் போகும்பாரு
கூரான சரீரத்தில் வாதம்போகும்
விண்டிடவே விஷக்கடிக ளெல்லாம்போகும்
மேனியுந்தான் மாந்தளிரின் நிறமுமாகும்
கண்டிடவே கன்னியர்கள் வசமதாவார்
காரியமாம் ஐம்புலனை யடக்கிச்சாடு
துண்டிடவே யாசையுற்றால் காயசித்தி
தூஷித்துக் கன்னியைத்தான் தொடலாகாதே. 944

அண்டகற்பம்

ஆகவே அண்டத்தின் கற்பங்கேளு
அப்பனே கருங்கோழி சாவலுடன்போடு
வாகவே வளர்த்ததனை முட்டையெல்லாம்வாங்கி
வகையாகக் கல்லுப்புக் குள்ளேவைத்து
ஏகவே யிருபரு நாட் கழிந்தபின்பு
எடுத்தல்லோ அயச்சட்டிக் குள்ளேவைத்து
போகவே கருடனுட கிழங்குசார்விட்டு
புகழாக அடுப்பேற்றி யெரித்திடாயே. 945

எரித்திடவே சாரெல்லாம் சுண்டிப்போகும்
இதமாக ஆறவிட்டு வைத்துக்கொண்டு
பரித்திடவே தினமொன்று மேலோடுவாங்கிப்
பக்குவமாய் நாள்தோறும் பதமாய்ப்பார்த்து
சரித்திடவே யிப்படியே சமனதாக
சாதகமாய்த் தினந்தினமும் ஒவ்வொன்றாக
மரித்திடவே எடுத்தசடம் கற்பாந்திரகாலம்
வைத்திருக்க வேண்டுமென்றால் மண்டலந்தான் கொள்ளே 946

கொள்ளவே காயமது சிவந்துமின்னும்
குறிப்பான கண்ணிரெண்டும் செழுங்கஞ்சம்போலாம்
விள்ளவே கைகள் ரண்டுமலைத்தூணாகும்
மெலிவான நாடியெல்லா மிறுகிக்கொள்ளும்
துள்ளவே யனுபவித்தால் விந்துவீழாச்
சுக்கிலந்தா னிறுகியங்கே மேலேயோடும்
தள்ளவே சட்டையொன்று கக்கிப்போகும்
சமர்த்துடனே யிவ்வளவும் சாதித்தேறே 947

சாதித்தே தலைமுழுக வரிசைகேளு
சாதகமாய்ப் பட்சத்துக் கொருநாளப்பா
பேதித்து மிளகொடு மஞ்சள்நெல்லி
பேரான வேப்பரிசி கடுக்காயோடு
வாதித்துக் சமபாகம் நிறுத்துக்கொண்டு
வளமான ஆவின்பால் விட்டுஆட்டி
காதித்துத் தலைதனிலே தேய்த்துக்கொண்டு
கனமான வெந்நீரில் முழுகிடாயே. 948

முழுகிடவே கபாலமது கட்டியாகும்
மூச்சான வாய்வதுமேற் கொண்டோடும்
நழுகிடவே ரோமமது தும்பிபோலாம்
நனைந்தாலும் குளிராது வன்னிமீறும்
மழுகிடவே கண்ணீரிற் றண்ணீர்வெள்ளம்
வானத்து மீன்க ளெல்லாம் பகலிற்றோன்றும்
மெழுகிடவே யுடலுக்குள் விஷநீர்வற்றும்
மேனியுந்தான் பொன்னிறம்போ லாகும்பாரே. 949

பார்க்கவே மாதாந்தத் தொருக்காலப்பா
பரிவாக ஆவிநெய்யைத் தேய்த்துக்கொண்டு
ஏர்க்கவே பசும்பாயறு அரப்பாய்ப்பண்ணி
எளிதாக வென்னீரில் முழுகிவாநீ
கார்க்கவே ரோமமது கருவண்டுபோலாம்
கண்ணுக்குள் ளொளிமாறும் தாகமில்லை
நேர்க்கவே சுழிமுனையும் நெட்டேயேறும்
சுழலாமற் பிரபஞ்க மாய்கைநீக்கே. 950

நீக்கவே தாம்பூலந் தின்பதற்கு
நினைவாகச் சுண்ணாம்பு பண்ணுதற்கு
கார்க்கவே கற்பூரச் சீலையின்மேலே
கல்லுக்குள் சுண்ணத்தைக் கலசம்போட்டு
பார்க்கவே கரியோட்டி லூதுவூது
பஞ்சுபோல் பொருமியங்கே சுண்ணமாகும்
மார்க்கவே கல்நாரி லிப்படியேயூது
வடியான அண்டத்தி லூதிடாயே. 951

தாம்பூலம்

ஊதிடவே கரும்பச்சைப் பவளமுத்து
வுத்தமனே யிவ்வகையாம் அஞ்சுசுண்ணம்
கோதிடவே கொட்டைப்பாக் கதனைச்சீவிக்
குறிப்பாகப் பழுத்திருந்த வெள்ளியில்பூசி
ஒதுவது சாரத்தை யுமிழ்ந்துபோட்டு
வுத்தமனே தாம்பூலந் தின்றுதுப்பு
வாதுவது பித்தசிலேற் பனத்தின் போக்கு
மகத்தான வுபரசத்தின் சுண்ணந்தானே. 952

தானென்ற காலையிலே வழலைவாங்க
சாதகமாய்ச் சொல்லுகிறேன் மக்காள்கேளு
வானென்ற கரிசாலைச் சாற்றாலாட்டி
வளமான ஆவிநெய்யைச் சமனாய்சேர்த்து
ஆவென்ற அங்குட்ட விரலிந்றோய்த்து
அப்பமனே அண்ணாக்கில் திரளவூற்று
தேனென்ற சங்கிலிபோல் கபந்தான்வீழும்
சிறப்பான பதினாறு திறமும்வாங்கே 953

வாங்குவா யிப்படியேதான் மண்டலமேயப்பா
மாலையிலே செய்யுகிற வரிசைகேளு
பாங்கியே யேரண்டத் தெண்ணைவிட்டு
பரிவாகத் தற்சனையில் தோய்த்துக்கொண்டு
தேங்கியே பாவைபோல் கோலையூன்றி
சிறப்பாக அபானத்தில் சுழற்றுநூறு
ஓங்கியே சளியிருப்பு நூற்பாரு
வொளித்திருந்த கபமெல்லாம் கலைந்துபோமே. 954

கபமெல்லாங் கழராட்டால் காயசித்தியில்லை
கருநாக்கில் விள்ளாட்டால் அமுர்தமில்லை
அகமெல்லாந் தான்கொண்டால் பூசைபோச்சு
அப்பனே நானுனக்குச் சொல்லுறேன்கேள்
சொபமேதான் மயங்கியிங்கே யிருந்ததென்றால்
சொல்லுவதும் பேசுவது மறைந்துபோச்சு
நிபமான காமத்தை நினைக்கவேண்டாம்
நெறிமுறையாய் தபத்தினது கட்டைதள்ளே. 955

மூலிகையிற்கறுப்பு

தள்ளியே மூலிகையிற் கறுப்புப்பண்ண
சாதகமாய் அரைமட்டும் குழிதான்வெட்டி
தெள்ளியே சேங்கொட்டை ரண்டுமொன்றாய்ச்
சிறப்பாக முழவுயரம் பரப்பிமேலே
அள்ளியே கரம்பைமண்ணை மேலேபோட்டு
அழகாகப் பாத்திகட்டி நீரைவிட்டு
நள்ளியே அழுகவிட்டு மூன்றுதிங்கள்
நலமாகக் கொத்தியே ஆறப்போடே. 956

ஆறவிட்டுப் பதிப்பதற்கு விபரங்கேளு
அழகாக குமரியொடு ஓமங்கஞ்சா
தேறவிட்டு வல்லாரைக் கரியசாலை
சிறப்பான செருப்படியும நீலிவீழி
ஏறவிட்டுப் பொற்றலையின் தொச்சிநெல்லி
யிதமான கரத்தையொடு மத்தைதும்பை
சீறவிட்டுக் கொல்லனுட கோவைவாழை
சிறப்பாகப் பதித்துவைத்து தண்ணீர்வாறே. 957

வார்ததல்லோ பயிராக்கித் தண்ணீர்வார்த்து
வாகாகக் காய்த்தபின்பு விரையைவாங்கி
போர்த்தல்லோ முன்போல சேங்கொட்டையிட்டுக்
கொடுஞ்சுருக்காய் மாத்தியே பயிரைப்போடே
ஏர்த்தல்லோ யிப்படிதான் நாலுதிரம் போட
என்மக்காள் உங்களுக்குச் சொல்லிவிட்டேன்
சேர்த்தல்லோ யிப்படியே செய்துதீர்ந்தால்
சிறப்பான கறுப்பான மூலிதானே. 958

தானென்ற மூலிகைதான் மலைகள்தோறும்
சாதகமாய் வைத்தார்கள் ரிஷிகள்சித்தர்
வானென்ற யிலைகறுப்புக்குப் பரிசைகேளு
வாகாகக் கொக்கிறகு கொண்டுவந்து
பானென்ற யிலைகசக்கி மேலேபூசப்
பரிவான காகத்தின் நிறமேயாகும்
கோனென்ற யிலைதின்றால் காயசித்தி
கொடுஞ்சுறுக்காய் கோடிவரை யிருத்துந்தானே. 959

இருத்தியல்லோக் குமரியிட கற்பமுண்டு
யெழுவதுதான் கோடியுகம் யிருந்தாரப்பா
அருத்தியதோர் ஓமமுண்டு காலாங்கிநாயன்
அறுபதுதான் கோடியுகம் வாதம்பார்த்தார்
திருத்தியதோர் கஞ்சாவால் கோரக்கர்தானும்
தினந்தோன்றி சாமதியிலே யுகமேநின்றார்
திருத்தியதோர் கரிசாலை கற்பமுண்ட
சிவயோக முனியுடைய திறமைகேளே. 960

கேளப்பா வஞ்சுயுகம் நாதாக்களோடே
கெடியாகத் தர்க்கித்து வோதாந்தம்பார்த்தார்
வேளப்பா நீலியுண்டுராமதேவர்
விரைந்தெழிலே சமயுகமாய் யோகம்பார்த்தார்
நாளப்பா பிரம்மமுனி காலையுண்டு
நாலேழு லட்சம்யுகம் சமாதியுற்றார்
தேளப்பா வோமமுண்டு அனேகநாதர்
செகத்திலுள்ள அதிசெயங்கள் பார்த்திட்டாரே. 961

பார்த்திடவே வீழியுண்டு கஞ்சமலைசித்தர்
பத்துயுகம் ஆரூட சமாதியிலே நின்றார்
ஏர்த்திடவே பொற்றலையால் கொங்கணத்தானப்பா
ஏழுயுகம் குளிகைகட்டி வாதம்பார்த்தார்
கார்த்திடவே பதஞ்சலிதான் கரந்தையுண்டு
கைகொட்டி சிதம்பரத்தில் நடனங்கண்டார்
போர்த்திடவே கொல்லனுட கோவையுண்டு
போகமுனி யென்றுசொல்லிப் புளகித்தேனே. 962

புளகித்துக் கோடியுகம் வாதம்பார்த்துப்
போக்கோடே நூல்நன்றாய் விரித்துயானும்
இளகித்து ஏழுகாண்ட முன்னேசொன்னேன்
ஏழையுந்தான் யெழுநூறு நிகண்டாய்ச் சொன்னேன்
அளகித்துக் கண்டபடி சொன்னேன் மக்காள்
ஆச்சரியம் வெட்டவெளி மறைப்போயில்லை
ஊகித்த வுப்பைநன்றாய்க் கட்டியுண்ணு
வொருசொல்லும் தப்பாது சித்தியாமே. 963

உப்புகட்ட

சித்தியாம் அன்னத்தில் வுப்புகட்ட
செப்புகிறேன் நாதாக்கள் சொன்னதெல்லாம்
பத்தியாம் புங்கம்வேர் பாலைவாங்கி
பாறையுப்பு தோய்த்தெடுத்து ரவியிற்போடு
முத்தியால் யேழுநாள் ரவியிற்போட
முனையான வெடியுப்புப் பலந்தானைந்து
வெத்தியாய் சீனமது பலந்தானைந்து
வெண்காரம் பலமைந்தே வெடியுப்பஞ்சே. 964

அஞ்சோடு சாரமைந்து பூநீரைந்து
ஆதிபரங் கடல்நுரையுஞ் சூடனைந்து
நஞ்சோடு யேழுநாள் வார்த்தரைத்து
நலமான ரவிதனிலே காயப்போடு
குஞ்சோடு அஞ்சுநீர் பலந்தானைந்து
குணமான வீரமது பலந்தானைந்து
பஞ்சோடு யிதுகளெல்லாம் ஒன்றாய்ச்சேர்த்துப்
பாலாலே குழப்பியே வைத்துக்கொள்ளே. 965

கொள்ளவே பாறையுப்பில் தோய்த்துதோய்த்து
குறிப்பாகக் காயோட்டில் வாட்டுவாட்டு
மெள்ளவே தணலுக்குள் ளடர்ந்துவாட்டு
வெடிப்படங்கி யுப்புதுவும் வெண்மையாகும்
தள்ளவே சுண்ணாம்பு வுப்புநேரே
சமனாக பொடித்துமைபோ லமுரியாலே
துள்ளவே ரண்டெடையாய்த் தட்டிவைத்து
துடியாகக் கவசித்தயுப் பைவையே. 966

வைத்துமே லடைமூடி சட்டியிலேவைத்து
வரகாலே நாற்சாமம் தீயைமூட்டி
மொய்த்துமே மூடியொரு சீலைசெய்து
முதியாமல் நூறெருவிற் புடத்தைபோடே
தைத்துமே ஆரவிட்டு எடுத்துப்பாரு
தவளம்போல் பளிங்குநிற மாகிநிற்கும்
நைத்துமே கரிசோற்றி லிந்தவுப்பையிட்டு
நலமாக நாள்தோறுங் கொண்டாடியே 967

கொண்டிட்டா லிந்தவுப்பை சட்டைதள்ளும்
கூசாத வாசியெல்லாம் நெட்டிட்டேறும்
விண்டிட்ட அமுரியிலே யிறங்காதுப்பு
விகசிதமாம் பச்சையுப்பு யிறங்கும்பாரு
மண்டிட்ட சித்தியெல்லாம் பாழாய்ப்போகும்
மகிழ்ச்சியாய் கொண்டவற்கு ஞானசித்தி
கண்டிட்ட கற்பமெல்லா மண்ணாய்ப்போகும்
காசினியில் மானிடர்க்கு கர்மம்போமே. 968

போமென்ற வுப்புக்குக் காரமேத்தி
பொலிவாகச் சுண்ணமென்ற குகையிலூத
ஆமென்ற பூப்போலச் சுண்ணமாகும்
அந்திடைக்குச் சாரமிட செயநீராகும்
வேமென்ற சரக்கான அறுபத்துநாலும்
வெகுளாமல் போகாமல் கண்விட்டாடும்
சாமென்ற சாவுபொய்யாம் வேதையாகும்
சகஸ்திரத்தான் மாராகும் தன்னிற்பாரே. 969

பாரப்பா வுப்புநின்று வுருகும்போது
பரிவோடு யிடைக்கிடைதான் நாகம்போடு
காரப்பா அந்திடைக்குச் சூதம்போடு
கனமான கெந்தகந்தான் ரெட்டிப்போடு
சேரப்பா யெடுத்தவுடன் களங்கமாகும்
சேர்ந்தநவ லோகத்தில் அன்பதுக்கொன்றீய
வோமப்பா மாத்தாறு காணும்காணும்
வெகுளாதே பணவிடைதான் தேனிலுண்ணே. 970

வாதத்துக்கு சாத்தென்ணை

தழுதாழை மகிழெருக்கு குப்பைமேனி
தக்கபொடு திலைபிரமி நொச்சிபுங்கு
விழுதான தக்காளி மணத்தக்காளி
மிக்க வூமத்தையுடன் யெட்டிவேம்பு
முழுதாகும் ஆதண்டை அழிஞ்சேரண்டம்
முதியார்தன் கூந்தலொடு ஆடாதோடை
எழுதாகு மிலைக்கள்ளி செருப்படைதானாகும்
இசைந்த குமரிச்சாறும் யின்னங்கேளே. 971

இன்னமும் வாயிலைவேறும் வெவ்வேர்க்கொன்று
யிடித்துயிரு நால்நாழி கூட்டச்சொன்னோம்
சொன்னோமே முன்னாழி விட்டுச்சுக்கு
சுகமுடனே கற்பவகை சொல்லக்கேளும்
மின்னே திப்பிலிமிளகு அரத்தைகும்ப
மேவுமர மஞ்சளுடன் கருஞ்சீரகமும்
பொன்னே கடுகுரோசனையும் பொருந்தும்காயம்
புகழ்பெறவே மண்திஷ்டிக் கூட்டிக்கொள்ளே. 972

(வேறு)

மஞ்சநதியும் சவுக்காரம் வளருமத்திதிப்பிலியும்
மிஞ்சுதிப்பிலி விதின்மூலம் விரும்புஞ்சரக்குமுக்கழஞ்சு
அஞ்சப்படாதே அரைத்தெடுத்து அழகாம்பதத்தில் வடித்திறக்கி
வஞ்சிக்கொடியே சிரசில்வைத்து வாகாய்த்தைலம் பண்ணுவதே 973

பண்ணும்பொழுதுகால் மடங்கல் பகருங்கைகால் திமிர்த்திடுதல்
எண்ணும்வாத மெண்பதும்போ மிதிக்குங்கடுப்புச்சூலையும்போம்
நண்ணும்பெரிய குளிர்வாதம் நாடுமுடம்பிற்குத்திடுதல்
விண்ணோர்புகழும்சிவனாணை மேவுமுடலில் நில்லாதே. 974

வேறு—சத்தனாதியெண்ணெய்

மெல்லியரே நீர்கேளீர் சந்தனாதி
விளங்குமெண்ணெய் விரித்துரைக்கில் சித்தாமட்டி
நல்லசீந்திற் கிழங்குடனே பொன்னாங்கண்ணி
நன்னாரி யிருவேலி விலாமிச்சோடு
வில்வம்வோ் ஒன்றுடனே பலமோபத்து
வெவ்வேறே துண்டித்து முடாவில்போட்டு
வல்லதொரு சந்தனமும் பலமோபத்து
வார்கொடியா ளிருதூணி வகையாய்க்காச்சே 975

காச்சியே வடித்தபின்ஊப எண்ணெய்நாழி
கருதியே முக்குறுணி பசும்பால்விட்டு
வாச்சதொரு முந்திரிகை சிறியதேக்கு
வளர்கோஷ்டம் பேரழிஞ்சில் கண்குலவேளை
கூச்சுறுங் கோரோசினைக் கூகைநீறும்
குலவிய சாத்திரபேதி குங்குமந்தான்
பேச்சுவழா வதிமதுரம் யேலம்லவுங்கம்
பெருங்குரும்பை தேவதாரம் நாகப்பூவே 976

பூவையரே செவ்வள்ளிக் கிராம்புகுப்பை
புகழமாஞ்சி சடாமஞ்சில் புகழும்வெட்பாலை
பாவையதோர் மண்திஷ்டி மரமஞ்சள்தான்
பக்குவமாம் கற்கடகம் காரம்பச்சை
மாவையதோர் கைச்சோலம் புழுகுசூடம்
தக்கஅகில் சந்தனமும் தயங்கவாகும்
மேவிய திப்பிலிமூலம் சிறுமூலந்தான்
மிக்கசெல்வி செண்பகப்பூ கொத்தமல்லி 977

கொந்தவிழுங் குழலாளே வேரோராண்டு
குலவியதோர் நாற்கழஞ்சி ரண்டுநீதான்
விந்தசரக் கத்தனையும் விடுத்தரைத்து
வேகமுடன் கியாழமதில் விட்டுநீதான்
கந்தமகிழ் யெண்ணெய்தனி நற்பதத்தில்
கடுகவே காச்சிவடித் தெடுத்தபின்பு
முந்தவே சிரசில்வைத்து முடம்பிற்பூசி
முழுக்கொள்ள போம்பொழுது முறமைகளேளே. 978

நயனமதிலே வெளுப்பு வரட்சிபித்தம்
நல்லதோர் கண்ணெறிவு கண்ணீர்பாச்சல்
துயரமிகும் பிரமியம்போம் தாதுவுண்டாம்
துய்யவிரு விழிதெரியும் சூடுமாறும்
மயனமுடன் கைகாலில் யெரிச்சல்மாறும்
மாராத ரோகசெய ரோகம்போகும்
தண்மையுடன் வுண்மைசொன்னோம் சிவனார் ஆணை
தன்மேலே யாணையுடன் சாற்றினாரே. 979

வேறு—கையாந்தகரையெண்ணெய்

கையாந்தகரை நெல்லிக்காய் கருதும்பசுவின்பாலுடனே
மெய்யாஞ்சாறு நானாழி விரும்பும்யெண்ணெய்யிருநாழி
பொய்யாமதுரம்பதின்களஞ்சி போதே அரைத்துக்கரைத்துயிதில்
அய்யாமெழுகுபதம்வடித்து அன்பாய்சிரசில்வைப்பீரே. 980

வைத்தேமூன்றுநாளங்கே வகையாய் முழுகிவரவேதான்
புத்தேயெரிப்புக்கிறுகிறுப்பு புக்கக்கண்ணீர்சலம்பெருகும்
வத்துஞ்சரீர மிகத்தேறி வளரும்தாதுமிகவுண்டாம்
உத்தே சொன்னோ முண்மையிது வுலகோரறியவுரைத்தோமே 981

தாழைவிழுதி எண்ணெய்

நாடுந்தாழை விழுதிச்சார் நல்லஎண்ணெய் நானாழி
தேடுமாஞ்சில் வேதாரம் திகழுங்குங்கிலியம் சந்தனமும்
பாடும் முக்குரா வேறும் பகர்வோம் களஞ்சி ஈரெண்டு
கூடுங்கிராம்பு மிளகுடனே கொள்ளுங் கார்புகாரரிசி 982

கொள்ளுஞ்சரக்கு ஓர் பிடியாம் கூட்டுமாறுஞ் செவ்விளநீர்
மெள்ளக் கியாழமதானூறி மெழுகுபதமாய் வடித்தெடுத்து
உள்ளும் நக்கி மேல்பூச வோடும் பித்தமுள்ளதெல்லாம்
தள்ளும்படி நீரெண்ணாதே தாழை விழுதி யெண்ணெயிதே. 983

வேறு—இளநீரெண்ணெய்

சீர்பெறுஞ் சீர்செவ்விள நீராறுநாழி
சிறப்புடைய ஆவின்பால் ரண்டுநாழி
வார்சேரு மதிமதுரம் குங்கிலியம்
வளர்கோஷ்டம் நன்னாரி தகரமாஞ்சில்
தார்சேரு மிலவங்கம் பச்சைசந்தம்
தாமரை வளையம் சாத்தால்வாரி
கூர்சேரு விலாமிச்சை அகிலந்தானும்
கொள்ளாத சாதிக்காய் கொண்டிடீரே. 984

இருவேலி மாதத்து முத்தக்காசு
இசைந்தனவே நன்னாரி யின்னங்கேளு
மருமேவுஞ் சீதேவி செங்கழனீர்
வளர்சோரி தாமரையின் வகையதாக
திருமேவும் பலமூன்று மாககூட்டிச்
சேர்த்திடித் துருகவிட்டு நாலொன்றாக்கி
ஒருமேவு நல்லெண்ணை நாழிவிட்டு
வுல்லியதோர் பலமொன்று மதுரம்கூட்டே. 985

கூட்டியதோர் தேவதாரம் ஏலம் கோஷ்டம்
குறையாத சந்தனமும் வகுலாசோடு
நாட்டியதோர் செண்பகப்பூ கிராம்பூதேடி
நயமாக வேரண்டு களஞ்சதாக
மீட்டுமிதை அரைத்தெடுத்துக் கியாழத்தூற்றி
மெழுகுபதம் தான்வடித்து மெய்யிற்பூசி
ஈட்டமுள்ள இரமிதிலே பொருத்தியேதான்
யிருநீர்தான் படர்மேனி முழுகுவீரே. 986

வேறு

முழுகுவீர் மூன்றாநாத்து முளகுசுக்கு நீர்குடியும்
கழுவிய முகமுகக்கை கலந்த வெத்திலையுங்கூட்டி
வழுவிய அந்தநீரை மறுபடியே உலையாய் வைத்து
பழகுசோ ரவி யலுண்ணப் பறந்திடும் நாலாமெண்ணே. 987

சன்னிசுரவாததிற்கு எண்ணெய்

அரன்முரிபங்கம்பாலை அவுரி நன்னாரி வீழி
பெருகும் விந்திடையில் யூரல் பின்னிய யீசன் வேம்பு
யிருமை சேர்யெருக்குத் தோடை விலாமிச்சையினி சேர் வெள் வேல் 988

முருக நாயுருவிசித்தா மட்டியுமுத்தக்காசே.
காசகன் கிரந்திசன்னி நாயகன் குதிரைவாலி
வீசும் வேலிப் பருத்தி வெங்கொடி வேலிமாஞ்சி
மாசறு மூலம் சீராய் மலர் செப்பு நெருஞ்சி சூரன்
ஈசுரன்றாள் சேர்வோர் களினிக் கடை மருந்துசொல்வாம் 989

வேறு

சொல்லுங்கைச் சோலம் பச்சிலைசுக்கு மிளகுகொத்தமல்லி
செல்லும் சிறுமூலச் சூலம் செவ்விய தேவதாரமுடன்
நல்ல கோஷ்டமாரஞ்சு நாடுஞ்சீலத்திப்பிலியே
வல்லசீரகம் சின்னிநாயன் வளர்வெள்பிசினும் தேடீரே. 990

தேடிய செம்பருத்தை சேர்சதகுப்பை பலவுங்கம்
கூடிய மருந் தோடொன்று கொண்டிடும் களஞ்சதாக
ஏடவிடு மருக்கம் பூச்சார் எலுமிச்சம் புளிக்காய்ச்சாறும்
தோடவிழிலையின் சாறும் வொன்றுறொன்று நாழி கொள்ளே. 991

கொண்டதோர் கியாழத்தில் முன் கூறிய மருந்து கேளாய்
பண்டுபோலக் கரைத்துக் காச்சிப் பதத்தினில் வடித்து எண்ணெய்
உண்டிடுமே யேழு சவுக்கியிற் றடவக்கொட்டி
கொண்டிடுஞ்சன்னிவாதங் குலைந்துதான் வோடுமென்னே. 992

பெரிய நயனவிதி எண்ணெய்

மருளியதோர் நயனத்தின தோஷத்துக்கு
வளரெண்ணெய் பேராமட்டி சித்தாமட்டி
இருவேலி நீர்மூலா முத்தக்காசு
மிசைந்தசீந் தில்கிழங்கு பொன்னாங்காணி
திருமேவு நன்னாரிக் குதிரைவாலி
செப்பரிய நிலைக்குமிழி வேர்னீரின்முள்ளி
தருமேவுங் செழிய தாமரையும்
தக்கப் பசளைக்கிழங்கு சாத்தால்வாரே. 993

சாத்தியதோர் பனங்குருகு விலாமிச்சம்வேர்
சந்தனம் தாமரைக்கிழங்கு சரியதாக
தேத்தமிகுங் கடைமருந்து சண்பகப்பூ
செவ்வள்ளிக் கிளியூரல் நாகப்பூவும்
மாத்தயே யிருவேலி கொத்தமல்லி
வசுவாசி சாதிக்காய் ஏலலவுங்கம்
ஒத்தமுள்ள கைக்சோலம் கொழுந்துப்பச்சை
இயல்கோஷ்டம் அதிமதுர மின்னங்கேளே. 994

இன்னங்கேள் குங்குமத்தின் பட்டைகூடி
இயல்கருஞ் சீரகம் குங்குமப்பூ
சொன்னோங்கேள் கடைமருந்து களஞ்சிகூட்டி
துய்யவே ரிருகளங்சி சுகமதாக
பொன்னேகேள் நெல்லிக்காய்ச் சாறுநாழி
புளகமுறு நல்லெண்ணெய் முன்னாழிகூட்டி
மின்னாளே நறுநெய்தான் முன்னாழிகூட்டி
வேவிய தாமரைக்கிழங்கு விரும்புவீரே 995

விரும்பிய சாற்றாலே கிழங்குத்தண்ணீர்
மெல்லியரே தாமரையின் கிழங்குத்தண்ணீர்
தரும்பியே வொவ்வொன்று நாழிகொண்டு
சந்தனமும் அயக்களங்குஞ் சரியதாக
விரும்பியதோர் கியாழமதில் எண்ணெய்நெய்யும்
விட்டுநீர் மெழுகுபதம் வடித்துக்கெண்டு
திரும்பியதோர் தாழம்பூ புனுகுபச்சை
செய்யகற் பூரங்களஞ்சி சிறக்கத்தேடே. 996

தேடியதோர் எண்ணெய்தனை யுள்ளேபோட்டு
திடனாகக் கடிவயத்திற் சிரசிற்பூசி
நீடியதோர் கண்ணிலுள்ள வியாதியெல்லாம்
நிறங்குளிர்ந்து தலைகுனிந்து நித்தநித்தம்
கூடியதோர் யிந்தஎண்ணெய் வுள்ளங்காலில்
குறிப்புடனே தான்பூசுங் கோதைமானே
பாடியதோர் சிவனார்தன் பாதத்தாணை
பரந்துவிடுங் கண்ணுநோய் பத்துநாளே. 997

வேறு–மகோதர முதலான வீக்கத்துக்கு குமட்டிக்காய்குழம்பு

வல்லவாடு தின்னாப்பாளை வழங்கும் குப்பைமேனியுடன்
சொல்லும் பேய்ப்பாகல் சோகத்துடன் சொரிகாஞ்சோரி நிலவாகை
நல்ல கையாந்தகரையுடன் நாடுங் கோழியாவரையிலை
இல்லம் பெரிய கொம்மட்டிக்காய் யிந்தச்சாறுயிது களெல்லாம் 998

இந்தச்சாறுதன்சாகம் யிதுவே வொன்றாய்க் கூட்டியபின்
சுந்தரஞ்சேர் ஆடுதிண்ணா துய்ய இலைச்சார் வொன்றரையாம்
விந்தை செறியும் தேசிக்காய் மிகவேநூறு பிழிந்துவிட்டு
கந்தமகிழும் கடைமருந்து கடியயிதரம் சாதிலிங்கம். 999

கடியகருஞ்சீர் மனோசிலையுங் கடலின்னுரையும் சீரகமும்
துடிகொள் மல்லிதிப்பிலியும் சோமனுப்பு அதிமதுரம்
கொடிய யுள்ளிப் பேய்க்கடுக்கா கூட்டியரைத்துக்கியாழமதில்
வடிய காசமுமுகி வருகையிலே மருகாவிரும்புக்கிட்டமிதே. 1000

வீக்கத்துக்கு

கிட்டமிடித்த பொடிகளஞ்சி கிளருமரிசிமரப்பிடியாம்
கொட்டித் தூவிக்குளம்பாக்கி தூதுவளங்காய்ப்பிரமாணம்
கட்டும் வீக்கமெடுத்தவற்கு காலம் அந்தியொருவுண்டை
இட்டுக் கொள்ள வல்லீரா யேகும் வீக்கமாறிடுமே. 1001

சொன்னோம் நந்திகலைக்ஞானம் தோற்றுமுத நூலாயிரமான்
அன்னே யுமைக்கு அரனாரும் அன்பாயுரைத்ததிதுவாகும்
முன்னோர் சொன்ன மொழிநூலில் முயன்றவடநூல் தனைப்பெயர்த்து
சொன்னார் நந்தியீஸ் வரரும் தொகுத்தார் முறையே வகுத்தாரே. 1002

வேறு

கூறினார் நந்திதானும் குருமுனி சித்தர்க்கொன்று
தேறினார் வைப்பு மார்க்கந் தெளிந்திடும் சாலவித்தை
கோறினார் சித்து மார்க்கங் குறித்திடுமாயுள் வேதம்
மீறினார் ஞான மார்க்க மிகுதியாய் விளம்பினாரே. 1003

வேறு

அறைந்தார் நந்தியீஸ்வரரு மன்பாயுரைத்த வேதமிது
துறைந்தார் ஞானம் கலைக்ஞானம் தோற்றுங் கருக்கள் குருவிதுவாய்
வறைந்தார் மாந்தர் பிழைக்கவென்று வகுக்கும் ஞான சாகரமாம்
திறைந்தார் நந்தி ஆயிரமாய்த் திறமாய் முடித்தர் முற்றாமே. 1004

நந்தீசர் கலைக்ஞானம் 1000

முற்றும்

உ

சிவமயம்

அகஸ்தியமகாமுனிவர் அருளிச்செய்த

ஞானச் சுருக்கம் – 16

பூரணமே தெய்வமென்று வுரைத்தீரையா
    பூரணத்தை யின்னதெனப் புகலவேணும்
காரணத்தைச் சொல்லுகிறே னினைவாய்க்கேளு
    கலையானபதினாறு பூரணந்தான்
மாரணமா யுலகத்தோர் மதிமயங்கி
    மதிகெட்டுப் பூரணத்தை யிழந்தாரையோ
வாரணத்தி லூணிப்பூரணத்தைப் பார்க்கில்
    வாசியென்ற சிவயோக வாழ்க்கையாச்சே 1

ஆச்சப்பா விந்தமுறை பதினெண்பேரும்
    அயன்மாலு மரனோடு தெய்வமெல்லா
மூச்சப்பா தெய்வமென்று அறியச்சொன்னார்
    முனியோர்கள் ரிஷியோர்க ளிப்படியேசொன்னார்
பேச்சப்பா பேசாம லிந்நூல்பார்த்து
    பேரான பூரணத்தை நினைவாய்க்காரு
ஆச்சப்பா பூரணத்தைக் காக்கும்பேர்கள்
    வாசிதரு மையத்தில் வாழ்ந்தார்தானே 2

தானென்ற பெரியோர்களுலகத்துள்ளே
    தாயான பூரத்தை யறித்தபின்பு
ஊனென்ற வுடலைநம்பி யிருந்தபேர்க்கு
    ஒருநான்கு வேதமொன்றும் நூலாரென்றும்
தேனென்ற பதினெட்டு புராணமென்றும்
    தேவனென்றும் தேவியென்றும் ரவிதானென்றும்
நானென்றும் நீயென்றும் ஜாதியென்றும்
    நாட்டினா ருலகத்தோர் பிழைக்கத்தானே. 3

பிழைப்பதற்கு நூல்பலது சொல்லாவிட்டால்
பூரணத்தை யறியாம லிருப்பாரென்றும்
உழைப்பதற்கு நூல்கட்டிப் போடாவிட்டால்
உலகத்தில் புத்திகெட்ட லைவாரென்றும்
தழைப்பதற்குச் சாதியென்றும் பந்துவென்றும்
தந்தைதாய் பிள்ளையென்றும் பாரிலொன்றில்லை
அழைப்பதற்குச் சொன்னதல்லால் கெதியொன்றில்லை
அப்பனே யறிந்தவர்கள் பாடினாரே 4

பாடினாரிக் கதைத்தான் சொல்லாவிட்டால்
பரிபாஷை யறியார்கள் உலகமூடர்
சாடுவார் பலபலநூல் பார்த்துப்பார்த்து
தனைமறந்து படுகுழியில் வீழ்வார்சாவார்
வாடுவார் நாமமென்றும் ரூபமென்றும்
வையகத்தில் கற்செம்பைத் தெய்வமென்றும்
நாடுவார் பூரணத்தை யறியாமூடர்
நாய்போலே குலைத்ததல்லால் வழிகாணாரே 5

காணாம லலைந்தார்கள் கோடாகோடி
காரணத்தை யறிந்தோர்கள் கோடாகோடி
வாணாளை மாய்த்ததினா லறியப்போமோ
வாய்ஞானம் பேசுவது யேதுக்காகும்
கோணாமல் சுழிமுனையில் மனத்தைவைத்து
குருபாத மிருநான்கி கான்றாகச்சேர்த்து
நாணாம லொருநினைவாய் காக்கும்போது
நாலுமெட்டு மொன்றாக நாட்டியூதே 6

ஊதியதோர் வூத்தறிந்தாலவனேசித்தன்
உத்தமனே பதினாறு பதியேயாகும்
வாதிகளே பதினாலும் பதியின்பாதம்
வகைநாலு முயிராகு மார்க்கங்கண்டு
சோதிபரி பூரணமே யிதுமூன்றுந்தான்
தூங்காமற் றூங்கியங்கே கார்க்கும்போது
ஆதியென்ற பராபரையு மாகுமொன்றா
யண்ணாக்கு வட்டத்து ளடங்கும்பாரே. 7

பாரப்பா வுதயத்தி லெழுந்திருந்து
பதராமல் சுழிமுனையில் மனதைவைத்து
காரப்பா பரிதிமதி யிரண்டுமாகி
கருவான சுழிமுனையி லூதும்போது
தீரப்பா அங்கென்று அண்ணாக்குள்நின்று
தியங்காமல் தெளிவித்த வுகமைதானே. 8

உகமையின்னஞ் சொல்லுகிறேன் உலகத்துள்ளே
ஓடாதே ஒளியாதே நலிபேசாதே
பகைபண்ணிக் கொள்ளாதே வீண்சொல்லாதே
பரப்பிலே திரியாதே மலையேறாதே
நகையாதே சினவாதே வுறங்கிடாதே
நழுகாதே சுழினைவிட்டுப் பின்வாங்காதே
ஜெகமுழுதும் பரிபூர்ண வஸ்துவென்றும்
தெளிந்தபின்பு வுலகத்தோ டொத்துவாழே 9

வாழாம லுலகம்விட்டு பலவேஷம்பூண்டு
வயர்பிழைக்க வாய்ஞானம்பேசிபேசி
தாழ்வான குடிதோறு மிரப்பார்மட்டி
தனையறியாச் சண்டாள முழுமாடப்பா
பாழான பாவியுட சொற்கேளாதே
பதறாதே வயர்பிழைக்க மயங்கிடாதே
கேளாத பேச்செல்லாங் கேட்டுகேட்டு
கெடுகாதே யுடலுயிரென் றுரைத்திடாதே 10

உடலுயிரும் பூரணமு மூன்றுமொன்றும்
உலகத்திற் சிறிதுஜெனம் வெவ்வேறென்பார்
உடலுயிரும் பூரணமு மேதென்றாக்கால்
உத்தமனே பதினாறு பொருடானாகும்
உடலுயிரும் பூரணமு மயன்மாலீசன்
உலககத்தோரறியாமல் மயங்கிப்போனார்
உடலுயிரும் பூரணமு மடிமுடியுமுச்சி
உதித்தகலை யறிந்துணர்ந்து பதியதனில்நில்லே 11

பதியின்ன விடமென்று குருவின்சொல்லை
பரப்பிலே விடுகாதே தலைரெண்டாகும்
விதியின்ன விடமென்று சொல்லக்கேளு
விண்ணான வுண்ணாக்கி லண்ணாக்கப்ப
மதிரவியும் பூரணமும் கண்வாய்மூக்கு
மகத்தான செவியோடு பரிசமெட்டும்
பதியவங்கு சுழிமுனையென் றிதற்கேபேராம்
பகருவார் சொர்க்கமென்றுங் கைலாசமென்றே. 12

கைலாசம் வைகுந்தம் தெய்வலோகம்
காசிகன்னி காகுமரி சேதுவென்றும்
மயிலாகு மேகமென்றும் நாதமென்றும்
மாய்கையென்று மின்னலென்று மவுனமென்றும்
துயிலாத வாடையென்றுஞ் சூட்சமென்றும்
சொல்லாத விடமென்று மொடுக்கமென்றும்
தையலா ளடிநடுவு முடிதானென்றும்
தாயான வஸ்துவென்றும் பதியின்பாரே 13

பேர்சொன்னேன் ஊர்சொன்னேன் இடமுஞ்சொன்னேன்
பின்கலையு மிடகலையு மொடுக்கஞ்சொன்னேன்
பாருலகில் பலநூலின் மார்க்கஞ்சொன்னேன்
பலபேர்கள் கடத்துகின்ற தொழிலுஞ்சொன்னேன்
சீருலகி லின்னதென்று தொட்டுச்சொன்னேன்
சித்தான சித்தெல்லாஞ் சுருக்கிச்சொன்னேன்
நேர்சொன்னேன் வழிசொன்னேன் நிலையுஞ்சொன்னேன்
நின்னுடம்பை யின்னதென்று பிரித்துச் சொன்னேன். 14

பிரித்துரைத்த சூத்திரமீ ரெட்டுக்குள்ளே
பிசகாமலொவ் வொன்றாய்த் தெளிந்துபார்க்கில்
விரித்துரைத்த நூலினிட மார்க்கந்தோணும்
விள்ளாதே யிந்நூலி லிருக்குதென்று
கருத்துடனே யறிந்துகொள்ளு கலைமாறாதே
காரியத்தை நினைவாலே கருதிக்கொள்ளு
சுருதியென்ற சோதியெல்லாஞ் சுருக்கிச்சொன்னேன்
சூத்திரம்போற் பதினாறுந் தொடுத்தேன்முற்றே. 15

அகஸ்தியமகாமுனிவர் அருளிச்செய்த
ஞானச்சுருக்கம் – 16
முற்றிற்று

தாமரை
நூலகம்